

# கலாநிதி
# செல்லையா இராசதுரை

.98
PR.

# கலாநிதி
# செல்லையா இராஜதுரை


320.98
இரா
SHPR

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

சொல்லின் செல்வர்
செல்லையா இராஜதுரை
வெளியீட்டு விழா குழு

22980

ராஜகிரியா ஸ்ரீலங்கா



விலை ரூ.132.00

மலர்க்குழுவின் ஆலோசனைப்படி அச்சிட்டு வெளியிட்டோர்.

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447,
4, தணிகாசலம் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926.
தொலை நகல் : 044 - 4346082.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# ஒரு மாமனிதரின் வரலாறு

மாண்புமிகு செல்லையா இராசதுரை எழுத்தாளராக வாழ்க்கையைத் தொடங்கியவர். மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் கல்வி பயின்றபோது வகுப்பு ஆசிரியர், ஒவ்வொருவரிடமும் உங்கள் எதிர்கால லட்சியம் என்னவென்று கேள்வி எழுப்பினார். ஒவ்வொரு மாணவரும் தங்கள் லட்சியங்களை வெளிப்படுத்த திரு. இராசதுரை ஓர் எழுத்தாளர் ஆவதே தன் லட்சியமென்று கூறினார். அவர் லட்சியம் நிறைவேறியது. 'லங்கா முரசு' என்னும் மாத வெளியீட்டை வெளியிட்டார். கொழும்புவிலிருந்து வெளிவந்த 'சுதந்திரன்' தின இதழில் இணை ஆசிரியராக இருந்தார். தமிழகம், முழக்கம், சாந்தி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியரானார். பல புனைபெயர்களில் இலங்கை, இந்தியாவிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த பல பத்திரிகைகளில் எழுதினார். திரு. கனக செந்தில்நாதன் எழுதிய 'இலங்கை எழுத்தாளர்கள்' என்ற நூலில் 'திரு. இராசதுரை அரசியலுக்கு 'ஆதாயமானார்'; இலக்கியத்திற்கு 'நட்டமானார்' என்று குறிப்பிட்டது முற்றிலும் உண்மையாகும். திரு. இராசதுரை அரசியலில் நுழைந்து முழுநேர அரசியல்வாதியானார். அவருடைய பேச்சைக் கேட்க மக்கள் ஆயிரக்கணக்கில் கூடுவர்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் இடமெல்லாம் அவர் குரல் ஒலித்தது. பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதியாக நுழைந்தார். 1956ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டுவரை நடைபெற்ற ஒவ்வொரு பொதுத்தேர்தலிலும் ஒரே தொகுதியில் (மட்டக்களப்பு) தொடர்ந்து வெற்றி பெற்றார். மட்டக்களப்பு

நகரசபையானது, மாநகரசபை அந்தஸ்தைப் பெற்றதும் அத் தேர்தலிலும் போட்டியிட்டு மட்டக்களப்பு மாநகர சபையில் முதலாவது மேயரானார். 1978ஆம் ஆண்டு இலங்கையின் அமைச்சர் அவையில் இடம் பெற்றார். ஒரு தமிழ் எழுத்தாளராக வாழ்க்கையை ஆரம்பித்து, அமைச்சர் பதவி பெற்ற அவர் வாழ்க்கை ஒரு வரலாற்றுக் காவியமாகும். அவர் வாழ்க்கையை நூல் வடிவமாகக் கொண்டுவர வேண்டுமென்பது பலரது ஆசை. அந்த ஆசையை நிறைவேற்ற மதுரை காமராஜர் பல்கலை கழக இஸ்லாமியத் துறை பேராசிரியர் அல்ஹாஜ் கலாநிதி எம். எம். உவைஸ் அவர்கள் தலைமையில் வெளியீட்டுக் குழு நிறுவப்பட்டது. இலங்கையின் தலைசிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரும், நூற்றுக்கணக்கான தமிழ் நூல்களை வெளியிட்டவரும் சட்டத்தரணியுமான ஜனாப் எஸ். எம். ஹனிபா பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். அவருடைய இடைவிடாத முயற்சியினால் இந்நூல் வெளியீடு காண்கிறது. காலம் கடந்து நூல் வெளியீடு கண்டபோதும் காலம் நினைவுகூர வேண்டியவர்களில் ஒருவர் சொல்லின் செல்வர் கலாநிதி திரு. செல்லையா இராசதுரை. கட்டுரைகள் தந்துதவிய அறிஞர் பெருமக்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மலரை மிகச் சிறப்பாக - மிக்க பொறுமையோடு அச்சிட்டு வழங்கிய **திரு. ரவி தமிழ்வாணன்** அவர்கட்கும், அட்டைப் படம் வரைந்துதவிய திரு. நாகேஷ் அவர்கட்கும், அழகாக அச்சிட்ட அச்சகத்தாருக்கும், இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

***வெளியீட்டுக் குழுவினர்***

# கனவு பலித்தது!

எங்கள் கனவு பலித்தது. களிப்படைகின்றோம். காலம் சற்று இடைவெளியை தந்தது. சொல்லின் செல்வர் செல்லையா. இராசதுரை அவர்கள் பற்றி நூல் வெளியிடவேண்டுமென்னும் ஆசை அவர் அன்பைப் பெற்ற எங்கள் உள்ளங்களை நெடுங்காலமாக நெருடிக் கொண்டிருந்தது. எங்கள் எண்ணங்களை அவரிடம் சொன்னபோது வழக்கமான அடக்கத்துடனும், கூச்சத்துடனும் கை கூப்பி வணங்கி வேண்டாம் என்று மறுத்தார். நாங்கள் விடுவதாயில்லை. தொடர்ந்து வற்புறுத்தினோம். எங்களுக்கும் செல்வருக்கும் மூத்தவரான பேரறிஞர் உவைஸ் அவர்களை அழைத்துப்போய் வேண்டுகோள் விடுத்தோம். அவர் உறுதிகலைந்தது. எழுத்தாளர்களுக்கு நீங்கள் செய்திருக்கும் உதவிகள்தான் எத்தனை. எத்தனையோ எழுத்தாளர்களை நீங்கள் உருவாக்கியுள்ளீர்கள். எத்தனையோ கவிஞர்களை, நாடக ஆசிரியர்களை, எத்தனையோ பேச்சாளர்களை, எத்தனையோ அரசியல்வாதிகளை உருவாக்கியுள்ளீர்கள். ஒரு எழுத்தாளன் நொந்து போனான் என்று அறிந்தால் உங்கள் கால்கள் அவன் வீடு நோக்கி விரைந்து செல்லும். எழுத்தாளர்களை கௌரவித்து பொற்கிழி - பட்டயங்கள் வழங்கிய முதல்வர் நீங்கள்தான். கல்கி சிறுகதையில் முதற்பரிசு பெற்ற தாளையடி சபாரெத்தினம், அ.ந. கந்தசாமி இன்னும் பலர். இவர்களைத் தேடிச் சென்றீர்கள். அ.ந. கந்தசாமி கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரத்தில் அவரைப் பார்க்க பலர் தயங்கினர். ஆனால் நீங்களோ விரைந்து சென்றீர்கள். வேண்டியது செய்தீர்கள். கோவை மகேசன் (சுதந்திரன்) ஆசிரியர் சிறையில் தள்ளப்பட்டிருந்த நேரம் அவர் மனைவியின் அன்பு வேண்டுகோளால் அவர் விடுதலைக்கு உதவினீர்கள். எல்லாருக்கும் நன்மை செய்யும் உங்களுக்கு நாங்கள் ஏதும் செய்யவேண்டாமா என்று பேராசிரியர் உவைஸ் தலைமையில் சென்ற குழு நாலா பக்கமும் இருந்து விடுத்த கேள்விகணைகளுக்கு பதில் அளிக்கமுடியாமல் கடைசியாக சம்மதம் தந்தார். பேராசிரியர் உவைஸ் அவர்களின் வேண்டுகோளை அவரால் மறுக்க முடியவில்லை. பெரியவர் உவைஸ் அவர்கள் தலைமையில் வெளியீட்டுக் குழுவை உருவாக்கினோம்.

பலரிடம் கட்டுரைகள் கேட்டோம். உற்சாகத்தோடு எழுதினார்கள். அச்சுவேலைகளை ஆரம்பித்தோம். ஆனால் பல தடங்கல்கள். சோதனைகள். நாம் நினைத்தமாதிரி உரிய காலத்தில் வெளியிடமுடியவில்லை. சென்னையில் மணிமேகலைப் பிரசுரகர்த்தா அன்பர் ரவி தமிழ்வாணனிடம் வேலைகளை ஒப்படைத்தோம். அவர் அப்பா அமரர் தமிழ்வாணனையும் விட வேகமானவர். அவர் வேகத்திற்கு எங்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஆண்டுகள் பல உருண்டோடின. ஆனால் எங்கள் உறுதி மட்டும் குலையவில்லை. குறையவில்லை.

கட்டுரைகளின் பிலிம்கள் சிதைந்து அழிந்து போயின. ரவி தமிழ்வாணன் பெரும் முயற்சி செய்து மீண்டும் அவற்றை பிலிம் பண்ணி நூலை உருவாக்கினார். பல கட்டுரைகள் இடம் பெற முடியவில்லை. எழுதிய அன்புள்ளங்கள் பொறுத்தருள்வீர்களாக. மற்றுமொரு பதிப்பு விரைவில் வெளிக்கொண்டுவர இருக்கின்றோம். அப்பதிப்பில் விடுபட்டுப்போன கட்டுரைகள், - கவிதைகள் நிச்சயம் இடம் பெறுமென்று அடக்கத்துடன் உறுதி தருகின்றோம்.

'மணிகேமலை' பதிப்பக உரிமையாளர் ரவி தமிழவாணன் அவர்களுக்கும் அந்நிறுவனத்தின் புன்னகையாளர் திரு.மோகன் அவர்களுக்கும் மனம்நிறைந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

மலர் உங்கள் கையில். கட்டுரைகள் தந்துதவிய அன்புள்ளங்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

காலம் கடந்தும் எங்கள் எண்ணத்தை நிறைவேற்றிவைத்த எல்லாம்வல்ல இறைவனுக்கு தலை வணங்குகின்றோம்.

நன்றி

**எம்.எச்.எம். ஹனிபா,**
**(சட்டத் தரணி)**
**செயலாளர்,**
**வெளியீட்டுக்குழு.**

Sollin Selvar

# C. RAAJADURAI

FELICITATION COMMITTEE

## CHAIRMAN

**Dr. M.M. Uwise**

*(Professor of Islamic Tamil Literature*
*Kamaraj University, Madurai)*

## VICE - CHAIRMEN

**Mr. R. Sivagurunathan**

*(Chief Editor, Thinakaran)*

**Mr. V.A. Thirugnanasuntharam**

*(Director, Tamil Service, Srilanka*
*Broadcasting Corporation)*

**Mr. A. Sivanesa Chelvan**

*(Chief Editor, Virakesari)*

## HONY. SECRETARY

**Mr. S.M. Haniffa**

*(Attorney - at - Law)*
*Justice of Peace*

## MEMBERS

**Dr. M.A.M. Shukri**

*(Rector, Jaamiah Naleemiah University)*


**Mr. K.S. Sivakumaran**

*(Island Feature Articals Writter)*

**Mr. M.K. Rahulan**

*Chief Interpretor Srilanka Parliament*

**Mr. H.H. Wickremasingham**



# "ஆன்மீக அருளாளர்"

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு.

***"அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை
நாடி இனிய சொல்லின்"***

என்ற குறளுக்கேற்ப இனிய பல எழுதி வருபவரும் அழகு தமிழ் பேச்சாளரும் ஆன்மீக உபநியாசரும் ஆன இலங்கை அமைச்சர் ஸ்ரீ செல்லையா இராசதுரை நமது அன்புக்கு உரியவர். ஆண்டவன் அருளாசி வேண்டி எந்தப் பணியைத் தொடங்கும்போதும் நமது ஆசியையும் அருளையம் வேண்டி கைகூப்பி நிற்கும் அன்பர்.

அரசு தழுவிய முதலாவது உலக இந்து சமய மாநாட்டை இலங்கையில் சிறப்பாக நடத்தி பழமையும் பெருமையும் நிறைந்த இந்து சமயத்திற்கும் புகழ் தேடிக் கொடுத்த நல்லவர்.

மகா அஸ்வமேத யாகத்தை இலங்கையில் நமது அனுக்கிரகத்தோடு நடத்தி வைத்த வல்லவர்.

இலங்கையிலும் இந்தியாவிலும் இறையருள் வேண்டி உலக சேமத்திற்காக பல ஞக்னங்களை நடத்தும் ஆன்மீக அருளாளர். நமது அன்புக்கு பாத்திரமானவர். ஸ்ரீ. செ. இராசதுரை நீண்ட ஆயுளும் அராக திடகாத்திரமும் பெற்று தன் பணியினை ஆற்றிவர ஸ்ரீ மகாத்திரிபுர ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரர் அருள்வாராக.

***"நாராயண ஸ்ம்ருதீ"***

***ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு***

# “சகல க்ஷேமங்களும் உண்டாகட்டும்!”

## ஸ்ரீலஸ்ரீ ஜீயர் சுவாமிகள்

### அஹோபில மடம், ஸ்ரீரங்கம்

இப்பவும் இலங்கை அமைச்சர் மாண்புமிகு செ. இராசதுரை அவர்களுக்கு தமிழ் எழுத்தாளர் என்ற முறைக்கு பாராட்டு நடத்துவது கேட்டு மிகவும் சந்தோஷிக்கிறோம். அவர் இலங்கையில் பாராளுமன்ற வரலாற்றில் தமிழ் எழுத்தாளர் என்ற முறையில் 35 வருடங்கள் தொடர்ந்து உறுப்பினராகவும் மற்றும் அமைச்சராகவும் இருந்து பல நற்பணிகளும் செய்துள்ளார். அன்னாருக்கு சகல க்ஷேமங்களும் உண்டாகி மேன்மேலும் பல உயர்ந்த பதவிகள் அடைந்து நற்பணிகள் செய்ய வேணும் என்று நாம் ஸ்ரீலக்ஷ்மி ந்ருஸிம்ஹனைப் பிரார்த்தித்து அனுக்ரஹம் செய்கிறோம்.

“சுபமஸ்து”

# "தமிழ்த் தொண்டு போற்றுதலுக்குரியது"

## ஸ்ரீல ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

எழுத்தாளர்கள் குழு, சிறந்த எழுத்தாளரும், பத்திரிகை ஆசிரியரும் நூலாசிரியரும், இலங்கை நாட்டு நல்லாயசசருமாகிய மாண்புமிகு செ. இராசதுரை அவர்கட்குப் பாராட்டு விழா நிகழ்த்தவுள்ளமையும் அதுபொழுது மலர் ஒன்று வெளியிட உள்ளமையும் அறிய மகிழ்ச்சி.

பாராட்டுப் பெறும் அன்பர் எழுத்தாளருலகு பெருமை பெறும் வண்ணம் பல நிலைகளில் அமைந்து ஆற்றிய தமிழ்த்தொண்டு பெரிதும் போற்றுதற்குரியனவாகும். விழா இனிது நிகழவும், அன்பரின் தமிழ்ப்பணியும் ஆட்சிப்பணியும் சிறப்பெய்த நீடிய நலம் நிறைந்த நல்வாழ்வு பெற்று இன்புறவும், விழாமலர் தமிழ்மணங் கமழ மலர்ந்து உலகு மகிழவும் நம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடிமலர்களைச் சிந்திக்கின்றோம்.

# "நீடு இனிது வாழ்க"

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

இலங்கை தமிழ் எழுத்தாளர்கள் பலரும் ஒருங்கிணைந்து, அந்நாட்டு அமைச்சரும், சிறந்த தமிழ் எழுத்தாளரும், நம் தருமை ஆதின நண்பருமான திரு. செ. இராசதுரை அவர்களுக்கு, அவர்தம் எழுத்துலகப் பணிகளைப் பாராட்டி விழாக் காணவிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

தமிழ் அன்பும், சைவ சமயத்தின்பால் பற்றும், பேச்சு மற்றும் எழுத்தாற்றலும் வல்ல திரு. இராசதுரை உலகளாவிய இந்து சமய மாநாட்டை மிகச் சிறப்பாகக் கொழும்பில் இலங்கை அரசின் சார்பாக நடத்தி அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றமை நினைவு கூர்தற்குரியது.

தருமையாதீனம் அருளாட்சிக்கு உட்பட்ட அருள்மிகு அபிராமி அம்மை உடனாய அமிர்தகடேசுவரர் திருவடிகளில் பக்தியும், அம்மையின் திருப்பணியில் ஈடுபாடும் கொண்ட அமைச்சர் திரு. இராசதுரை இதுபொழுது, இலங்கை தமிழ் எழுத்தாளர்களால் பாராட்டப்படவிருப்பதும், பாராட்டு விழாவின் அங்கமாக விழா மலர் ஒன்று வெளிவரவிருப்பதும் மகிழ்ச்சி தருவன.

பாராட்டுவிழா இனிதே நிகழ்ந்தேறவும், அன்பர் திரு. இராசதுரை அவர்தம் குடும்பத்தாருடன் சமய மொழிப் பணிகளாற்றி நீடு இனிது வாழவும், விழாமலர் இனிதே மலர்ந்து மணம் பரப்பவும், விழாக்காணும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் இனிய பணிகள் தொடரவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

# “உன்னதமான சேவை”

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

மாண்புமிகு அமைச்சர் திரு. செ. இராசதுரை அவர்கள் தமிழுக்கு ஆற்றியுள்ள மாபெரும் சேவை மிகவும் உன்னதமானது. அவர்க்குப் பாராட்டுவிழா எடுப்பது சாலச் சிறப்புடைய நிகழ்ச்சியாகும்.

பாராட்டுவிழா சிறப்பாக நடைபெறவும், அவர்க்கு எல்லா நலனும் உண்டாகவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம.

**சுபம்**

**சிவ சிவ**

# "ஆதீன கர்த்தருக்கு அறிமுகமானவர்"

## சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

அமைச்சர் திரு. செ. இராசதுரை அவர்கட்கு பாராட்டு விழா நடைபெற இருப்பதும், இவர் ஏற்று பணியாற்றி வந்த - வருகின்ற பலதுறைச் செய்திகள் பற்றியும் அறிந்து மகிழ்ந்தோம்.

இவர் இவ்வாதினத்தில் 229 ஆம் பட்டத்தில் முது பெரும் புலவராக விளங்கியிருந்த ஆதீன கர்த்தா அவர்கட்கு மிகவும் அறிமுகம் ஆனவர் எனத் தெரிய வருகிறது. இந் நியதிப்படி நமக்கும் இதில் தொடர்பு உண்டாகின்றது.

*"நயனோடு நன்றி புரிந்த பயனுடையார்ப்*
*பண்பு பாராட்டும் உலகு"*

அதாவது நீதியையும், அறத்தையும் காத்து உலகுக்குப் பயனுற வாழ்ந்த - வாழ்கின்ற நன்மக்களைப் பாராட்ட உலகம் கடமைப்பட்டுள்ளது என்பது வள்ளுவம்.

மேலும் பண்புடைய பெருமக்களாலேயே இவ்வுலகம் நிலைபேறுடையதாகின்றது எனவும் அந்நூல் கூறுகின்றது.

தக்கார்க்குப் பாராட்டுச் செய்வது அவரை மேன்மேலும் உலகுக்கு உழைக்கத் தூண்டும். பாராட்டுக் காணும் மற்றவரும் தாமும் நல்ல பணி செய்து உயரவேண்டும் எனும் மன எழுச்சியைப் பெறுவர். இப்படியாக இருவகை நல்ல விளைவுகளை தரும் இப் பாராட்டு விழா நன்கினிது நடைபெறவும், இதன் சார்பாக எழுகின்ற மலர், அன்பரின் புகழ் மணம் பரப்பி நிற்கவும், இதிற் பங்கு பற்றும் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று வாழவும் திருவருளை சிந்திக்கின்றோம்.

'சிவம்'

தொண்டை மண்டல ஆதீனம்
பெரிய காஞ்சிபுரம்

# "இனிய அன்பர்"

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மாண்புமிகு அமைச்சர் செ.இராசதுரை அவர்களைப் பாராட்டி விழா எடுக்கும் செய்தி மகிழ்ச்சியைத் தருகிறது. இனிய அன்பர் செ.இராசதுரை அவர்கள் நல்ல உயிர்த் துடிப்புள்ள செயல்வீரர்; தமிழறிஞர்; எழுத்தாளர்; சமய ஆர்வலர்; இனிய அன்பர். மாண்புமிகு அமைச்சர் செ. இராசதுரை அவர்கள் புகழ்பரப்பும் மலர், தமிழ் மணம் கமழும் என்பதில் ஐயமில்லை. வாழ்க! செ.இராசதுரை! வளர்க அவர்தம் பணி!

# “தமிழ் பெருமையுற பணியாற்றியவர்”

ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நதிகள்

*“கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து*
*பண்ணுறத் தெரிந்தாங்நத இப பஅறிதபழ*
*மண்ணிடைச் சில இலக் கணவரம்பிலா மொழிபோக*
*எண்ணிடக் கிடந்ததா எண்ணவும் படுமோ”*

மாண்புமிகு அமைச்சர் செ. இராசதுரை அவர்கட்கு எழுத்தாளர் சார்பில் பாராட்டு விழா நடைபெறுவது அறிந்து மகிழ்கின்றோம். மான் நுழை புலமும் ஆன்ற மைந்த கேள்வியுடைய சான்றோராய் அடக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குபவர் அன்பர் மாண்புமிகு இராசதுரை அவர்கள்.

“தோன்றிற் புகழொடு தோன்றுக” என்ற திருவள்ளுவரின் குறட்பாவுக்கு முன்மாதிரியாகத் திகழ்பவர். மெய்வருத்தம் பாராது பசிநோக்காது கண் துஞ்சாது எவ்வகை தீமையும் மேற்கொளாது பொதுத்தொண்டிலும் மொழித் தொண்டிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு “என் கடன் பணி செய்துகிடப்பதே” என்ற அப்பர்பெருமானின் திருவாக்குக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்பவர். தமிழ் எழுத்தாளராய்த் தம் வாழ்வைத்

தொடங்கிய அவர் அயராத உழைப்பாலும் தொண்டாலும் தொடர்ந்து முப்பத்திரண்டு ஆண்டுகள் இலங்கை பாராளுமன்ற உறுப்பினராயும் மாநகர சபையின் முதல்வராய் பின் அமைச்சராயும் இருந்து வருவதே அவரது தூய வாழ்விற்கு ஓர் சான்றாகும்.

எந்தப் பதவியை வகித்தாலும் அப் பதவி பெருமையுறத் தக்க வகையில் பணியாற்றும் பண்பாளர். இனிய உளவாக இன்னாதகூறாத இயல்பினர். நாட்டுக்கும் மொழிக்கும் சமயத்திற்கும் அவர் ஆற்றியுள்ள தொண்டுகள் பலவற்றிலும் இந்து சமய உலக மாநாட்டினை இலங்கையில் கூட்டி நம் இந்து சமயத்தின் பெருமையை பல நாட்டினரும் அறியுமாறு செய்த பெருமையுடையவர்.

இப் பணி மிகவும் போற்றுதற்கும் பாராட்டுதற்கும் உரியதாகும். பல செய்தித்தாள்கள் இதழ்கள் நூல்கள் வாயிலாகத் தம் கருத்துக்களை இந்த நாட்டு மக்கள் பயன் அடையத்தக்க வகையில் எழுதி சிறந்த பணி புரிந்துள்ளவர். இவ்வாறு பல்லாற்றாலும் தொண்டு புரிகின்ற அமைச்சர் பெருந்தகைக்கு தமிழ் எழுத்தாளர்கள் ஒன்று கூடி விழா நடத்துவதும் மலர் வெளியிடுவதும் சாலவும் பொருத்தமானதாகும். விழா சிறப்புற நடைபெறவும் விழா நூலாசிரியரும் அமைச்சர் மாண்புமிகு செ. இராசதுரை அவர்களின் எல்லா நலன்களும் பெற்று நாட்டுக்கும் சமயத்திற்கும் மொழிக்கும் மேன்மேலும் நல் தொண்டு புரிந்து நீடுழி வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ அஜபா நடனத்தியாகேசப் பெருமான் திருவடியைச் சிந்திக்கின்றோம்.

திருக்கைலாச பரம்பரை வேளாக்குறிச்சி ஆதின மடம்

# "நன்று புரியும் நலமார் குணக்குன்றே"

திருமுருக
கிருபானந்தவாரியார்

இராஜ துரையே இலங்கைத் தமிழ்மணியே
பராவு குணக்கடலே பண்பாய் – தராதலத்தில்
எல்லா நலன்களும் எய்தி இறையருளால்
பல்லாண்டு வாழ்க பணைத்து.

மக்கள் நலம்பேணும் மன்னும் மதியாள
தக்க அமைச்சரே தாளாண்மை – மிக்கவரே
நன்று புரியும் நலமார் குணக்குன்றே
என்றுமிக வாழ்க இனிது.

தேசம் சிறக்கவே சீரார் பலதொண்டு
நேசமுடன் செய்யும் நிருபனே – பாசமுடன்
ஏழைக் குதவுகின்ற ஈடில் தலைவனே
வாழி பல்லாண்டு மகிழ்ந்து.



பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா அவர்களுடன்







காஞ்சி மாமுனிவர் பிரசாதம் வழங்குகின்றார்




திருவண்ணாமலை ஸ்ரீ ராம் சுந்தர் (விசிறி) ஸ்வாமிகளுடன்



புரவிப்பாளையம் ஸ்ரீகோடி ஸ்வாமிகளுடன்



காஞ்சி இளையவர் ஸ்ரீசங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளுடன்



திருச்சி ஸ்ரீரங்கம் ஜீயர் ஸ்வாமிகளுடன்



திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுடன்



ஆந்திரா பால சிவயோகி சுவாமிகளுடன்



இரத்தினகிரி ஸ்ரீ பால முருகனடிமை சுவாமிகளுடன்



தாய்லாந்து பிரதம புத்த கோயில்
அதிபதி புத்த தங்கச் சிலை அன்பளிக்கிறார்



மயிலை சுந்தரம் குருஜி அவர்களுடன்



இலங்கைப் பிரதமர் மாண்புமிகு ஆர். பிரேமதாசாவுடன்



இலங்கை மல்வத்தை மகாநாயக தேர
நீதி அமைச்சர் கலாநிதி விஜய ரத்னே அவர்களுடன்

# "பண்பாட்டின் உருவம்"

## மஹாமஹோபாத்யாய அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியர்

மாண்புமிகு ஸ்ரீலங்கை அமைச்சர் சே. ராஜதுரை அவர்களுடன் எனக்கு சந்திப்பு கிடைத்ததை என் வாழ்நாளின் ஒரு அரிய பெரிய சம்பவமாக நான் நினைக்கிறேன். பெரிய பெரிய பதவியில் இருந்து வருபவர் எளிமையின் அடையாளமாக உள்ள என்னுடைய வீட்டிற்கு விஜயம் செய்தது புராண இதிஹாசங்களில் காணப்படும் பெரிய பெரிய கதைகளை ஞாபகத்துக்கு கொண்டு வந்தது. அதிகாரிகளில் தலைசிறந்து விளங்கி பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு அமைச்சர் என்ற முறையில் தெய்வப் பணியை நிறைவேற்றி வரும் அவர்களுடைய முகமே தனிச் சிறப்போடு தெய்வீக ஒளியோடு விளங்கி வருகிறது. அவ்வித தனிச்சிறப்பு வாய்ந்த ஆன்மாக்கள் உலகச் சரித்திரத்தில் தனிச் சிறப்போடு விளங்கி வருகிறார்கள். ஸ்ரீலங்கையில் நடந்த அஸ்வமேத யாகத்திற்கு அவர் மூலகாரணமாக மட்டுமில்லாமல் முழுவதும் கூட இருந்து பக்தி சிரத்தையுடன் நடத்தி வைத்தார். காஞ்சி காமகோடி பீடம் பரமாச்சாரியாருடைய திருவருளை பூரணமாக பெற்றுள்ளவர். பிரசித்த சிவாசாரியார்கள் எல்லோரையும் அவருக்குத் தெரியும். தென்னிந்தியாவில் உள்ள தென்மொழி வடமொழி புலவர்கள் எல்லோருடைய ஆசி பூரணமாக பெற்றவர். அறிவாற்றலோடு மட்டுமில்லாமல் பண்பாடிலுடைய உருவாகவும் அவர் எப்பொழுதும் என் கண்முன் நிற்கிறார்.

கடந்த 60 வருஷங்களில் அரசியல் உலகில் சம்பந்தப்பட்டவன் என்ற முறையிலும் இந்துமத பிரசார ஊழியன் என்ற முறையிலும் பலவித அரசியல்வாதிகளையும் தொழில் அதிபர்களையும் சந்தித்து உள்ளேன். ஆனால் திரு. ராஜதுரை அவர்களை நினைத்த உடனேயே ஆத்மா தெய்வீக உணர்ச்சியைப் பெற்று சாந்தியையும் அடைகிறது. அரசியல் உலகில் எவ்வளவு உயர்ந்த பதவியில் இருந்து வந்தாலும் உண்மையான தெய்வீக உணர்ச்சி சாந்தி நின்று வரும் அவரை நினைத்த உடனேயே அவருடைய பண்பாட்டை உணர்ந்து அபரிமிதமாக அவரை புகழ்ந்து பேசவேண்டும் என்று வேகம் பிறக்கிறது. கருத்துக்களும் வருகின்றன. அவர் நீண்ட நல்வாழ்வுடன் வாழ்ந்து மனித சமுதாய சேவையை செய்து வர சக்தியை அளிக்க இறைவனை வேண்டுகிறேன். உலகச் சரித்திரத்திலேயே இராஜாதி இராஜன் என்ற சோழனுக்கு பிறகு அசுவமேத யாகத்தை பற்றி நினைத்த அரசியல் வாதிகளே கிடையாது. ஸ்ரீலங்காவில் நடத்திய அஸ்வமேத யாகத்தில் புனித பிறவியோடும் வேள்விச்சாரியர் வேத விற்பன்னர்களோடும் சிவா சாரியர்களோடும் எடுத்துக் கொண்ட Photoக்கள் இன்னும் என்னுடைய கிரகத்தை அலங்கரித்து அவருடைய தெய்வத் தன்மையை ஞாபகப்படுத்துகிறது. தம்பதியாக இருந்து அசுவமேதத்தை நடத்தி வைத்தது மிகமிக போற்றத்தக்கது. அதன் மூலம் இந்து மதத்தில் ஒரு புது சகாப்தத்தை உண்டு பண்ணிவிட்டது. தம்பதிகள் நீடூழி வாழ்க.

☆ ☆ ☆

**அமைதியைவிட மேலான மகிழ்ச்சி வேறெதுவுமில்லை.**

– புத்தர்

# "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"

## ஸ்ரீலஸ்ரீ காயத்ரி சுவாமிகள்

உயரிய, சீரிய வாழ்க்கை நடத்தி உலகம் உய்வதற்காக எழுத்து மூலமும், பேச்சுமூலமும், தெய்வ சிந்தனைகள், தெய்வச் செயல்கள் மூலமாகவும் உயர்வான தம் பதவியின் மூலமும் அரிய பல செயல் களை ஆற்றிவரும் மாண்புமிகு அமைச்சர் திரு. செ. இராஜதுரை அவர்கள் தொடர்ந்து அரும்பணி அருள்பணி – அறப்பணி செய்து வருகிறார்.

பழகுவதற்கு இனியவா. பணிவு மிகுந்தவர். பதவியின் படா டோபம் இல்லாதவர். அன்பர்க்கு அன்பர், அடியவர்களுக்கு அடியவர், என்றும் தெய்வ சிந்தனையிலே மூழ்கியிருப்பவர். மகான்களையும், அருட் சித்தர்களையும் எங்கிருந்தாலும் தேடிச் சென்று வணங்கி வழிபடுபவர். அவர்களை மதிப்பவர். அன்னையின் அருள் பெற்றவர்.

என் அகம் கவர்ந்தவர். திரு. இராஜதுரை நலமுடனும், வளமுடனும் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ காயத்ரி தேவியைப் பிரார்த்திக்கின்றேன்.

# "திருவருள் பெற்ற தமிழர் திரு. இராசதுரை"

**ஸ்வாமி ஹரிதாஸ் கிரி**

எல்லாம் வல்ல இறைவன் தன் கருணையால் அனைத்து உலகங்களையும் தோற்றுவித்து அவைகளின் உள்ளும் புறமும் அவைகளாகவே இன்று நடாத்துகின்ற அதிசயம், கற்பனைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு விஷயம்.

இத்தனை உலகங்களையும் தன் செயற்கையினால் படைத்து அவைகளை இயற்கைபோல் இருக்கச் செய்தது இன்னுமோர் அதிசயம்.

உலகத்தில் எந்த ஒரு செயலையும் சிறிதளவாயினும், அதைப் பெரியதாக காட்டுவது உலகத்தோரின் குணம்.

ஆனால், இவ்வளவு பெரிய சாதனைகளைச் செய்திருக்கும் இறைவனே, தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளாமல், தன்னை மறைத்துக்கொண்டு நிற்பதை என்னென்று சொல்வது!

இருப்பினும் இப்பூவுலகில் தோன்றிய ஜீவராசிகளுள் மேன்மையாகக் காணப்படும் மனித இனம் மட்டும் அந்த மகேசனைப் பற்றி, நினைத்து, எண்ணி, வியந்து பாராட்டவேண்டும் என்ற காரணத்தால் தன் மனிதகுலத்தில் அவ்வப் பொழுது தோன்றிய மாணிக்கங்கள் மூலமாகத் தன் கடமையைச் செவ்வனே செய்து வருகிறது.

இவ்விந்தையினைச் செயல்படுத்த பிறவி வேண்டியுள்ளது. பிறவி மட்டும் போதாது. இவ்விந்தையினைப் பற்றி கேட்கக் காதுகளும், பார்க்கக் கண்களும் உணர எண்ணங்களும், பேச நாவும், அவசியம் தேவைப்படுகிறது.

காதுகளால் கேட்டதை, கண்களால் பார்ப்பதை உள்ளங்களில் தோன்றிய உணர்ச்சிகளை முழுமையாக வெளிப்படுத்த வாயும், அதனுள் அசைகின்ற நாவும் மிகமிக அவசியமாகிறது.

இந்த அவசியத் தேவைக்கு நாவிற்கு மிகமிகத் தேவையானது. ''மொழி'' மொழிகளையும் அந்த இறைவனே தோற்றுவித்திருக்கிறான். மொழிகள் வேறுபடலாம், ஆனால் அவைகள் வெளிப் படுத்துகின்ற எண்ணங்கள் ஒன்றாகத் தானே இருக்க முடியும்!

எத்தனையோ மொழிகளை இவ்வுலகத்தில் நாம் கண்டாலும், ஆராய்ச்சியுடன் அணுகும்போது, இவ்வுலகத்தின்கண் முதன்முறையாகத் தோன்றிய மொழி ''தமிழே'' தமிழ்தான்! அதில் யாதொரு சந்தேகமும் இல்லை!

பிரும்மத்திற்கு காமம் இல்லை. அதாவது அழிக்கக் கூடிய தன்மையுடைய ''ஆசை'' இல்லை! ஆசையை அழிப்போன் ''அறன்''. இது புராணம்.

இத்தத்துவத்தை நமக்கு எடுத்துக் காட்ட அந்த அறன் சிவமாக அமர்ந்து தனித்திருந்து அமர்ந்த நிலையில் 'காமன்' (ஆசை) தோன்ற, புறக்கண்களை மூடி தன் நெற்றியிலுள்ள அகக்கண்களை திறக்க, அங்கிருந்து வெளிப்பட்ட ஞானம் (அறிவு) உள்ளதை அறிந்து, தேவையற்ற ஆசைகளை (மன்மதனை), ஆறு பொறிகளை (ஆறு அறிவுகளை) வெளிப்படுத்தி எரித்தது.

இப்பேர்க்கொத்த இறைவனின் திருமுக மண்டலத்திலிருந்து, அகக் கண்ணாகிய மூன்றாவது நேத்திரமான ஞானக்கண்ணிலிருந்து வெளிப்பட்ட இந்த ஆறு பொறிகளாகிய ''ஞானம்தான்'' ''முருகாக'' வடிவெடுத்து வெளிவந்தது.

இந்த 'முருகு' என்றால் அழகு என்று பொருள். இந்த அழகானது வல்லினமாகவும், மெல்லினமாகவும், இடையினமாகவும் தன்னைப் பிரித்துக் கொண்டு அதன்பின் தன்னை இணைத்துக் கொண்டு நின்றது.

வல்லினத்திற்கு 'த'வும் மெல்லினத்திற்கு 'மி'யும் இடையினத்திற்கு 'ழ'வும் தோன்றி இதுவே உலகத்தின் முதல் மொழியான ''தமிழாக'' நின்றது.

தமிழைத் தெரிந்துகொண்டால் ஞானத்தை அறிந்தவனாக ஆகிறான். ஞானத்தை அறிந்தவன் ஆசைகளை அறுத்த அறனை அறிகிறான். அறனை அறிந்தவன் பின் அவனாகவே ஆகிறான். என்னே தமிழின் பெருமை! ஆண்டவனையே அறிய வைத்து அவனாகவே ஆக்குகின்ற இத்திறன் தமிழ் மொழிக்கு மட்டுமே உரித்தானது என்பதில் ஒரு சிறிதளவும் ஐயமில்லை. ஐந்து முகத்திலிருந்து ஆறுமுகமான தமிழ் தோன்றியது. அந்த தமிழ் தன்னை குறுமுனியான அகத்தியனிடத்திலே அளித்துக்கொண்டது. அந்த ஆசான் மூலம்

அத் தமிழ் இந்த அவனியுள் அலங்காரமாக இன்றும் பவனி வந்து கொண்டிருக்கிறது.

ஆதலால் இது ஒரு பெரிய பாரம்பரியம். இந்தப் பரம்பரை தோன்றியது இறைவனிடத்திலிருந்து, தமிழைத் தெரிந்து அறிந்து அதனை மேலும் அழகு படுத்தி, தன்னையும் அழகுபடுத்திக் கொள்பவன் இந்த இறைவனுடைய பரம்பரைதானே!

இஃபோர்க்கொத்த பரம்பரையில் எத்தனையோ தமிழ் வல்லுனர்கள் தோன்றி இப்புனிதத் தமிழினைப் பேணி வளர்த்துவருகின்றனர்.

அறத்திலேயும், புறத்திலேயும் தமிழைத் தன் மூச்சாகக் கொண்டு தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும் அந்த பரம்பரைக்கும் பல்லாண்டுகளாக பெரும் தொண்டு செய்து கொண்டு வருகிற ஈழத்து மாண்புமிகு அமைச்சர் - திருவருள் பெற்ற தமிழர் - திரு. இராசதுரை அவர்களைப் பாராட்ட வேண்டும் என்று எண்ணியவர்களை என் இதயபூர்வமாகப் பாராட்டுகிறேன்.

வாழ்க தமிழ்! வாழ்க தமிழ் மரபு! வாழ்க தமிழினம்! வாழ்க இந்த பாராட்டுக் குழுவினர்! வாழ்க என் அன்புக்கும், மதிப்பிற்கும் உரிய திரு. செ. இராசதுரை!

*ஸ்வாமி ஹரிதாஸ் கிரி.*



**கீழ்த்தரமான கபடத்தினால் உலகில் ஒரு பெரிய காரியமும் செய்ய முடியாது.**

- விவேகானந்தர்




திருவேற்காடு ஆதிகருமாரி பட்டர், அன்னதானம் சிவம், ஆன்மீக அருள்ஞான வள்ளல், கும்பாபிஷேகச் சக்கரவர்த்தி, பல்யாகசாலை பவித்திரமணி மாணிக்கம் தவத்திரு . ஐயப்ப சுவாமிகள் வழங்கி அருளிய வாழ்த்துரை.

இலங்கை அமைச்சர், எழுத்துலகச் சிற்பி, சொல்லின் செல்வர், மாண்புமிகு செ.இராசதுரை அவர்களுக்குத் தமிழ் எழுத்தாளர்கள் பாராட்டு விழா எடுப்பது கண்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் பல பத்திரிகைகளில் இவர் தம் எழுத்தோவியங்கள் தொடர்ந்து வெளிவந்துள்ளமை காண்கின்ற பொழுது 'எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்' எனும் பழமொழிக் கேற்பத் தம்மை ஆட்படுத்திக் கொண்டு வாழ்ந்திருக்கின்றார் என்பது தெரிய வருகிறது. எழுத்தாற்றலோடு சொல்லாற்றலும் பெற்றுச் சொல்லின் செல்வராகவும் விளங்கி வருகிறார்.

"சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்கின்ற உலகப் பொதுமறைக்கோர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து வருபவர்.

32 நவ உருத்திராக்க மாலைகள் கொண்ட வடத்திற்கு (மாலைக்கு) 'கண்டிகை' என்று பெயர். உமையம்மை எம்பெருமாட்டி ஏலவார்குழலி செய்த அறங்களும் 32 வான்கலந்த மாணிக்க வாசகராம் வாதவூரடிகள் வாழ்ந்து மகிழ்ந்த ஆண்டுகள் 32. இப்படி அருளார் அமுத நிலைகளிலே நலை என்ற எண்ணிற்கு ஒரு தனிப்பெரும் சிறப்பு உண்டு. மேலும் அந்த அற்புதமான எண்ணிற்கு மெருகு ஏற்றும் வகையிலே,

நமது திருவடிக்கு அன்பு பூண்டொழுகும் அமைச்சர் திலகம், அறப் பணிச் செம்மல், ஆன்மீகக் கலாநிதி மாண்புமிகு செ.இராசதுரை அவர்கள் இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் முப்பத்திரண்டு வருடங்கள் தொடர்ந்து உறுப்பினராக இருப்பதும், மேலும் மாநகர சபையின் முதல்வராக இருந்ததும், அமைச்சரவையில் அமைச்சராக இருப்பதும் பெரிதும் பாராட்டி மகிழ வேண்டிய ஒன்றாகும் என்பதில் யாதும் ஐயுறவில்லை.

அமைச்சர் அவர்களால் எழுத்தாளர் உலகம் பெருமை அடைகிறது. ஏன், தமிழ்ச் சமுதாயமே பூரிப்படைகின்றது. அமைச்சர் அவர்கள் அரசியல் வாழ்வு மட்டுமன்றி ஆன்மீக வாழ்விலும் பெரிதும் ஈடுபாடுடையவர்கள். நம் திருமடத்தில் அன்பும், அம்மையிடத்து ஈடுபாடும் கொண்டவர்கள். ஆலய வழிபாட்டு முறைகளையும், அருள் வரலாற்றையும் நன்கு அறிந்தவர்கள். தமிழுக்கும், தமிழர் தம் நலனுக்கும் அயராது பாடுபடுபவர்கள்.

தக்க ஒருவருக்குத் தரணி போற்ற விழா எடுக்கும் விழாக் குழுவினருக்கு நமது வாழ்த்துக்கள் யாண்டும் உண்டு.

மாண்புமிகு அமைச்சர், செ.இராசதுரை அவர்கள் இந்நிலவுலகில் கற்கண்டுச் சொற் கொண்ட கன்னல் தமிழுக்கும், கவிஞர் தமிழ்ச் சமுதாயத்திற்கும் தொண்டாற்றி மகிழ வாழ்த்துகின்றோம்.

எழுச்சிக்கோர் வித்தாகி, இனிமைக்கோர் சொத்தாகி உலகவர் அனைவரது நெஞ்சங்களிலும் நீங்காது நிலைபெற்று வாழ்ந்திட வேண்டும் என்று மென்மேலும் ஆசிர்வதிக்கின்றோம்.

*இப்படிக்கு,*
*தவத்திரு : ஐயப்ப சுவாமிகள்*
*திருவேற்காடு, சென்னை - 600 077.*



**சிறிதளவு அகங்காரமிருந்தாலும் நமது மனதில் சத்தியம் ஒரு பொழுதும் தோன்றாது.**

*- விவேகானந்தர்*

# "உற்ற துணைவன்"

## தவத்திரு சுவாமி இராமதாஸர்

எத்தனையோ இன்னல்கள், அழிவுகள் என்று ஒவ்வொரு நாளும் செய்திகள் வந்து கொண்டிருக்கும் இலங்கையில் அமைதி நிலவத் தனது முழுமூச்சுடன் முயன்று வருபவர் அமைச்சர் அன்புக்குரிய அன்பர் செல்லையா இராசதுரை.

"அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித்துணை"

என்ற குறளுக்கு ஒப்ப இலங்கை மக்களுக்கு இறைபணியே சிறந்த அமைதியைத் தரும் என்று உணர்ந்து செயலாற்றிவரும் இவரே அன்னவர்க்கு "உற்ற துணைவன்" எனின் மிகையாகாது.

இவர்கள் நீடுழி வாழ்ந்து மேலும் நிறைய இறைபணி செய்ய அன்னை கருமாரியை வாழ்த்துவேன்.

# "அருள் மழை பொழியட்டும்"

## ஸ்ரீ வித்யா உபாசக சுவாமி ஸ்ரீ முருக பூஷணம்

உயர்திரு. மாண்புமிகு இலங்கை அமைச்சர் செ. இராசதுரை அவர்கள் எழுதிய எழுத்தோவியங்களையும், கருத்துமிக்க கதைகள் பலவற்றையும் நாம் படித்திருக்கிறோம். தான் ஒரு எழுத்தாளர் என்ற எண்ணமே இல்லாமல் இலங்கை மக்களுக்கும், இந்து மக்களுக்கும் அவர் ஆற்றும் தொண்டு மிகவும் பாராட்டுதற்குரிய ஒரு பெரும் தொண்டாகும். தன் நாட்டு மக்கள் நல்வாழ்வு பெறவும், வளமுடன் இருக்கவும் அவர் இந்தியா வரும்பொழுது தமிழகத்திலுள்ள அத்தனை கோவில்களுக்கும், எத்தனை மகான்கள் இருக்கின்றார்களோ அத்தனை மகான்களையும் தரிசித்து உள்ளம் உருகி கண்ணீர் மல்க அவர் தன் நாட்டு மக்களுக்கு வேண்டும் என்றென்றும் யாரும் மறக்க முடியாத மறுக்க முடியாத ஓர் அற்புத செயலாகும். அதுவும் ஒரு நாட்டின் அமைச்சர் இவ்விதம் நடப்பது அதிசயத்திலும் அதிசயமாகும். தமிழகத்தில் அவர் பார்க்காத கோவில்களே இருக்க முடியாது. தரிசிக்காத மகான்களே இருக்க முடியாது என கூறலாம். அப்படிப்பட்ட அமைச்சர் செ. இராசதுரை அவர்கள் சகல சௌக்கியங்களையும் பெற்று தன் நாட்டு மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் தொண்டாற்ற வேண்டும் என்று சர்வ லோகங்களையும் அடக்கிக் கொண்டு ஸ்ரீ மாமேருவின் பிந்துவில் அமர்ந்து மக்களுக்கு அருள் மழை பொழிந்து ரட்சிக்கும் காமேச்வர ஸ்ரீ காமேஸ்வரியை வேண்டுகிறோம்.

# "நற்பணிகள் நாளும் மிளிர்ந்தது"

பித்துக்குளி முருகதாஸ்

நிதுஎண்ணம் நீங்கிடவும் நித்தம் நாடு செழித்திடவும்
காசகண்கள் ஒளிபெறவும் கல்வி நெறிதுறைகள் வளருந்திடவும்
ஆசாபாசங்கள் அன்பில் முழுகி அருளும் பொருளும் பெருகிடவும்
ராஜதுரையின் நற்பணிகள் நாளும் மிளிர்ந்தது இலங்கையிலே
இலங்கையில் ஒற்றுமை அமைதியது இனிமை வாழ்வு துவங்கிட
கலங்கரை விளக்கம்போல் நல்லவர்கள் பலரை ஈர்த்து
கலங்கா அரசும் வளமும் – கருணையினால் மக்கள் இனமும்
சாலங்கணும். வேந்தர் செய்யும் சாந்தி அஸ்வமேதம் செய்தார்.
தார்வேந்தர் பலரும்கூடி செய்ய இயலா – யாகம் சிலவும்
தன் அருமை பண்பு குணத்தால் ஜெயகோஷம் பெற்று செய்தார்
சீர் சிறப்பு பெற்ற – குருக்கள் கலைஞர்கள் இசை மாமேதை
சிறப்புறவே சைவம் தழைக்க செயற்கரிய செய்கை செய்தார்
ஆர்வமுள்ள ஆசிரியராய் – அழகு தமிழ் எழுத்தாளரென
ஆணங்கிலும் வல்லார் பலபல அரிய எழுத்தோவியம் செய்தார்.
நேர்மையுள்ளார்; இலங்கை சாந்தசமத்வ ஒருமைப்பாடு வளர்க்க
நீண்டு வாழ்க என்று வாழ்த்தும் நினைவுடையான் பித்துக்குளி.

# "அருள் பழுத்த நெஞ்சினார்"

## ஸ்ரீலஸ்ரீ.டி.எஸ்.சாம்பமூர்த்தி சிவாச்சாரியர்

திரு. இராஜதுரை அவர்களுக்கு பாராட்டு. அதற்கு இந்த விழா!

மதிப்பிற்குரிய ராஜதுரை அவர்களை பல ஆண்டுகளாக நெருக்கமாக அறிந்தவன் என்ற முறையில் அவரது பண்பை, அடக்கத்தை அளப்பரிய தமிழுணர்வை ஈடில்லா உழைப்பை, எளிமையை, சொல்லாற்றலை வியக்கிறேன்.

தாயுமானவர் சொன்னது போல,

**"அங்கைக் கொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப**
**அன்பினால் உருகி விழிநீர் ஆறாக"**

நிற்கின்ற ராஜதுரை அவர்களை எண்ணிப் பார்க்கிறேன்.

"ஆருயிர் கட்கெலாம் நான் அன்பு செயல் வேண்டும்" என கசிந்து உருகுகிற அவரது இதயத்தைப் பார்க்கிறேன். இருக்கினும், நிற்கும் போதும், பொருத்தி ஊண் துய்க்கும் போதும், இறையருட் சிந்தனையிலேயே வாழும் அந்த இறையருட் செல்வரை எண்ணி வியக்கின்றேன்.

கல்லாப்பிழை, கருதாப் பிழை, கசிந்துருகி நில்லாப் பிழை எனப் பிழையே செய்துழலும் வேடிக்கை மனிதர்கட்கு மத்தியில், தருமமே போற்றி அன்பு செய்து அருளெனும் குழவியை அணைத்து, தவமெனும் மாட்சி செய்துவாழும் அந்த உயரிய மனிதரை எண்ணிப் பார்க்கிறேன்.

தசரதனைப் பற்றி கம்பர் சொல்வார்: "உயிரெலாம் உறைவதோர் உடம்பு ஆயினான்" என்று. இலங்கை வாழ் மக்கள் இவரது தவத்தால், பூசைகளால், உடம்பு இவர் — உயிர் அவர்கள் என்று பயன்பெறுகின்றனர்.

இன்னலுறும் இலங்கையில் அமைதியை நிலவிடச் செய்ய இவர் அல்லும் பகலும் அனவரதமும் ஆற்றிவரும் சிறைத் தொண்டை தூய உணர்வை மதிக்கிறேன்.

உலகிலேயே உத்தமமான அஸ்வமேத யாகம், சண்டியாகம் போன்ற பலப் பல உயரிய பூசனைகளைச் செய்து எப்பாடு பட்டேனும் இறையருளை கனிவித்து இலங்கை வாழ் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ முயலும் அந்த மகத்தான மனிதனின் மனிதாபிமானத்தை நேசிக்கிறேன்.

இத்தனைக்கும் மேலாக இவரது அடக்கத்தை எண்ணி வியக்கிறேன்.

"கற்றறிவு, குலமேன்மை, கருணை பெரும் புகழ், செல்வம் கைம்மாறெண்ணா துற்றது உதவுங் கொடை, சீர்மை, ஒழுக்க மருந்தவம், நியமம், உறவின் கேண்மை, மற்ற திரிலாத் திண்மை, வாய்மை, மிகும் தூய்மை குண வனப்பு யாவும், பெற்றிடினும் அடக்கமிலாப் பெருமிதத்தால் இத்தனைக்கும் பிழையுண்டாமால்" என்று பாடினார், பிரபோத சந்திரோதய ஆசிரியர். இப் பாடலிலே சொன்ன அனைத்தும் உண்டு நமது அமைச்சரிடம்.

அதற்கும் மேலே அடக்கமும் உண்டு எனும் போது வியக்காமல் முடியாது. அவரை பாராட்டும் போது நாம் பெறும் பாடம்தான் என்ன? படிப்பினைதான் என்ன?

".......... மாயோன் இறுமாப்பும் புண்டிகரிப் போதுறையும் புத்தேள் இருமாப்பும் அண்டர் தொழ வாழும் இருமாப்பும் ஆலாலம் உண்டவனைப் பூசித்த பேறென்று உணர்ந்தில்லையால்" என்றபடி அவரது உயர்வுக்கு காரணம் பக்தி. அவரது தவம். அவரது இறை நம்பிக்கை. நண்டு பூசித்தது; சிலந்தி, பாம்பு, குரங்கு, அணில், காகம், யானை, எறும்பு எல்லாம் பூசித்தன. நாம் பூசிக்கிறோமா? அதி வீர நாம பாண்டியன் சொல்வது போல், "சிவ கருமம் செய்யார் திரு நீறு சாத்தார் தவறிலை யாம் சைவ நெறி சாரார் — அவனிதனில் ஏன் பிறந்தார் மானிடராய்?" என்றபடி வாழும் மனிதர்கள் நமது அமைச்சரிடம் கற்க வேண்டிய பாடம், படிப்பினை — கொண்டொழுக வேண்டிய குணம் குறிக்கோள் — அவரது ஆழ்ந்த இறையுணர்வே யாகும்.

வாழ்க இராஜதுரை. வளர்க அவர் வளர்க்கும் அன்பும் அறனும், தூய இறையுணர்வும்.



# “நல் உள்ளம் உடையவர்”

*பாலமுருகனடிமை*

அன்பிற்கும் போற்றுதலுக்கும் உரிய தமிழன்பர் மாண்புமிகு செ.இராசதுரை அவர்களை சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு சந்தித்து உரையாடும் வாய்ப்பு எந்தன் முருகனருளால் பெற்றேன். அவர் ஒரு தமிழ் எழுத்தாளர் என்பது யானறியேன் – இன்று அறிக்கையினைக் கண்டு அவரது தமிழ் உணர்வினை உணர்ந்து மகிழ்வுற்றேன்.

பழகுவதற்கு எளிமையும், எதனையும் மனம் திறந்து தன் கருத்துக்களை வெளியிடும் அவரது மனப்பாங்கும் இறையாண்மை உணர்வில் அவரது ஆழ்ந்த பற்றுதல்களும் எம்மை மிகவும் மன நிறைவும், மகிழ்ச்சியும் அடையச் செய்கிறது.

நல் உள்ளம் உடையவர்.

நல்லவற்றை செய்ய வேண்டும் என்று சதா சிந்திக்கும் அவர் இனிய உள்ளம்.

ஆன்மீக அருளால் அன்பும் – அருளும் நிறைந்த உலகைக்காண வேண்டும் என்று விரும்பும் அன்பர். நாடும் மக்களும் நல்வாழ்வும் அமைதியும் பெறவும் அவர் முன்னின்று நடத்திய வேள்விகளின் பயனை உணரும் நாம், அவரது பொது வாழ்வும், ஆன்மீகப் பணிகளும் மென்மேலும் சிறப்புற்று செயலாற்றிட உடல் நலமும் மன வலிவும் நல்கிட எல்லாம் வல்ல எந்தன் தமிழ் அழகனை இறைஞ்சிவாழ்த்துகிறேன்.

# "Excellent Works in Various Fields"

*(Swami Premaimananda)*
*Head*
*Ramakrishna Mission.*


I know Hon. Chelliah Rajadurai since the past thirty years as a Writer, Lover of Music, Politician and now as a Minister. We have a Ramakrishna Mission branch Centre at Batticaloa where I used to meet him whenever I visited Batticaloa and later in Colombo as an M.P., and Minister. He has helped the Mission both in Colombo and in Batticaloa in several ways.

He is very fond of the late Swami Vipulananda of the Ramakrishna Mission. He established a school of Music and Dance for the benefit of boys and girls in the Eastern Province which was a long felt need there. At kalladi Uppodai he has constructed a nice building in which he has housed a school and named it "Swami Vipulananda School of Music and Dancing." The school is very well patronised now.

As Minister of Regional Development he has improved the lot of several villagers throughout the Island. As Minister of Hindu Affairs he has restored several Hindu temples damaged during the 1983 riots both in Colombo and outstations. He has also built a Madam for the benefit of Hindu Pilgrims at Kataragama and this will be opened soon. Hindu Culture is now being rekindled by him throughtout the Island. He is also giving grants for holding Sunday Religious classes for teaching Hinduism among Hindu Students

I understand that the Tamil Writers Association is arranging a function to felicitate Hon. Chellian Rajadurai for the services rendered and being rendered by him to the Hindu Public.

I wish to congratulate the Hon. Minister for his excellent works in various fields and wish him a long life to continue his work unabated.



இவ்வாழ்வு உங்களுக்கு ஏன் கொடுக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் அறிவீர்களா? வாழ்நாள் முழுவதும் உணவு தேடி வாழ்வை நடத்துவதற்கு மட்டுமல்ல; கடவுளைத் தேடுவதற்கு உங்களுக்கு உதவி செய்யவே வாழ்க்கை அமைந்துள்ளது.

— ஸ்ரீ சத்திய சாயிபாபா




சிருங்கேரி மஹா சன்னிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகளுடன்



மதுரை ஆதினம் ஸ்வாமிகள் பொன்னாடை போர்த்தி ஆசிர்வதிக்கிறார்




சிருங்கேரி மஹா சன்னிதானம் ஜகத்குரு
ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகளுடன்



ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளுடன்




ஹவாய் தீவு ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமிகளுடன்



அருள்திரு ஸ்வாமி சச்சிதானந்த யோகீஸ்வரர் அவர்களுடன்



திருச்சி கலைக்காவேரி முகவர் அருள்திரு ஜோர்ஜ் அடிகளாருடன்



இலங்கையில் நடைபெற்ற அஸ்வமேதயாகத்தில் அக்னிகோத்திரம் ராமானுஜ தாத்தாச்சாரியார், சாம்பமூர்த்தி சிவாச்சார் அவர்களுடன்



இலங்கை ஆயர் நிக்கலாஸ் பெர்னான்டோ அவர்களுடன் திரு. ராஜதுரை – மனைவி



பெங்களூர் ஸ்ரீலஸ்ரீ சிவபாலயோகி மகராஜ் அவர்களுடன்



இங்கிலாந்து பிரதமர் திருமதி தட்ஸருடன் கை குலுக்குகின்றார்



சீனத் தலைவருடன்



பாகிஸ்தான் ஜனாதிபதி ஜியாஹத் அலிகான் அவர்களுடன்



வங்காளதேச ஜனாதிபதி திரு. எர்ஷாத் அவர்களுடன்

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 12.12.97

## வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைக் களைந்திட எழுத்தாளராய்த் தம் பணியினைத் தொடங்கி பாராளுமன்ற உறுப்பினராய், அமைச்சராய்ப் பணியாற்றி - தமிழர் நலம் காண தன்னலம் துறந்து, தமிழரசு இயக்கம் கண்டு இன்றும் அயராமல் அரும்பணியாற்றி வரும் என் இனிய நண்பர் திரு. செல்லையா ராசதுரை அவர்களின் அருந்தொண்டினைப் பாராட்டிச் சிறப்பு மலர் வெளிவருவது அறிந்து அகம் மிக மகிழ்கிறேன்.

இடத்தால் வேறுபட்டிருந்தாலும், தமிழர் இன நலம் காப்பதில் இன்றல்ல என்றும் நாம் இணைந்து பணியாற்றுவோம்.

தொயவின்றித் தொடரும் தங்களின் அருந்தொண்டால், தமிழ்ச் சமுதாயம் மென்மேலும் மேன்மையுற என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மு. கருணாநிதி )

# "சிறந்த தமிழ்த் தலைவர்!"

முன்னாள் பிரதமர் டாக்டர் தஹநாயகா

சோ. பொன்னம்பலம் இராமநாதனுக்கு பிறகு இந்நாட்டின் சிறந்த நேர்மை தவறாத தமிழ் அரசியல்வாதி, பிரதேச அபிவிருத்தி அமைச்சர் செ. இராசதுரை.

இந்த நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லீம், கத்தோலிக்க மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்கள். நாட்டின் உயர்ச்சிக்கு பாடுபட்டு வந்துள்ளார்கள். அனைவரையும் நாம் சகோதரர்களாகவே மதிக்கிறோம்.

சோ. பொன்னம்பலம் இராமநாதன் இந்த நாட்டின் சுதந்திரத்துக்காகவும் உயர்ச்சிக்காகவும் பல தியாகங்களை செய்துள்ளார். அவரை ஒரு அரசியல் தலைவராக நாடு மதிக்கின்றது. அவரின் மறைவுக்குப் பின் அந்த இடத்தை நிறைவு செய்ய ஒருவர் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கவில்லை.

குறிப்பிட்ட கால எல்லையின் பின்பு தேசிய பற்றுடன் இன ஐக்கியத்தை உறுதி செய்யவும், நாட்டை கட்டியெழுப்பவும் - சாதி சமய பேதமின்றி உழைக்கும் சிறந்த தமிழ்த் தலைவராக அமைச்சர் இராசதுரை திகழ்கிறார்.

# "பாராளுமன்றத்தில் சரித்திரம் படைத்தவர்"

எம்.எச். முகம்மது,
சபாநாயகர், இலங்கைப் பாராளுமன்றம்

பாராளுமன்றத்தில் நீண்டகாலமாக பிரதிநிதியாக இருந்தவர் திரு. செல்லையா இராசதுரை. மட்டக்களப்பு தொகுதியில் 1956ம் ஆண்டு போட்டியிட்டு - அடுத்து நடைபெற்ற தேர்தல்களில் 1977ம் ஆண்டு வரை வென்றவர் திரு. இராசதுரை. ஒரே தொகுதியில் போட்டியிட்டு தொடர்ந்து வெற்றி பெற்ற பிரதிநிதிகளில் இலங்கை பாராளுமன்றத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றுச் சரித்திரம் படைத்தவர்.

திரு. இராசதுரை இலங்கையின் மிகச் சிறந்த தமிழ்ப் பேச்சாளர். தமிழ்ப் பேச்சில் அவரை வெல்ல யாரும் இலலையென்றால் மிகையாகாது. தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குடையவர். முஸ்லிம் மக்களையும் - அன்பையும் பெற்ற தமிழர். நபிகள் நாயகம் பிறந்த தின விழாக்களில் கலந்து உரையாற்றும் ஒரே தமிழர். அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரினதும் அபிமானத்திற்குரியவர். பழகுவதற்கு இனியவர். அரசியல் நாகரிகம் தெரிந்தவர். அவரோடு பழகியவர்கள் இலகுவில் அவரை மறக்க மாட்டார்கள். எவருடனும் சிரித்த முகத்துடன் மனம் விட்டுப் பேசும்

பண்பாளர். எழுத்தாளராக வாழ்க்கையை ஆரம்பித்து, பாராளுமன்றப் பிரதிநிதியாகி முப்பத்து மூன்று வருடங்கள் அப் பதவியைத் தக்க வைத்து மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது மேயராகவும் விளங்கியவர். இலங்கை அமைச்சர் அவையில் பத்து ஆண்டுகள் அமைச்சராக விளங்கியவர் எழுத்தாளர். அவரைப் பற்றிய நூல் வெளியிடுவது நல்ல முயற்சியாகும். அவர் நீண்டகாலம் வாழ்ந்து இலங்கை நாட்டிற்குச் சேவையாற்ற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

எம்.எச். முகம்மது,
சபாநாயகர்,
இலங்கை பாராளுமன்றம்

05.04.1992

பிரார்த்தனை உதட்டிலிருந்து வரக்கூடாது; நெஞ்சிலிருந்து வரவேண்டும். அது தனக்காகச் செய்யப்படக்கூடாது; பிறருக்காகச் செய்யப்பட வேண்டும்.

– ஸ்ரீ சத்திய சாயிபாபா

# "மட்டக்களப்பு யாழ்ப்பாண ஒற்றுமைக்கு வித்திட்டவர்"

தமிழரசு தந்தை சா.ஜே.வே.செல்வநாயகம்

திரு. இராஜதுரை அவர்களை நான்
வெகு காலமாக அறிவேன்.
அவர் ஆற்றல் மிக்க ஓர் எழுத்தாளர்.
அரசியலில் ஈடுபட்டு முழு மூச்சாக
வேலை செய்து வந்தவர்.
மட்டக்களப்பு யாழ்ப்பாண ஒற்றுமைக்கு
வித்திட்டவர்.
கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக்
கொள்கைகளைப் பரப்பவும் பலம் வாய்ந்த
சக்தியாக விளங்கியவர்.
மட்டக்களப்பு மாகாணத்தில் இருந்து
தமிழரசுக் கட்சியின் சார்பில்
தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது
பாராளுமன்ற உறுப்பினர் என்ற
பெருமை அவருக்கே உண்டு.
திரு. இராஜதுரை சிறந்த பேச்சாளர்.

அவருடைய பேச்சில் இனிமை
கலந்திருக்கும்.
பொதுமக்களைத் தன்னுடன்
வயப்படுத்தும் வல்லமையுள்ளவர்.
எங்கள் இயககத்தில் இருந்த
பேச்சாளர்களில் இவருக்குத்
தனியான புகழுண்டு.

(திரு. செ. இராசதுரை அவர்களின் இருபத்தைந்தாவது வெள்ளி விழா மலருக்கு அனுப்பிய வாழ்த்து)



எவன் சாந்த குணத்தைப் பெற்றிருக்கின்றானோ அவன் நன்மையான பகுதியை உடையவன்.

– நபிகள் நாயகம் (ஸல்)

# S. Thondaman, M.P.

Minister of Rural Industrial Development

ஓர் எழுத்தாளராக வாழ்க்கையை ஆரம்பித்துப் பின்னர் பாராளுமன்றத்துள் ஓர் எம்.பி.யாகப் புகுந்தவர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களுள் அன்பர் இராசதுரையும் ஒருவர். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் சிலர் சேர்ந்து எழுத்தாளரும், பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான இராசதுரைக்குப் பாராட்டுவிழா ஒன்றை நடத்துகிறார்கள். நல்ல முயற்சி, வரவேற்கிறேன்.

திரு. இராசதுரை சிறிது காலம் சுதந்திரன் பத்திரிகையில் எழுத்தாளராகப் பணியாற்றியபின் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பிரசாரப் பேச்சாளராக மாறினார். அழகு தமிழில் ஆற்றோட்டமாகப் பேசும் ஆற்றல் படைத்தவர் அன்பர் இராசதுரை. அதனால் அவரை வடக்கு கிழ்க்கு தமிழ் மக்கள் அபிமான மிகுதியால் 'சொல்லின் செல்வர்' என்று செல்லமாக அழைக்கிறார்கள். தமிழில் பேசும் திறமையே பாராளுமன்றத்தில் ஓர் உறுப்பினராகும் தகைமையை அவருக்குத் தேடித் தந்தது.

1956 ஆம் ஆண்டு முதல், வந்த சகல தேர்தல்களிலும் சளைக்காது வெற்றியீட்டி, இன்றுவரை பதவியைப் பாதுகாத்துக் கொண்டிருப்பவர் அன்பர் இராசதுரை. இது அவருக்கு ஒரு பெருமையாகும்.

சில கருத்து வேறுபாடுகளால் அன்பர் இராசதுரை 1980-ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறி, ஐக்கிய தேசியக் கட்சியில் சங்கமமானார். தலைவர் ஜயவர்த்தனா அவருக்கு ஓர் அமைச்சர் பதவியை வழங்கினார். பிரதேச அபிவிருத்தியும், தமிழ்மொழி அமுலாக்கலும் இந்துசமய விவகாரமும் அவர் வசம் விடப்பட்டன.

அகில உலக இந்து மாநாடு ஒன்றை அன்பர் இராசதுரை சிறப்பாக நடத்தி முடித்தார். தமிழ்மொழி அமுலாக்கல் ஒரு பொறுப்பான துறை. இந்தத் துறையில் இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது. அவற்றையும் அன்பர் இராசதுரை செய்து முடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அனைவரும் சேர்ந்து அவரை ஓர் எழுத்தாளராகப் பாராட்டுகின்ற இந்த வேளையில் நானும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

# "பழகுவதற்குக் குளுமையான நண்பர் இராசதுரை"

## கவிஞர் கண்ணதாசன்

இலங்கையின் தமிழமைச்சர் எஸ். ராஜதுரை ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக எனக்கு நெருங்கிய நண்பர். அவரது குழந்தைக ளெல்லாம் சென்னையில் என் பொறுப்பில் தான் தங்கிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

1955-ல் இலங்கை மட்டக்களப்புக்கு என்னை அவர் வரவழைத்துப் பிரமாண்டமான வரவேற்புக் கொடுத்தார்.

அவர் இலங்கையின் தமிழமைச்சராகப் பதவியேற்ற பிறகு, இரண்டு முறை சென்னைக்கு வந்திருக்கிறார்.

இந்த முறை அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொன்விழாவுக் காக வந்திருந்த அவரைச் சென்னையில் நான் சந்தித்தேன்.

அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அங்கம் வகித்தவர். மட்டக்களப்பு மேயராகப் பதினைந்து ஆண்டுக் காலமும், பாராளுமன்ற உறுப்பினராகப் பதினைந்து ஆண்டுக் காலமும் பதவி வகித்து இப்போது தமிழரசுக் கட்சியில் இருந்து விலகி, இலங்கை ஜெயவர்த்தனா அரசவையில் அமைச்சராக இருக்கிறார்.

தமிழரசுக் கட்சியில் இருந்து விலகுவதற்கு முன்னாலும், விலகிய பிறகும் என்னுடன் தான் அவர் ஆலோசனை நடத்தினார். தமிழரசுக் கட்சி தம்மைப் பயன்படுத்திக் கொண்டு, பலமுறை அவருக்குக் குழி பறிக்க முயன்றிருக்கிறது என்ற விவரத்தைச் சொன்னார் அவர்.

உதாரணத்திற்கு, ஒரே மட்டக்களப்புத் தொகுதியில் இவருக்கும் இன்னொருவருக்கும் கட்சி டிக்கெட்டைக் கொடுத்தது. அந்த இன்னொருவர், கவிஞர் காசி ஆனந்தன். ஆகக் கடைசியில் அதிகார பூர்வமாகக் காசி ஆனந்தனையே அறிவித்தது. ஆனால், அதையும் மீறி ராஜதுரை ஜெயித்தார்.

ஒரு தொகுதியில் இருபத்தைந்து வருஷ காலமாகத் தம் செல்வாக்கை ஒரே மாதிரி வைத்திருப்பவர் ராஜதுரை.

"இலங்கைத் தமிழரசுக் கட்சி சிரிமாவோவுக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகள் நியாயமே. ஆனால் ஜெயவர்த்தனாவுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தி இருப்பது தவறு. இலங்கை அரசில் உத்தியோகம் பார்க்கும் தமிழர்கள், சிங்களமும் படித்திருக்க வேண்டும், என்ற சிரிமாவோவின் உத்தரவை ஜெய வர்த்தனா ரத்து செய்தார். பதினைந்து வருஷங்களாகப் பிரமோஷன் இல்லாத தமிழர்களுக்கெல்லாம் பிரமோஷன் கொடுத்தார். இந்து கலாசாரத்தைக் காப்பாற்ற வேண்டிய உதவிகள் செய்கிறார். அவரோடு தமிழரசுக் கட்சி ஒத்துப் போவதுதான் நல்லது" என்பது ராஜதுரையின் வாதம்.

இருபது வருஷங்களுக்கு முன்பு வரை அவரது பேச்சும், எழுத்தும் தி.மு. கழகப் பாணியிலேயே இருந்தன. இன்றும் அவரது தமிழ் நடை அறிஞர் அண்ணா அவர்களின் நடையை ஒட்டியதாகவே இருக்கிறது.

எந்தவிதக் கெட்ட பழக்கமும் இல்லாத ராஜதுரை, பழகுவதற்கு குளுமையான நண்பர்.

அவர் அமைச்சராவதற்கு முன்பு வரை சென்னைக்கு வந்தால் என்னோடுதான் தங்குவார். இப்போது சேப்பாக்கம் விருந்தினர் விடுதியில் தங்குகிறார்.

எங்கள் நட்புறவைப் பலநேரங்களில் அவர், பூர்வஜென்ம பந்தம் என்று குறிப்பிடுவார்.

அவரது குழந்தைகளும், குடும்பமும் எங்கள் குடும்பத்தில் காட்டும் பாசத்தைப் பார்த்தால், அது உண்மை என்றே தோன்றுகிறது.

# “நாவன்மையுடைய பேச்சாளர்”

சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம்

இலங்கை அரசின் அறநிலையத்துறை அமைச்சராக இருந்துவரும் என்னுடைய நெடுநாளைய நண்பர், மாண்புமிகு திரு. செ.இராசதுரை அவர்களுக்கு இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டு விழா நடத்த இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.


அன்பர் இராசதுரை, அடக்கமாகப் பணி புரிவதில் ஆர்வம் உடையவர். ஆடம்பரத்தை விரும்பாதவர். எந்தச் சோதனைகளையும் துணிவோடு சந்திக்கக் கூடியவர். இப்போது அவர் அமைச்சர் பதவியில் இருப்பதும் பல சோதனைகள் சூழ்ந்த நிலையில்தான். தமிழுக்கும், தமிழருக்குரிய பண்பாட்டையும், வீரத்தையும் அவர்பால் காணும் போதெல்லாம் நான் மகிழ்ச்சியடைவதுண்டு. அவரால் அழைக்கப்பெற்று மட்டக் களப்பில் ஒரு பெரிய இலக்கிய விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியதும் உண்டு. அவரது இல்லத்திலிருந்து விருந்து அருந்தியும் மகிழ்ந்ததுண்டு.

அமைச்சர் திரு. இராசதுரை, இலங்கை நாடாளுமன்றத்தில் சாதாரண உறுப்பினராக இருந்த காலம்தொட்டு, அவரை நான் அறிவேன்.

ஒரே தொகுதியில் தொடர்ந்து 33 ஆண்டுகளுக்கு மேலாக ஒருவர் அடுத்தடுத்து நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது – எனக்கு நினைவிலுள்ளபடி இந்தியத் தமிழகத்தில் நிகழாத அற்புதமாகும்! சிறந்த நாவன்மையுடைய பேச்சாளர்; பொருட்செறிவோடு எழுதும் திறமைமிக்க எழுத்தாளர். பிறரோடு பழகுவதிலேயும் சிறந்த பண்புடையவர். இத்தகை நற்குணங்களும் பொருந்திய அன்பர் இராசதுரை, இந்தியா வரும்போதெல்லாம் என்னைச் சந்திக்காமல் இருப்பதில்லை. அவருடன் சிறிது நேரம் உரையாடும் போதெல்லாம், ஒரு உண்மையான தமிழருடன் உரையாடுகிறோம் என்ற உணர்வு எனக்கு ஏற்படுவதுண்டு.

அவரைப் பாராட்டுவதற்கு முன்பு, அதனை ஏற்பாடு செய்ய முன்வந்த இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தைப் பாராட்டுகிறேன். அன்பர் இராசதுரைக்கு இன்னும் நீண்ட எதிர்காலம் இருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு மேலும் வாழ்ந்து, தனது தாயகமான இலங்கைக்கும், மொழி கலாச்சார ரீதியில் தமக்குத் தொடர்புடைய இந்தியாவுக்குமிடையே நிலவிவரும் நட்புறவைக் காக்கப் பாடுபடுவாராக!

அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது மனமுவந்த வாழ்த்துக்கள்!



முட்டாளின் தோழமையைவிட ஒருவன் தனியாக வாழ்வது எவ்வளவோ மேலானது.

– புத்தர்

# "தமிழ் அன்பர்"

## முத்தமிழ் காவலர் வாழ்த்து

### கி. ஆ. பெ. விஸ்வநாதன்

இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிவரும் உயர்ந்த தமிழ் இதழ்களின் சிறந்த எழுத்தாளராக திகழ்ந்துவரும் இனிய தமிழ் அன்பரும் இலங்கை அரசாங்கத்தின் பாராளுமன்றத்தில் முப்பத்திரண்டு ஆண்டுகளாக உறுப்பினராக இருந்து வருபவரும் இலங்கை அரசாங்கத்தின் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சராகவும் இந்து சமய அற நிலையத்துறை அமைச்சராகவும் திகழ்ந்து வருகின்ற எனது அன்புக்கினிய உயர்திருவாளர் செல்லையா இராசதுரை அவர்களுக்கு இலங்கை எழுத்தாளர் உலகம் ஒன்று சேர்ந்து பாராட்டுவிழா நடத்த இருக்கிறது என்ற நல்ல செய்தியும் அதன் நினைவாக மலர் ஒன்று வெளிவர இருக்கிறது என்ற செய்தியும் என்னை மகிழ்விக்கின்றன.

அன்புடை நெஞ்சமுள்ள அடக்கமும் பணிவுமுள்ள தமிழ் அறிஞர்களை வாழ்த்தி வணங்கி வரவேற்கும் அன்பர் இராசதுரையை முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நானறிவேன்.

பாராட்டு விழா இனிது நடைபெற வேண்டுமெனவும் மலர் நல் அறிஞர்களின் கட்டுரைகளை தாங்கி நாடு முழுவதும் நன்மணம் வீசவேண்டுமெனவும் எழுத்தறிஞர் அமைச்சர் இராசதுரை அவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் நல்ல உடல் நலத்துடன் இருந்து நாட்டுக்கும் மொழிக்கும் மக்களுக்கும் எழுத்தாலும், சொல்லாலும், செயலாலும், நற்றொண்டுகள் பல புரிந்து சிறப்புடன் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகிறேன்.

# "இலங்கைத் தமிழ் செம்மல் வாழ்க!"

—தமிழக நிதி அமைச்சர்
டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., டி.லிட்.,

மாண்புமிகு சொல்லின் செல்வர் திரு. செ. இராசதுரை அவர்களின் பல்லாண்டுப் பொதுத் தொண்டினைப் பாராட்டும் வகையில், சிறப்பு மலர் ஒன்றினை வெளியிடும் முயற்சி மிகவும் பாராட்டுவதற்கு உரியது.

திரு. செ. இராசதுரை அவர்களை, நான் 1953ஆம் ஆண்டு முதல், நன்கு அறிவேன். அவரோடு நெருங்கிப் பழகிடும் இனிய வாய்ப்புகளைப் பல தடவைகள் பெற்றிருக்கிறேன்.

1953இல், நான் இலங்கைச் சுற்றுப்பயணத்தில், மட்டக்களப்பு நகருக்குச் சென்றிருந்தபோது, அங்குள்ள பொது மண்டபம் ஒன்றில், சிறப்பான முறையில் வரவேற்பு நிகழ்ச்சிக்கு அவர் ஏற்பாடு செய்திருந்தார். மிகப் பெரிய கூட்டத்திற்கிடையே உரையாற்றும் வாய்ப்பினைப் பெற்றுப் பெரிதும் மகிழ்ந்தேன். அப்பொழுது பெரியவர் செல்வநாயகம் அவர்களும் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

திரு. செ. இராசதுரை அவர்கள் 1981இல் இலங்கைப் பண்பாட்டு - தமிழ் நடைமுறைப்படுத்தல் அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, கொழும்பு மாநகரில் பாரதியார் நூற்றாண்டு விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தார். அவரது அழைப்பின் பேரில் அந்த விழாவில் நான் கலந்துகொண்டு, பாரதியாரைப் பற்றி விரிவானதொரு சொற்பொழிவு நிகழ்த்தினேன். அந்த விழாவை ஒட்டிக் கொழும்பில்

நடைபெற்ற பொதுமக்கள் வரவேற்புக் கூட்டத்திலும், கொழும்புத் தமிழ்ச் சங்கக் கூட்டத்திலும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினேன்.

1968இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிலும், 1981இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டிலும், தமிழக அரசின் சார்பாக நான் விடுத்த அழைப்பினை ஏற்று, அவர் வருகை தந்து கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

சென்ற 42 ஆண்டுக் காலமாகத் திரு. செ. இராசதுரை அவர்கள் தமிழகத்திற்கு வருகை தந்தபோதெல்லாம், அவரோடு கலந்து உரையாடி மகிழும் வாய்ப்பினைப் பல தடவைகள் பெற்றிருக்கிறேன்.

திரு. செ. இராசதுரை அவர்கள் இனிய பண்புகள் பலவற்றிற்கும் உறைவிடமாக விளங்குபவர். அவர் சிந்தனை அறிவுத்திறன், செயலாற்றல் திறன், சிறந்த பண்பாட்டுத்திறன், செம்மையாகச் செய்து முடிக்கும் திறன் போன்றவற்றை ஒருங்கே பெற்றவர். அவர் சிறந்த பேச்சாளர்; நல்ல எழுத்தாளர்; எவருடனும் இனிமையாகப் பழகக் கூடிய இயல்பினைக் கொண்டவர்.

அவர் சமூகத்தொண்டு, சமயத்தொண்டு, தமிழ்த்தொண்டு, கலைத்தொண்டு, அரசியல்தொண்டு, ஆட்சித்தொண்டு, பொதுத்தொண்டு போன்றவற்றில் தலைசிறந்து விளங்குபவர் ஆவார்.

இலங்கை வாழ் தமிழர்கள் அனைவரும் அரசியல் உரிமை, சமூகஉரிமை, கல்வியுரிமை, வாணிகவுரிமை, வாழ்வுரிமை போன்ற உரிமைகள் பலவற்றையும் பெற்று, எல்லா வகையிலும் சிறப்புற்றுத் திகழ வேண்டும் என்பதில் பேரார்வம் காட்டிப் பெருந்தொண்டு புரிந்து வருபவராவார்.

திரு. செ. இராசதுரை அவர்கள் பல்லாண்டு காலம் நலம் பெற்று வாழ்க! அவரது நல்ல முயற்சிகள் எல்லாத் துறைகளிலும் வளர்க! அவரது சீரிய தொண்டுகள் என்றென்றும் வெல்க!

# "அறிஞர் அண்ணாவின் ஆற்றல் மிக்க மாணவர்"

## மாண்புமிகு அமைச்சர் இராமு. வீரப்பன்

அருமை நண்பரும், இலங்கைத் திருநாட்டின் பிரதேசவிருத்தி, இந்து சமயம், இந்துக் கலாச்சாரம் மற்றும் தமிழ் அலுவல்களின் அமைச்சருமான மாண்புமிகு திரு. செ. இராசதுரை அவர்களுக்குத் தமிழ் எழுத்தாளர்கள் பாராட்டுவிழா நிகழ்த்த இருப்பது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபடும் எழுத்தாளர்களை நாட்டின் அங்கீகரிக்கப்படாத பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று அறிஞர்கள் குறிப்பிடுவது வழக்கம். அப்படி ஒரு அங்கீகரிக்கப்படாத பாராளுமன்ற உறுப்பினராக ஓர் எழுத்தாளராகத் தம் பொது வாழ்க்கையைத் தொடங்கிய பிறகு அங்கீகரிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு பாராட்டத் தக்க அமைச்சராகவும் உயர்ந்து, இன்று அனைவரும் போற்றத்தக்க உயர்ந்த நிலையை அடைந்திருப்பவர்தான் என் அருமைச் சகோதரர் திரு. செ. இராஜதுரை அவர்கள் ஆவர்.

திரு. ராஜதுரை அவர்கள் அறிஞர் அண்ணாவின் பல்லாயிரக் கணக்கான மாணவர்களில் ஒருவர். இலங்கை நாடு பெற்றெடுத்த ஆற்றல்மிக்க மாணவர். தமிழ் உணர்வு மிக்க அருமையான இலங்கைத் தமிழ் மகன் அவர். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அன்பிற்குரிய நண்பர்: அருமைத் தோழர். எனக்கு மிகவும் நெருங்கிய உடன்பிறவாச் சோதரர்.

32 ஆண்டுகள் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்து

அவர்கள் பெரும் சாதனை படைத்துள்ளார்கள். மக்கள் ஆதரவோடு அச்சாதனையை மேலும் அவர்கள் தொடர்வார்கள் என்பதிலும் எனக்கு எவ்வித ஐயமும் இல்லை.

தாம் அமைச்சராகப் பொறுப்பு வகிக்கும் கடந்த பல ஆண்டு களிலும்கூட போற்றத்தக்க பல அரிய பணிகளை அவர்கள் செய்து முடித்துள்ளார்கள். உலகிலேயே முதன்முதலாக இலங்கை அரசின் சார்பில் அகில உலக இந்து மாநாட்டினை இலங்கையில் 1982-ஆம் ஆண்டு அவர்கள் நடத்திக் காட்டியது குறிப்பிடத்தக்க ஒரு சிறந்த சாதனையாகும்.

அதேபோல் தமது நாட்டில் உள்ள ஆலயங்கள் அனைத்தின் வரலாறு களையும் மாவட்ட வாரியாகத் தொகுத்து ''இலங்கைத் திரு நாட்டின் இந்துக் கோயில்கள்'' என்ற சிறந்த ஒரு நூலையும் கூட அவர்கள் தமது அமைச்சின் வெளியீடாக வெளியிட்டுள்ளார்கள். அமைச்சர் அவர்கள் ''இந்து சமயக் கலைக் களஞ்சியம்'' ஒன்றை உருவாக்கும் முயற்சியிலும் அண்மையில் ஈடுபட்டு அதற்காகவும் முயன்று வருகிறார்கள். இலங்கைத் திருநாட்டின் அமைதிக்காகவும், தமிழ் மக்களின் மேன்மைக்காகவும் அவர்கள் ஆற்றிவரும் ஆக்கப் பணிகளையும் நாம் நன்கு அறிவோம்.

இத்தகைய உயர்குணம் படைத்தவரும், நிதம் உழைப்பால் உயர்ப வருமான அருமை நண்பர் மாண்மிகு செ. இராஜதுரை அவர் களுக்குத் தமிழ் எழுத்தாளர்கள் பாராட்டுவிழா நிகழ்த்திப் பாராட்டுமலர் ஒன்றையும் வெளியிடுவது பாராட்டத்தக்க ஒரு பணியாகும். இப்பணியில் ஈடுபட்டுள்ள தமிழ் எழுத்தாளர்களுக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்து, விழா சிறக்க என் நல்வாழ்த்துககளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

**அறியாமையுடன் தன்னடக்கமில்லாமல் ஒருவன் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட, அறிவுடன் தன்நினைவோடு ஒரேநாள் வாழும் வாழ்க்கையே மேலானது.**

– *புத்தர்*




மலேசிய மன்னர், மகாராணியுடன்



மலேசியப் பிரதமர் Dr. டத்தோ மஹாதீர் முகமதுடன்





இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுடன் மாலத்தீவு வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுடன்



முன்னாள் கவர்னர் திரு. S.L. குரானா அவர்களுடன்



பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அராஃபத்துடன்




தொன்கோ நாட்டு மகாராணியுடன்




தமிழகத்தின் முன்னால் முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்களுடன்



திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி,
அவர் கணவர் சதாசிவம் அவர்களுடன்



சகோதரர் திரு. தினகரன் அவர்களுடன்



சவுதி அரேபிய எண்ணெய் வள அமைச்சருடன்




லண்டன் தமிழ்ச் சங்கத்தினர் அளித்த விருந்தில்



மலேசியா துணை அமைச்சர் திரு. டத்தோ பத்மநாபனுடன்




மலேஷிய திருநாட்டின் அமைச்சர்
டத்தோ டாக்டர் ச.சாமிவேலு அவர்களும்
சொல்லின் செல்வரும்



இலங்கை கப்பல் துறைமுக அபிவிருத்தி அமைச்சர்
மாண்புமிகு எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களும்
சொல்லின் செல்வரும், துணைவியாரும்

கொழும்பு தமிழ்ச்



சொல்லின் செல்வர்
கலாநிதி செல்லையா இராஜதுரை அவர்களும்
அன்பு துணைவியார் இராஜலெட்சுமி அவர்களும்

# "பழகுவதற்கு இனியவர்"

## அப்துல் மஜீத்

பாராளுமன்ற பிரதிநிதி

திரு. செல்லையா இராசதுரை அவர்களின் பொதுப்பணியைப் பாராட்டும் விதத்தில் இலங்கை வாழ் எழுத்தாளர் பெருமக்கள் ஒருவிழா எடுக்கவும் அதை ஒட்டி ஒரு மலர் வெளியிடவும் இருப்பது அறிய மகிழ்கிறேன்.


மாண்புமிகு இராசதுரை அவர்களை ஓர் எழுத்தாளர் என்ற முறையிலும் பாராட்டலாம். 'லங்கா முரசு', 'சாந்தி' ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் என்ற முறையிலும் பாராட்டலாம். தூய செந்தமிழில் அருமையான இலக்கிய நடையில் மணிக்கணக்காக சொற்பொழிவு ஆற்ற திறன்பெற்றவர் என்ற முறையிலும் பாராட்டலாம். கிழக்கிலங்கையின் குறிப்பிடத்தக்க நகராகிய மட்டக்களப்பின் முதல் மேயர் என்ற முறையிலும் பாராட்டலாம். துடிப்பு மிக்க இளமைக் காலத்தில் 26 வயதினராக இருக்கும் போதே நாடாளுமன்றத்திற்கு 1956–ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப் பட்டு தொடர்ந்து கடந்த 32 ஆண்டுகளாக ஒரே தொகுதியை பிரதிநிதித்துவம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலும் பாராட்டலாம். கடந்த 11 ஆண்டுகளாக ஸ்ரீலங்கா நாட்டின் பிரதேச அபிவிருத்தி அமைச்சராகவும், இந்து சமய விவகார சேவையாற்றும் சிறந்த நிர்வாகி என்ற முறையிலும் பாராட்டலாம்.

இவ்வாறு பல்துறை சிறப்புக்கள் பொருந்திய திரு. இராஜதுரை அவர்கள் பழகுவதற்கு மிக இனிமையானவர். இருபது ஆண்டுகளுக்கு மேலாக அவர் நட்பை நான் பெற்றிருக்கின்றேன். அரசியல் மேதை திரு. செல்வா அவர்கள்

தொடங்கிய தமிழரசுக்கட்சியின் நிறுவனத் தலைவர்களில் ஒருவராகவும் அவர் விளங்கி இருக்கிறார். தாய் தமிழ் என்றும் மிக அணுக்கமான தொடர்பு கொண்டு, தமிழகத்தின் மூத்த தலைவர்கள் அனைவருடனும், இளைய தலைமுறையினருடனும் தோழமை பூண்டுள்ள ஒரு சில இலங்கையருள் அவர் தலையானவர்.

எந்த நாளிலும், தாமும் ஓர் எழுத்தாளர் என்ற நினைவோடு, சகோதர எழுத்தாளர்களுடனும், ஆசிரியர்களுடனும் அவர் கொண்டிருந்த அன்புப் பிணைப்பு, இன்று எழுத்தாளர்கள் அனைவரும் ஒன்றுகூடி அவர் பொதுப்பணியைப் பாராட்டி விழா எடுக்க தூண்டுதலாக அமைந்திருப்பதை எண்ணி மகிழ்கிறேன். இதற்கு நானும் ஓர் எழுத்தாளனாகவும், அரசியல்வாதியாகவும் இருப்பது காரணமாக இருக்கக்கூடும் எனக் கருதுகிறேன்.

இனிய நண்பர், மாண்புமிகு அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை அவர்கள் தொண்டு சிறக்கவும், புகழ் மேவவும் இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.



அறியாமையுடன் தன்னடக்கமில்லாமல் ஒருவன் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட, அறிவுடன் தன்நினைவோடு ஒரேநாள் வாழும் வாழ்க்கையே மேலானது.

– புத்தர்

# "தனித்தன்மை வாய்ந்தவர்"

## மு.மு. இஸ்மாயில்

### ஓய்வு பெற்ற நீதிபதி

மாண்புமிகு அமைச்சர் செ.இராசதுரை அவர்களை சில ஆண்டுகளாக அறிவேன், அவர்தம் பேச்சினையும் கேட்டிருக்கிறேன்.


இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகைகள் பலவற்றில் அவருடைய படைப்புகள் இடம் பெற்றிருக்கின்றன; தாமே பல பத்திரிகைகளின் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்; பல தமிழ் நூல்களை அவர் வெளியிட்டிருக்கிறார். சுருக்கமாகச் சொன்னால் அவருடைய வாழ்க்கை தமிழ் மொழியின் வளர்ச்சியையும் தமிழர்களுடைய வாழ்வின் சிறப்பையும் மையமாகக் கொண்டது.

அத்தகையவர் 32 ஆண்டுகள் இலங்கைப் பாராளுமன்றத்தின் அங்கத்தினராக தொடர்ந்து செயல்பட்டு வருவதோடு அந்நாட்டின் அமைச்சர்களில் ஒருவராகவும், பதினோரு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றி வருவதும் எந்தத் தனிமனிதனுடைய வாழ்விலும் பாராட்டுக்கு உரியதாக ஆகும். மாண்புமிகு இராசதுரை அவர்கள் இவ்விரண்டு இடங்களில் அங்கம் வகித்திருப்பதோடல்லாமல் மாநகர சபையின் முதல்வராகவும் இருந்திருக்கிறார்.

இத்தகைய பதவிகளில் வெறுமனே அமர்ந்திருப்பவர் என்று சொல்வதற்கிடமில்லாமல் தாம் அங்கம் வகிக்கும் நிறுவனங்களில் தம்முடைய ஆற்றலின் முத்திரையைப் பொறித்துவிடும் தனித் தன்மையும் அவருக்குண்டு. அத்தகையவரை தம்முள் ஒருவராக இன்றும் கருதிவரும் எழுத்தாளர்கள் பெருமையோடு பாராட்டு வதற்கு முன்வந்து அதற்காக விழாக்காணும் முயற்சியில் இறங்குவது இயற்கையே.

இந்த நல்விழா சிறப்பாக நடைபெற வேண்டுமென்று வாழ்த்துவதோடு விழா நாயகர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தம் பணியைத் தொடர்ந்து நிறைவேற்ற இறையருள் கிட்டுமாறு பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்



**உங்கள் மனசாட்சியே உங்கள் எஜமானனும் வழி காட்டியுமாம்.**

*– ஸ்ரீ சத்திய சாயிபாபா*

# "சாதனையாளர்"

டாக்டர். க.த.திருநாவுக்கரசு

-உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்-

எளிமையும், இனிமையும் வாய்ந்த அமைச்சர் பெருமான், ஒள்ளும் வகையெல்லாம் ஓயாது தமிழ்ப் பண்பாட்டுக்கும், இந்திய சமுதாயத்திற்கும் ஆற்றிவரும் அரும்பணி உலகமறிந்த ஒன்றாகும்.

வெறும் வாய்ச்சொல் வீரராக இல்லாமல் செயல்திறன் வாய்ந்த சாதனையாளராக அவரை நான் காண்கின்றேன். அவருடைய அறிவும், அனுபவமும், தொண்டும் என்றும் தமிழ் மக்களுக்குத் தேவைப்படுகின்றன.

அமைச்சர் அவருடைய பணியைப் போற்றுகின்றேன்.

அமைச்சருடைய தொண்டினைப் பாராட்டுகின்றேன்.

அவருடைய பணியும், தொண்டும் தொடர்ந்து சிறக்க அவருக்கு நீண்ட ஆயுளும் நோயற்ற வாழ்வும் அமைய அம்பலவாணரின் அருளை வேண்டி வணங்குகின்றேன்.

**வாழ்க அமைச்சர் பெருமான்!**

**வளர்க தமிழ்!**

**ஒன்று படுக தமிழினம்!**

# "நாடறிந்த நல்ல நண்பர் இராசதுரை"

டாக்டர். நா. மகாலிங்கம்

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' அதனால் ''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்று பாரதி பாடிய வரிகளை அழுத்தங் கொடுத்துப் பாடம் நடத்தினார் வகுப்பில் ஓர் ஆசிரியர். இதை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கருத்திலிருத்திக் கொண்டான் வகுப்பில் ஒரு மாணவன்.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

என்ற குறளும் மாணவன் உள்ளத்தில் கொள்கையாகப் பதிந்தது. இதன் காரணமாக, சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதை தொழுது படித்திடவும், மனதில் உறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டும் என்றும் எண்ணித் தமிழை நன்கு பயின்று நாளடைவில் நாடு போற்றும் நல்ல தமிழ்ப் பேச்சாளனாகி ''சொல்லின் செல்வன்'' என்ற பட்டத்தையும் பெற்றான், அம் மாணவன். அது வேறு யாருமல்ல, தமிழை நயம்பட உரைக்கும் நல்ல நண்பர் திரு. இராசதுரையே அந்த நன் மாணாக்கர்.

இளமைக்காலம் முதல் 'செந்தமிழ்' என்றால் ஒரு பற்று. அதனால், தமிழை நன்கு கற்று, நாடு போற்றும் பேச்சாளனாக, எழுத்தாளனாக,

நாடக நடிகனாக, அரசியல்வாதியாகப் படிப் படியாக முன்னேறி இன்று இலங்கை அரசியல் வானில் ஒரு தாரகையாக அவர் மிளிருகின்றார்.

பெரியாரின் முற்போக்குக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இராசதுரை அவர்கள் அறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்களையும் அவரது நூல்களனைத்தையும் ஊன்றிப் படித்து மனத்தில் இருத்தியிருக்கிறார். அந்த இயக்கத்தின் மற்றைய அறிஞர்கள் கருத்துகளையும் ஆய்வு செய்தவர். அதுமட்டுமல்ல இவர்களுடன் நெருங்கிப் பழகியும் உள்ளார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் மிக நெருங்கிப் பழகி அவர் நட்புக்கு ஆளானவர். எம்.ஜி.ஆர். அவர்கள் துப்பாக்கிச் சூடுபட்ட சமயம் உடனே இலங்கையிலிருந்து வந்து அவரை மருத்துவமனையில் சென்று பார்த்துள்ளார். இதனை எம்.ஜி.ஆர். அவர்கள் என்றும் நினைவில் இருத்தி மனம் நெகிழ்ந்திருக்கின்றார்.

1956-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை மட்டக்களப்புத் தொகுதியில் பாராளுமன்ற அங்கத்தவராகத் தொடர்ந்து இருந்துவரும் பெருமைக்கும் புகழுக்கும் உரியவர். ஈழத் தந்தை எனப்படும் செல்வநாயகத்தின் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் நீண்ட நெடுங் காலமாக உழைத்து, அதன் சார்பில் பாராளுமன்றத் தேர்வில் வென்றுவந்தார். 1979-ஆம் ஆண்டில் கட்சியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து - பிரதேச அபிவிருத்தி, இந்து கலாசாரம் ஆகிய துறைகளுக்கு அமைச்சரானார்.

இளமையிலேயே மேடைப் பேச்சாளனாகவும், எழுத்தாளனாகவும் விளங்கிய இராசதுரை தமது 19வது வயதிலே 'லங்கா முரசு' என்னும் மாத சஞ்சிகையின் ஆசிரியராய் விளங்கினார். அதன் பின்னர், தமிழரசுக் கட்சியின் கொள்கை பரப்பு ஏடான 'சுதந்திரன்' வார இதழுக்கு உதவி ஆசிரியராகி ஆறு வருடங்கள் பணியாற்றிய பெருமை கொண்டார்.

சுவாமி விபுலாநந்தா உருவம் பொறித்த அஞ்சல் தலை திரு. இராச துரை அவர்களின் முயற்சியால் இலங்கை அரசு மூலம் வெளியிடப் பட்டது. அது மட்டுமல்ல 'யாழ் நூல்' தந்த விபுலாநந்த அடிகளின் ஞாபகார்த்தமாக மட்டக்களப்பில் கல்லடி உப்போடை என்னுமிடத்தில் 'விபுலாநந்தர் இசைக் கல்லூரி'யை நிறுவித் தமிழிசை வளரத் தம்மாலான அனைத்தும் செய்தார்.

1982-ஆம் ஆண்டில் அகில உலக இந்து மாநாட்டை மிகவும் கோலாகலமாக நடத்தி இந்து சமயப் பெருமையை உலகறியச் செய்தார். இந்த மாநாட்டில் உலகத்தில் பல பாகத்திலிருந்தும் அறிஞர்கள் கலந்து கொண்டது நினைவிற் கொள்ளத்தக்கது. இந்த மாநாட்டில் அறிஞர்கள்

பலர் ஆய்வுக் கட்டுரைகள் வாசித்ததுடன், நூல்கள் சிலவும் வெளியிடப் பட்டன. மாநாட்டு மலர் நல்ல பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது.

'உலக இந்து ஆராய்ச்சி நிறுவனம்' ஒன்றையும் கொழும்பு நகரில் பெருமுயற்சி செய்து நிறுவினார். முதலாவது இந்துக் கலைக் களஞ்சியம் இந்த மாத இறுதியில் இந்த நிறுவனத்தின் சார்பில் வெளிவர உள்ளது என்ற செய்தியும் காதில் இனிக்கிறது.

அமைச்சர் இராசதுரை அவர்களின் சாதனைகளில் சிகரம் வைத்தாற் போல் அமைந்தது ''அஸ்வமேதயாகம்'' ஆகும். எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன் அரசர்களால் அசுவமேதயாகங்கள் நிகழ்த்தப்பட்டதாக வரலாற்று நூல்களில் படித்திருக்கிறோம். செல்வம் படைத்த அரசர்களாற்றான் அசுவமேதயாகம் செய்து முடிக்க முடியும். காரணம், அதற்கு அத்தனை பொருட் செலவு, அது மட்டுமல்ல - அத்தனை தகுதியும் வேண்டும். உலகமே வியக்க - இறையருள் துணையும் குருவருள் துணையும் கொண்டு 27.12.85 முதல் 13. 2.86 முடிய 48 நாட்களில், பல வேத விற்பன்னர்களைக் கொண்டு புனிதமான முறையில் அந்த யாகத்தை உன்னதமாகச் செய்து முடித்தார்கள்.

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்

என்று வள்ளுவன் சொன்னதற்கொப்ப இலங்கை அரசும் அசுவமேத யாகம் செய்ய இராசதுரை தகுதியானவர்தான் என்று கருதி அதனை அவர் செய்ய ஆவன அனைத்தும் செய்தது. அந்த எண்ணம் பழுதுபடாமல் வெகு சிறப்பாக அசுவமேதயாகம் முடிவடைந்தது. இது இராசதுரை அவர்களுக்கு வாழ்வில் கிடைத்த ஒரு வெற்றியாகும்.

1983-ல் இலங்கையில் நடந்த இனக் கலவரங் காரணமாக இலங்கையில் பல ஆலயங்கள் தரைமட்டமாயின. இன்று அவை அனைத்தும் இராசதுரை அவர்களின் அமைச்சகத்தின் மூலம் புனருத்தாரணம் செய்யப்படுகிறது. 75 விதமான கோவில்கள் திருத்தப்பட்டு நித்திய பூசைகள் குறைவற நடக்கின்றன.

திரு. இராதுரையவர்கள், கலைகள், கலைஞர்கள் வளரவும் தம்மா லான உதவிகளைச் செய்துவருகின்றார். சாதாரண குடும்பத்தில் பிறந்து - படிப்படியாக உழைப்பால் உயர்ந்து இன்று பல சாதனை புரிந்த சாதனை மன்னனாக விளங்குகின்றார்.

நண்பர் இராசதுரை பல்லாண்டு வாழ்ந்து மேலும் பல சாதனைகள் புரிந்து பேரும் புகழும் பெற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

# "தமிழ் போல வாழ்க தழைத்து !"

ஜெயந்த்ரா கைலாசம்

பள்ளியிலே படிக்கின்ற காலந் தொட்டுப்
பயன்நிறைக்கும் எழுத்தாள ராக எண்ணி
துள்ளுதமிழ் நடையினிலே எழுதிக் கற்ற
தூயவர் இராஜதுரை எந்த நாளும்
உள்ளமதில் இறையனுக் குயர்ந்த கோயில்
ஒப்புவமை காணாத வண்ணம் கட்டி
வெள்ளமெனும் பக்தியுடன் வணங்கி நிற்பார்
விரிவுலகில் நலம்பலவும் குவித்தி ருப்பார்

இவருடைய ஒழுக்கநெறி, எழுத்தின் ஆற்றல்
இவைகளினை நன்குணர்ந்த இலங்கை மக்கள்
புவனமதை ஆளுகவே என்று சொல்லிப்
பொன்னொளிரும் பொறுப்பதனைக் கரத்தில் தந்தார்
தவறறியா வழித்தடத்தில் முன்னே சென்று
தாரணியை ஆண்டிருந்த தகவால் மாந்தர்

உவகையுடன் இவர்த லைவர் என்று சொல்லி
உள்ளமெலாம் குளிர்ந்தபடி வாழ்த்துச் சொன்னார்

தமிழெழுதும் எழுத்தாளர் ஒருவர் வாழும்
தன்மையினால் தகுதியினால் சிறப்புற் றோங்கி
இமிழ்கடல்சூழ் இலங்கையினை ஆள வந்த
இனியவொரு செய்தியினை எண்ணி எண்ணி
அமிழ்தத்தை உண்டதுபோல் அளவில் லாத
ஆனந்தக் கடலினிலே அகம்தி ளைக்க,
தமிழ்போல இராஜதுரை தழைத்து வாழச்
சரவணனின் தாள்மலரைத் துதிப்பன் யானே!
நாதன்தாள் வாழ்க.



அன்புடையவனே வாழ்பவன்; சுயநலமுடையவன் செத்துக் கொண்டிருக்கிறான் என்றே பொருள்.

– *விவேகானந்தர்*

# அருமை நண்பர் திரு. இராசதுரை

டாக்டர் பத்மா சுப்ரமண்யம்
(இயக்குநர்-நிருத்யோதயா
சென்னை)

பணம், பட்டம், படிப்பு, பதவி, பகட்டு போன்ற புகழுக்கான சாதனங்கள் கொண்டவர்களின் பெயர்களை அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் பண்பு, பணிவு, பகுத்தறிவோடு பக்தி, பதட்டமற்றத் தெளிவு, பணியில் பக்குவம், பரிவின் வித்தகம் என்றெல்லாம் குணங்களை அளவுகோலாகக் கொண்டு தேடினால், எத்தனைப் பெயர்களைப் பட்டியலில் காண முடியும்? மேலே கூறிய எல்லா அம்சங்களையும் ஆண்டவனின் அருளால் பெற்றவர், இன்று அறுபதைத் தாண்டிய அருமை நண்பர் திரு. இராஜதுரை அவர்கள்.

இலங்கையில் ஹிந்து அறநிலையத் துறையின் நல் அமைச்சராக இருந்த காலகட்டத்தில்தான், திரு. இராஜதுரை அவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் நேர்ந்தது. ஏதோ இராமாயண இலக்கியத்தில் படித்த, அச்வமேத யாகத்தை இருபதாவது நூற்றாண்டில் உலக நன்மைக்காகச் செய்த சாதனை புருஷர் அவர். இதற்காக காஞ்சி மஹான், பூஞ்யஸ்ரீ சந்திரசேகரேந்திர - சரஸ்வதி என்ற பெயரில் 100 வயது வாழ்ந்த தெய்வம், அவருக்கு அருகா அள்ளி அள்ளி வீசியதை நான் அறிவேன். அத்துடன் போதாதென, அந்த ஆன்மிகச் சுண்ணத்தில் வெல்லமிட்டு கலந்து இடித்தக் கலவையாக பூஜ்ய ஸ்ரீ புட்டபருத்தி மஹானின் பூரண ஆசியையும் பெற்றவர் அவர் என்றும் அறிவேன். இவர்தம் தன்னலமற்ற தெய்வத் தொண்டிற்கு எத்தனை புகழ்ந்தாலும் தகும்.

உலக ஹிந்து மாநாடு ஒன்றைக் கொழும்புவில் ஒப்பற்ற நற்பணியாக நடத்தியது இவரது பெரும் சாதனையாகும். இந்த மாநாட்டில் நான் கலந்துகொண்டு ஒரு ஆய்வுக் கட்டுரையை வாசித்தேன். கலைநிகழ்ச்சியும் அளித்தேன். உலக சமாதானத்திலும், ஹிந்து தர்ம தத்துவங்களிலும் திரு. இராஜதுரை அவர்களின் ஆழ்ந்த ஆர்வம், பளிங்கென பளிச்சிட்டதைக் கண்டோம். அவரிடத்தில் மாண்புமிகு ஜனாதிபதி ஜயவர்த்தனே முதல், அடிமட்டத்தில் பணிபுரியும் தொழிலாளி வரை, பல நிலைகளிலும், பல துறைகளிலும் மனிதாபிமான ரீதியில் பண்பட்ட நட்பு வளர்ந்திருந்ததைக் கண்டு வியந்தோம்.

விருந்தோம்பலிலும், அவரும் அவர்தம் மனைவியும், அலுப்பு சலிப்பின்றி, உள்ளன்போடு உறவை வளர்த்ததை என்றும் மறக்கமுடியாது. எங்களுக்குப் பாதுகாப்புக்காகச் செய்த ஏற்பாடுகளின் பாங்கும் அருமையாக இருந்தது. அன்பைக் கொட்டி எங்களைக் கவனித்துக்கொண்ட தமிழர், மற்றும் சிங்களர் ஆகிய இருசாராரின் ஒத்துழைப்பும் திரு. இராஜதுரை அவர்களுக்கு உண்டு என்பதை எங்களால் உணர முடிந்தது.

உலகம் உய்ய, நிதம் தெய்வத்தை வேண்டும் ஆன்மிக மனம் கொண்ட திரு. இராஜதுரை தம்பதிகள், பிறப்பால், பரம்பரையால், பண்பால், வளர்ப்பால், மனத்தால், வாக்கால், செயலால், குணத்தால் உயர்ந்தவர்கள். அவர்கள் நீடூழி வாழ்க; வளர்க அவர்தம் சேவை!

# "திருப்பணிச் செம்மல்"


கலைமாமணி","கவிஞர்கோ"
டாக்டர். புத்தனேரி, ரா.சுப்பிரமணியம்

1. இலங்கைத் தீவில் தமிழன் பெருமையின் இலக்கியம் எனும் அமைச்சர்
   இராசதுரையின் ஆன்மீகப்பணி இணையில் லாதது வே;
கலங்கா நெஞ்சம், விடாமுயற்சி, செந்தமிழன் உணர்ச்சியுடன்
   கனியும் துணிவும் கண்ணியம் கடமை கட்டுப் பாடுகளும்;
துலங்கா அல்லும் பகலும் நல்லறத் தொண்டுகள் புரிந்துவரும்
   தூயவர் ஆட்சித் திறமையி னாலும் சுடர்விடும் பேரறிஞன்;
குலம்கோத் திரங்கள் பேதமில்லாத கூட்டுச் சமதர்மக்
   கொள்கை வீரர், சமயப் பொதுநெறிக் குரிசையைப் போற்றுவமே.

2. உலக இந்து மாநா டதனைக் கொழும்பினில் கூட்டியவர்;
   ஒரே மேடையில் ஞானியர் பலரது தரிசனம் காட்டியவர்;
கலைகளின் மூலம் நல்லறம் வளர்ப்பதே அவரது கைவண்ணம்;
   காட்சிக் கெளியவர், கடும்சொல் லறியார் இரரசதுரை அண்ணல்
அழகில் லாத ஆன்ம ஒளியால் அனைவரும் வியப்படைய
   அசுவ மேத வேள்வி நடத்திய அரும்பெரும் செயல்வீரன்;
தலைசிறந்த தலங்களைத் தேடித் திருப்பணி செய்வதுவே
   தவமெனக் கொண்ட திருவருட் செல்வரின் சாதனை எத்தனையோ?

3. இறைபணி யாலே இலங்கைத் தமிழரின் இன்னல் தீரும்எனும்
இதய உறுதியால் ஆட்சிக் கடமை, சமயக் கடமைகளும்
நிறைவேற் றுவதில் பற்பல வெற்றி நிகழ்த்திடும் அறிவாளர்;
நீதியும் நேர்மையும் இருகண் எனவே காத்திடும் நெறியாளர்;

4. கறைபடி யாத நெஞ்சத் துணிவால் மனச்சான் றின்படியே
காரிய சித்தி பெறும்திறனானர் அறநெறித் துறை அமைச்சர்;
இறையரு ளாலே நிறைமொழி மாந்தர் வரிசையில் செல்லையா
இராச துரையின் பெருமை என்றும் நிலைபெறும் இதுதிண்ணம்.



நீங்கள் மற்றவர்கள் குற்றத்தைக் காண முயலாதீர்கள்; உங்கள் குற்றத்தைக் கண்டு திருத்திக் கொள்ளுங்கள்.

– விவேகானந்தர்

# "மட்டக்களப்பு மன்னனின் பெருந்தவம்"

பேராசிரியர் உவைஸ்
பல்கலைக்கழக விரிவுரையாளர்

## பாராட்டுரை

ஆதியும் அந்தமும் அறியொணா அமலநும்
பாத பங்கயம் பாங்குறப் பரவி
நீதியும் நியாயமும் நீணிலம் நிலைக்க
சாதனை சார்ந்தோர் சாலவுஞ் சாற்றப்
புரிந்துமே புவியோர் புகழ்ந்து பூரிக்க
அருமருந் தன்ன அமைந்த அன்பர்
நாளும் நாடுவோர் நயம்பெற நல்கிடும்
பாலும் பாகும் பாயும் பட்டினம்
மீனிசை மீட்டிட மீக்கொளுல் மிளிரும்
தேனிசை தெவிட்டிடத் தெளிக்கும் தென்னகர்
சொட்டுச் சொட்டாய்ச் சொரிந்திடும் சோலைசூழ்
மட்டு நகராம் மட்டக் களப்பில்
பெற்றோர் பேணிய பெருந்தவப் பேற்றால்
உற்றார் உறவினர் உளமகிழ் வுற்றிட
தோன்றினர் தோன்றல் தோற்றப் பொலிவுடன்
ஈன்றோர் இட்டனர் இராசதுரை யென்றே

| | | | |
|---|---|---|---|
| பெயருக் | கேற்ற | பெருந்தகைப் | பேற்றினர் |
| செயற்றிறம் | செறிந்தவர் | செல்லையா | செம்மலார் |
| ஓதுதும் | ஒள்ளியர் | ஒப்பில் | ஒழுக்கம் |
| ஆதியாம் | அறவழி | அமையும் | சரிதையை |
| பலவும் | படைக்கும் | பால்யப் | பருவம் |
| நிலவிட | நிலைத்தே | நிறுவுவர் | நினைத்தே |
| நல்லன | அல்லன | பகுத்தே | அறியும் |
| வல்லமை | வாய்ந்த | வாகாம் | வாய்ப்பினைப் |
| பயிற்சி | வழியாய்ப் | பகிர்ந்தே | அளித்திட |
| பயன்தரும் | பகுத்தறி | பாசறை | படைத்தே |
| சீராம் | திருத்தம் | சிறப்பாய்த் | தீட்டினர் |
| பாரோர் | பரவினர் | பாலியர் | பண்பினை |
| ஆலயந் | தனிலே | ஆட்டைப் | பலியிடல் |
| சாலவுந் | தகாதெனச் | சாற்றினர் | தகமையர் |
| இளமையில் | இயற்றினர் | இன்தமிழ் | இதழ்கள் |
| புலமை | பூண்டோர் | புகழ்ந்தனர் | புதிதெனத் |
| தமிழகந் | தனிலும் | தலைநிலம் | அடைந்தன |
| அமிழ்தினும் | அரிய | அத்தகு | சஞ்சிகை |
| மெத்தவும் | மேலென | மேதினி | மெச்சிட |
| முத்தமிழ் | வித்தகர் | முதுபெரும் | ஆசான் |
| யாழ்நூல் | யாத்தனல் | அடிகளார் | நற்பெயர் |
| வாழ்நாள் | வழங்கிட | வடித்தனர் | வார்சிலை |
| அஞ்சா | நெஞ்சம் | அமைந்த | அமைச்சர் |
| செஞ்சோற் | றுக்கடன் | தீர்த்தனர் | அவர்புகழ் |
| புவனம் | புரிந்திட | குவலயம் | துதித்திட |
| இவனியில் | இலங்கிட | இணையில் | இலக்கென |
| கவினுறு | கலைகள் | கசடறக் | கற்றே |
| நவின்று | நானிலம் | நற்றமிழ் | நாட்டி |
| நன்னயம் | நல்கும் | நவமாம் | நற்பொருள் |
| சொன்னயம் | சொரிவார் | சொல்லின் | செல்வர் |
| தவறாம் | கருத்துத் | தமிழைக் | குறித்திடின் |
| தவறார் | கண்டனம் | தகவுடன் | சுட்டிட |

| | | | |
|---|---|---|---|
| தமிழ்கூர் | நாட்டின் | தனித்துவ | எல்லையை |
| தமிழக | அறிஞர் | சாற்றினர் | இன்னனப் |
| இமயந் | தொடங்கி | திருமலை | வரையே |
| அமையும் | வடக்கும் | தெற்கும் | என்றே |
| மட்டக் | களப்பிலும் | தமிழர் | வாழ்வர் |
| திட்டமாய்ச் | செப்பினர் | தீந்தமிழ்க் | காவலர் |
| ஏற்றனர் | மறுப்பை | எழுதிய | அறிஞர் |
| போற்றியே | பொறித்தனர் | பொறுப்பாம் | ஏட்டினில் |
| மலையெனும் | பதத்தை | மதித்தே | பகர்ந்தனம் |
| தொலையில் | வாழும் | தொல்குடி | மறந்திலம் |
| தப்பாந் | தம்நிலை | தயவாய்ச் | சாற்றினர் |
| செப்பினர் | செம்மலார் | செந்திலார் | சேரிடம் |
| தெள்ளு | தமிழின் | தெற்காம் | எல்லை |
| கொள்ளுக | குறிஞ்சிக் | குமரன் | கோட்டையாம் |
| கதிர்மலை | என்னும் | கதிர்கா | மமென்றார் |
| இதனையுமே | ஏற்றுமே | ஏட்டினில் | ஏற்றினர் |
| வடபுல | வல்லுநர் | வழுவினை | விலக்கியே |
| கடமை | உணர்ச்சியைக் | காட்டுமிஃ | தல்லவா |
| அரசர்க் | கரசராம் | ஆங்கில | மன்னரின் |
| வரிசை | மிகுந்த | பிறந்தநாள் | விழாவினை |
| தடுத்தார் | தலைவர் | தகமை | இல்லென |
| விடுத்தார் | எதிர்ப்பை | ஏறியே | அரங்கினில் |
| அகிம்சா | வழியில் | அறவழி | வாழ்ந்தார் |
| அகிலமும் | அதிசயம் | அடைய | நடந்தார் |
| அரசியல் | வானில் | அழகுற | மிளிரும் |
| தரிசனை | மிக்க | தாரகை | யாமவர் |
| தொடக்கக் | காலம் | தொடங்கினர் | தமக்கென |
| அடக்கமாம் | அரசியல் | அடிப்படைக் | கட்சியை |
| சட்டத் | தரணியர் | தம்முள் | தலைமையர் |
| சிட்டர் | எசுசெவி | செல்வ | நாயகம் |
| தலைமை | தாங்கிய | தனிப்பெருங் | கட்சியில் |
| தலைக்கை | யாகவே | தனித்துவம் | பெற்றே |

| | | | |
|---|---|---|---|
| பாராள் | மன்றம் | பாங்காய்ச் | சென்றார் |
| சீராய்த் | தொண்டினைச் | சிறப்புற | வாற்றினார் |
| மக்கள் | நலத்தையே | மனதினில் | வைத்தார் |
| பக்க | பலமாய்ப் | பணிகள் | புரிந்தார் |
| அரிசனர் | தாமும் | ஆலயஞ் | செல்லலாம் |
| தரிசனம் | பெறலாம் | வணக்கஞ் | செய்யலாம் |
| யாண்டுகள் | பலவாய் | யாவரும் | புரியாத் |
| தீண்டாமை | தீயினை | தீர்த்த | தீரர் |
| ஆலயந் | தொழுவது | சாலவும் | நன்றெனும் |
| சீலமே | சிறக்க | சீர்பல | இயற்றினார் |
| அரசின் | அமைச்சராய் | ஆட்சியில் | அமர்ந்ததுமே |
| கரிசனை | காட்டினார் | கடமை | ஆற்றினார் |
| பிராந்திய | வளர்ச்சியைப் | பெரிதும் | பேணி |
| அருந்தவம் | அளித்திடும் | மறைவழி | காத்து |
| இந்துச | மயத்தையும் | கலையையும் | பண்பையும் |
| சொந்தமாய்க் | கொண்டு | சொம்மெனக் | கணித்து |
| அரியணை | அமர்த்தி | ஆவன | அளித்து |
| அரசியல் | ஞானியாய் | அகிலமே | மதிக்க |
| செந்தமிழ் | செகமதில் | செம்மையாய்ச் | செழிப்புற |
| நந்தா | விளக்காய் | நாளும் | விளங்கிட |
| நேயநல் | லுறுதி | பூண்ட | சீலராய்த் |
| தூயராய்த் | தோன்றலாய்த் | தொண்டராய்த் | தோழராய் |
| இடையீ | டின்றியே | இவனியில் | இலங்கியே |
| தொடர்க | தொண்டினைத் | தோத்திரம் | தொனித்திட |
| மலர்தலை | உலகம் | மதித்தே | மகிழ்ந்திட |
| பலவாம் | ஆண்டுகள் | பாரினில் | வாழ்கவே |
| உன்னியே | வையகம் | சுட்டிட | |
| மன்னிய | மன்னவ | வாழிய | வாழியவே. |



# "இராசதுரையின் இலக்கியப் பணி"

பேராசிரியர் எம்.ஏ.எம்.சுக்ரி

பொதுவாழ்வோடும், அரசியல் வாழ்வோடும் இலக்கியப் பணிகளை தம்முள் இணைத்துக் கொண்டவர்களை மிக அரிதாகவே நாம் சந்திக்க முடிகின்றது. சொல்லின் செல்வர் என அழைக்கப்படும் அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்கள் இவ்வகையில் சிறப்பாகக் கணிக்கத்தக்கவர்களுள் ஒருவர். அவரின் பொதுப்பணியும், அரசியல் வாழ்வும், இலக்கியப் பணியும் இணைந்து காணப்படுகின்றன. சிலபோது அவரது அரசியல் ஆளுமையை இலக்கிய ஆளுமை மிகைத்து நிற்கின்றது.

அமைச்சர் செ.இராசதுரை அவர்கள் சொல்வளமும், கருத்துச் செறிவும் ஆற்றொழுக்குப் போன்ற அழகு நடையும் கொண்ட சிறந்த பேச்சாளர். பல்வேறு தலைப்புகளில் அவர் கட்டுரைகளை எழுதியுள்ளார். அவரது சிறுகதைகள், நாடகங்கள் தமிழகத்திலும், ஈழத்திலும் பல்வேறு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகி உள்ளன. பல்வேறு பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளதுடன், அவராகவே சொந்தத்தில் பத்திரிகையும் நடாத்தியுள்ளார். இவ்வாறு பல்வேறு துறைகளையும் தழுவியதாக அவரது இலக்கியப் பங்களிப்பு அமைந்துள்ளது.

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி ஆசிரியராக இருந்த போது 'கல்கி'யில் 'பழிக்குப்பழி' என்ற சிறுகதையை எழுதினார். மன்னன் காசியப்பனின் வாழ்வின் வரலாற்று நிகழ்வுகளைப் பின்னணியாகக் கொண்ட சரித்திரக் கதையாக இது அமைந்தது.

ஜே.ஜி. ஜெயசீலன் அவர்கள் 'இராசதுரை' என்ற பெயரில் வெளியிட்ட சஞ்சிகையில் 01.5.1982-ல் ''ராசாத்தி'' என்ற அவரது குறுநாவல் பிரசுரமாகியது. அவரது சிறுகதைகளை உள்ளடக்கிய 'சிறுகதைத் தொகுதியொன்று' 'மிஸ் கனகம்' என்ற பெயரில் சிலகாலத்துக்கு முன்னர் வெளிவந்தது. திரு. கனக செந்திநாதன் தனது ''ஈழத்து இலக்கிய வளர்ச்சி'' என்ற நூலில் இது பற்றிக் குறிப்பிடும்போது ''மட்டக்களப்புத் தொகுதியின் முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதியான செ.இராசதுரை அந்தக் காலத்தில் சிறுகதை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். 'மிஸ்கனகம்' என்னும் சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது'' எனக் கூறியுள்ளார். அவ்வப்போது பல்வேறு தலைப்புகளில் அவர் எழுதிய கட்டுரைகள் பல்வேறு பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும், பிரசுரமாகியுள்ளன. இவற்றுள் 'கோபுரம்' இதழில் 'மாநகர் மதுரை' என்ற தலைப்பிலும் 'ஞானப் பிரகாசமுனிவர்' என்ற தலைப்பிலும் வெளிவந்த கட்டுரைகள் குறிப்பிடத் தக்கனவாகும்.

செல்லையா இராசதுரை அவர்கள் சொல்வளம் மிக்க பேச்சாளர். அவர் எப்பொருள் பற்றிப் பேசினாலும் இலக்கியச் சுவைபடப் பேசும் தன்மை படைத்தவர். இலக்கியக் கருத்துக்களை ஆதாரம் காட்டி தனது கருத்துக்கு வலிவூட்டும் பண்பு அவரது பேச்சுக்களில் பொதுவாகக் காணப்படும் அம்சமாகும். அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆற்றிய உரைகள் நூலுருவம் பெற்றுள்ளன. மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர் கல்லூரியில் நடைபெற்ற இலக்கிய மன்றக் கூட்டத்தில் 05.03.1954-ல் அவர் ஆற்றிய சொற்பொழிவு ''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்'' என்ற தலைப்பில் வெளிவந்தது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கான தீர்வுகள் பற்றி அவர் 1979-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19-ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரை ''அன்பும் அகிம்சையும் தேசிய ஒற்றுமைக்கு வழி'' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்திருக்கிறது. 1984 செப்டம்பர் மாதம் 21-ஆம் திகதி, நவம்பர் 2-ஆம் திகதி, டிசம்பர் 17-ஆம் திகதி, 1985 நவம்பர் 22, ஜூலை 25-ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் ''பாராளுமன்றத்தில் அமைச்சர் இராசதுரை'' என்ற தலைப்பில் நூலுருப் பெற்றிருக்கின்றது. 1979-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொன்விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு டிசம்பர் 6-ஆம் திகதி நடைபெற்ற முதல் நாள் நிகழ்ச்சிகளில் அவர் ஆற்றிய உரை ''அண்ணாமலை அரசர் இமயச் சாதனை'' என்ற பெயரில் பிரசுரமாகியுள்ளது. 18.11.1979 சுவாமி விபுலானந்தரின் நினைவு முத்திரை வெளியீட்டு விழாவின் போது அமைச்சர் செ.இராசதுரை இலங்கை வானொலியில் நிகழ்த்திய உரை ''அருட்திரு விபுலானந்த அடிகள்'' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.

அமைச்சர் இராசதுரை அவர்கள் முஸ்லீம்களின் இலக்கியப் பண்பாட்டுத் துறைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டுள்ள ஒருவர். அட்டாளச்சேனை முஸ்லீம்

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பல இலக்கியச் சொற்பொழிவுகளை அவர் நிகழ்த்தியுள்ளார். 1987-ஆம் ஆண்டு ரண்முத்து ஹோட்டலில் நடைபெற்ற மார்ட்டின் லிங்கில் என்னும் அறிஞர் ஆங்கிலத்தில் எழுதி மொகமட் திருத்தூதர் பற்றி மிக அழகான உரை ஒன்றை அவர் நிகழ்த்தினார். மட்டக்களப்பு முஸ்லீம்களின் கிராமியக் கதைகளில் மிக ஈடுபாடு கொண்ட அவர் இப்பாடல்கள் பாதுகாக்கப்பட்டு நூலுருப் பெற வேண்டிய அவசியத்தையும், இத்துறையில் முஸ்லீம் கலாசாரத் திணைக்களம் ஈடுபடல் வேண்டும் என்ற கருத்தையும் அப்போது அவர் வலியுறுத்தினார்.

அமைச்சர் செ.இராசதுரை இந்து சமய கலாசாரத்திணைக் களத்தின் மூலம் அரிய பல நூல்களை அச்சிட்டு வெளியிடும் பெரும் முயற்சியினை மேற் கொண்டார். தற்போது "இந்து சமய கலைக் களஞ்சியம்" ஒன்றினை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இலக்கியத் துறையில் அமைச்சர் இராசதுரையின் பங்களிப்பு கதை, கட்டுரை, சொற்பொழிவுகள், தலவெளியீடு என்பவற்றிற்கு மட்டும் குறியிடவில்லை. இலக்கியத் துறையில் ஈடுபாடுள்ள பலரை ஆர்வம் ஊட்டி, அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் நல்கிய மகத்தான பங்களிப்பினையும் அவர் செய்தார். இத்துறையில் இன்று இலக்கியத் துறையில் முக்கிய பங்களிப்பு செய்துவரும் கலாநிதி சி.மௌனகுரு போன்றோரையும், காசி ஆனந்தன் போன்றோரையும் ஆர்வமளித்து, தூண்டி, அவர்களது ஆற்றலை வளர்த்து விட்ட பெருமை தனக்குரியது என மனப்பூரிப்பும், மனநிறைவும் அவர் பெறுகின்றார்.

ஓர் அரசியல்வாதியாக வாழ்ந்தாலும் தனது இலக்கியப் பணியை அரசியல் வாழ்வோடும், பொதுப்பணிகளோடும் இணைத்துக் கொண்ட அமைச்சர் செல்லையா இராசதுரைக்கு அவரது இலக்கிய நண்பர்கள் நன்றிக்கடன் செலுத்தும் இந்நாளில் பல்லாண்டு வாழ்ந்து அவரது இலக்கியப் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

**நல்லொழுக்கம், நற்செயல், நற்சாட்சி - இவையே கடவுள் நெறியாகும்.**

*- ஸ்ரீ சத்திய சாயிபாபா*

# "இலங்கை எழுத்தாளர்களில் ஓர் அமைச்சர்"

**மீ.ப. சோமு**

இனிமையான கீதங்களைப் பறவைகள் பாடுவது வியப்பில்லை. ஆனால் மீன்கள் இசை பாடினால்?

மீன்கள் இசை பாடுகிற வியப்புக்குரிய மட்டக்களப்பில் தோன்றி யவர், பல வியத்தகு குணநலன்கள் கூடிய அமைச்சர் மாண்புமிகு இராஜதுரை அவர்கள்.

'நீர் வளம், நில வளம்' என்று ஒரு பழைய சொற்றொடர்; அடிக்கடி பலரும் இந்தத் தொடரைச் சொல்லிச் சொல்லி நைத்து விட்டதால் இந்தச் சொற்றொடரின் ஆழ்ந்த பொருளை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை.

நீண்ட நெடிய வாவிகளையும், செழிப்பு மிக்க நிலங்களின் பசிய காட்சியையும் நாம் பார்த்தால், அப்போதுதான் பழைமையான இந்தச் சொற்றொடரின் ஆழமும் எழிலும் புலனாகும்.

இவ்வாறு நீரும் நிலமும் வளமாக இருந்தால், அங்கே பாலும் தேனும் பாய்ந்தோடும். எனவேதான் மட்டக் களப்பைத் தேனாடு என்று அழைக்கிறார்கள். இந்தத் தேனாட்டிலே உள்ள தேன், இங்கே பிறந்து வளர்ந்துள்ள நம் இராஜதுரைப் பெருமகனாருக்கும் நாவிலே சுரப்பதை நான் நேரிலே செவிமடுத்து மகிழ்ந்ததுண்டு.

ஆடம்பரங்கள். இடம்பப் பேச்சு. ஆணவ மொழிகள்யாவுமே இல்லாமல்,

தித்திக்கிற அன்பு மொழிகளில் அவர் உரையாடுவது அவருடைய பண்பாட்டுக்கு அணிகலமாகத் திகழ்கிறது.

பத்திரிகை ஆசிரியராகவும், பேச்சாளராகவும், எழுத்தாள ராகவும் இவர் சிறந்து நிற்பதால், இவருடைய அணுகு முறைகளிலும், நண்பர்களிடம் பழகுகிற நேசப்பாங்கிலும் தெளிந்த அறிவுத்திறனோடு ஆழ்ந்த அன்பு கூடி மிளிர்கிறது.

1956-ஆம் ஆண்டிலிருந்து இவர் தமது வட்டார மக்களால் தொடர்ந்து மதிக்கப்பெற்று, முறிவின்றிப் பாராளுமன்ற உறுப்பினராக விளங்குகிறார் என்ற ஓர் உண்மையே, இவருடைய திறமைக்கும் சால்புக்கும் சான்றாகும்.

இலங்கையின் முதலாவது இந்து சமய அமைச்சராகச் சிறப்புற்றதோடு, அசுவமேதயாகம் நடத்திய சாதனை வீரர் இவர். இலங்கையில் அகில உலக இந்து சமய மாநாடு நடத்திய இந்து கலைக் களஞ்சிய வெளியீடு போன்றவை இந்தத் தமிழ் மகனாருடைய வெற்றி மாண்புகள்.

என்னைக் காட்டிலும் இராஜதுரை அவர்களுடன் நெருங்கிப் பழகி, அவரை நன்கு அறிந்துள்ள அறிஞர்கள் பலர் தமிழகத்தில் இருக்கிறார்கள். ஆனால் என்னை மிகவும் கவர்ந்த பண்பு அவருடைய அமைதியாகும்.

இந்த அமைதி ஓர் எழுத்தாளரின் இலக்கிய அமைதி; அது தமிழமைதி. அதைப் பாராட்ட வேண்டியது தமிழ் உள்ளங்களின் கடமை.

''செங்கை யாழ் தடவு பாண கேள்

வாரும் ஒத்த குடி நீரும் நாமும்''

என்ற கவிச்சக்கரவர்த்தி கம்பரின் மொழிகளினால் உறவு சொல்லி அழைத்து, இலங்கை எழுத்தாளர்களில் ஓர் அமைச்சராக ஒளிவீசும் இராஜதுரை அவர்களுக்குப் பல்லாண்டு கூறி மகிழ்வோமாக.

**கல்லிலே கடவுளைக் காணவேண்டும். கடவுளைக் கல்லாக்க முற்பட்டுவிடக் கூடாது.**

*- ஸ்ரீ சத்திய சாயிபாபா*

# "நல்ல மனிதர் இராசதுரை"

**எஸ். பாலசுப்ரமணியன்**
**ஆசிரியர்: "ஆனந்த விகடன்"**

சிங்கள தீவினுக்கோர் அன்புப் பாலமாக நெடுங்காலமாய் திகழ்பவர் இராஜதுரை நான் அவரை சந்தித்தது சென்னையில்தான். ஒரு நாட்டின் அமைச்சர் இத்தனை எளிமையாக இருக்கிறாரே என்று வியந்தேன்.

பத்திரிகை ஆசிரியர் என்பதனால், சென்னையில் பத்திரிகையாளர்களை சந்திப்பதில் தனி ஆர்வம் காட்டுவார். இந்து மதத்தில் பற்று உள்ளவர். தமிழகத்துக்கு வந்தால் கோயில்களைத் தேடிப் போவார்.

பி.யு. சின்னப்பாவின் மனைவி, வாழ்க்கை நடத்த சிரமப்படுகிறார் என்று கேள்விப்பட்டவுடன் அவர் வீடு எங்கே என்று கேட்டறிந்து தானே நேரிடையாகச் சென்று உதவிகள் செய்தார். சின்னப் பாவின் மீது மட்டுமல்ல, தமிழ் கலைஞர்கள் மீது அவருக்கு இருக்கும் அன்பின் வெளிப்பாடே இது.

அமைச்சர் இராஜதுரையை வாழ்த்துகிறேன். அதைவிட, நல்ல மனிதர் இராஜதுரையை வாழ்த்துகிறேன்.

**எந்தக் காலத்திலும் பகைமை என்பது பகைமையினால் நீங்கிவிடுவதில்லை. அன்பு ஒன்றினாலேயே பகைமை நீங்கும்.**

– புத்தர்

# "அடக்கமுடைய அன்பர்"

இரா. கிருஷ்ணமூர்த்தி
ஆசிரியர்: "தினமலர்"

தமிழ் எழுத்தாளராக வாழ்க்கையைத் தொடங்கி, பல்வேறு இதழ்களில் ஆசிரியராகவும் இருந்து அரசியல் துறையிலும் புகழ் பெற்று அமைச்சராக உள்ள தமிழர் ஒருவருக்குத் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டு விழா நடத்துவது மிகவும் பாராட்டத் தக்கதும் பொருத்தமானதும் ஆகும்.

மாண்புமிகு அமைச்சர் இராசதுரை அவர்கள் இதுவரை பாராட்டு விழாவிற்கு மறுத்து வந்திருப்பது அவரது அடக்கப் பண்பைக் காட்டுகிறது.

விழா பல்லாற்றானும் சிறக்க மனமுவந்து வாழ்த்துகிறேன்.

**எவருடைய சொல்லும் செயலும் பிறரைத் துன்புறுத்தமாட்டாவோ அவனே மனிதனாவான்.**

– நபிகள் நாயகம் (ஸல்)

# "அருட் பாதையிலே"

ஞானபூமி மணியன்

அவ்வப்போது ஒற்றை காக்கை கரைவதும், சிட்டுக்குருவிகள் கீச்சுக்குரலில் ஒலிப்பதும் தவிர, அந்த இடத்தில் வேறு எந்த ஒலியும் கேட்கவில்லை. எங்கு பார்த்தாலும் அமைதியான முகத்துடன் மக்கள் திரளாக இருந்தனர்.

'இத்தனை கூட்டத்திலிருந்தா சத்தமே வரவில்லை?' என்று ஆச்சரிய மாக இருக்கிறது. பகலவனுக்காகக் காத்திருக்கும் ஓர் அமைதியான இரவுபோல், அந்த மக்கள் கடல் எதையோ எதிர் பார்த்து உட்கார்ந்திருந்தனர். திடீரென்று கீதம் ஒன்று அமைதியிலிருந்து வெளிப்பட்டது.

"ஜெய் சாயிராம் ஜெய் சாயிராம்" என்று துவங்கி அந்தக் கூட்டத்தை பஜனை மெதுவாய் தழுவியது.

'கிழக்கே உதிக்கும் ஆதவனா இங்கு வந்துவிட்டான்?' என்று நாம் பிரமிக்கும் அளவிற்கு, ஓர் சென்னிறம் மெதுவாய் நகர்ந்து கூட்டத்தை நெருங்கியது. மக்கள் அமைதியாய் தாளம் பிசகாமல் பஜனையை தொடர்ந்தனர். மெய் சிலிர்க்கிறது. 'கட்டுப்பாடு உருவகம் பெற்றால் அது இதுதான்' என்று எண்ணத்தோன்றியது. அதற்குக் காரணம் யார்?

பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா.

சில ஆண்டுகளுக்கு முன்னால் புட்டப்பர்த்திக்குச் சென்றபோது அங்கு கண்ட அமைதிக் காட்சிதான் இது. பகவான் பாபாவின் அறைக்கு மிக அருகாமையில் அமர்ந்திருந்த நான், சற்றே திரும்பிப்பார்த்தேன். மோனத்

தவத்தில் அந்த மனிதர் சாந்தமே உருவாய் அமர்ந்திருந்தார். அவர் ஓர் அமைச்சர். காவலும் . கெடுபிடியும் துணைவர வீதிஉலா வரும் அமைச்சர்களையே பார்த்த எனது கண்கள், இப்படி அமைதியின் உருவாய் அமர்ந்திருந்த அமைச்சரை கண்டபோது ஆனந்தத்தால், பெருமிதத்தால் மனம் விம்மியது. பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா அருகில் வந்தார்...

"நலமா..." என்று பெயர் சொல்லி அவரை விசாரித்துவிட்டு அருகிலிருந்த என்னைப் பார்த்து 'மணியனை தெரியுமல்லவா?' என்றார். அந்த அமைச்சர் வாய்திறந்து பேசவில்லை. பனித்திருந்த கண்களும் அவரது மனமும் பல அத்தியாயங்கள் பேசிவிட்டன. வீசும் தென்றலென பாபா கூட்டத்தில் நகர்ந்தார். "மணியன்! ஞானபூமியில் வருவதைப் போல் இந்த புண்ணிய பாரத பூமியில் இருக்கும் மகான்களின் தரிசன பாக்கியம் எல்லோருக்குமா கிடைத்துவிடும்" என்றார் அமைச்சர்.

"அருள் உள்ளோர்க்கு எல்லாமே கிடைக்கும்" என்று பதில் கூறினேன். அமைதியாய் ஆமோதித்தார் அமைச்சர்.

நெல்லைச் சீமையிலே மீண்டும் இப்படியொரு அனுபவம். திருநெல் வேலி இரயில் சந்திப்பில் இறங்கினோம். அப்போது இலங்கைக் கலவரம் துவங்கிய ஆரம்ப நாட்கள். அதனால் நிர்ப்பந்தமாக போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. காவலுடன் நாங்கள் எல்லோருமாக சிருங்கேரி ஜகத்குரு மகாசன்னிதானம் ஸ்ரீஅபிநவ வித்யாதீர்த்தரும், சிருங்கேரி ஜகத்குரு சன்னிதானம் ஸ்ரீபாரதி தீர்த்தரும் நெல்லையில் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றோம்.

'அமைச்சர் வந்திருக்கிறேன் என்று சொல்லுங்கள்' என்று சொல்லி அனுப்பவில்லை. 'காத்திருக்கிறீர்களே சொல்லியனுப்பவா' என்று கேட்டதற்கு, "மகான்களின் பார்வை நம்மீது படவேண்டும்.... நாம் அவர்களை தரிசிப்பது வேறு, அவர்கள் நமக்கு தரிசனம் கொடுப்பது வேறு. இரண்டாவத்ததான் நான் விரும்புகிறேன்' என்றார் அந்த அமைச்சர், அடக்கத்துடன்.

"அமைச்சராவதும் அந்தக் கடமையை செய்வதும் எனக்களிக்கப் பட்ட பணி. ஆனால் மானிடனாய் பிறந்த பயனைப்பெற, நான் விரும்பிச் செய்வது இவர்களைப் போன்ற மகான்களை தொழச் செல்வதுதான்" என்றார். மகாசன்னிதானமும், சன்னிதானமும் விரிவாக அமைச்சரிடம் பேசினார்கள். "நம் சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயத்தை சர்வ சக்தியான ஜகன் மாதாவிடம் விட்டு விடவேண்டும். அவள் சண்டியாய் நின்று அக்கிரமங்களை அகற்று வாள்" என்று அவர்கள் ஆசி கூறினார்கள்.

"சண்டிஹோமம ஒன்று செய்துவிடவேண்டும் மணியன்..." என்று அன்று தீர்மானித்து, சென்னை வந்தவுடன் ஸ்ரீகாளிகாம்பாள் கோயிலின் சிவாச்சாரியாரை வரவழைத்து "பெரிய அளவில் சண்டிஹோமம் நடத்த ஏற்பாடு செய்யுங்கள்" என்று கூறினார் அந்த அமைச்சர். சண்டியின் மனமும், அந்த சர்வசக்தியின் அமைதியான திறமையும் அவர் சண்டிஹோமத்திற்கு செய்த ஏற்பாடுகளில் வெளிப்பட்டன.

"அகில உலக இந்து மாநாடு" இலங்கையில் நடந்தது. இதயம் பேசுகிறது குழுவினர் இலங்கைக்குச் சென்றோம். விருந்தோம்பல் நெஞ்சத்தின் அடித்தளத்திலிருந்து வரும்போது அதில் ஓர் அலாதியான தாய்மையுணர்வு இருக்கும். அதனால்தான் 'தாயினும் சாலப் பரிந்து' என்கிறோம். 'உலகமே அமைதி காணவேண்டும்' என்று இப்படி ஓர் இந்து சமய மாநாடு ஒன்றை நடத்தியவர், முன்னால் கூறிய இருசம்பவங்களில் வரும் அமைச்சர் வேறு யாருமில்லை. இலங்கை அமைச்சர் மாண்புமிகு செல்லையா ராஜதுரை அவர் தான்! இனிய கீதம்போல் சிங்காரத்தொனி கலந்த தமிழில் பேசுவார். அவரது தமிழ்ப்பற்றும், பாரத தேசத்தின் மீது அவர் கொண்டுள்ள அளவற்ற பாசமும், ஒப்பற்ற இறைபக்தியும் அவரை ஓர் சிறந்த பண்பாளராகத் தான் நாம் காணலாமே தவிர படாடோபமும், பந்தாவும், பதவி அகங்காரம் நிறைந்த அரசியல் வாதியாய் பார்க்கமுடியாது. இசையிலும், ஏனைய கலைகளிலும் ஈடுபாடு கொண்டுள்ள இவர் கலைநிகழ்ச்சிகளை அமைதியாய் முழுமையாய் இருந்து அனுபவிப்பதற்காகவே பாரதத்திற்கு வருவார். கலைஞர்களை இலங்கைக்கு வரவழைத்து, பெரிய அளவில் பெருமைப்படுத்துவார். அவரது நட்பில் ஒரு நெருக்கம் இருக்கும்; ஆனால் நெருக்கடிகள் இருக்காது. அவரது பேச்சில் இனிமை இருக்கும், இங்கிதம் தொனிக்கும், ஆனால் இம்மியளவும் இம்சிக்க நினைக்கமாட்டார். அவர் எப்போதும் ஓர் சாமான்யனாக இருக்கவே விரும்புவார். ஆனால் சாமான்யமாக இப்படியொரு அமைதிக்கதிரான அமைச்சரை காண்பதரிது.

மாண்புமிகு அமைச்சர் செல்லையா ராஜதுரையைப்பற்றி புகழ்ந்துரைப்பது, புகழுக்கு அளிக்கும் கௌரவமாகும். அதற்கு நான் ஓர் ஆயுதமாக இருப்பதில் பெருமை அடைகிறேன்.

'மணியன்'
- ஞானபூமி

# "உலகின் முதல் இந்து அமைச்சர்"

"சாவி"

துருதுருவென்ற முகம். கண்ணில் நிரந்தரமாய் ஒரு முறுவல். இளைஞர் பந்தாக்கள் இல்லாமல், பாவனைகள் இல்லாமல், இயல்பாய் பழகும் சுபாவம். இவர் இலங்கை அமைச்சர் மாண்புமிகு திரு. இராசதுரை.

அமைச்சர் இராஜதுரைக்கு பத்திரிக்கைத் துறையில் ஆர்வம். எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளையும் படிக்கிறார். படிக்கிற வழக்கம் மாணவப் பருவத்திலேயே தொற்றிக் கொண்டுவிட்டது.

மறுநாள் விடிந்தால் எஸ். எஸ். சி. பொது தேர்வு. இரவு முழுக்க இரவல் வாங்கி வந்த நாவல்களைப் படித்துக் கொண்டிருந்தார். பொழுது விடிந்தால் புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். கொடுத்து விட்டால் மறுபடி கிடைக்காது என்ற பயம். படிப்பதோடு நின்றுவிடவில்லை ஆர்வம். எழுதுவதற்கும் தூண்டியது. 'பரத நாட்டியம் செய்த பாக்கியம்' என்றொரு தலையங்கம் அமரர் கல்கி எழுதியது. அதில் ஒரு வரி 'இமய மலையிலிருந்து திருகோணமலை வரை வாழும் தமிழர்கள் . . .' மாணவர் ராஜதுரை அதைப் படித்தார். மனது கிடந்து பொருமியது. காரணம் அவர் மட்டக்களப்புக்காரர். திருகோணமலைக்கு அப்பால் இருப்பது மட்டக்களப்பு. 'நாங்கள் எல்லாம் தமிழர்களாகத் தெரியவில்லை? உங்களுக்கு' என்கிற ரீதியில் சுடச்சுட ஒரு கடிதம் கல்கிக்கு. கடிதம் பிரசுரமாகியது. கல்கியும் கைப்பட ஒரு பதில் எழுதினார். எழுத்து ஆசை இன்னும் ஒருபடி தூண்டிவிடப்பட்டது. பத்திரிகை துவங்கி விட்டார் ராஜதுரை.

வாலிப வயதில் மூட நம்பிக்கைகளைச் சாடுகிற ஆவேசமான பகுத்தறிவு வாதி இப்போது இந்துசமய, கலாச்சார அமைச்சர் எல்லாம் 'திருவருள்' கொடுத்தது என்கிறார் சிரித்துக் கொண்டே. உலகில் இந்துக் கலாச்சாரத்திற்கு என்ற ஒரு தனி அமைச்சு இருப்பது இலங்கையில் மட்டும்தான். இதன் முதன் முதல் அமைச்சர் இராஜதுரை. பழகுவதற்கு இனியவர். அவரோடு பழகியவர்கள் வாழும் காலம்வரை அவரை மறக்கமாட்டார்கள். அத்தகைய அன்பு நெஞ்சர்.

# “பழகுவதற்கு ஏற்ற இனிய பண்பாளர்”

## கி. ராஜேந்திரன்
(ஆசிரியர் - ‘கல்கி’)

திரு. செல்லையா இராஜதுரை அவர்களை நீண்டகாலமாக நான் அறிவேன். என் தந்தை ‘கல்கி’ இதழின் ஆசிரியராக இருந்த காலத்தில் 38 ஆண்டுகளுக்கு முன் ஒரு தலையங்கம் எழுதினார். அத்தலையங்கத்தில் “இமயமலை முதல் திருகோணம் வரையிலுள்ள தமிழ் மக்கள் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். திரு. இராஜதுரை தமிழ் மக்கள் திருகோண மலைக்குத் தெற்கே மட்டக்களப்பும் அதன் தெற்கிலும் வாழ்கிறார்கள் என்றும் ‘யாழ்நூல்’ எழுதிய சுவாமி விபுலானந்தர் மட்டக்களப்புக்கும் தெற்கே காரைதீவு கிராமத்தில் பிறந்தவர் என்றும் மட்டக்களப்பை ஏன் எழுத மறந்தீர்கள் என்றும் கேட்டிருக்கிறார்கள்.

என் தந்தை திரு. இராஜதுரை அவர்களின் கடிதத்தை ‘மட்டக்களப்பை மறவாதீர்’ என்று தலைப்பிட்டு கல்கி இதழில் பிரசுரித்திருந்தார்கள். திரு. இராஜதுரை நல்ல எழுத்தாளர். அவர் எழுதிய இலங்கையின் சரித்திர நிகழ்ச்சியைப் பின்னணியாக கொண்ட கதை ‘பழிக்குப்பழி’ என்ற பெயருடன் ‘கல்கி’ இதழில் 38 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்தது. சென்னை வரும்போதெல்லாம் என்னுடன் தொலைபேசி வழியாவது அவர் பேசுவதற்குத் தவறுவதில்லை. தன் நாட்டின் மீதும் தமிழ்மொழியின் மீதும் மிகுந்த பக்தியுடையவர். அவரது அடக்கமும், பணிவும் பாராட்டுதலுக்குரியது. பல பதவிகள் வகித்தவர்; அவருக்குள்ள பணிவு என்னை மட்டுமல்ல பலபேரைக் கவர்ந்தது. பழகுவதற்கு இனியவரான அவர், நீண்ட காலம் வாழ்ந்து தமிழ் மொழிக்குப் பணிபுரிய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

# "நட்பின் திலகம்"

## பகீரதன்

(ஆசிரியர் ஓம்சக்தி)

திரு. இராஜதுரை அவர்களை நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது தமிழகம் வந்திருந்தார். தலைவர் காமராஜர் அவர்களுடன் சந்திப்பு ஏற்படுத்தி அவரை அழைத்துச் சென்றேன். அன்று அவர் தமிழ் உணர்வைக் கண்டு வியந்தேன். தமிழ் மொழியை நேசிப்பதிலும், தமிழ்மொழி பேசும் மக்கள் மீதும் அவர் வைத்திருந்த பாசமும் என்னை மெய்மறக்கச் செய்தன.

இலங்கைக்கு இந்திய நாட்டின் தூதுவராக ஒரு தமிழ் மகனை அனுப்பவேண்டும் என்று அவர் விடுத்த கோரிக்கையையும் - அதற்கான நியாயங்களை அவர் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக் கூறியதையும் தலைவர் காமராஜர் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தார். தலைவருக்கு இராஜதுரை அவர்களைப் பிடித்துவிட்டது. மற்றொரு சந்திப்பின்போது தலைவர் பேசும்போது "நீ அழைத்து வந்த இலங்கை எம். பி. எதிர்காலத்தில் சிறந்து விளங்குவார் என்று என்னிடம் கூறினார்".

திரு. இராஜதுரை எங்கள் குடும்ப நண்பர். என் குழந்தைகளுடன் குழந்தைகள் போல் பழகுவார். தமிழகம் முழுவதும் அவரை அழைத்துச் சென்றேன். இலக்கியம் - சமயம் - தத்துவம் - விஞ்ஞானம் ஆகிய பல துறைகளிலும் பிரயாணம் முழுவதும் பேசிக்கொண்டே வருவார். அபார ஞாபக சக்தி வாய்ந்தவர். கல்கி திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆனந்த விகடனில் எழுதிய "தியாக பூமி" "மகுடபதி" பற்றியும் பேசுவார்.

இலங்கையில் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு அவருக்குண்டு. அவரது பாராளுமன்றத் தொகுதியில் மக்கள் அவரைப் பெரிதும் மதிக்கிறார்கள். இராஜதுரையின் நண்பர்கள் என்று சொன்னால் போதும். தொகுதியில் அவர் இல்லையென்றாலும் மக்கள் அவர் தங்களுடன் இருப்பதாகக் கருதி மதிப்பளித்து உபசரிப்பார்கள். நானும் தமிழ்வாணனும் அவரது ஊருக்குப் போனோம். விமான சீட் ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். நாங்கள் புகை வண்டிமூலம் பயணம் செய்து அதிகாலை 4 மணிக்கு அவர் ஊரில் இறங்கிப் புகைவண்டி நிலைய வாடகைக் கார் ஒன்றை ஏற்பாடு செய்தோம் (நாங்கள் யாரென்று காட்டிக்கொள்ளவில்லை).

திரு. இராஜதுரை வீட்டிற்குப் போகவேண்டுமென்று சொன்னோம். "எங்கள் எம்.பி. வீட்டுக்கா என்று அவர் ஆனந்தத்தோடு கேட்டபின் வீட்டில் இறங்கியதும் திரு. இராஜதுரை வீட்டில் இல்லை. வீட்டில் மட்டுமா, நாட்டிலும் இல்லை. அவர் இந்தியாவில், ஆனால் அங்கு நடந்த வரவேற்பு உபசாரம் - சாரதி வாடகைப் பணம் வாங்கவே மறுத்துவிட்டார் என்றால், அவர் மீது வைத்திருந்த அபார மதிப்பை எவ்வண்ணம் சொல்வதும் அதனால்தான் போலும். 1956ஆம் ஆண்டுமுதல் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் அவர் போட்டியிட, எல்லாத் தேர்தல்களிலும் அபார வெற்றி பெற்றார்.

தமிழ் எழுத்தாளராக வாழ்க்கையை ஆரம்பித்துப் பாராளுமன்றம் வரை சென்று, அமைச்சராகவும், இலங்கை நாட்டின் மலேஷியத் தூதுவராகவும் பணிபுரிந்தமை தமிழ் எழுத்தாளர் உலகிற்குப் பெருமை தருகிறது.

திரு. இராஜதுரை நட்புக்குப் பெருமை தரும் நல்ல நண்பர்.

# "நிலை தடுமாறாத நேர்மையாளர்"

— கோவை செழியன் எம்.ஏ.,

1956-ஆம் ஆண்டு கவிஞர் கண்ணதாசன் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போது கவிஞரும், நானும் ஒரே அரசியல் இயக்கத்தில் இருந்தோம். கோயம்புத்தூர் வருகையின்போது ஒரு இளைஞரையும் கவிஞர் கூடவே அழைத்துவந்திருந்தார். "இவர் இலங்கையைச் சேர்ந்தவர், என்னுடன் பிறவாத சகோதரர்". இலங்கையின் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. இராஜதுரை என்று அறிமுகம் செய்துவைத்தார். சுமார் நாற்பது ஆண்டுகளாக திரு. இராஜதுரையுடன் எனக்குப் பழக்கமுண்டு. அன்று பார்த்ததுபோல இன்றும் இருக்கின்றார். உருவத்தால் அல்ல உள்ளத்தால். பழகும் இனிய பண்பால், அடக்கம் நிறைந்தவர். பதவிகள் எத்தனை அவருக்குக் கிடைத்தாலும் அவர் பண்பு மாறியதை நான் என்றும் பார்த்ததில்லை. தமிழகம் வந்தால் என்னைப் பார்க்க அவர் தவறுவதில்லை. மட்டக்களப்புத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக நீண்ட காலம் பதவி வகித்தார். அத்தொகுதியில் போட்டியிட்ட எல்லா தேர்தல்களிலும் வெற்றி பெற்றார். மட்டக்களப்பு மாநகர சபையின் முதல் மேயராக பதவி வகித்தார். இலங்கையின் அமைச்சரவையில் மந்திரியாகப் பத்து வருடங்கள் பதவி வகித்தார். மலேஷியாவில் இலங்கை அரசின் தூதுவராக பதவி வகித்தார். எத்தனை பதவிகளில் அவர் இருந்தாலும் தன் நிலையை உயர்த்திக் கொள்ளாதவர். பதவிகளால் நிலைமறந்து போகாத நேர்மையாளர். நாற்பது ஆண்டுகளுக்குமுன் பார்த்தபோது நான் கண்ட திரு. இராஜதுரையை இன்றும் காண்கின்றேன். அதே சிரிப்பு அதே அடக்கம், நண்பர்களை தேடிச் சென்று நலம் விசாரிக்கும் பெருந்தன்மை கொஞ்சமும் மாறவே இல்லை.

நான் அமெரிக்காவிலிருந்து சத்திர சிகிச்சை பெற்றுத் திரும்பியதும் சென்னை வந்திருந்த அவர் என் தொலைபேசி எண் பெற்று, தொடர்புகொண்டு என்னை வந்து பார்த்தபோது கவிஞர் கண்ணதாசன் நாற்பது வருடங்களுக்கு முன் சொன்ன வார்த்தைகள் உண்மை என்று உணர்ந்தேன். அவர் பல்லாண்டு வாழ்ந்து மேலும் பணிகள் ஆற்றவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

# "நல்ல செயல்களில் வல்லவர்"

எஸ்.பானுமதி
ஆசிரியர் "ஞானவழி"

'அறம் செய விரும்பு...
ஆறுவது சினம்'

என்று சொல்லிக் கொண்டே செல்கிறாள் தமிழ்ப்பாட்டி.

ஆத்திச்சூடி அளித்த ஔவை முதல் அனைத்துத் தமிழ் அறிஞர்களும் மனிதன் எப்படி இருக்க வேண்டும், எவ்விதம் வாழ வேண்டும் என இலக்கணம் வகுத்துத் தந்துள்ளனர்.

'செயற்கரிய செய்வர் பெரியோர்' என முன்னோர் சொல்லிச் சென்ற நியதிக்கு ஏற்ப இலக்கணமாக திகழ்பவர் செ. இராசதுரை அவர்கள். எழுத்தாளராக, எழுத்தைச் சுமந்து நல்ல கருத்தைப் பரப்பிய பல பத்திரிகைகளின் ஆசிரியராக, பல நூல்களை வெளியிட்டளித்த வெளியீட்டாளராக விளங்கிய திரு.இராசதுரை, மக்கட் சமுதாயத்தின் பிரதிநிதியாக முப்பத்திரண்டு வருடங்கள் பாராளுமன்றத்தில் சிறப்பாக சேவை செய்ததுடன் சீரிலங்கையின் சிறப்புமிக்க அமைச்சராகவும் திகழ்வதை எண்ணி அவருக்கு தமிழ் எழுத்தாளர்கள் பாராட்டு விழா எடுப்பதைக் கண்டு தமிழ்கூறும் நல்லுலகம் பெருமை கொள்ளுகிறது.

நல்லவரும் நல்ல செயல்களில் வல்லருமான மாண்புமிகு செ.இராசதுரைக்கு நல்லோர் கூடி விழா எடுக்கும் இந்நன்னாளில் அன்பர் இராசதுரை மேன்மேலும் சிறப்புக்கள் சேர்த்து சீருடன் விளங்க அவருக்கு குருவருளும் திருவருளும் துணை நிற்க ஞானவழி தன் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.




மட்டக்களப்பு முதல் மேயராக திரு. செல்லையா ராஜதுரை




முன்னாள் தமிழக முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்களுடன்




முன்னாள் தமிழக முதல்வர் பேரறிஞர் திரு. அண்ணாதுரையுடன்



நேபாள மன்னர் – மகாராணியுடன், ஜனாதிபதி
ஜே.ஆர். ஜெயவர்தனா அவர்களுடன்



இலங்கை ஜனாதிபதி மேதகு
திரு. ஜே.ஆர். ஜெயவர்தனா அவர்களுடன்



முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களுடன்




முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. R. வெங்கட்ராமன் அவர்களுடன்




இராஜதுரை அவர்கள் குடும்பத்துடன் அண்ணா
சமாதியில் மலர்வளையம் வைத்து வணங்குதல்




பெருந்தலைவர் திரு. காமராஜர்,
கவியரசர் திரு. கண்ணதாசன் அவர்களுடன்



அகில உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் ஸ்தாபகர்
தனிநாயக அடிகளாருடன், மலேஷிய அமைச்சர் துன் சம்பந்தன் அவர்களுடன்




நேபாள நாட்டு முன்னாள் பிரதமருடன்



தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களுடன்



திரு. ஆச்சார்ய கிருபளானி மற்றும் பிரபுதாஸ் பட்வாரி அவர்களுடன்



இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களுடன் சொல்லின் செல்வர்.




"உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகில்சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்திவணங்குவாம் . . . "

- இப்படிப் பாடியவர் சேக்கிழார் பெருமான்.

'அம்பலத்தாடுவன்' என்று அழைப்பெறும் தில்லை நடராஜன், பொன் வேய்ந்த கூரையின் கீழ் அருள்பாலிக்கிறார் - சிதம்பரத்தில்.

சிதம்பரம் அருகே அமைந்திருப்பது அண்ணாமலைப் பல்கழகம். அந்தப் பல்கலைக் கழக வளாகத்தில், சுமார் 30 - 35 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாநாடு நடைபெற்றது. P.E.N. என்ற அமைப்பு - (Poets, Essayist & Novelist) கவிஞர், எழுத்தாளர், நாவலாசிரியர்கள் கூடிய இலக்கிய மாநாடு.

பாரத நாட்டின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு, மாநாட்டைத் துவக்கி வைத்தார். அப்போது நேருஜி "நான் அரசியலுக்கு வந்திராவிடில், பள்ளி அல்லது கல்லூரி ஆசிரியராகவோ, அல்லது முழு நேர எழுத்தாளனாகவோ இருந்திருப்பேன்!" என்றார்.

நேருவும் சிறையில் இருக்கையில் பல நூல்களை எழுதியவர். 'Discovery of India' 'World History', 'Letters to Indhira' - முதலியவை.

நேரு அரசியல்வாதியாக இருந்து எழுதினார்.

நமது மாண்புமிகு அமைச்சர் செ. இராஜதுரை, எழுத்தாளராக, பத்திரிகை ஆசிரியராக இருந்து, அரசியலுக்கு வந்தவர்! பாராளுமன்ற உறுப்பினராக பல்லாண்டுகள். பிறகு, அமைச்சரவையில் இடம் பெற்று, இன்று இலங்கையில், தமிழகத்தில் தனிப்புகழ் பெற்று விளங்குகிறார்.

இன்னொரு வரலாற்று சாதனை

இலங்கையில் அசுவமேத யாகம் செய்து பெரும் புகழ் ஈட்டியிருக்கிறார்.

புராணத்தில் மன்னர்கள் அசுவமேத யாகம் செய்ததாக வரலாறு. இந்தப் பேனா மன்னரும் அசுவமேத யாகம் செய்து, உலகப் புகழ் பெற்றிருக்கிறார். ஆம், ஓர் எழுத்தாளராக வாழ்க்கையைத் தொடங்கியவர், இமாலய சாதனை புரிந்துள்ளார்!

அமைச்சர் இராசதுரையின் வெற்றிக்கும் புகழுக்கும் ஆணி வேர் எது?

இறைபக்தி! இது மட்டுமின்றி மகான்களிடம் ஈடுபாடு; மகான்களின் அருளாசிகள் பெற்றவர்.

'பெரிது பெரிது புவனம் பெரிது' என்று பாடிய தமிழ் மூதாட்டி ஔவை, "தொண்டரின் பெருமை சாலவும் பெரிதே!" என்று கூறுகிறார்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும், "அடியார்க்கும் அடியேன் . . ." என்று கூறியுள்ளனர்.

அமைச்சர் மாண்புமிகு இராசதுரை, தன்னை ஒரு போதும் பெரிய பதவியில் இருக்கும் மனிதராக எண்ணிக் கொள்ளவில்லை; தன்னை மக்களின் தொண்டனாகவே எண்ணுகிறார்! அதனால்தான், தமிழ் கூறும் நல்லுலகில், அரசியல் கட்சிப் பிரமுகர் முதல், பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், கலைத்துறை, ஆன்மீகத் துறை ஆகிய அனைவரின் அன்புக்கும் பாத்திரமாக இருக்கிறார்! புகழ் பூத்த செல்வர்களில் இவரும் ஒருவர்!

# "அமைச்சர் பெருமகனின் அன்பு மழையில்"

அ.மா.சாமி
ஆசிரியர்: "ராணி" வாரஇதழ் தமிழ்நாடு

"ராஜ உபசாரம்" என்று சொல்லக் கேள்விப்பட்டு இருக்கிறோம். கேள்வி ஞானந்தான். எந்த ராஜாவும் நமக்கு உபசாரம் செய்தது இல்லை. இனியும் செய்யமாட்டார்கள். இப்பொழுது ராஜாக்கள்தான் இல்லையே.

"எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று ஆகிவிட்ட இந்த நாளில், அமைச்சர்களே இருக்கிறார்கள். எனவே, அந்தப் பழமொழியைக்கூட இனி "மந்திரி உபசாரம்" என்று மாற்றிவிடலாம்.

எனக்கு "ராஜ உபசாரம்" கிடைக்காவிட்டாலும், "மந்திரி உபசாரம்" கிடைத்தது. அந்த அதிர்ஷ்டத்துக்குக் காரணம், இலங்கை அமைச்சர் மாண்புமிகு செ.இராசதுரை அவர்கள்.

நான் இலங்கைக்குச் சென்றிருந்த பொழுது அந்த அமைச்சர் பெருமகனின் அன்பு மழையில் நனைந்து திணறிப் போனேன். ராஜ உபசாரம் எப்படி இருக்கும் என்பதை முதன் முதல் அவரிடந்தான் கண்டேன்.

*முதல் சந்திப்பு :*

1981–ல் மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டுக்கு நான் போயிருந்தேன். அமைச்சரும் இலங்கை அரசின் பேராளராக அங்கு வந்திருந்தார்.

அந்த ஏப்ரலில் நான் இலங்கைக்குப் போகத் திட்டமிட்டு இருந்தேன். அமைச்சருடன் பேசிக்கொண்டு இருந்த பொழுது அதனை அவரிடம் தற்செயலாகத் தெரிவித்தேன். அவரும், "இலங்கை வந்தால், என்னைப் பாருங்கள்" என்று சொன்னார்.

மூன்று திங்கள் கழித்து இலங்கைக்குச் சென்ற பொழுது இந்த அழைப்பை நான் அடியோடு மறந்துவிட்டேன். ஆனால், அமைச்சர் நினைவு வைத்திருந்து, "ராணி ஆசிரியர் வந்து விட்டாரா" என்று இலங்கையின் "ராணி" ஏஜண்டிடம் கேட்டு இருக்கிறார். "வந்ததும், என்னைப் பார்க்கச் சொல்லுங்கள்" என்றும் கூறியிருக்கிறார். நான் போனதும் இதனை ஏஜண்டு என்னிடம் சொன்னார். அதன்பின் அமைச்சரின் அழைப்பு வெறும் வாய் உபசாரம் அல்ல என்று எனக்குப் புரிந்தது.

உடனே அமைச்சருடன் "பேசி"யில் தொடர்பு கொண்டேன். "உங்களைப் பார்க்க வேண்டும்" என்றேன். அவரோ "இன்று வேண்டாம்" என்றார். "வியாழக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை களில் நாங்கள் (ஈழத்தமிழர்) விருந்தினர்களை வரவேற்பது இல்லை. உங்களுக்குத் தண்ணீர் கொடுக்காத நிலையில் இருக்கிறேன்" என்று கூறினார். "உங்கள் அன்பு போதும். நாளைக் காலை கொழும்புவில் இருந்து கதிர்காமத்துக்குப் புறப்படுகிறேன். எனவே, இன்று உங்களைப் பார்த்து விடுகிறேன்" என்று சொல்லி, அமைச்சரைச் சென்று பார்த்தேன். அவரும் புன்முறுவலுடன் என்னை வரவேற்றார்.

### *மட்டக்களப்பு :*

என் பயணத்திட்டம் முழுவதையும் அமைச்சர் கேட்டார். நான் சொன்னேன். "மட்டக்களப்புக்கு வரும்பொழுது என்னைப் பாருங்கள்" என்று அமைச்சர் சொன்னார். "சரி" என்றேன், நானும்.

மட்டக்களப்பு அவரது கோட்டை. மட்டக்களப்பின் முதல் மேயர் அவர். மட்டக்களப்பு தொகுதியில் இருந்து இலங்கை நாடாளுமன்றத்துக்குக் கடந்த 30 ஆண்டு காலத்துக்கும் மேலாகத் தேர்ந்து எடுக்கப்பட்டு வருகிறார். உணர்ச்சி மிக்க பேச்சாலும், உயர்ந்த எழுத்தாலும் மட்டக்களப்பு மக்களைக் கவர்ந்தவர். "இலங்கை கருணாநிதி" என்று போற்றப்படுகிறவர்.

நாங்கள் மட்டக்களப்புக்குப் போன பொழுது இரவு 11 மணி. தங்குவதற்கு எந்த ஏற்பாடும் செய்து கொள்ளவில்லை. "அமைச்சருக்குப் போன் செய்து பாருங்களேன்" என்று, எங்களுடன் வந்த அன்பு நண்பர் அய்யூப் சொன்னார். அமைச்சருக்கு ஆயிரம் பணிகள். நாம் வருவதை எங்கே நினைத்துக் கொண்டு இருக்கப் போகிறார்? நான் நம்பிக்கையற்று அமைச்சரின் வீட்டுக்குத் தொலைபேசி எண்களைச் சுழற்றினேன்.

மறுமுனையில் அமைச்சரின் மகன் பேசினார். நான் யார் என்பதைச் சொன்னதுமே, "அப்பா இவ்வளவு நேரம் காத்து இருந்தார். இப்பொழுதுதான் படுக்கைக்குச் சென்றார். நீங்கள் ரெயில் நிலையத்திலேயே இருங்கள். நான் கார் அனுப்புகிறேன்" என்றார்.

ஐந்து நிமிடத்தில் கார் வந்தது. அடுத்த ஐந்து நிமிடத்தில் விருந்தினர் விடுதியில் இருந்தோம். அங்கே எங்களுக்காக அறை ஒதுக்கப்பட்டு இருந்தது. அது மட்டுமா? சாப்பாடும் காத்துக் கொண்டு இருந்தது.

### *அன்போ அன்பு*

அதிகாலை, மூன்று மணி. அயர்ந்து தூங்கிக் கொண்டு இருந்த நான், கதவு தட்டப்படும் ஓசை கேட்டு விழித்துக் கொண்டேன். கதவைத் திறந்தால், "வணக்கம்" என்று புன்னகை பூத்து

மலர்ந்த முகத்துடன் கைகூப்பினார் அமைச்சர்.

நான் திடுக்கிட்டுப் போனேன். அவசர அவசரமாக அமைச்சரை உள்ளே அழைத்து, அமரச் சொன்னேன்.

"இன்று திருகோணமலை கோவிலில் குடமுழுக்கு நடக்கிறது. நான் போகிறேன். நீங்கள் வருகிறீர்களா?" என்று அமைச்சர் கேட்டார். என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. "இதோ கிளம்பிவிடுகிறேன்" என்று உடனே புறப்படத் தயார் ஆனேன்.

அமைச்சர் எங்களுக்காகத் தனிக் கார் ஏற்பாடு செய்தார். அவரது காரின் பின்னேயே எங்கள் கார் சென்றது. குடமுழுக்கு விழா நடந்த பொழுதும், அமைச்சர் எங்களை அருகிலேயே வைத்துக் கொண்டார். அமைச்சருக்குக் கிடைத்த அத்தனை ராஜ உபசாரமும் எங்களுக்கும் கிடைத்தன. இமயத்துப்பனியில் நனைந்தது போல, ஈடில்லா அமைச்சரின் அன்பு மழையில் நனைந்து, தாங்க முடியாது தவித்துப் போனோம்.

நாங்கள் மீண்டும் கொழும்புக்குத் திரும்பிய பொழுது, அமைச்சர் அவரது வீட்டுக்கு எங்களை அழைத்து விருந்து அளித்தார். மந்திரி உபசாரத்தை அன்று அனுபவித்தேன். அமைச்சரே அருகில் நின்று, ஒவ்வொரு பண்டத்தின் சிறப்பையும் சொல்லி, "அவசியம் சுவை பாருங்கள்" என்று ஊட்டி விட்டுக் கொண்டே இருந்தார்.

ஏழு ஆண்டு ஆகிவிட்டது. இப்பொழுது நினைத்தாலும் நெஞ்சம் நெகிழ்கிறது.

### *அன்பாளர் பண்பாளர்*

அன்று தொடங்கிய எங்கள் அன்புத் தொடர்பு இன்றும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. அவர் தமிழ் நாட்டுக்கு வரும் பொழுது எல்லாம், என்னைப் "பேசி"யில் அழைக்காமல் இருப்பதும் இல்லை; நானும் அவரை நேரில் சந்திக்காமல் இருப்பதும் இல்லை.

அமைச்சர் இராசதுரை அவர்கள் அன்பாளர். நல்ல பண்பாளர். நட்பைப் போற்றக்கூடியவர். இலங்கையில் அவர் இந்து சமய மாநாட்டை நடத்திய பொழுதுகூட, மறவாமல் என்னை அழைத்தார். அவரது அன்பும், பண்பும் நினைந்து நினைந்து போற்றத் தக்கவை.

இன்று இலங்கை அரசின் இந்து சமய அமைச்சராக இராசதுரை விளங்குகிறார். அவர் ஆற்றிவரும் அரும்பெரும் பணிகளை உலகம் முழுக்க உள்ள இந்துக்கள் எல்லாருமே போற்றுகிறார்கள். "இது இந்து சமயத்தின் பொற்காலம்" என்று ஏற்றுகிறார்கள்.

**வாழ்க, அமைச்சர் பெருமகன்! வளர்க, அவரின் அறப்பணி!!**

# "ஒழுக்கம் மிகுந்த தலைவர்"

ஜி. உமாபதி
ஆசிரியர்: "உமா"


எனது நெருங்கிய நண்பர் திரு. செ. இராசதுரையை நான் நன்கு அறிவேன். அவர் அடக்கமே பொருளாக கொண்ட அரிய குணத்தவர். அடக்கத்தை மிக்க செல்வமில்லை என உறுதி உடைய உத்தமர். மும்மூர்த்திகளுக்கேனும் சில சமயம் சினம் மூர்த்தெழும். ஸ்ரீமான் இராசதுரை அவர்களுக்கு சினம் பூர்த்தல் என்பது அரிது. ஒருகால் சினம் பூப்பினும் பிறர் காண இயலாது அவரது மலர்ந்த முகம் மறைத்து நிற்கும்.

அவர் இலங்கையில் ஒரு தேச பக்தராகவும், சொல் ஆற்றல் மிக்க சொற்பொழிவாளராகவும், தமிழ் இனத்திற்கு பாடுபட்ட அரசியல் தலைவர்களில் ஒழுக்கம் மிகுந்த **தலைவராகவும்** விளங்கி வருபவர்.

இவர் ஓர் ஆற்றல் மிக்க எழுத்தாளராக இருப்பது எழுத்தாளர் பெருமக்களுக்கு ஒரு வரப் பிரசாதமாகும். அவர் எழுதிய பல **புத்தகங்கள் என்னிடம் இருக்கின்றன. அதில் குறிப்பாக, இலங்கைத் தீவில்** உள்ள ஆலயங்களின் சிறப்பை அதன் நிழற்படங்களுடன் பிரசுரித்து எடுத்துக் கூறியிருப்பதைக் கண்டு, இத்தனை சிறிய தீவில் இத்தனை கோவில்கள் இருப்பதைக் கண்டு, படித்து, வியந்து போனேன். படிப்படியாக தமிழ் இன மக்களுக்கும், இலங்கை வாழ் சிங்கள மக்களுக்கும் பாலமாக இருந்து பணியாற்றி வரும் அவர் பணியை கண்டு பெருமிதம் கொள்கிறேன்.

இந்த இக்கட்டான நேரத்தில் கூட பாகுபாடு இன்றி வாழ்ந்து வரும் அவரின் உயரிய குணங்கள் அவருக்கு துணை புரிகின்றன.

**தமிழகத்திற்கு வரும்போதெல்லாம் என்னைக் காணாமல் போக மாட்டார். அத்தகைய பெரிய உள்ளம் படைத்தவர் அவர். இலங்கையில்** அமைச்சராகவும், பல பெரிய பொறுப்புகளிலும் இருந்து வரும் அவருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அவர் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.



**அன்பு வழியில் ஆண்டவனின் பக்தியில் ஈடுபடுங்கள்; உங்கள் குழப்பம் யாவும் மறைந்துவிடும்.**

– ஸ்ரீ சத்திய சாயிபாபா

# "அன்பு மனிதர்"

## குண்டேச ராதாகிருஷ்ணன்

அன்பே சிவம் என்பார்கள், அன்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்து வாழ்ந்துவரும் திரு. செல்லையா இராசதுரை அவர்களை, சில வருடங்களுக்கு முன்பு என் அன்பு நண்பர் அமரர் – திரு. வி.ஜி. பன்னீர்தாஸ் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

அன்று செவ்வாய்க்கிழமை செவ்வேட்பரமன் முருகப் பெருமானுக்கு உகந்த நாளல்லவா?

தமிழ்க் கடவுளாம் திருமுருகன் அவன் வழிச் செம்மல், தமிழ் வளர்க் கும் அன்பருக்கு தமிழ் எழுத்தாளர்கள் பாராட்டுவிழா எடுப்பது பொருத்தமான பெருவிழா. விழா அமைப்பாளர்களை தமிழ் எழுத்தாளன் என்ற வகையில் பெருமையோடு பாராட்டுகிறேன்.

தமிழ் எழுத்தாளராக தன் வாழ்க்கையைத் துவக்கி, வரலாறு காணாதவகையில் அரசியலில் முக்கிய இடம் பெற்று சுமார் முப்பத்திரெண்டு ஆண்டுகளாக தொடர்ந்து செயல்பட்டு அமைச்சர் பொறுப்பையும் ஏற்று மக்களுக்கும் தன் நாட்டிற்கும் சேவை செய்து வருவது என்பது ஒரு பிரமிக்கத்தக்க சாதனை என்றால் மிகையாகாது.

திரு. இராசதுரை அவர்களின் அன்பு உள்ளமும் ஆண்டவன் பேரில் அவர் கொண்டுள்ள அசையா பக்தியும் தான் அவருக்கு உறுதுணையாக இருந்து அவரை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்கிறது.

தமிழ் வளர்த்த பெரியவர்களான அப்பர்–சுந்தரர் – ஞான சம்பந்தர் – மாணிக்க வாசகர் போன்றவர்களின் வாழ்க்கைப் பாதை ஆன்மீக அடிப்படையில் அமைந்தவை.

ஆன்மீகம் என்றாலே, தெய்வ சம்பந்தம் என்று பொருள் கொள்ளலாம். ஆன்மா அழிவற்றதல்லவா? ஆன்மீகம் கலந்த வாழ்க்கையும் சிரஞ்சீவித்துவம் கொண்டது என்பார்கள்.

மணிவாசகப் பெருமான் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டு அமைச்சராக செயல்படவில்லையா?

நாம் அவரைப் பார்க்கவில்லை. ஆன்மீக உலகிற்கே இலக்கணம் படைத்து வாழ்ந்து வரும் திரு. இராசதுரை அவர்களை இன்று மணி வாசகப் பெருமான் உருவில் பார்த்துப் பெருமைப்படுகிறேன்.

அந்தக்கால மன்னர்கள் ஆன்மீகத்தைக் கொண்டு அரசு புரிந்து வந்தார்கள். தெய்வத்திருப்பணிகள் பல செய்து, பல திருக் கோவில்களை எழுப்பினார்கள்: நாடும் நலம் பெற்றது மக்களும் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள்.

அண்ணல் காந்தியடிகள் ஆன்மீக அடிப்படையில் தானே பாரதத் திற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தார்கள்.

அவர்களின் அடிச்சுவட்டில்தான் அன்பு மனிதர் திரு. இராசதுரை அவர்கள் பல திருப்பணிகளும், யாகம், யக்ஞம், ஹோமம் போன்ற புனிதமான காரியங்களில் செயல்பட்டு மக்களின் நல்வாழ்விற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்கள்.

மனிதர்களால் செய்ய முடியாத அசுவமேதயாகத்தை வெற்றியுடன் செய்து முடித்தார்கள் என்றால் அவருக்கு பூர்வமான தெய்வ கடாக்ஷம் இருக்கிறது என்று தான் கொள்ள வேண்டும்.

சென்னை வரும் போதெல்லாம் மக்கள் நலனுக்காக பல தெய்வ காரியங்களான ஹோமம், யாகம் போன்ற திருப்பணிகளை செய்து வருகிறார்கள்.

அண்மைக் காலமாக அவர் சென்னை வரும் போதெல்லாம் தொலைபேசியில் என்னை அழைத்து பல தெய்வீக விஷயங்களைப் பற்றி பேசி மகிழ்வார்கள் இந்த நிகழ்ச்சிகளெல்லாம் என் மனதில் பசுமையாகவே நிரம்பி விடுகிறது.

திரு. இராசதுரை அவர்களைப் பார்க்கும் போது ஒரு விதமான தெய்வீக உணர்ச்சி நம்மில் ஏற்படுகின்றது.

அன்பு–பண்பு–பாசம் இவைகளோடு இலக்கணமாக வாழ்ந்து அமைச்சர் பதவியை ஆன்மீகத்துடன் இணைத்து செயல்பட்டு வரும் என் அன்பு நண்பர் திரு. இராசதுரை அவர்கள் மேலும் பல்லாண்டு ஆயுள், ஆரோக்கியத்துடன் மக்களுக்கு சேவைபுரிய தமிழ்க் கடவுளாவார்.

**எளிமையும் மரியாதையும் உயர்ந்த பண்புகளாகும்.**

*– நபிகள் நாயகம் (ஸல்)*

# "தந்தையின் அன்பு"

க.ஜெயபாண்டியன்
ஆசிரியர் — "தின இதழ்"

இனிமை, எளிமை இந்த இரண்டும் கலந்த அன்புக் கலவையாக உரு வெடுத்து நம்மிடையே கம்பீரமாக காட்சி தந்து கொண்டு சேவை செய்து வருபவா, பாசத்துக்குரிய மாண்புமிகு ஸ்ரீலங்கா அமைச்சர் திரு.ராசதுரை அவர்கள்.

கடந்த 29 ஆண்டுகளாக எனக்கும் அவர்களுக்கும் பத்திரிகையாளன் என்ற முறையிலே நட்பு உண்டு. அரசியல் வாதிக்கும், பத்திரிகையாளருக்கும் உள்ள சாதாரண நட்பைவிட குடும்பப் பாசத்தோடு கூடிய அன்பு கலந்து நட்புக்கு எடுத்துச் காட்டாக சொல்லலாம்.

சென்னை நகரில் உள்ள இநத பத்திரிகையாளன் வீட்டுக்கு மனைவி, பிள்ளைகளுடன் வருகை தந்து இருக்கிறார்கள்.

சென்னைக்கு அவர்கள் விஜயம் செய்தால் என்னுடன் அவர்கள் தொடர்பு கொண்டு பேச தவறியதே இல்லை.

வாடகை வீட்டில் இருப்பவன் தானே நான். ஆகவே வசதிக்கு ஏற்ப அடிக்கடி வீட்டை மாற்றிக் கொண்டிருந்தேன்.

நான் வரும்போதெல்லாம் புதிய வீட்டுக்கு அல்லவா குடிபுகுந்து விடுகிறீர்கள். புதிய விலாசத்தை தரக் கூடாதா என்று கேட்பார்கள். அந்தக் கேள்வியிலே ஒரு தந்தையின் அன்பு இருக்கும்.

மாண்புமிகு திரு. ராசதுரை அவர்கள் இலங்கை மந்திரியாக பொறுப்பு ஏற்பதற்கு

முன்பு அதாவது மட்டக்களப்பு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்த பிறகு முதன் முதலாக சென்னை நகருக்கு வந்திருந்தார்கள்.

அப்போதுதான் அவர்களுடன் முதன்முதலாக அறிமுகம் ஏற்பட்டது. அன்று நான் மாலை முரசு நாளேட்டின் சினிமா ஆசிரியராக பணியாற்றி வந்ததால், என்னிடம் திரு. எம்.ஜி.ஆர். அவர்களை நேரில் சந்திக்க இயலுமா என்று கேட்டார்கள்.

அவர்கள் இருவரும் சந்தித்தால் நமக்கு செய்தி கிடைக்கும் என்ற உணர்வில் ''சந்திக்க உடனடியாக ஏற்பாடு செய்கிறேன்'' என்றேன். அதன்படி மறுநாள் காலையில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களை சந்தித்து திரு.ராசதுரை அவர்கள் சிற்று ண்டி அருந்திக் கொண்டே உரையாடினார்கள்.

விருந்து முடிந்ததும் எம்.ஜி.ஆர். அவர்களை இலங்கைக்கு வரும்படி திரு. ராசதுரை அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். அதுவரை எம்.ஜி.ஆர். அவர்கள் எந்த வெளிநாட்டுக்கும் சென்றதில்லை. ஆகவே பெரிய செய்தியாக போட்டுவிடலாம் என்று தோன்றியது.

ஆனால் அந்த எண்ணத்திற்கு எம்.ஜி.ஆர். அவர்கள் முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள். ''தம்பி நீங்கள் எனக்கு சகோதரன். உங்களை நான் அப்படித்தான் நேசிக்கிறேன். நீங்கள் வெறும் பத்திரிகையாளன் என்று நான் கருதியிருந்தால் உங்களுடன் திரு. ராசதுரை அவர்கள் வர அழைப்பு தந்திருக்க மாட்டேன்.''

''நானே செய்தி தருகிறேன் அப்புறம் போட்டுக் கொள்ளலாம்'' என்றார் எம்.ஜி.ஆர். அதே போல ஓராண்டுக்கப்பால் மீண்டும் திரு. ராசதுரை அவர்கள் வந்தாகள். ராமாவரம் தோட்டத்திற்கு சென்று மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களை சந்தித்தோம். எம்.ஜி.ஆரின் இலங்கை விஜயம் அப்போது உறுதி செய்யப்பட்டது. முதன் முதலாக பேரறிஞர் அண்ணா அவர்களிடம் தான் ஒப்புதல் பெற்று, பின்னரே எனக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் செய்தி தந்தார்கள்.

எம்.ஜி.ஆர். அவர்களுடன் அந்நாளைய கதாநாயகி சரோஜா தேவியும் அவருடைய தாயாரும் சென்றார்கள்.

இந்த சுற்றுப் பயணத்திற்கு பின் திரு. ராசதுரை அவர்களுக்கும், திரு. எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் நட்பு வளர்ந்தது. இலங்கையில் இருந்து தொலைபேசியிலேயே பேசிக் கொள்ளக்கூடிய அளவுக்கு நெருங்கிய குடும்ப நண்பர்கள் ஆகிவிட்டார்கள்.

1967-ஆம் ஆண்டு ஜனவரி 12-ம் தேதி எம்.ஜி.ஆர் அவர்கள் மீது துப்பாக்கிக் குண்டு பாய்ந்து உயிருக்குப் போராடிய எம்.ஜி.ஆரை உடனே பார்க்க கொழும்பில்

இருந்து பறந்து வந்தார் திரு. ராசதுரை. கொழும்பில் இருந்து அன்று வந்த ஒரே தலைவர் திரு. ராசதுரை அவர்கள்தான்.

கடந்த 32 ஆண்டுகள் மட்டக்களப்பு நாடாளுமன்ற தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் ஒரே எம்.பி. அதுவும் சீனியர் எம்.பி. தமிழர் ராசதுரை தான்.

மக்களின் நன்மதிப்பையும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனே அவர்களின் விசேஷ மரியாதையும் பெற்றவர்.

திரு.ராசதுரை அவர்கள் சிறந்த மேடைப் பேச்சாளர். பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்தாற்றலை திரு.ராசதுரை அவர்களின் தமிழ் முழக்கத்தில் கேட்கலாம். கலைஞர் கருணாநிதி அவர்களின் கற்பனை வளத்தை திரு.ராசதுரை அவர்களுடைய எழுத்தில் பார்க்கலாம். திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் மனித நேயத்தையும் அணுகுமுறை நேர்த்தியையும் திரு.ராசதுரை அவர்களின் வாழ்க்கை நெறியில் காணலாம்.

தமிழுக்கும், தமிழர்களுக்கும் தொண்டு ஆற்றிவரும் திரு. ராசதுரை அவர்களின் சேவை இலங்கையில் தொடரவேண்டும். சர்வதேச அளவில் தமிழர்களின் திறமை பளிச்சிடுகிறதென்றால், திரு. ராச துரை அவர்கள் இலங்கை சர்க்காரின் மிக முக்கிய பொறுப்பு வாய்ந்த அமைச்சராக இருக்கிறாரென்பதையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

தமிழர்களுக்கு பாதுகாப்பாக ஈழத் தமிழர்களுக்கு அரணாக திரு. ராசதுரை அவர்கள் விளங்கி வருகிறார்கள்.

அவர்களுடைய இலக்கியத் தொண்டும், அரசியல் சேவையும் தொடர எல்லாம் வல்ல தமிழன்னையை வணங்குகிறேன்.

**மனிதன் கண்களிருந்தும் தன் அகங்காரத்தால் குருடனாகிறான்.**

*– ஸ்ரீ சத்திய சாயிபாபா*




# "வாழ்த்துரை"

க. அமிர்தலிங்கம்
ஆசிரியர்: திருக்கோயில்

இலங்கைத் திருநாட்டின் இந்துசமயம் மற்றும் இந்து கலாச்சார அபிவிருத்தி அமைச்சராக மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வரும் மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்களை நான் பலமுறை சந்தித்துப் பேசி மகிழ்ந்துள்ளேன். அவருடைய மலர்ந்த முகமும், அன்புகனிந்த பேச்சும், பண்பான உபசரிப்பும், இந்து சமய வளர்ச்சியில் அவர் காட்டிவரும் ஆர்வமும் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

இலங்கை நாட்டின் அமைதிக்காகவும், தமிழ் மக்களின் நல்வாழ்விற்காகவும் அவர்கள் சென்னை காளிகாம்பாள் ஆலயத்தில் நிகழ்வித்த ஆன்மீக வேள்வியைக் கண்டு மனம் பூரித்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1982-ல் அகில உலக இந்துமாநாட்டினை இலங்கையில் முதன்முதலாகத் தம் அரசின் சார்பில் நிகழ்வித்து, மலர் ஒன்றினையும் சிறப்புற வெளியிட்டுள்ளார்கள். இலங்கையின் 23 மாநிலங்களிலுமுள்ள அனைத்து இந்துக் கோயில்களின் வரலாற்றையும் ஒரே தொகுப்பு நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்விரு நூல்களையும் எனக்கு வழங்கினார்கள். அமைச்சரின் சமயப்பற்றினை இந்நூல்களின் வாயிலாகக் கண்டு மனம்மிக மகிழ்ந்த நான் அவரை நேரிலும் பாராட்டினேன். ''இந்து சமயக் கலைக்களஞ்சியம் வெளியிட நீங்கள் கொண்டுள்ள ஆர்வமும் நிறைவேறும்'' என்று வாழ்த்தி என்னிடம் இருந்த திருவேற்காடு, திருவரங்கம் ஆலயத் திருக்குட நீராட்டு விழா மலர்களை அமைச்சருக்கு வழங்கி மகிழ்ந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 32 ஆண்டுக்காலம் தொடர்ந்து இடையீடின்றிப் பாராளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்து வருவது, சிறந்த தொண்டர்களை மக்கள் என்றும் மதித்துப் போற்றுவார்கள் என்பதற்குக் கண்கூடான சான்றாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து மென்மேலும் பல சிறப்புகளைப் பெற்றுச் சிறக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.



**அன்பு ஒருபோதும் யாதொன்றையும் விரும்புவ தல்ல;. எதற்கும் பயப்படுவதுமல்ல.**

– விவேகானந்தர்

# "இப்படியும் ஒரு மனிதர்"

டாக்டர். டி. எஸ். நாராயணஸ்வாமி

"ஜனனீம் ஜென்ம ஸௌக்யானாம்
பதவீம் பூர்வ புண்யானாம்"

என்பது வேத வாக்யம்.

எத்தனையோ பிறவிகளில் பெற்ற புண்ணிய பலன்களால் ஒருவனது இன்றைய வாழ்க்கையும், வசதியும், பதவியும் அமைகிறது என்பது தத்துவம். இதன்படி வாழ்க்கை அமைய இறைவன் ஒவ்வொரு மனிதனுக்கும் எத்தனையோ திறமைகளை அளித்திருக்கிறான். எல்லோரும் அந்தத் திறமைகளைப் பயன்படுத்தி தன்னை உயர்த்திக் கொள்வதில்லை. தான் பெற்ற புண்ணிய பலனால் கிடைத்த வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில்லை. ஆனால் பதினாயிரத்தில் ஒருவர் இறைவன் கொடுத்த திறமைகளை எள்ளளவும் வீணாக்காது, நம்பிக்கையோடு உழைத்துத் தன்னை உயர்த்திக் கொண்டு பூர்வ புண்ணிய பலனோடு புதிய புண்ணிய பலன்களையும் சேர்த்துக்கொண்டு வாழ்கிறார்கள். அத்தகைய வர்களில் நம்மில் பலருக்குத் தெரிந்த ஒருவர் இலங்கை திரு. இராசதுரை அவர்கள்.

சிந்தனைத்திறன், செயல்திறன், பேச்சுத்திறன், எழுத்துத்திறன், வாதத்திறன், வெற்றித்திறன், அரசியல்திறன், ஆன்மீகத்திறன், ஆராய்ச்சித் திறன் இப்படி எத்தனையோ திறமைகளைத் தனக்குள் வைத்துக் கொண்டு, அவற்றை அன்றாடம் சாணைதீட்டி வைரம் போல் பிரகாசிக்கச் செய்துகொண்டு, எல்லோரையும் அதிசயத்தில் ஆழ்த்திக்கொண்டிருக்கும் ஓர் அடக்கமான மனிதர் திரு. இராசதுரை.

இலங்கையில் மாபெரும் ஆன்மீக தார்மீக அமைப்பு ஒன்றை உருவாக்கும் திட்டத்தைத் தனக்குள்ளே வைத்துக்கொண்டு அதற்கென நாடு, மொழி, இன, சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து தார்மீக வெற்றிகளைத் தெரிந்துகொண்டு, கடைப்பிடித்தொழுகும் முயற்சியில் ஈடுபட்டுள்ள திரு. இராசதுரை அவர்களையும் என்னையும் இணைத்துவைத்தது நான்

ஆசிரியராகப் பொறுப்பேற்று வெளியிடும் இந்துதர்ம மாத இதழ் ''தர்மசுடர்'' தான்.

அதன் பின்பு அவர் பொறுப்பேற்று நடத்திய பல தெய்வீக, தார்மீக, ஆன்மீக, கல்வி, கலாச்சாரப் பணிகளில் சிறிய பங்கேற்று பணிபுரியும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அந்த சமயங்களில் அவரை பல கோணங்களில், பல பரிமாணங்களில் காணும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

அவர் ஓர் அமைச்சர் என்ற முறையில் நான் அவரைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் அவர் ஒரு கொள்கை மாறாத அரசியல்வாதி, தேசப்பற்று மிக்க மக்கள் தலைவன் என்பதைப் பலரிடமிருந்து தெரிந்து கொண்டேன்.

இந்து சமயத்திற்கும் தமிழுக்கும் தொண்டு செய்ய அவர் திட்டமிட்ட கலைக்களஞ்சியப் பணி அவர் ஒரு கல்வியாளர், கலாசாரப் பணியாளர் என்று காட்டியது.

உலக இந்து மகாநாடு நடத்தியபோது அவரது ஆன்மீக வேட்கை நன்கு தெரிந்தது.

இலங்கையில் அமைதிக்காக அவர் அஸ்வமேதயாகம் நடத்திய போது அவரது தெய்வ பக்தியும், அமைதி, சமாதானத்தில் அவரது ஆழ்ந்த நம்பிக்கையும் தெளிவாக வெளிப்பட்டது.

கலாச்சாரப்பணி இவரது வாழ்க்கை லட்சியம்.

ஆன்றோர்கள் தொடர்பு இவரது அன்றாடப் பணி.

ஆலயதரிசனம் இவரது அன்றாடக் கடமை.

அன்போடும் பண்போடும் பழகுவது இவரது இயற்கை இயல்பு.

அரசியல், ஆன்மீகம், தார்மீகம், தெய்வீகம்
அனைத்திலுமே கொள்கை மாறாத வைராக்ய
மனிதர் இவர்.

எண்ணத்தில் தூய்மை
செயலால் துணிச்சல்
அயராத முயற்சி
ஓயாத உழைப்பு
அனைத்தும் ஆண்டவன் கருணை
என்ற அசையாத நம்பிக்கை
இவையே இராசதுரையின் வெற்றியின்
ரகசியங்கள்.

# "நற்பண்புகளின் நாயகர்"

வித்துவான் லெட்சுமணன்
ஆசிரியர், "பாலஜோதிடம்"

எண்ணம் தான் எல்லாவற்றிற்கும் அடிப்படை. எண்ணமே பேச்சாகிறது; செயலாகிறது. தூய எண்ணத்தை வளர்த்துக் கொண்டால் பேச்சிலும், செயலிலும் தூய்மை ஏற்பட்டுவிடும். எல்லாமே தூய்மையாகிவிடுமானால் அங்கே நிலையான ஆனந்தம் உருவாகும்.

மேலே சொல்லப்பட்ட இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்பவர் மாண்புமிகு அமைச்சர் இராசதுரை ஆவார்கள்.

நற்றவம் என்பது நற்பண்பே என்றார் வள்ளுவர். இருக்கும் இடத்திலேயே செய்யப்படுகிற நற்றவம்தான் நற்பண்பு. மற்றவர்க்குப் பயன்படுவது நற்பண்புகளுக்குச் சிகரமாகும். பற்றுக் கொண்டு, பற்றற்றவனைப் பற்றிக் கொண்டு, வாழ்வாங்கு வாழ்வதே நல்வாழ்வின் தத்துவம் என்பது பெரியோர்களின் பொன்மொழி. அந்தப் பொன்மொழிக்குப் புகலிடமாக விளங்குபவர் மாண்புமிகு அமைச்சர் இராசதுரை ஆவார்கள்.

"கடமைகளைச் செய்ய வேண்டும்; கடமைகளைச் செய்யும்போது கடவுளைக் கருதவேண்டும். கடவுளை வழிபட வேண்டும்; அதே நேரத்தில் கடமையைக் கடுகளவும் மறந்துவிடக் கூடாது. நீதிமுறைகளை எல்லாம் அறிய வேண்டும். அறிந்தவற்றையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும். ஏற்றத்தில் எளிமை வேண்டும். ஆற்றலில் அடக்கம் வேண்டும்.'' என்று நீதி நூல்கள் புகழ்கின்றன. காவிய நாயகர்களின் உன்னத பண்புகள் அவை என்று சொல்லப் பட்டிருக்கின்றன. அத்தகைய பண்பின் நாயகனாக நம் கண்முன்னே திகழ்கின்றவர் மாண்புமிகு அமைச்சர் இராசதுரை ஆவார்கள்.

''கடவுள் முழுமையானவர்; அவரை முழுமையாக நம்பினால் நாம் முழுமையான பயனை அடைய முடியும். நம்பிக்கை பலமாக இருந்தால் நம்புகிற காரியம் நலமாக முடியும்'' நான் பலமுறை இந்தச் சிறப்பான பண்பை அமைச்சர் அவர்களிடம் தெளிவாகக்

கண்டிருக்கிறேன். பெரிய பெரிய வேள்விகளை அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். அந்த நேரங்களிலெல்லாம் அவருடைய கட்டுப்பாடான நியமங்களையும், எடுத்த கருமத்தில் ஆழ்ந்து ஈடுபடுகிற மன உறுதியையும் பார்த்து வியந்திருக்கிறேன்.

இதைவிட உயர்ந்த தவம் வேறு எதுவாக இருக்க முடியும்? தவப்பயன் என்று சொல்வார்களே, அந்தப் பயன் நூற்றுக்கு நூறு நம் அமைச்சருக்கு உண்டாகிக் கொண்டேயிருக்கும் என்பது என்னுடைய திடமான நம்பிக்கையாகும்.

'தகுதி' என்ற ஒரு சொல் உண்டு. உன்னதமான நிலையை அடைவதற்கு ஏற்ற 'தகுதி' வேண்டும் என்பார்கள். அந்தத் தகுதியை அடைவதற்கு இயற்கையாகவே சில தகுதிகள் சிலருக்கு அமைந்திருக்கும். அது முன்வினையின் பிரதிபலிப்பு என்று சொல்லலாம். நம்முடைய அமைச்சரிடம் உன்னதமான தகுதிகள் எல்லாமே குடிகொண்டிருக்கின்றன என்பது நான் கண்டறிந்த அனுபவம். பால் போலப் பழகுவார். இனிய சொற்களை அள்ளி வீசுவார். எல்லோரிடமும் கருணை காட்டுவார். இதயத்தால் நேசிப்பார்.

அறப்பணிகளில் தொடர்ந்து ஈடுபடுவார். ஆட்சிப் பணிகளில் அயராமல் உழைப்பார். 'இன்னா செய்தார்க்கும்' இனியதைச் செய்வார். அன்னார் தொடர்ந்து இன்னா செய்யாதவாறு திருத்தவும் செய்வார். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பது இவரது தாரகமந்திரம். தெய்வ உருவத்தில் ஆண்டவனைக் காணும்போது தெய்வ அடியார்கள் திருவுருவத்திலும் ஆண்டவனைக் காண்பது இவரது தனித்தன்மை.

ஓர் அதிசயமான பக்குவம் இவரிடம் உண்டு; அடக்கம் உண்டு; நிதானம் உண்டு; நேர்மை உண்டு.

புகழ்ச்சியாக மிகைபடக் கூறவில்லை. ஈடுபட்டுச் செய்கின்ற புனிதப் பணியில் இரண்டறக் கலந்து இறைமயமாகி விடுவார் இவர். தம்முடைய பதவிச் சிறப்பை எண்ணிப் பாராமல், தம்முடைய மேலான நிலையைப் பெரிதுபடுத்திக் கொள்ளாமல் புனிதத் தன்மை நிறைந்த ஒரு சாதாரண மனிதரைப் போலவே நடமாடுவார். இது இறைக்குணமாகும். இதனாலேயே இலங்கை வாழ் மக்களும் இந்தியத் துணைக் கண்டத்து மக்களும் ஒருசேரப் பாராட்டுகின்ற பெருமை இவருக்கு அமைந்திருக்கிறது.

தமிழைத் தம் கண்ணாகக் கருதி, தமிழ் எழுத்தைத் தம் மூச்சாகக் கருதி, ஓர் எழுத்தாளராக வாழ்க்கையைத் தொடங்கிய அமைச்சர் அவர்கள் பல தமிழ்ப் பத்திரிகைகளில் ஆசிரியராகவும் பல தமிழ் நூல்களின் ஆசிரியராகவும் சுடர்விட்டு ஒளிரலானார்.

இவர் பாராளுமன்றத்தில் பிரதிநிதியாக இருப்பதும் அமைச்சரவை யில் அமைச்சராக இருப்பதும் தமிழ் எழுத்தாளர்களுக்கே பெருமை தருகிற சம்பவம் ஆகும்.

திருவள்ளுவர் ஒரு குறளில், சொல்கிறார்:

*''ஈதல், இசைபட வாழ்தல் அது அல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு''*

இதுதான் அந்தக் குறள். 'ஈதல்' என்றால் 'கொடுத்தல்' என்று பொருள். மக்களுக்கு எது தேவையோ அதைக் கொடுப்பதுதான் உன்னதமான கொடையாகும். எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், அமைச்சராகவும் இப்படிப் பல கோணங்களில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு இவரால் ஆற்றப் பட்டிருக்கும் சாதனைகள் கொடைகளுக்குச் சிகரம் என்றே சொல்ல வேண்டும்.

அடுத்தபடியாக, 'இசைபடவாழ்தல்' என்றார் வள்ளுவர். இசை 'பட' வாழ்தல் என்றார். அதாவது, இசை என்று சொல்லப்படுகிற புகழ், நாடித் தேடி ஓடி வந்து குறிப்பிட்ட கொடையாளரைத் தஞ்சமடையுமாம். நம்முடைய அமைச்சர் அவர்களைப் புகழானது அதுவாகவே தேடி, ஓடி, நாடி வந்து சரணடைந்திருக்கிறது என்று சொன்னால அது நூற்றுக்கு நூறு பொருத்தமுடைய சொல்லாகும். பாராட்டப்பட வேண்டியவர்கள் பாராட்டப்படாவிட்டால் அது மனிதகுலம் செய்கின்ற பெரும்தவறாகிவிடும.

இவருக்குப் பாராட்டுவிழா எடுப்பதைப் பல காலமாகவே இவர் மறுத்து வந்திருக்கிறார், என்றால், அது அவருடைய இனிய சுபா வத்தின் வெளிப்பாடு ஆகும். ஆனால், நம்முடைய கடமையை நாம் செய்ய வேண்டும் அல்லவா? மாபெரும் தமிழ்த் தொண்டராகிய இந்த மனிதகுல மாணிக்கத்திற்குப் பாராட்டுவிழா நடத்தாமல் போனால் அது நமக்கு நாமே ஏற்படுத்திக் கொண்டதோர் இழப்பாகிவிடும்.

நல்ல வேளையாக, நாம் இன்று நம் கடமையைச் செய்வதற்குரிய சந்தர்ப்பத்தைப் பெற்று, இழப்பை விரட்டியடித்து, உன்னத மான ஊதியத்தைப் பெறுகின்றோம். அதாவது, நம்முடைய இலட்சியத்தின் வெற்றியை எட்டிப் பிடிக்கின்றோம். போற்றத்தக்கவரைப் போற்றிப் பூரித்து மகிழ்கின்ற வாய்ப்பைப் பெறுகின்றோம்.

இந்த வாய்ப்பு மேலும் மேலும், தொடர்ந்து நமக்கு ஏற்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் இராசதுரை அவர்களை ஒரு முறையல்ல, ஒரு விழாவில் மட்டுமல்ல, பல முறைகள், பல விழாக் களில் தொடர்ந்து பாராட்ட வேண்டும். இப்படிப் பாராட்டு வதன் மூலம் அவருக்குப் புதிதாக ஒரு பயன் ஏற்பட்டுவிடும் என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால், அவர் பாராட்டப்படுவதனால், அவரைப் போன்ற பண்பாளர்கள் பலர் உருவாகி, பின்பு நெறிகள் செழித்து வளரச் சந்தர்ப்பம் பூத்து வரும். அதன்மூலம் தமிழ் எழுத்துக்கு ஆற்றல்கூடும். தமிழ் எழுத்தாளர் இனத்துக்கு ஏற்றம் கூடும். ''எழுத்தாளர்கள் எழுத்தை மட்டும் ஆள்கிறவர்கள் அல்லர்; நாடாளவும் வல்லவர்கள்,'' என்கிற தத்துவத்திற்குக் காட்சி வாயிலாகவும், செயல் வடிவிலும் நம்முடைய அமைச்சர் திகழ்கின்ற அந்தச் சிறப்பு, மற்றும் பலருக்கு அமைகின்ற பேறு உண்டாகவும் கூடும்.

மாண்புமிகு அமைச்சர் இராசதுரை அவர்கள் தமிழகத்திற்கு வரும் போதெல்லாம் எனக்குத் தகவல் வரும். சந்திக்க தவறமாட்டேன். அவருடைய இன்சொற்களைக் கேட்டு

உள்ளம் நெகிழ்ந்து போவேன். அவருடைய பெருந்தன்மையைக் கண்டு நெஞ்சம் பூரிப்பேன்.

*"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்*
*பண்புடை யாளர் தொடர்பு"*

என்பது குறள் அல்லவா? அந்தப் பெரும்பேறு நினைக்க நினைக்க இனிப்பை ஊட்டும்.

பிருகுமா முனிவருக்கென சென்னையில் ஒரு குடிலை நான் அமைத்திருக்கிறேன். அங்கே அமைச்சர் அவர்கள் வருவார்கள். நான் எதிர்பாராத வகையில் திடீரென்று ஒரு நாள் ஏராளமான பூந்தொட்டிகளை அங்கே கொணடு வந்து இறக்கினார்கள். "நீங்கள் வழிபடும் இறைவனுக்கு அன்றாடம் புதுமலர்களைச் சூட்டுங்கள்" என்றார்கள். அத்தகைய இந்த மேலாளர், என்றென்றும் புதுமலர் போல் நறுமணம் வீசிக்கொண்டு தம் உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் போற்ற எல்லோரும் மகிழ, தமிழ் அன்னை ஏற்றம் பெறப், பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என பிராத்தனையை இறைவனுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.



**உலகத்தில் மிகவும் விலையுயர்ந்த பொருள் காலம்தான். ஒரு நொடியை வீணாக்கினாலும் அது வாழ்க்கையைப் பாதித்து விடும்.**

*- ஸ்ரீ சத்திய சாயிபாபா*

# "சொல்லின் செல்வர் இராசதுரை"

ஆத்ம ஜோதி நா. முத்தையா

மாண்புமிகு அமைச்சர் அன்பர் இராசதுரை அவர்களைப் பற்றி சிறந்த ஒரு பேச்சாளன்; சிறந்த ஒரு இலக்கிய இரசிகன்; சிறந்த ஓர் எழுத்தாளன்; சிறந்த ஓர் அரசியல்வாதி என்று பலரும் பல படப் பேசுவர். அவர்கள் பேசுவதில் எவ்விதமான தப்பும் இல்லை. ஆனால் அடியேன் அவரைச் சந்தித்த போதெல்லாம் ஓர் ஆத்மீக வாதியாகவே சந்தித்துள்ளேன். அடியேனுடைய கண்ணுக்கு ஒரு சிறு தொண்டனாகவே காட்சி அளித்தார்.

சுவாமி விபுலானந்தர் பிறந்த காரை தீவிலே சித்தானைக் குட்டி சுவாமிகளின் சமாதி உண்டு என்பதையாரும் அறிவர். ஆண்டு தோறும் ஆடிமாதத்தில் சுவாமிகளுடைய குருபூஜை நடைபெற்று வருகிறது. பத்திரிகை மூலமாக அன்பர் அவர்களைப் பற்றி பல செய்திகளை அறிந்திருந்தாலும், அவரது பேச்சுத் திறமையினை பல கூட்டங்களிலே அநுபவித்திருந்தாலும் நேரில் சந்தித்து ஒருவரோ டொருவர் அளவளாவும் பாக்கியம் சித்தானைக் குட்டி சுவாமி களின் குருபூஜையின் போதுதான் அடியேனுக்குக் கிடைத்தது.

அன்று தொடக்கம் அவர் அடியேனுடைய கண்ணுக்கு ஓர் ஆன்மீக வாதியாகவே காட்சி அளித்துக் கொண்டிருக்கிறார். அதன்பின் ஏற்பட்ட சந்திப்பெல்லாம் ஓர் ஆத்மீகச் சூழலிலே நிகழ்ந்துள்ளன. தொண்டனுக்கு இலக்கணம் கூறவந்த ஒரு பெரியார்:

"கொக்கைபோல இருப்பான்; கோழிபோல இருப்பான்; உப்பைப் போல இருப்பான்; உம்மைப் போல இருப்பான்,"

என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறினார். அந்தக் கண் கொண்டுதான் அடியேனும் திரு.இராசதுரை அவர்களைப் பார்த்து வந்திருக்கின்றேன்.

கொக்கு நீர்வளமுள்ள இடத்தில்தான் வசிக்கும். அதுபோல திரு.இராசதுரை அவர்களைப் பக்தி வளமுள்ள இடத்தில்தான் அடியேன் சந்திக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. கோழி

குப்பையைக் கிளறி தன் குஞ்சுக்கு உணவைத் தேடித் தேடிக் கொடுப்பது போல இவரும் பாரதியார், வள்ளுவன், சாயிபாபா போன்றோரின் அருளுபதேசங்களை நன்கு கற்று மக்களுடைய இன்றைய வாழ்வுக்கு தேவையானவற்றைத் தெரிந்தெடுத்துக் கூறியுள்ளார்.

உப்பு, தான் அழிந்து பிற பொருட்களுக்குச் சுவையைக் கொடுத்து அதனால் வரும் புகழினையும் அடியவர்களுக்கே அர்ப்பணிப்பது போலவே அன்பரும் எந்தெந்தச் சங்கங்கள் இயக்கங்களோடு இணைந்திருந்தாரோ அவற்றுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதோடு அதனால் வந்த புகழினையும் அவற்றுக்கே அர்ப்பணித்துவிட்டார். எல்லாவற்றுக்கும் மேலாக தான் ஒரு தொண்டன் என்பதைத் தான் அறியாமலே தொண்டு செய்து வந்துள்ளார்.

பரமகம்சதாசன் அவர்கள் அடியேனுடைய நீண்ட கால ஆத்மீக நண்பர். இத்தகைய தொடர்பினாலும் அன்பரை ஆத்மீகச் சூழலிலேயே சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது.

அன்பர் அவர்கள் அரசியல் வானில் கொடிகட்டிப் பறந்த காலத்திலும், இலக்கிய மேடைகளில் இலக்கியச் சொற்பொழிவுகள் முழங்கிய காலத்திலும் ஆத்மாவைப் பற்றிச் சிந்தித்தமை மிகக் குறைவென்றே கூறவேண்டும். முற்றாக இல்லை என்றாலும் அதுமிகைப் படுத்தி கூறப்படுவதன்று.

அன்பர் அவர்கள் பிரதேச அபிவிருத்தி அமைச்சராக இருந்தாலும் சமயப் பகுதிகளில் கூடுதலாக ஈடுபட்டு உழைக்கும் சந்தர்ப்பம் கூடுதலாகக் கிடைத்துவந்தது. அடிக்கடி இந்தியா சென்று சத்திய சாயிபாபா போன்ற மகான்களையும் ஆதீனத் தலைவர்களையும் தரிசித்து அவர்களுடைய ஆலோசனைகளையும் அருளாசிகளையும் பெறும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டார்.

எல்லாவற்றுக்கும் மேலாக உலக இந்துக்களை எல்லாம் ஒன்றுகூடச் செய்து அகில உலக இந்து மகாநாட்டைக் கொழும்பில் வெகு கச்சிதமாக நடத்தினார். இந்து சமய வரலாற்றில் இது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஸ்ரீலங்கா அரசாங்கமே முக்கிய பங்கெடுத்துக் கொண்டு இம்மகாநாட்டை நடத்தி வைத்ததென்றால் அம்மகாநாட்டின் பெருமை பலபடி உயர்ந்து விட்டது என்றே கூறவேண்டும்.

மக்களுடைய சுபீட்சத்திற்காகவும், தேசத்தின் அமைதிக்காகவும் வேத, புராண காலங்களில் அரசர்களே யாகங்களைச் செய்தார்கள் என்பதைப் பண்டைய நூல்கள் மூலமாக அறிகின்றோம். இன்றும் இத்தேசத்தில் இனக் கலவரம் ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலையில் அசுவமேதயாகம் ஒன்றை அரச மட்டத்தில் செய்த பெருமை அவரையே சாரும்.

அவர் ஒரு சாயிபக்தனாக மாறி பாபாவின் அருள் வழிகாட்டலின் படி நடப்பதனால்தான் அவரால் இவ்வளவையும் சமாளிக்க முடிந்தது என்று கூறலாம். அவரது சேவை இன்னும் பல்லாண்டுகள் தொடர வேண்டும் என எல்லாம்வல்ல இறைவனைப் பிராத்திப்போமாக!

# 'இனிய பண்பாளர் இராசதுரை'

லேனா தமிழ்வாணன் எம்.ஏ.,
ஆசிரியர், "கல்கண்டு"

மாண்புமிகு அமைச்சர் அவர்களை என் இளவயது முதல் அறிவேன். சொல்லப் போனால் அமைச்சராகு முன்பே அவர்களைத் தெரியும்.

எப்படி என்று கேட்பீர்கள்? அமைச்சர் அவர்கள் என் தந்தையின் நெருங்கிய நண்பர். என் தந்தைக்கும் அமைச்சர் அவர்களுக்கும் எத்தனை வருடமாக நட்பு என்பதெல்லாம் எனக்கு விரிவாகத் தெரியாது.

ஆனால் அப்போது அவர்கள் வெறும் பாராளுமன்ற உறுப்பினராக மட்டுமே இருந்தார்கள். எங்கள் வீட்டுக்கு ராசதுரை எம்.பி. வருகிறார் என்று செய்தி வரும். உடனே வீடே விழாக்கோலம் காணும். இந்த நாற்காலி அங்கே போகும். அந்த நாற்காலி இங்கே வரும். நாங்கள் விளையாடுகிறோம் பேர்வழி என்று இறைத்துப் போட்ட பொருட்களெல்லாம் உடனே ஒழுங்குபடுத்தப் படும். விஷேட உணவு வகைகள் தயாராகும்.

அப்போது எனக்கு விவரம் தெரியாத வயது. அப்பாவும் அமைச்சரும் பேசிக்கொண்டிருப்பதை நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால், ''உள்ளே போய் விளையாடு'' என்பார் அப்பா.

நாங்கள் அப்போது இருந்த வீடு கவியரசு கண்ணதாசன் வீட்டிற்கு அருகில் இருந்தபோது, கண்ணதாசன் மகன்கள் எனக்கு நல்ல நண்பர்கள். அங்கே விளையாடப் போனாலும் சரி, அங்கேயும் அமைச்சர் வருவார். அதே தடபுடல் இவையாவும் அவர் பதவிக்காக அல்ல, அவர் காட்டிய அன்பு மற்றும் மரியாதைக்காகவே.

எனக்கு நினைவு தெரிந்து இலங்கையின் அழகான தமிழை முதன் முதலில் திரு. இராசதுரை பேசத்தான் கேட்டிருக்கிறேன். அதற்காகவே கதவுக்குப் பக்கத்தில் மறைந்தபடி நின்றிருப்பதுண்டு.

அமைச்சராகி இல்லம் வந்த போதுகூட அதே எளிமை; அதே பண்பு. பதவிகள் அவரை மாற்றியதாக வரலாறு கிடையாது. எப்போதும் ஒரே மாதிரிதான்.

அரசியலிலும் நாகரிகம் காட்டியவர் அமைச்சர் அவர்கள். விவகாரமாகப் பேசி விளம்பரம் தேடிக்கொள்ளத் தெரியாது. எதையும் ஆர்ப்பாட்டமின்றி சாதிப்பதில் வல்லவர். இதற்குச் சிறந்த உதாரணமாக உலக இந்து சமய மகாநாட்டைக் கூட்டிச் சிறப்புற நடத்தியதைக் குறிப்பிட வேண்டும்.

ஒரே கூரையின்கீழ் அத்தனை ஆன்மீகப் பெரியோரையும் ஒன்று கூட்டியது, கடல் கடந்து வரவழைத்தது எளிய செயலா என்ன?

பெரிய விஷயம்.

இந்து சமயத்திற்கே விழிப்புணர்வு தந்த மாநாடு அது.

மணிவிழாக் காணும் அமைச்சர் பல்லாண்டு வாழ்ந்து மேலும் தமிழ்ச் சமுதாயத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே என் பேரவா.

**உங்களை ஓர் ஏழை என்று நினைக்காதீர்கள்; பணம் சக்தியல்ல; நன்மையும் தெய்வ பக்தியுமே சக்தி.**

*– விவேகானந்தர்*

# "அடக்கத்துள் அடக்கம்"

"அமரபாரதி" ரா. வீழிநாதன்

'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

எனவே, நான் அடக்கம் பேணினேன். எனக்கு, நான் அடக்கமா யிருப்பதாக எண்ணம். ஆனால் அமரருள் உய்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லையே ஏன்?

யோசனை செய்தேன். 'என் அடக்கம் அடக்கம் அல்ல: சங்கோசம்' என்ற முடிவுக்கு வந்தேன்.

நம்மிடம் இல்லாத ஆற்றலை இருப்பதாக எண்ணிக் கொண்டு, அதை வெளிக்காட்டத் தெம்பில்லாமல் இருப்பது எப்படி அடக்கம் ஆக முடியும்?

அப்படியானால் எது அடக்கம்?

சிறந்த கல்வி ஆற்றல் இருக்க வேண்டும். அது கல்விச் செருக்காக தலை எடுக்காமல் இருக்க வேண்டும். அப்படி ஒரு சிறப்பைப் பெற்றவன் 'வித்யா – விநய ஸம்பன்னன்' – 'அறிவும் அடக்கமும் நிறைந்தவன்' எனப் போற்றப்படுகிறான்.

அப்படி ஓர் அடக்க சீலரைக் காணவேண்டுமானால், தாய் நாடான பாரதத்தை விட்டுச் சேய்நாடான இலங்கைக்குப் போக வேண்டும். அங்குள்ள திரு. செல்லையா இராசதுரையைக் காணவேண்டும் அவரிடமிருந்து அடக்கம் கற்க வேண்டும்: கற்றபின் அதற்குத் தகுந்தவாறு நிற்கவேண்டும். அப்பொழுது அடக்கமும் அறிவும் தாமாகக் கைவரும் – இது நான் பெற்ற அனுபவம், இன்பனுபவம்.

முன்பின் நேர் அறிமுகம் இல்லாத திரு. இராசதுரையோடு எனக்கு ஏற்பட்ட தொடர்பு, அதனால் நான் கொண்ட உறவுமுறை பற்றி 'அமரபாரதி' மாத ஏட்டில் எழுதியதை சில பகுதிகள் நீங்கலாக அப்படியே பெயர்த்து எழுதுகிறேன்:–

ஒருவரது செயலைக் கொண்டு பரந்த உள்ளம், விசால இருதயம்' என்று பாராட்டும்பொழுது, சொல்பவருக்கும் திருப்தி; சொல்லப் படுபவருக்கும் மகிழ்ச்சி, இது நடைமுறை.

இதையே வைத்திய சாஸ்திரம் தன் பரிபாஷையில் சொல்லும் பொழுது.....? இதயத்தின் படபடப்பு அதிகமாகிறது; மருத்துவர் 'பூர்ண ஓய்வு தேவை' என்று பத்தியம் கூறிப் படுக்கவே வைத்து விடுகிறார்.

இந்த நிலையில் நான் சென்னை திரும்பிய எட்டாவது நாள் தொலைபேசி கிணுகிணுத்தது. எடுத்தால் "நான் இராசதுரை பேசுகிறேன்" என்றது மறுமுனை.

'யார் இராசதுரை?' என்று நான் என் மூளைக்கு வேலை கொடுப் பதற்கு முன்பாகவே "ஸ்ரீலங்கா அமைச்சராம், போன வாரமே தொடர்பு கொண்டார்" என்றாள் என்பேத்தி.

வணக்கத்துக்கு வணக்கம் கூறி, "தாம்பரத்துக்கு அருகில் மாடப் பாக்கம் தேனுபுரிசுவரர் ஆலயத்தில் ருத்ர ஹோமம் நடந்து வருகிறது, நாளைக்குப் பூர்த்தியாகிறது நீங்கள் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டும்" என்றார் திரு. இராசதுரை.

என் உடல் நிலையைக் கூறினேன்.

"அதனால் தான் கூறுகிறேன். தாங்கள் அவசியம் கலந்துகொள்ள வேண்டுமென்று" அவர் குரலில் ஓர் உறுதி தொனித்தது.

"எனக்கு வாகன வசதி..... கிடைத்தால் வரமுயல்கிறேன்" என்று இழுத்தேன்.

பக்கத்தில் நின்ற குழந்தைகள் முறைத்தார்கள். அவர்கள் கருத்தில் நான் மறுத்திருக்க வேண்டும்.

"அதற்கு நானே ஏற்பாடு செய்கிறேன். எத்தனை மணிக்கு வண்டி அனுப்ப?"

"பூர்ணாஹுகுதி சமயத்துக்கு" என்று கூறி விடைகோரினேன்.

மறுநாள் காலை பத்தரை மணிக்கே வாகனம் வந்துவிட்டது.

அன்று, முதல் கிருத்திகா ஸோம வாரம். கோவிலுக்குள் நுழைந் தால், ஆலயம் முழுவதும் அகல்விளக்குகள் ஏற்றப்பட்டு முத்து முத்தாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஜோதியுள் ஜோதியுள் ஜோதியாக தேனுபுரீசுவரர் இதய ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தார்; மனத்தைப் பறித்துக் கொண்டிருந்தார்.

மிகப்பிரகாசமான கோவில். தூணுக்கு தூண் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத சித்திர வேலைப்பாடு. 'எத்தனை ஆண்டுகளாக சென்னையில் வசிக்கின்றோம்? இந்த தேனுபுரிசுவரர் ஆலயத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளவில்லையே?' என்று என் அறியாமையை நொந்து கொண்டு பிராகாரத்தை வலம் வந்தேன்.

வெளிப்பிராகாரத்தில் ருத்ர ஹோமம் நடந்து கொண்டிருந்தது. அவ்விடத்தை நெருங்கிய பொழுது இன்னுமோர் அறியாமை தலை தூக்கியது.

நாமோ சாமான்யன். திரு. இராசதுரை அவர்களோ அமைச்சர். முன்பின் அறிமுகம் வேறு கிடையாது. அவரை எப்படி அணுகுவது? என்று மலைத்தேன். அப்பொழுது அவரே பார்வையால் என்னை அணுகி அருகில் அழைத்து அமர்த்திக் கொண்டார்.

அங்கு கண்ட ஸந்நிருவசம் பழங்காலத்தில் இப்படித்தான் ஹோமங்களும் யாகங்களும் நடத்திருக்க வேண்டும் என்று குறிப்பால் உணர்த்தியது.

'குண நலன்களையும் செயல்முறைகளையும் பகுத்து உணர்ந்தே நான் நான்கு வர்ணங்களைப் படைத்தேன்,' என்று கூறும் கீதாசாரியரின் வாக்கு பல பொருள்களைக் கொண்டதாயினும் உள்ளுணர் பொருளாக ஒன்றையே தானே கொண்டிருக்க வேண்டும்? ஒவ்வோர் உயிரிலும் ஒவ்வொரு மனிதனிலும் அவன் நான்கு வர்ணங்களைக் கண்டிருக்க வேண்டும் என்று கட்டியம் கூறுகிறார் போல் அமைந்திருந்தது யாகசாலை.

அந்தக் காலத்தில் அந்தணர்களைக் கொண்டு க்ஷத்திரியர்கள் வைசிய – சூத்ரர்களின் பேருதவியோடுதான் வேள்விகளை நடத்தி யிருக்கிறார்கள், யாக சம்ரக்ஷணம் செய்திருக்கிறார்கள். வேறு வகையில் சொல்லப் போனால் உலக க்ஷேமத்துக்காக வேள்விகள் நடத்தியவர்கள் அரசர்களே. அவர்கள் அரசாங்கப் பொக்கிஷங்களையே வாரி வழங்கிப் பொதுவுடமைக்கு வழி அமைத்திருக்கிறார்கள். யாகத்துக்கு ஒரு மகாராஜன் சான்று: யாக சம்ரக்ஷணத்துக்கு ராகவன் சான்று.

இன்று அந்த நிலை மாறி, மத்திய – மாநில அரசுகள் அக்கறை காட்டத் தவறியுள்ளன என்பது கண்கூடு. ஆனால் ஸ்ரீலங்கா அமைச்சரான திரு. இராசதுரை ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் அனுக்கிரகத்தோடு ஸ்ரீலங்காவில் அசுவமேதயாகமே நடத்தியிருக்கிறார்; மாடம்பாக்கத்தில் மகா ருத்ர ஹோமம் நடக்க அடி கோலியிருக்கிறார் என்றால் பாரதீயப்பண்பாடு எங்கெல்லாமோ எப்படியெல்லாமே ஊடு–பாவோடியிருக்கிறது என்பதுதானே பொருள்?

என்னை அருகில் அமர்த்திக்கொண்டு, என் உடல்நிலை பற்றி விசாரித்தவாறே ஹோமத்தின் தத்துவத்தையும் விளக்கினார் திரு. இராசதுரை.

"பல்வகையான பொருள்களைத் தீயில் இட்டு ஹோமம் செய்கிறோமே, புகை எப்பொழுதுமே வெளுப்பாயிருப்பதைக் கவனித் தீர்களா?" என்பார் ஒருசமயம்.

"மந்திர பூர்வமாக பஸ்பமான இந்த சாம்பலை மேல் நாட்டினர் அருமருந்தாகவே கருதுகின்றனர் உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்பார் இன்னொரு சமயம்.

அவர் விளக்க விளக்க என் அறியாமை விளங்கியது. விலகியதா? என்று கேட்டால்....? அது ஒரு கேள்விக்குறிதான் என்றாலும் ஒன்று விளங்கியது விளங்கினாற்போலிருந்தது என்பதே இன்னும் பொருந்தும்.

மணி – மந்திர – ஔஷதம் என்பார்களே அவ்வகையில் இந்த ருத்ர ஹோமத்தை வியாஜமாகக் கொண்டு ஸ்ரீ இராசதுரை அவர் களோடு பெரியவர்கள் நட்புறவாட விட்டிருப்பதன் பகைப் புலனிலே என் உடல் நலனுக்கும் அமரபாரதியின் வளத்துக்கும் அடிகோலியிருப்பதாகவே எண்ணுகிறேன்.

பண்பும் பதவிசும் – அடக்கத்தின் மாறுச்சொல்தான் பதவிசு பட்டமும் பதவியும் தாமாகவே பெற்றுத் தருகின்றன என்பதற்கு இராசதுரை அவர்கள் இலக்கியமும் இலக்கணமுமாகத் திகழ்பவர். அதிர்ந்து பேசி அறியாதவர். இன்சொல்லால் இதயத்தை ஈர்ப் பவர். சிறந்த இலக்கிய ரசிகர். அதற்கும் மேலாகச் சிறந்த இலக்கிய படைப்பாளர்.

எங்கள் முதல் சந்திப்புக்குப் பின் அவரிடமிருந்து வந்த முதல் கடிதம் நான் அடக்கம் என்று எண்ணிக்கொண்டிருந்த என் அடக்கத்தை அடக்கம் செய்து அஹங்காரத்தைக் கிளறிவிட்டது. ஆம், புகழ்ச்சிக்கு மயங்காதவர் யார்? அதே நேரத்தில் திரு. இராச துரை பழகியிருக்கும் அடக்கம் அடங்கி நடக்கும் பாடத்தையும் கற்பித்தது. அமைச்சர் பதவியை மேற்கொண்டு அடக்கமாக அரும்பணி ஆற்றிவரும் அவர் சிறப்பை எடுத்துக்காட்டும் பொருட்டு என் அடக்கத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு அவரது கடிதத்தின் சில வரிகளை இங்கே எடுத்தாள்கிறேன்.

"தமிழகம் சமீபத்தில் - வந்திருந்தபொழுது தங்களைக் காணவும் கலந்துரையாடவும் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி எல்லாம் வல்ல திருவருளுக்கு நன்றி செலுத்துகிறேன்.

"தங்கள் எழுத்திலும், மொழி பெயர்ப்புக் கதைகளிலும் பாடசாலை காலத்திலிருந்து தங்கள் மீது பெருமதிப்பு வைத்து வருபவன் நான்.

"மாடம்பாக்கம் தேனுபுரீசுவரர் ஆலயத்தில் நடைபெற்ற மகா ருத்ர ஜப யாகத்தில் எனது அழைப்பை ஏற்றுச் சிரமங்களுக்கு மத்தியில் வந்து கலந்துகொண்டமைக்கு மனப்பூர்வமான நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

இத்தகைய பண்பாளரோடு உறவு கொள்ளும் பாக்கியத்தை அருளி யவர்கள் பேரறிவின் சிகரமான ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள். காரணம் திரு. இராசதுரை அவர்கள் ஸ்ரீ பெரியவர்களின் பரம பக்தர். நானும் இவ்விஷயத்தில் என்னை அணிற்குஞ்சாக எண்ணி இறும்பூது எய்துபவன்.

திரு. இராசதுரை அவர்கள் நம் தாய்நாடான தமிழ் நாட்டி லிருந்து சேய்நாடு சென்றவர் தான். தாய் நாட்டுக்கும் சேய் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் பணியாற்றிவரும் அவர் எல்லா மதங்களுக்கும் வேர் மதமான சநாதன இந்து தர்மத்தின் தத்துவத் தரம் அறிந்தவர். அதன் முக்கியக் குறிக்கோள் அஹிம்சை என்பதை உணர்ந்தவர். பௌத்தமதம் தோன்றுவதற்கு முன்பே மதம் "பரமோ தர்ம", என்று தானே கூறிவருகிறது?

ஸ்ரீலங்காவில் அசுவமேத வேள்வி மேற்கொண்டபொழுது, அதைச் செயல்முறையில் காட்டி, அசுவமேதயாகத்துக்கு அருமையானதாக விளக்க நூல் எழுதியிருந்தார்கள் ஸ்ரீ இராசதுரை அவர்கள். அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் கொல்லாமையின் சிறப்பைத் தெளிவாக்கியிருந்தார்கள். ஒரு பானைச்சோறாக அவரது ஆழ்ந்த புலமை அதற்குள் அடக்கம்.

'ஆறுவது சினம்' என்பது ஔவை வாக்கு. சினந்தால்தானே ஆறுவதற்கு? அவர் அத்தகைய சாந்தமூர்த்தி. ஆனால் அவருமே என் கண்ணெதிரே சினக்கும்படி ஆயிற்று.

அவர் சினந்ததற்கான நிகழ்ச்சியோ காரண - காரியமோ முக்கியமில்லை. ஆனால் சினத்தின் பின் அவர் வருந்தியதும், கழிவிரக்கம் கொண்டதும் இருக்கிறதே. அது சிவபெருமானின் சடுதிக் கோபத்தையும் கருதி மகிழ்ச்சியையும் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியது. ஔவை வாக்கு அவரையே முன்னோடியாகக் கொண்டு எழுந்ததாகத் தோன்றியது.

மதுரையில் சிவபெருமான் தலைமையிலே முதல் தமிழ்ச்சங்கம் கூடியது. மதங்களுக்கெல்லாம் தலைமதமான இந்து சமயத்தின் அருமை - பெருமைகளையும் அது கண்ட ஆன்மிக மேம்பாடுகளையும் விளக்க திரு. செல்லையா இராசதுரையின் மேற்பார்வையில்

இந்து சமய கலைக் களஞ்சியம் உருவாகி வருவது அவருடைய சமயப்பற்றுக்கும் தமிழ்ப்பற்றுக்கும் ஒருமுகமான எடுத்துக்காட்டு.


"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

வள்ளுவத்தின் இவ்வழியிலே வாழ்க்கையைச் சமைத்துக் கொண்டிருக்கும் திரு. இராசதுரையை அவர் என்னை வாழ்த்திய சொற்களாலேயே வாழ்த்துகிறேன்.

"பகவான் திருவருளால் தாங்கள் பன்னெடுங்காலம் வாழ்ந்து, தெய்வத் திருப்பணியும், செந்தமிழ் இலக்கியப் பணியும் ஆற்ற வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்."

அவரது இந்த வாழ்த்தோடு "சமூக நலப்பணியாலும் அவர் சிறக்க வேண்டும்" என்ற என் வாழ்த்தினை ஒட்டி, அவர் அடக்கத்தினை எனக்கும் வேண்டி, நட்பின் உருவகமாக எங்கள் உறவினைக் கெட்டிப்படுத்தியதுமான இறையருளையும் குருவருளையும் வேண்டுகிறேன்.

என் இந்த வாழ்த்துக்குள், காரியத்திலும் கை கொடுத்துச் சிறக்கும் அவர் துணைவியாரும் குடும்பத்தினரும் அடக்கம் என்று தனியாகக் கூறவும் வேண்டுமா?



**பிரார்த்தனை உதட்டிலிருந்து வரக்கூடாது; நெஞ்சிலிருந்து வரவேண்டும். அது தனக்காகச் செய்யப்படக்கூடாது; பிறருக்காகச் செய்யப்பட வேண்டும்.**

*— ஸ்ரீ சத்திய சாயிபாபா*

# "உச்சம் எய்திய உதயதாரகை"

க.கணபதிப்பிள்ளை B.A., F.R.G.S.,
ஓய்வு பெற்ற அதிபர்-சிவானந்த வித்தியாலயம்

மட்டக்களப்புப் பட்டினத்தில் ஐந்து தெருக்கள் வந்து சந்திக்கும் சந்தியொன்றுள்ளது. அது பேர்போனது. அதன் பிரபல்லியத்திற்கு பல காரணங்கள் உள. காலமும், இடமும் கைகோக்க வேண்டுமல்லவா ? பக்கத்தில் இருப்பது ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில். அவ்வாலயத்திற்கு வடபால் உளது ஆனைப்பந்தி இராமகிருஷ்ணமிசனின் விவேகானந்த மண்டபமும், மகளிர் உயர்தரக் கல்விக் கழகமும். புளியந்தீவில் மிகவும் உயரமான இடம் ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில் திடர்.

அத்திடரில் நின்று கொண்டேன். நாலா பக்கமும் எனது பார்வை படர்ந்தது. மாலை வேளை. சூரியன் மறைந்து கொண்டிருக்கும் 'மயண்டை'. வானம் செக்கச் சிவந்து காட்சியளித்தது. 1949 - ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி இது. எனது உள்ளத்தில் கால இடத் தொடர்பான ஓர் உளப்பதிவினை உண்டு பண்ணிவிட்டது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் அல்லவா ? கண்கண்ட காட்சிகள் பலப்பல. எனினும் எனது உள்ளத்தில் பதிவு பெற்றது ஒன்று உளது. சிறுவன் ஒருவன், ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலையில் ஆரம்பக் கல்வியினை முடித்துக் கொண்டு மட்டக்களப்பிலுள்ள மெதடிஸ்த கல்லூரியில் சிரேஷ்ட வகுப்பு கல்வியினை கற்று முடித்துக் கொண்டவன், ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில் திடரில் ஒரு சிறு கூட்டத்தின் மத்தியில் நின்று பேசிக் கொண்டிருந்தான். உக்கிரமான அழுத்தம் திருத்தமான காரசாரமான பேச்சு. அவன் எடுத்தாண்ட பொருள் : "சிலப்பதிகாரத்தின் சிறப்பு". இரசனைப் பேச்சு. சொற்சுவைக்க பொருள் ததும்பப் பேசினான். கேட்டிருந்தவர் - பார்த்திருந்தவர் யாவரும் பிரமித்துவிட்டனர். கோவலனது மண் தேய்த்த புகழினைப் பற்றி இனிக்க இனிக்க, சுவை பார்த்துப் பார்த்து பொருள் நிரம்பப் பேசினான். தன் புகழினை நிலைநாட்ட எண்ணியிருக்கவே மாட்டான்.

*'பாட்டு முடியும் வரை பார் அறியோம் விண்ணறியோம்*
*கூட்டுப் பெருமரங்கள் கூடி நின்றா கா அறியோம்' (பாரதி)*

பேசிக் கொண்டிருந்த இளைஞன் யார்? என்பதை மட்டுக்கட்டிவிட்டேன். அவ்விளவல் செல்லையா இராசதுரையென்பார். மனித குணங்களில் சிறந்துள்ளனவாகிய சாத்விகமும் சாந்தமும் கீழ்ப்படிவும், மரியாதையும் நிரம்பியுள்ளவர். சிந்தனைத் தோற்றம் ஒல்லி, மெலிவுற்ற உருவம்; பேச்சில் கேசரி; கணீர் என்ற தெளிவான குரல். சிங்கத்தினைப் போல சொற்செட்டில் மன்னன். செந்தமிழ்ச் செம்மல்; வீரனுங் கூட. அஞ்சா நெஞ்சம் படைத்தவர். தெட்டத் தெளிவான நீலமணி போன்ற களங்கமற்ற எண்ணங்கள்; கருத்துகளும் வெள்ளிடைமலை. வாதத்தில்

தடுமாற்றம் என்பது இம்மியளவுமில்லை, குதம்பலுமில்லை, குதர்க்கமும் இல்லை. தர்க்க ரீதியில் விவாதித்துக் கொண்டே போவார், பிசகில்லை. பாட்டறியார், பண்ணறியார், பல்கலைக் கூடங்கள் நுழைந்திலர். முழுக்க முழுக்க இயற்கையின் குழந்தை. தோற்றம், பேச்சு, எண்ணம், சிந்தனை, வசனக் கட்டுக்கோப்பு, வாசனை அனைத்தும் இயற்கையின் கொடை பிறப்பு வழி.

ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில் சந்திக்கு பக்கத்தில் ஒரு சிறு வீடும், அதில் தனது தகப்பனாருடன் வாழ்ந்து வந்தனர். பின்னொருகால் அமைச்சர் பதவி எய்தி மந்திரி மாளிகையில் அமர்ந்து கடமையாற்ற நேர்ந்துள்ளது, விந்தையிலும் விந்தையல்லவா? தன்னைத் தானே ஆக்கியமைத்துக் கொண்ட வாழ்க்கைச் சிற்பியவர். இயற்கை அன்னையின் தாக்கம் இது. தாமரை பொன் முத்து சாமரம் கோரோசனை பால் தேன் புனுகு - இவை எங்கே பிறந்தாலும் என் இயற்கையின் இணக்கத்தினால் பெறப்பட்டவை அவை. இயற்கையின் செம்மையான இணக்கங்களால் உயர்வெய்தினர் திரு. செல்லையா இராசதுரையவர்கள்.

திரு. செல்லையா இராசதுரையவர்கள் 'தான் தோன்றி' விவேகத்தினை இயற்கை அன்னையிடமிருந்து பெற்றுவிட்டனர். அவரது கொடைகள் - பாரம்பரியச் சொத்துக்கள் பலப்பல. உடன் பிறந்த உள்ளூறலான நல்லுணர்வே - Intuition - அவரது ஆக்கத்திற்குத் துணை புரிந்தது.

நாட்டவர்கள், ஏன் நகர வாசிகள்கூட, பாமரர்கள் கூட, கற்றுத் தேர்ந்தவர்கள் தானும், வடக்கிலிருந்தோ கிழக்கிலிருந்தோ வந்தவர், ஒரு தனி முடிவுக்கு வந்துவிட்டனர். வடித்தெடுத்த முடிவு அது : முடிசூட்டப் பெறாத இந்நாட்டு மன்னர்களிரொருவர் அவர்.

இதுவரை முதற் கட்டம் முற்றுப்பெற்றுவிட்டது. மேல் வருவது அரசியல் புதிர். அஃது அவருக்கு இயற்கையாகவே வந்தெய்தியுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலுமிருந்து பலப்பல பிரமுகர்கள் அரசியல்வாதிகள், அரசியல்ஞானிகள், அரசியல் ஞானிகள், சட்ட நிபுணர்கள், ஆசிரியர்கள் - இப்படியாகப் பலர் அங்கு கூடியிருந்தனர். திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம், திரு. சு. நடேச பிள்ளை, திரு. எஸ். என். வேலுப்பிள்ளை, திரு. எஸ். ஏ. செல்வ நாயகம்,திரு. வி. நல்லையா, திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், திரு. ரி. மயில்வாகனம் ஆகியோர் கூட்டத்திற்கு சமூகங் கொடுத்திருந்தனர். பலதும் பத்தும் பேசினர்; விவாதித்தனர். இவற்றினையெல்லாம் திரு. செ. இராசதுரை அனுமானித்தும் அனுபவித்துக் கொண்டுமிருந்தனர். தாக்கம் பெரிது, அவரது உளத்தினைத் தொட்டது. சிலர் அரசியல் சேற்றில் மூழ்கிவிட்டனர். சிலர் நீச்சல் மேற்கொண்டனர். வீசிப் பார்க்கவும் எத்தனித்தனர். திரு. இராசதுரையும் அரசியல் கருமங்களில் ஊக்கங் கொண்டனர்.

பின்பு ஒரு தடவை மட்டக்களப்பு விலக்காசிம் மண்டபத்தில் மிகப் பெரிய கூட்டமொன்று கூடிற்று. அரசியல் விமர்சனம் செய்யப்பெற்றது. "To be or not to be; that's the question." "ஆவதா அழிவதா?" கூட்டத்தில் பலத்த அபிப்பிராய பேதங்கள் இடம் பெற்றன. தெரிந்தோ தெரியாமலோ திரு. செ. இராசதுரையவர்கள் அரசியல் உதயத் தாரகையாகத் தோன்றியுள்ளனர். முடிவு பெறப்பட்டாயிற்று. அவர் அரசியலில் நுழைந்துவிட்டனர். அடுத்தடுத்து வந்த பாராளுமன்றத் தேர்தல்களிலெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அபார வெற்றியினை ஈட்டிக் கொண்டனர். பொது வாக்காளரின் ஆதரவினைப் பெற்றிருந்தனர். முப்பத்திரண்டு நீண்ட வருட காலம் - ஒரு தலைமுறைக்கு விஞ்சிவிட்ட காலம் உதயமானி காலை வெள்ளிவானில் மிதந்து சென்று உயர்ந்துகொண்டே வான் முகடு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

பொதுமக்களின் நலன் கருதியும், இந்து கலாசார விருத்திக்காகவும், விபுலானந்த இசை நடனக் கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், பிரதேச அபிவிருத்தியினை மேற்கொண்டும் திரு. செ. இராசதுரை செய்துள்ள பணிகள் அளப்பரியன. அவர் சிறந்த எழுத்தாளன்; நடிகருமானார். கால இட இணக்கத்தில் மிகுந்த நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டுள்ளவர். விபுலானந்த அடிகளாரின் 'மதங்க சூளாமணி' என்னும் அரிய சேக்ஸ்பியர் நாடகங்களின் விமர்சன நூலினைப் புதுமெருகிட்டு அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். அவ்வடிகளாரது வாழ்க்கை வரலாற்று நூலினைக் கூட ஆங்கிலத்தில் வெளியிட முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். இந்நூல் தமிழர் அல்லாதார்க்கு அடிகளாரின் கல்வித்திறன், கல்வி ஒழுங்கு, கவித்துவம் இலக்கிய விமர்சன ஆற்றல், சமூகத் தொண்டு ஆகியவற்றினை எடுத்தாண்டுள்ளதாய் அமையப் பெற்றுள்ளது. வித்துவான் பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்களின் மட்டக்களப்பு மாநிலத்துள்ள இந்து ஆலயங்களினதும் திருத்தலங்களினதும் வரலாற்று நூலொன்றினையும் வெளியிட்டுள்ளனர். சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் `studies and translations' என்னும் விமர்சன வியாசங்களை புதுக்கிப் பதிப்பித்துள்ளனர். இத்தகைய மண்தேய்த்த புகழ் அனைத்தினையும் ஈட்டிக் கொள்வதற்கு மூலகாரண மூர்த்தியாயிருந்து வருவதும், தோன்றாத் துணையாயிருப்பதும் ஆனைப்பந்தியான் என மாண்புமிக்க செல்லையா இராசதுரை மனமாரக் கூறுவதுண்டு.


எனவே ஆனைப்பந்தியான் துணை!

One great thing that may be said of Hon. C.Rajadurai is this: He has never been said to have been, may even so much as rumoured to have been carried away by power. He was born humble. He grew up humble. He lived a humble life. He persists in being humble. Humility is the motivating trait and trend in his character. It has served him all his life, and continues to do so. It has vaulted him to great heights. It has helped make him a man for all that. Amazing! Isn't it?

'Our little systems have their day
They have their day and cease to be
They are but broken lights of thee
Thou, O lord, art more than they.'
(Tennyson)

தன்னை அடக்கப் பழகிக்கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான். அத்தகையவனே உலகில் நன்றாக வாழத் தகுதியுள்ளவன்.

– விவேகானந்தர்




தமிழ் நாட்டு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு. அப்துல் சமத், M.P. அவர்களுடன்



திருமதி வைஜெயந்தி மாலா, M.P. அவர்களுடன்



மதுரை 5—ஆவது உலகத் தமிழ் மாநாட்டில் – கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு குண்டுராவ் உரையாற்றுகிறார்



முன்னாள் நிதி அமைச்சர் சி. சுப்ரமண்யம் அவர்களுடன்



முன்னாள் அமைச்சர் திரு. ஆர்.எம். வீரப்பன் அவர்களுடன்



மலேசிய மன்னர் அவர்களுடன்



அட்லாண்டிக் சமுத்திரத்தில் உள்ள தீவு ட்ரினிடாட் ருபாக்கோ குடும்பத்தினருடன்




மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுடன் இராசதுரை மகள் ரவீந்திரா தேவியும், கணவரும்



இராஜதுரை அவர்கள் குடும்பத்துடன் – முன்னாள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். குடும்பத்தினருடன்



திரு. தமிழ்வாணன், திரு. பகீரதன் அவர்களுடன்



முத்தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதன் அவர்களுடன்




வாஹினி அதிபர் திரு. நாகிரெட்டி, ஜெமினி அதிபர் திரு. எஸ்.எஸ். வாசன், தெ.இ. திரைப்பட அதிபர் திரு. ஏ.எல். சீனிவாசன், ஏ.வி.எம். அதிபர் திரு. மெய்யப்பச் செட்டியார் அவர்களுடன்



சினிமா அதிபர் திரு. ஏ.எல். சீனிவாசன் அவர்களுடன்



நடிகர் திரு. ஜெமினி கணேசன் அவர்கள்
திரு. ராஜதுரை அவர்களுக்கு மாலை அணிவித்தல்



நடிகர் திரு. முத்துராமன் மற்றும் வி.ஜி.பி. சகோதரர்கள்
திரு. வி.ஜி. பன்னீர் தாஸ், திரு. வி.ஜி. சந்தோஷம் அவர்களுடன்

# எங்கள் குடும்ப நண்பர்

## டாக்டர் வி.ஜி. சந்தோசம்

இலங்கை என்று நினைத்தால் கண்முன்னே சிரித்த முகத்துடன் காட்சி தருபவர் சொல்லின் செல்வர் திரு. செ. இராஜதுரை. இருபது ஆண்டுகளுக்கு மேலாக அவரை நான் அறிவேன். என் அண்ணன் திரு. பன்னீர்தாஸ், என் தம்பி, என் அம்மா மற்றும் எங்கள் குடும்பம் அறியும். எங்கள் குடும்பம் முழுவதற்கும் அனைவருக்கும் தெரிந்தவர். எங்கள் குடும்ப நண்பர். அரசியலில் எத்தனை பெரிய பதவிகளில் அவர் இருந்திருக்கின்றார். ஆனால் அப்பதவிகளினால் நிலை தடுமாறிப் போகாத பண்புள்ளவர் திரு. இராஜதுரை. இல்லையென்றால் அவருடைய தேர்தல் தொகுதியான மட்டக்களப்பில் போட்டியிட்ட எல்லாத் தேர்தல் களிலும் வெற்றி பெற்றிருப்பாரா? மட்டக்களப்பு மாநகர சபையின் முதல் மேயராகயிருப்பாரா?

ஒரே தொகுதியில் முப்பத்து மூன்று ஆண்டுகள் ஒவ்வொரு தேர்தல்களிலும் வெல்வது சாதாரணமானதல்ல.

1982-ஆம் ஆண்டு இலங்கையில் அவர் நடத்திய அகில உலக இந்து மாநாட்டில் நானும், என் அண்ணாச்சியும் கலந்துகொண்டோம். இந்த மனிதரா இப் பெரும் மாநாட்டை நடத்துகிறார் என்று வியந்துபோனோம். விருந்தினர் சாப்பாடு - தங்குமிடம் - பிரயாண வசதி இப்படி அனைத்திலுமே அவரது ஈடுபாடு இருந்தது.

விருந்தினாகளை உபசரிப்பதில் அவரும் - அவர் மனைவியும் காட்டும் கரிசனையை எப்படிச் சொல்வது!

தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள், சமயப் பெரியார்கள், பத்திரிகை ஆசிரியர்கள், கலைஞர் பெருமக்கள் என அனைவருக்கும் நன்கு அறிமுகமானவர்.

பல்லாண்டு காலம் அவர் வாழ்ந்து
தமிழ் மொழிக்கும், தமிழ்ப் பெருமக்களுக்கும்
பணிபுரிய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்!

# "சேவை போற்றும் செம்மல்"

க. ஏகாம்பரம் -
தலைவர் - "இறைபணி மன்றம்" - தாம்பரம்

ஸ்ரீ லங்கா - தமிழ் பண்பாட்டு, கலாசார, பிரதேச அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்கள் ஓர் அபூர்வமான மனிதர்!

அவருடன் நெருங்கிப் பழக வாய்ப்புப் பெற்றதனால்தான் நான் உண்மையான "தூய அன்பு" என்பது எவ்வளவு உயர்ந்தது! விலை மதிக்க முடியாதது! என்பதனை அனுபவ பூர்வமாக அறிந்து கொள்ள முடிந்தது!

உயர்ந்த சிந்தனைகளும் - உத்தம நற்குண நல்லியல்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற ஒப்புயர்வற்ற மாமனிதர் திருமிகு. செல்லையா இராசதுரை அவர்கள்! ஆழ்ந்த கல்வியும் - உயர்ந்த பதவியும், அறிவார்ந்த புலமையும் ஒருங்கே அமையப் பெற்றிருந்தும் மிகவும் அடக்கத்துடனும், அமைதியுடனும் காட்சியளிப்பவர்! தோற்றத்தில் எளிமையும்- வாக்கில் இனிமையும் "கல்வியின் சிறப்பே பணிவிலும் அடக்கத்திலும்தான் உள்ளது!" என்ற ஆன்றோர் பகன்ற மூதுரையை மெய்பிக்கும் உயர் பண்பாளர் திரு. செல்லையா இராசதுரை அவர்கள்!

சமீபத்தில் மூவர் பாடல் பெற்ற திருத்தலமாகியதும், புராதன வரலாற்றுச் சிறப்பும் பெற்றதும் தாம்பரத்தை அடுத்துள்ளதுமாகிய "மாடம்பாக்கம்" என்ற "மாடையம்பதி" திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ள அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலில் "ஸ்ரீ மஹாருத்ரயக்ஞம்" என்ற அரிய பெரிய வேள்வியைப் பதினொரு நாட்கள் மிகச் சிறந்த முறையில் அனைவரும் பாராட்டும் வண்ணம் நடத்தி வைத்தார்!

அந்த வேள்வி தொடங்கப் பெற்ற நன்னாளிலிருந்து, நிறைவு நாள்வரை நாள் தவறாது குடும்பத்தினருடன் வருகைதந்து, அடியார்களொடு அடியாராய் கூட்டத்தில் கலந்து அமர்ந்திருப்பார்! வேள்வியை நடத்தவிட தாராளமாக சன்மானம் வழங்குவார்!

பண்டைக்காலங்களில் புகழ்பெற்ற அரசர்கள், வள்ளல்கள் இவ்வாறு செய்தார்கள்! என்று சரித்திர நூல்கள் மூலம் அறிந்திருக்கிறோம்!

ஆனால் இன்று நம்வாழ்நாளில் மாண்புமிகு - செல்லையா இராசதுரை என்ற மாமனிதர் அவ்வாறு செய்வதைக் கண்கூடாகக் கண்டு மனம் மகிழ்கின்றோம்!

இப்போது என் நினைவிற்கு வருவது குறிப்பிட வேண்டிய முக்கிய நிகழ்ச்சி 1982 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற அகில உலக இந்து மகாநாட்டு நிகழ்ச்சிகளாகும்.

அம் மகாநாட்டின் ஆரம்ப விழா நிகழ்ச்சியினைக் கண்டபோதே இதுநாள் வரையில் என்றும், எங்கும், எவரும் செய்திராத அரியதோர் நிகழ்ச்சியினைக் கண்டு ஆச்சரியமும், ஆனந்தமும் கொண்டேன்!

22-04-1982 அன்று நிகழ்ந்த "சாதுக்கள் தரிசனப் பெருவிழா" நிகழ்ச்சியைக் கண்டபோது, அதன் சிறப்பினை விரிவாக விபரமாக எடுத்துக்கூற எனக்குத் "தகுதி"யில்லாததுடன், அந்த மகத்தான நிகழ்ச்சி யின் மாண்பினை விளக்கி எழுத இடமும் காலமும் இடந்தராத காரணத்தால், ஒரு சிலவற்றை மட்டுமே தெரிவிக்கத் தவறினால் என் கடமை, மற்றும் நன்றியுணர்ச்சியினையும் மறந்தவன் ஆவேன்!

உலகின் பல பாகங்களிலுமிருந்து அங்கு விஜயம் செய்திருந்த மகான்கள் மஹநீயர்கள், ஞானியர்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், யோகியர்கள், தபோதனர்கள், சித்தபுருஷர்கள் முதலியவர்களையெல்லாம் ஒன்றுகூட்டி அனைவர்களையும் ஒரே மேடையில் பக்தர்களும், பல நாடுகளைச் சேர்ந்த பேரறிஞர் பெருமக்களும் மற்றும் திரளான பொதுமக்களும், பார்வையாளர்களும், பல்லாயிரக் கணக்கில் ஒருங்கு கூடியிருந்த அந்த "சாதுக்கள் தரிசனம்!" என்ற அரியதோர் அருட்பெருவிழா நிகழ்ந்த ஞானமேடை அரங்கம் காண்போரின் கண்களுக்குக் குளிர்ச்சியாகவும் உள்ளங்கவரும் உயரிய வகையில் அமைந்திருந்த இந்த "அரங்கமேடை"யில் சித்தர்களும், மெய்ஞானியர்கள், மடாதிபதிகள், சான்றோர்கள், ஆன்றோர்கள் ஆகிய அனைவரையும் ஒரே மேடையில் காணும் பெருவாய்ப்பு நம் வாழ்நாளில் பெறுதற்கரிய பெரும் "பாக்கியம்" ஆகும்! என்றாலும் அவர்களில் எவரும் என் உள்ளத்தைத் தொடவில்லை!

என் மனத்தின் அடித்தளத்தில் - நன்றாக ஆழப் பதிந்து, என்றும் எப்போதும் நின்று, நிலைத்து நீடித்து நிற்கும் நிலையான தகுதி பெற்ற ஒருவர் உண்டு! என்றால் அவர் மாண்புமிகு அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை அவர்களே ஆவார்!

மணங்கமழ, அனைவரது உள்ளத்திலும் ஆழப்பதிந்து உணர்ச்சி ஊற்றெடுக்கும் வண்ணம் - இனிமையாக, சரளமாக கம்பீரமாக அம் மகான்களைக் குறித்த அறிமுகப் பாராட்டு உரையை அழகிய ரோஜாமலர்களைக் கோத்து, அதி நேர்த்தியான முறையில் அற்புதமாகத் தொடுத்த "மாலை" போலவும், "பசுமரத்தில் அடித்த ஆணி" போலவும் அந்த மேடையில் அமைச்சரவர்கள் அன்று நிகழ்த்திய சொற்பொழிவானது சாதாரண "சராசரி மனிதநிலை"யிலிருந்து ஆற்றிய சொற்பொழிவாக இல்லாமல் "அருள்சக்தியும்" வாய்ந்த அனுபூதி ஞானப் பரவசப் பெருநிலையிலிருந்து பேசிடும் மகான்களுடைய "அருள்உரை"களைப்போல் அனைவரையும் ஈர்த்தது! மகுடியின் இசை கேட்ட "நாக"த்தின் "மோனநிலை" போலவும், என்னையே மறந்து, என் நிலை மறந்து "ஆனந்த பரவச"னாகி நின்றேன்! என்றால் அது மிகையாகாது!

"எதிர்காலத்தில் அவர்தம் வாழ்க்கையில் வியக்கும் வண்ணம் மாறுதல் ஏற்பட்டு பலரும் போற்றிப் புகழும் மகானுக "அருட்சித்த"ராக விளங்கப் போகிறார்! என்பதை நான் சொல்லவில்லை! நான் நாளும் வழிபடும் முருகன் என் உள்ளத்தில் தோன்றவைத்து எழுதியதாகும்!

# கவி அரசர் பாடிய பஸ் அதிபர்

நாஞ்சில் சிவராமன்

1960இல் என் பங்களா மாடியில் படக்கம்பெனி வைத்திருந்தார் கவியரசு கவிஞர் கண்ணதாசன். அந்தக் கட்டத்தில் ஒரு நாள் மாலை நேரம், கண்ணதாசன் அவர்கள் ஒரு நண்பரோடு வந்தார்.

அவரைப் பார்க்கும்போது ஒரு நடிகருக்கேற்ற முகச்சாடையும், அறிவாற்றலும், அழகும், அவருடைய தோற்றமே பறைசாற்றியது. புது நடிகரைத் தேர்வுக்காகக் கூட்டி வந்திருக்கிறார்களோ என்று நினைத்துக் கொண்டேன்.

கவிஞர் என்னிடம் சொல்லுகிறார், "இவர்வந்து நட்பிற்கு இலக்கணமாய்த் திகழும் இனிய நண்பர். இவரது பெயர் ராஜதுரை. பலவருடங்களாக தேர்தலில் தோற்காமல் தொடர்ந்துகொண்டுவரும் ஸ்ரீலங்காவிலுள்ள தமிழ் எம்.பி. இன்றிலிருந்து, என்னைப்போல் நீங்களும் அவரும் இணைபிரியாதிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன்" என்று கவிஞர் எந்த நாளில் சொன்னாரோ, அந்த நாளிலிருந்து, இந்த நாள்வரை அணுவளவும் குறையவில்லை எங்கள் நட்பு.

இன்னும் சொல்லப்போனால் ஈருடலும் ஓருயிருமாய் இருக்கின்ற, இளங்காதலர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, அந்த உள்ளங்கள் எந்த நிலையிலிருக்குமோ, அந்த நிலையில்தான் நாங்கள் இருக்கின்றோம். இதை முற்பிறவித் தொடர்பென்றுகூடச் சொல்லலாம், இல்லாவிட்டால் கவிஞரின் வாக்குப் பலித்து விட்டதோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. ஏனென்றால் சில கவிஞர்கள் அறம் பாடினால் பலித்துவிடும். அதற்கு எடுத்துக் காட்டாக "பட்டுக்கோட்டையாரின் சாபம்" ஒன்றைச் சொல்லுகிறேன்.

திரைப்படத் துறையில் பாடலாசிரியர்களுக்குத் திருப்புமுனையாய்த் திகழ்ந்த கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், ஆரம்பத்தில் படக்கம்பெனி பலவற்றில், பாட்டுக் கோப்புடன் ஏறி இறங்கிக்கொண்டிருந்த நாட்களில், ஒரு கம்பெனியில் அடிக்கடி சென்று, பாட்டெழுத வாய்ப்புக் கேட்டுக் கொண்டிருந்தார்.

முதலாளியானவர், நாளைக்குவா நாளைக்குவாவென்று சொல்லிக் கொண்டேயிருந்தார். கவிஞருக்கோ தாங்க முடியாத கோபம். அங்குமிங்கும் கவிஞரின் கண்கள் வட்டமிட்டன, காலியான சிகரட்டுப் பாக்கெட் ஒன்று அவர் கண்களில் தென்பட்டது. அவசரமாக அதனை எடுத்துப் பிரித்தார். அதன் உள்பாகத்தில் கீழ்க் கண்டவாறு எழுதுகிறார்.

தாயால் பிறந்தேன் தமிழால் வளர்ந்தேன்
நாயே நீயார் நாளைவாவென்று சொல்வதற்கு
நாளையுனை நடுத்தெருவில் சந்திக்கிறேன் பார்!

என்றெழுதி, காவலாளியிடம் கொடுத்து, இதை ஓங்க முதலாளியிடம் கொடு, என்று சொல்லிவிட்டு, பாட்டுக்கோட்டையான பட்டுக்கோட்டை, சாபம் கொடுத்த சாமியாரைப் போல் கடும் பசியிலும், வில்லிலிருந்து விடுபட்ட அம்புபோல் வேகமாகச் சென்றுவிட்டார்.

காவலன் உள்ளே சென்று, அங்கு பாட்டெழுதிக் கொண்டிருந்த உடுமலை நாராயண கவியினிடம் சிகரெட்டு அட்டையைக் கொடுத்தான். அவர் அதைப் படித்துக்கொண்டே அவனைக் கூப்பிடப்பா, அவனைக் கூப்பிடப்பா என்று காவலாளியிடம் கத்தினார். முதலாளி எதற்கென்று கேட்டார் நாராயண கவியிடம் அவன் அறம்பாடிட்டுப் போறாம்பா என்று உடுமலைக் கவிஞர் சொல்ல, அவன் கெடக்கிறான், அறமாவது மொறமாவது! அவன் அறம்பாடி நம்மை என்ன செய்யும்? என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டார் முதலாளி.

பெரும் நட்சத்திரங்களைப் போட்டுப் படமெடுத்தும் ஒரு வாரம்கூட ஓட வில்லை அந்தப் படம். அந்தப் பணக்கார முதலாளி, லுங்கியும் சட்டையுமாய் தெருவில் நடப்பதை நானே பார்த்திருக்கிறேன்.

இதன்படி பார்த்தால், கவிஞர் கண்ணதாசன் அவர்கள், இணை பிரியாதிருங்கள் என்று வாழ்த்துக் கூறியது நிலைத்துவிட்டதென்றே நினைக்கிறேன்.

அவர் இலங்கையில் வாழ்ந்தாலும் ஆண்டுக்கு மூன்று நான்கு தடவை இந்தியா வராமலிருக்கமாட்டார். நமது இந்தியத் தலைவர்கள் அதாவது திரு. ஜவஹர்லால் நேரு, திருமதி இந்திராகாந்தி, மூதறிஞர் ராஜாஜி, திரு. கிருபளானி, திரு. காமராஜர்,

திரு. அறிஞர் அண்ணாதுரை, திரு. கருணாநிதி, திரு. எம்.ஜி.ஆர்., திரு. சிவாஜிகணேசன் இன்னும் அனேகம் பேர் பழக்கப்பட்டவர்கள்.

சென்னை நியூ உட்லண்ஸ் ஹோட்டல் அவரது தாய்வீடு மாதிரி. விமான நிலையம் வந்திறங்கியதும் முதலில் எனக்கு போன் செய்துவிட்டுத்தான் ஹோட்டலுக்குச் செல்வார். அந்த அளவுக்கு எங்கள் நட்புறவு கெட்டியானது.

இருபத்தி ஐந்தாண்டு காலம் மக்களின் ஏகோபித்த வாக்குகளைப் பெற்று, M.P. யாகவும் மட்டக்களப்பு மேயராகவும் பதவியேற்று, அந்த மேயர் பதவியை இன்னொருவருக்குக் கொடுத்துவிட்டு, M.P.யாகத் தொடர்ந்து செயலாற்றி, மக்களின் நன்மதிப்பைப் பெற்று, பிறகு இந்து சமய கலாச்சாரத் துறையில் பதவி ஏற்று, தான் ஏற்றுக்கொண்ட அமைச்சின் மூலமாக, 1982-இல் "உலக இந்து மாநாட்டை" வெகு சிறப்பாக 5 நாட்கள் நடத்தி, உலகளாவிய இந்துப் பெரியார்களின் ஆசியையும் பெற்றார்.

தனது குறிக்கோள்களில் ஒன்றாகிய கோவில்களில் நடத்தும் உயிர்ப் பலியை நிறுத்தச் சட்டமும் கொண்டுவந்து நிறைவேற்றினார்.

இந்தத் தலைமுறையில் இன்னொரு உலகச் சாதனையையும் நிகழ்த்தியுள்ளார். அதாவது அஸ்வமேத யாகம் என்ற ஒன்றை புராண காலத்தில் நடத்தப்பட்டதாகப் படித்திருக்கிறோம்; கேள்விப் பட்டிருக்கிறோம். அதை நம் தலைமுறையினரோ, முந்திய தலைமுறையினரோ நடத்தியதாக நாம் கேட்டறிந்ததில்லை.

அந்த அஸ்வமேத யாகத்தை, காஞ்சிப் பெரியவர், மற்றுமுள்ள பெரியோர்களின், ஆசியோடும், ஊக்கத்துடனும், நாற்பத்தி எட்டு நாட்கள் நடத்தி, குதிரையைப் பலியிடாமலேயே, உலகச் சாதனையைப் படைத்து, புராணகால ராஜாக்களில் ஒருவராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார் என் நண்பர்.

இப்படியொரு அதிசய அமைச்சரை, ராஜாக்களுக்கெல்லாம் துரையாக விளங்கும், "ராஜதுரையை" எனக்கு அறிமுகப்படுத்திய "கவிஞர் பெருமானை" நான் எக்காலத்திலும் மறக்க முடியாது. திரு. ராஜதுரை அவர்களுடைய அறிவாற்றலையும் குண நலன்களையும், சாதனைகளையும் விரிவாகச் சொல்ல வேண்டுமானால் ஆயிரக்கணக்கான பக்கங்களில் எழுத வேண்டும். உலகெங்கும் அவரது சாதனைகளைப் பரப்ப வேண்டும். சுருங்கச் சொல்லின் மறுபிறவி, என்ற ஒன்று இருக்குமானால், அவரது நட்பு எனக்குக் கிடைக்கவேண்டும்.


# "வாழ்த்துவோம் ஒன்றுகூடி"

ஏ.பி.வி. கோமகன்

ஆன்மீக தொண்டு செய்யும்
அறவழி யாளர் அன்பர்
தேன்மொழித் தமிழின் சொல்லின்
செல்வராம் எமது அமைச்சர்
ஏனென்று கேளாது வழங்கும்
எழிலான வள்ள்ல் செம்மல்
வான்புகழ் கொண்டு வாழ
வாழ்த்துவோம் ஒன்றுகூடி

நற்றமிழ், சமயம் வளர்த்து
நனிதொண்டு செய்யும் நல்லோர்
உற்றதோர் உயர்வு பெறவே
உதவிகள் நல்கி பாராட்டி
கற்றவர் போற்றும் கலைஞர்
கவினுறு சொல்லின் செல்வர்
நற்றமிழ் போல நீடு
நானிலம் வாழ்க வாழ்க

அண்ணா என்றுன்னை அழைத்து
அரும்பணி செய்வோர் அனைவர்
எந்நாளும் உந்தன் வழியே
எழில்நடை போடுவர் இளைஞர்
எண்ணற்ற நண்பர் ஆமாம்
ஏற்றுவர் உந்தன் நாமம்
கண்ணுற்ற மணியைப்போல
காத்தருளும் கடவுள் அருளே.



கொஞ்ச நாளைக்கு எளிய உணவைச் சாப்பிட்டுப் பாருங்கள். உங்கள் உடலும் உள்ளமும் வழிக்கு வந்துவிடும். உங்கள் நாக்கும் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டுப்பட்டுவிடும். அதைப்போல அளவோடு பேசவும் கற்றுக் கொள்ளுங்கள்.

– ஸ்ரீ சத்திய சாயிபாபா

# "செயற்கரிய செய்யும் செம்மல்"

வல்லக்கோட்டை முருகனடிமை
ரங்கநாதன்

எனது அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய மாண்புமிகு அமைச்சர் செல்லையா இராஜதுரை அவர்கள், எனக்கு முதன் முதலாக அமைச்சராக அறிமுகமானார். இன்று ஒரு மாபெரும் அருளாளராக ஒரு ஞானியாக திகழ்கிறார். அவரிடம் குடிகொண்டுள்ள இறையருளை நான் அறிந்து மிகவும் மகிழ்வுறுகிறேன். "வாழ்வாங்கு வாழ்ந்தால் வையத்துள் வைக்கப்படுவர் மாந்தர்" என்ற வாக்கிற்கிணங்க வாழ்ந்து இன்று புவியில் வாழும் மாபெரும் அருளாளர்களில் ஒருவராக திகழ்கின்றார்.

அவரை அமைச்சராக கண்டபொழுதே அவரிடம் அமைந்திருந்த அன்பு, அடக்கம், பண்பு, எளிமை, தயாளகுணம், நல்ஒழுக்கங்கள் என்னை மட்டுமன்றி அவருடன் பழகிய யாவரையும் கவர்ந்திருந்ததைக் கண்டேன். அன்றும், இன்றும் இலங்கை மக்களிடையேயும், தமிழக மக்களிடத்திலும் நன்மதிப்புடன் வாழும் ஒரு தமிழறிஞர் இராசதுரை ஆவார். அவருடைய தமிழ் எழுத்தாற்றல், சொல்லாற்றல் போற்றுதற்குரியது, பாராட்டுதற்குரியது. இலங்கையில் ஓர் "அண்ணாவாக" திகழ்பவர்.

அவரிடம் உள்ள துணிவு ஆற்றல்திறன, அயராத உழைபபு அவருககு ஆணடவன் அளித்த பொக்கிஷங்கள். இவ்வாறு ஆண்டவன் அளித்த அருளைக்கொண்டு வாழ்க்கையில் உயர்ந்து நின்ற அவர், மேலும் அரும்பாடுபட்டு இறைவன் அருளை முழுமையாக பெற்று வாழும் தவஞானிகளில் ஒருவராக வாழுகின்றார்.

அவர் வாழ்க்கையில் சாதித்தவை பல. அவற்றில் எழுத்தில் பொறிக்கத் தக்கவையாக அமைந்துவிட்ட செயல்களில் ஒன்று தனது இளம் வயதிலேயே பாராளுமன்ற உறுப்பினராகி தொடர்ந்து ஒரே தொகுதியில் 32 ஆண்டுகளாக பாராளுமன்ற உறுப்பினராக இருப்பது பெரிய காரியம்.

அடுத்து அவருடைய மாபெரும் சாதனை உலகமே வியக்கும் வண்ணம் – இந்து நாடாகிய இந்தியாவிலேயே இதுவரை நடைபெறாத ஒரு காரியத்தை புத்த நாட்டிலே நடத்திக் காட்டினார். அதுதான் அவர் 1982–ஆம் ஆண்டு இலங்கையில் நடத்திய அகில உலக இந்து மாநாடாகும். இதை முதலில் எதிர்த்தவர்களெல்லாம் வரவேற்று பாராட்டிய ஒரு மாபெரும் வெற்றி நிகழ்ச்சியாகும். இவ் வெற்றிக்கு காரணமாக அமைந்திருந்தது அவர் பெற்றிருந்த இறை அருளேயாகும்.

பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய இன்னும் ஒரு விஷயம், எள்அளவிலும் அச்சமின்றி இன்றும் வாழும் மன்னர்கூட நினைக்க இயலாத, முற்காலத்தில் மன்னர்கள் செய்த அஸ்வமேத யாகத்தை நாட்டின் நலன் கருதி அமைதிகாண விழைந்து மிக துணிவுடனும் ஆற்றலுடனும் மாபெரும் சிறப்புடன் நிகழ்த்தி, இலங்கை மக்களின் அன்பிற்கு பாத்திரமானார். பல அருளாளர்களும் ஞானிகளும் இச்செயலைக் கண்டு வியந்தனர், பாராட்டினர், அருளாசி வழங்கினர். அஸ்வமேதயாகம் நடைபெற்ற 48 நாட்களும் அவர் பூண்ட விரதத்தை – அவர் அந்த யாகத்தை புனிதமாக நடைபெற, எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் கண்டு யாகத்தை நடத்திவைத்த குருமார்கள் அனைவரும் வியந்தனர்: அன்று முதல் அவர் ஒரு ஞானியின் நிலையை பெற்று திகழ்கின்றார்.

இத்தகைய ஆற்றல்களைப் பெற்று ஆற்றற்கரிய காரியங்களை செய்திட்ட செயல் வீரராகத் திகழும் மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்கட்கு இப்படி ஒரு பாராட்டு விழா நடத்துவது சாலச்சிறந்த செயலே. உலகெங்கிலும் வணங்கிபோற்றும் மகான்களாகிய சங்கராச்சாரியார், புட்டபர்த்தி சாய்பாபா போன்ற ஆன்மிக வள்ளல்களின் ஆசிகளை பரிபூரணமாகப் பெற்றிருக்கும் இவருக்கு நான் வாழ்த்து கூறும் தகுதியை பெற்றில்லாவிடினும், அவருடைய சீரிய வாழ்க்கையை கண்டு பெருமிதப்படுபவன் என்ற வகையில் அவருடைய சேவையும் ஆற்றலும் நாட்டிற்கும் மக்களுக்கும் மேலும் பயன்படவேண்டும் என்ற ஆவலினால் அவருக்கு மேலும் இறைவன் நல்ஆசி வழங்கி நீண்ட ஆயுளையும் நல் ஆரோக்கியத்தையும் அளித்து மேன் மேலும் இத்தகைய போற்றுதற்கு உரிய காரியங்களை செய்திட அருள்பரிபாலிக்க வேண்டுமென்றும், தன் நாட்டில் அமைதி நிலவவேண்டும், மக்கள் சுபிட்சமாக வாழவேண்டும் என்று வேண்டி அவர் செய்த தியாகங்கள் அவசியம் பயன்தரும் நாள் வெகுதூரம் இல்லை என்று கூறி எல்லாம் வல்ல வல்லக்கோட்டை முருகனை வணங்கி பிரார்த்திக்கின்றேன்.

**ஒருவரிடத்தும் பொறாமை கொள்ளாதீர்கள். நன்மை செய்வோர் ஒவ்வொருவருக்கும் கைகொடுக்கத் தயர்ராயிருங்கள்.**

– *விவேகானந்தர்*

# "பழகுதற்கினியர்"

-தமிழ்ப்பித்தன்-

சொல்லின் செல்வர், சொல்லேருழவர், தம்பியரின் அண்ணன், வடக்கு, கிழக்கு, தமிழர் – இஸ்லாமியர் என்ற வேறுபாடின்றி அனைவராலும் நேசிக்கப்படும் தலைவர் அமைச்சர் இராசதுரை அவர்கள் என்பதை அகிலம் அறியும்.

"தமிழினம் தகுந்த தலைவனின்றி, தடுமாறுற்று இருந்த வேளையில் இலகு பாரதிப் புலவன் தோன்றினான்" எனப் பாவேந்தர் கூறிய தமிழினத்துக்குக் கிடைத்த பெரும்பேறு இவர்.

இவர் மேலை நாட்டிலே பிறந்திருந்தால் இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றிருப்பார். தமிழகத்திலே பிறந்திருந்தால் அறிஞர் அண்ணாவுக்கு அடுத்த இடத்தை அலங்கரித்திருப்பார். இலங்கை மண்ணில் பிறந்த காரணத்தால் அவர் புகழ் குடத்தினுள்ளிட்ட விளக்குப் போல விளங்குகின்றது.

சிறுகதை எழுத்தாளராக, கட்டுரை ஆசிரியராக, பத்திரிகையாளராக, இதயங்கவர் பேச்சாளராக, இனிய பண்பாளராக, முதிர்ந்த அரசியல்வாதியாக, அருள்நிறை பக்தராக விளங்கும் இவரிடம் குறிப்பாக அவதானிக்கக் கூடியவை இரண்டு. ஒன்று, பழகியவர்களை என்றுமே மறக்காத பண்பு மற்றது, பகைவர்களைக் கூடப் பாசத்துடன் அணைக்கும் அன்பு

தமிழகத்திலே 'மணிக்கொடி சகாப்தம்' என் ஒன்றிருந்தது பற்றிப் பேசும் நம்மவர்கள் இலங்கையிலே 'சுதந்திர சகாப்தம்' என ஒன்று இருந்ததை ஏனோ மறந்துவிடுகிறார்கள். அ.செ.முருகானந்தம், அ.ந. கந்தசாமி, செ.கணேசலிங்கன், சில்லையூர் செல்வராசன், என்.கே. இரகுநாதன் ஆகிய இன்ன பிற பல எழுத்தாளர்களை அறிந்தவர்கள் 'சுதந்திரன் சகாப்தம்' பற்றியும் அறிந்திருப்பார்கள் என்பது திண்ணம். மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா கூட புரட்சிப்பித்தன்

என்ற புனைப்பெயருடன் 'சுதந்திரன்' மூலமாகவே எழுத்துலகில் அடியெடுத்து வைத்தார் என்பது இன்று பலருக்குத் தெரியாதிருக்கலாம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதுகளில் 'சுதந்திரன்' ஆற்றிய இலக்கியப் பணியையும், அதற்குக் காரணகர்த்தாக்களாக இருந்த திருவாளர்கள் எஸ்.டி.சிவநாயகம், செ.இராசதுரை ஆகிய இருவரையும் தமிழ் இலக்கிய உலகம் என்றுமே மறக்க இயலாது.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர், அமைச்சர் அவர்கள் 'சுதந்திரன்' ஆசிரிய பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில் மாணவனாக இருந்த எனக்கும் எனது எழுத்துக்கும் அவர் தந்த அன்பான அரவணைப்பும், ஆதரவும், ஆலோசனையும், ஆற்றுப்படுத்தலும் தான் என்னை ஓரளவுக்கு ஒரு எழுத்தாளனாகவும் பத்திரிகையாளனாகவும் உருவாக்கியது என்பதை இப் பொழுது குறிப்பிடத் தவறின் நன்றி மறந்தவனாவேன்.

'யாழ்ப்பாணத்தான் – மட்டக்களப்பான்' எனும் குறுகிய மனப்பான்மையை முறியடித்து, இலங்கையில் எங்கு பிறப்பினும் அவன் தமிழன்தான் எனும் நிலையை உருவாக்கிய இவர், எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும், அரசியல்வாதியாகவும், அமைச்சராகவும் இருந்து தமிழுக்கும் தமிழினத்துக்கும் ஆற்றிய, ஆற்றும் பணிகள் அளப்பில.

பிறர் அறியா வண்ணம் இவர் ஆற்றிய, ஆற்றும் பணிகளை இவருடன் மிகமிக நெருக்கமாகப் பழகும் ஒரு சிலரே அறிவர். தான் ஆற்றும் பணியை நாடளாவப் பிரபல்யப்படுத்தும் வழக்கம் இவருக்கு இல்லாத காரணத்தால், இவருடைய எத்தனையோ செயற்பாடுகளைத் தமிழ்கூறும் நல்லுலகம் அறியாதிருக்கின்றது. அவற்றை அறியவரும் நேரத்தில், இவரையா இன்றளவும் சந்தேகக் கண் கொண்டு பார்த்தோம் எனத் தமிழினம் நாணித் தலைகுனியும் என்பதில் சந்தேகமில்லை.

பழகுவதற்கு இனியவராகவும், பண்பிலே இமயமாகவும், பாசத்திலே தந்தையாகவும் விளங்கும் அமைச்சரது தமிழ்ப் பணியும் தெய்வப் பணியும் என்றென்றும் தொடரட்டும் என வாழ்த்துவோமாக.

"காரிருளால் சூரியன் தான் மறைவதுண்டோ?
கறைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ?
பேரெதிர்ப்பால் உண்மை தான் இன்மையாமோ?
பிறர் சூழ்ச்சி செந்தமிழை அழிப்பதுண்டோ?"

*- தமிழ்ப்பித்தன்.*



# "இனிய சில நினைவுகள்"

பேராதனை ஹர்புன்னிஸா
(ஆசிரியை)

இலங்கையின் தமிழ் எழுத்தாளர்களின் வரலாற்றில் நாற்பது ஆண்டுகளுக்கு முந்திய காலத்தின் சில நினைவுகள் எனது மனக்கண் முன் காட்சி தருகின்றன. இன்றைய எழுத்தாளர்களின் புதுமையான படைப்பாற்றல்களுக்கு அன்றைய எழுத்தாளர்கள் வழிகாட்டிகளாய் அமைந்தனர். அன்று தமிழகத்திலும் இலங்கையிலும் தமிழ் இலக்கியத் துறையிலே புதியதொரு திருப்பம் உதயமாகியது. 'திருப்பம்' என்று கூறுவதைவிட ''தமிழ் இலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம்'' என்று குறிப்பிடலாம். தமிழகத்தின் தி.மு.க.வினரின் திராவிட நாட்டுக் கோரிக்கை, பிரச்சாரரீதியிலும் இலக்கியரீதியிலும் வலுப்பெற்றிருந்தது. அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி நெடுஞ்செழியன் போன்ற பேரறிஞர்கள் இலக்கியத்தை அடியொற்றி இயல் இசை நாடகத்தின் மூலம் பொருளியலிலும் ஆட்சியலிலும் வளங்காண முற்பட்டனர். சமுதாயத்தை மையமாகக் கொண்டு மொழிக்கு முக்கியத்துவம் அளித்தனர்; தமிழ்மொழி பேசும் பல்வேறு பிரிவினரிடையேயும் ஒற்றுமையையும் நல்லெண்ணத்தையும் உருவாக்க முற்பட்டனர்; அதற்கேற்ப மொழிகளின் நடையில் மாற்றத்தை அறிமுகம் செய்தனர், கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம் ஆகிய சகல துறைகளிலும் புதுமையைப் புகுத்தினர்; மாற்றத்துக்கமைவாக ஏராளமான பத்திரிகைகள் - நூல்கள் சஞ்சிகைகள் என்பவற்றையும் பிரசுரித்தனர். மேடைப் பேச்சு நாடகம் என்பனவற்றாலும் பிரசாரத்தை வலுவடையச் செய்தனர்.

தமிழ் நாட்டின் அத்தகைய இலக்கியச் செல்வாக்கு சுதந்திர இலங்கையிலும் படரத் தொடங்கியது. திராவிடப் பாணியில் எழுதவும் பேசவும் பலர் முற்பட்டனர். அதே நேரத்தில் தமிழ் நாட்டைவிட எவ்விதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்ற உண்மையைப் புலப்படுத்தும்மளவுக்கு நம் மத்தியிலும் பல வாலிபர்கள் உருவாகினர். இக்காலப் பகுதியிலேதான் அமைச்சர் இராசதுரை எழுத்தாளனாகவும், பேச்சாளனாகவும், ஏன், நடிகனாகவும் கூட தமது பணியை மேற்கொண்டார்.

''மொழி, அம்மொழியைப் பேசும் எல்லோருக்கும் சொந்தமானது. மதத்தால் வேறுபட்டாலும் மொழியால் ஒன்றுபடுவோம். மொழியை அடியொட்டிய இலங்கியங்களின் மூலமாக சுதந்திர இலங்கையின் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைக் காப்போம்; பொருளாதாரத்தை வளர்ப்போம். அரசியல் உணர்வைத் தட்டி எழுப்புவோம்,'' என்ற சமுதாய ஒற்றுமைக் குரலை - சுதந்திர கீதத்தை மீன்பாடும் தேன் நாட்டிலிருந்து எழுப்பத் தொடங்கினார்.

வாலிபப் பருவம்; அப்போது அடிக்கடி பல மேடைகளில் திரு. இராசதுரை அவர்கள் காட்சி தருவார்; அவருக்கென்ற, ஒரு சனத்திரள் - கலை இலக்கிய நண்பர்கள் - எப்பொழுதும் அவர் கையில் புத்தகம் - சஞ்சிகை அல்லது பத்திரிகை. சமய மேடையோ, இலக்கிய மேடையோ, அரசியல் மேடையோ – அது சைவமோ-இஸ்லாமோ – கிறிஸ்தவமோ எங்கும் அவர் குரல் மக்களைத் கவரத் தவறியதில்லை. இந்த இலட்சியத்தோடுதான் அன்று ''லங்காமுரசு' முரசு கொட்டத் தொடங்கியது. இந்த லங்கா முரசு இயன்றளவு வாசகர்கள் மத்தியில் நிலைத்து நிற்க வேண்டும் எனினும் அது தொடராமை வேதனைக் குரியது. இவ்வாறே ''தமிழகம்'' என்ற அவரது பத்திரிகையும் தொடர முடியாவிட்டாலும் அதனுடன் தொடர்பான சில எழுத்தாள நண்பர்களின் இனிய நினைவுகள் இதயத்தில் நிலைக்கின்றன. மீண்டும் சுதந்திரனில் பணி புரிந்து அவரது இலக்கிய நண்பர்களுக்கு, குறிப்பாக பெண் எழுத்தாளர்களுக்கு ஊக்கமூட்டியதை மறக்க முடியவில்லை. பவானி, புதுமைப் பிரியை, பாலேஸ்வரி, முத்துலட்சுமி, ரூபராணி போன்ற அன்றைய இலக்கிய வானில் மின்னிய சில பெண் எழுத்தாளர்கள் உருவாவதற்கு வழி வகுக்கப்பட்டது. விரல் விட்டெண்ணக் கூடிய ஒரு சில முஸ்லிம் பெண்களே இக்காலத்தில் எழுத்துத் துறையில் ஈடுபட்டிருந்தனர். இன்றுபோல் பெருமளவில் எழுதும் முஸ்லீம் தமிழ் எழுத்தாளர்களும் அன்று இருக்கவில்லை. முஸ்லீம் பெண்கல்வி மிகவும்

பின்தங்கிய நிலையில் இருந்தது. பேகம் சுவைதானி, நஜீமா அப்துல்காதர், பாத்தும்மா ஹலால்தீன், லை முஹிதீன் போன்ற ஒரு சிலரே என்னுடன் சேர்ந்து எழுதிக் கொண்டிருந்தனர். எமது படைப்புக்களில் அதிகமானவை முஸ்லீம் பெண்களின் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்தன என்று முஸ்லீம் பெண்கள்எழுதுவதைச் சிலர் வியப்புடன் வரவேற்றனர். எம்மைப் பார்த்து 'சமுதாயத்தின் சாபக்கேடு' என்று கருதியவர்களும் உண்டு. முஸ்லீம் பெண்கள் கல்வி பயிலலாமா? தொழில் செய்யலாமா? மேடையேறலாமா? என்றெல்லாம் கேள்விகளை எழுப்பியவர்கள் உண்டு. இத்தகைய சூழ்நிலையில் அன்று எம் போன்றவர்களை உற்சாகமூட்டி வழி நடத்துவதில் திரு. இராசதுரை அவர்களை, நாமும் முஸ்லீம் சமுதாயமும் மறப்பதிற்கில்லை. இவர்களது தீர்க்கதரிசன யோசனையும் உற்சாகமுமே இன்றைய முஸ்லீம் பெண் சமுதாயத்தின் வளர்ச்சியாகும் என்பதில் ஐயமில்லை.

எனவே திரு. இராசதுரை அவர்களின் இலக்கிய - சமூக சேவைகளை மதிப்பீடு செய்வதற்கு முன்னர், நாற்பது ஆண்டுகளுக்கு முந்திய சமூக பொருளாதார அமைப்புகளை மதிப்பீடு செய்து பார்த்தல் அவசியம். இலக்கியத்துறையிலே மூத்த தலைமுறையினர் இளைய தலைமுறையினர் என்று பகுத்தாய்வு நடத்தப்படுகின்ற இவ்வேளையில் மூத்த தலைமுறையினர் சிலரால் சமுதாயம் அடைந்துள்ள உயர் நிலையை ஆராய்வதும் அவசியம்.

பொது மக்களின் ஊழியனாகவும் எழுத்தாளரின் நண்பனாகவும் இருந்து சமுதாயம் தளைக்கப் பாடுபட்ட திரு. இராசதுரை அவர்கள் 1950-ஆம் ஆண்டு எனது திருமணப் பரிசாகத் தந்த ''காண்டேகரின் கதைகள்'' என்ற தொகுப்பில் வரைந்துள்ள சில வரிகளே முஸ்லீம் சமுதாயத்தை நினைவுபடுத்துவதோடு - முஸ்லீம் சமுதாயத்தின்பால் அன்னார் கொண்டிருந்த நிலைப்பாட்டையும் நினைவுறுத்துகின்றது.

கற்பது கடமையென்று
காசினிக்கு பதேசித்த
பொற்புடை இஸ்லாந்தன்னை
பூண்டொளிர் முஸ்லிம் மக்கள்
அற்பமாய் அறிவிற்குன்றி
அகதியாய் வாழுகின்ற
துர்ப்பெரும் நிலையை நீக்கத்
துடித்திடும் சர்தா வாழ்க.

இத்தகைய ஒருவர் ஆட்சித்துறையில் உயர் அந்தஸ்த்தைப் பெற்றிருப் பது, தமிழ் முஸ்லிம் எழுத்தாளரின் பெரு வெற்றியென்றே கருத வேண்டும்.

# "பொறுத்தார் பூமி ஆளுகிறார்"

**ப. செல்வத்துரை**
சமாதான நீதிபதி

அறிவின் ஆழத்தைக் காட்டும் அகன்று விரிந்த நெற்றி, தூர நோக்கை உறுதி செய்யுமாறு துருதுரு என்ற அகன்ற விழிகள்.

அகத்தின் அழகைக் காட்டும் புன்னகை முகம் – பரந்த மார்பு விரிந்த உள்ளம் சான்றோரையும் மற்றோரையும் – கூப்பி வரவேற்கும் கரங்கள், அறிஞர்களையும் துறவிகளையும் சான்றோரையும் தேடிச் செல்லும் கால்கள் – செந்தமிழோடு விளையாடும் செந்தா – சிற்றானைக் குட்டியெனப் பொலிவுற்ற உடல் – அத்தனையும் தன் சொத்தாகக் கொண்டவர் – அண்ணன் அமைச்சர் இராசதுரை. ஏழை மக்களின் நண்பன் – இளையவருக்கு அண்ணன் – ஏற்றோருக்கெல்லாம் மன்னன் – எங்கள் இதயக்கனி மட்டக்களப்பின் முடிசூடா மன்னன் என்று மாக்கான் மரைக்காரரால் போற்றப்பட்டவர்; புகழப்பட்டவர்; "மக்களின் மனிதன்" என்று தமிழரசுத் தந்தை செல்வநாயகத்தினால் கணிக்கப் பட்டவர், மதிக்கப்பட்டவர்.

பார்வைக்கெளியவர் – பழக நல்லவர் – பண்பு மிக்கவர் – பழி செய்யார் பகை கொள்ளார் – நல்லவர், வல்லவர் நலிவுற்றோருக்கு நலம் பல செய்தவர் நாடியவர்க்கெல்லாம் நல்வாழ்வு தந்தவர் – நல்ல தமிழ் எழுத்தாளன் – நாடறிந்து போற்றிப் புகழும் பேச்சாளன் – நலிவுற்ற சமுதாயத்தின் விடிவெ ள்ளி – பெற்ற தாயையும் பிறந்த பொன் நாட்டையும் நற்றவ வானிலும் நனிசிறக்க காணத் துடிப்பவர்; உழைப்பவர்; தாழ்வுற்ற மட்டக்களப்பின் தரமுயர்த்த உழைக்கும் தாரகை வித்தகர் விபுலானந்தரின் பின் தமிழ் கூறும் நல்லுலகமெல்லாம் மட்டக்களப் பின் புகழ் வீசி நிற்கும் உதய சூரியன் – ஏழைகள் வாழ்வில் ஏற்றம் கண்ட ஏந்தல் பட்டி தொட்டியெங்கும் பாடசாலைகள் ஏற்படுத்தி கல்விக்கு மறுமலர்ச்சி ஊட்டிய மன்னன் அன்று அறியாமை இருளகற்றிய பகுத்தறிவுப்

பகலவன் – இன்று மெய்ஞானத்தின் பெருமை கூறி நிற்கும் இல்லற ஞானி – திறமையை நாடிப் போற்றும் தகுதிமிக்கவர் தகுதி மிக்கவரைத் தட்டிக் கொடுத்துப் பெருமை சேர்ப்பவர் –உறவினர்கள் உதவி பெற்றோர் – அவரால் உயர்ந்தோர் – சிலர் துரோகிகளாகி, துயர்களும் தொல்லைகளும் தந்து, வேதனையூட்டிய போதெல்லாம் – துவளாது, துயர் கொள்ளாது துளியும் அஞ்சாது, சோதனைகள் அனைத்தையும் சாதனையாக்கினார். பொறுமை மிக்கவர்; பொறுத்ததால் பூமி ஆளும் அமைச்சர் ஆனவர்.

தோற்றுவித்தவர் யார், தோன்றிய காலமெது என்று தெரியாத இந்து மதத்திற்கு முதல் முதலாக உலகளாவிய மகாநாடெடுத்து, நாநிலம் புகழ் கொண்டார். நாடும் ஏடும் போற்றும் சரித்திர நாயகனானார்.

பலம் குன்றி, பரிதாப நிலையிலிருந்த பனை அபிவிருத்திச் சபையை பக்குவமாகத் தலைமை மாற்றி, சாதித் திமிருக்கோர் சாட்டை கொடுத்தார் – பலப்படுத்தினார் – பயன்படச் செய்தார் – பலர் போற்றப் பாராளுமன்றத்தில் பாராட்டைப் பெற்றார்.

உலக உத்தமர் காந்திக்கோர் சிலை – மட்டக்களப்பில் மறவன் சங்கரதாஸுக்கோர் சிலை – நாடறிந்த தலைவருக்கோர் கலாச்சார மண்டபம், நாநிலம் போற்றும் உலகில் முதற் தமிழ் பேராசான் – முத்தமிழ் வித்தகர் விபுலானந்தருக்கோர் இசை நடனக் கல்லூரி – ஆக தன் நினைவில் நிறைந்தவர்களுக்கு எல்லாம் நினைவாலயங்கள் நிறுவினார் – பலர் நினைவில் நிலைத்தார்.

இலங்கைத் தமிழர்களிடையே மண்டிக் கிடந்த பிரதேச, மாகாண வேறுபாட்டை தன் நாவலால் வெட்டி வீழ்த்தி ஒற்றுமை கண்ட சொல்லேர் உழவன் – செந்நாப் புலவன் – தீண்டாமையை அகற்றி, தீண்டத்தகாதோருக்கும் திருக்கோயில் கதவுகளைத் திறக்கப் போராடி வெற்றி கண்ட வேந்தன்.

மதுவின் கொடுமையை உணர்ந்து, அதை ஒழிக்க அன்றே போர்க்கொடி தூக்கிய போர்வீரன் – மிருக பலியை வேரோடு அறுக்க சட்டம் தந்தவர் – மட்டக்களப்பில் சமூக பொருளாதார அரசியல் கலை கலாச்சாரப் புரட்சிக்கு வித்திட்ட வித்தகன் – ஒரு மறுமலர்ச்சி சமுதாயத்தை ஏற்படுத்திய சமூகப் புரட்சியாளன்.

இன்று மட்டக்களப்பில் மின்னும் – கலைஞர்கள், எழுத்தாளர்கள் எல்லாம் அமைச்சர் இராசதுரையின் சகாப்தத்தின் சின்னங்கள் என்றால் மிகையாகாது.

மிக மிக சாமானிய குடும்பத்தில் பிறந்து – தன் உழைப்பாலும் உயர்ந்த நோக்காலும் உயரிய பண்பாலும் உலகத்தார் உள்ளத்தில் நிறைந்து – சொல்லின் செல்வனாய் – எழில் தமிழாளனாய் – ஏற்றம் பெற்று நாடாளும் அமைச்சராய் உயர்ந்துள்ள அண்ணன் இராசதுரை – பல்லாண்டு வாழ்ந்து – பழந் தமிழருக்கும் தமிழுக்கும் தொடர்ந்து பணிபல செய்ய வேண்டும்; என பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க அண்ணன் இராசதுரை!

வளர்க அவர் தொண்டு!

# "கண்டதும் கேட்டதும்"

மொழி வழிச் செம்மல்-நாணயக்கார.

நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டில் நான் சமர்பித்துப் பேசிய ''தமிழ் - சிங்கள ஒற்றுமை'' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை தமிழ் பேசும் மக்களுடைய அக்கறையையும் (கவனத்தையும்) பாராட்டையும் பெற்றமையால் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் இலங்கைக் கிளைப்பிரதிநிதியாக மதுரையில் நடை பெற்ற ஐந்தாவது மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்பிக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

இவ்விரு ஆராய்ச்சிக் கட்டுரைகளும் மலேசியாவில் நடைபெற்ற ஆறாவது உலக மாநாட்டில் பிரதேச அபிவிருத்தி அமைச்சரின் பிரதிநிதியாகக் கலந்து கொள்வதற்கு வழிகோலியது என்பதில் ஆச்சரியமில்லை.

மதுரை மாநாட்டில் முதல் நாள் முதல் கூட்டத்தில் இலங்கை ஐ.ஏ.ரீ.ஆர். சங்கக் கிளையின் பிரதிநிதிகளாகச் சென்ற இலங்கை யர்களுக்கு விசேட சலுகைகள் கிடைத்தன. நான் மாநாடு மண்ட பத்தில் மூன்றாவது வரிசையில் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்தேன். ஒரு பக்கத்தில் தமிழார்வம் மிக்க. மலேசியாவிலிருந்து வந்த தமிழர் ஒருவரும் மற்றப் பக்கத்தில் வேறொரு நாட்டிலிருந்து வந்த தமிழர் ஒருவரும் இருந்தார்கள். எனினும் இவர்கள் ஒருவருக் கொருவர் யார் யார் என்பதைத் தெரியாதவர்கள்.

மாண்புமிகு அமைச்சர் செல்லையா இராசதுரைக்கு மேடையில் முன் வரிசையில் தலைவர் எம்.ஜீ. இராமச்சந்திரனுக்கு அருகே ஆசனம் ஒதுக்கப்பட்டிருந்தது. இவர்கள் இருவரும் ஆத்ம நண்பர்கள். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு.அப்பாத்துரை அமிர்தலிங்கத்துக்குக்கூட மாநாட்டில் முன் வரிசையில் ஆசனம் கிடைக்கவில்லை. முதல் நாள் மாநாடு மங்கள கோஷத்துடன் ஆரம்பமானது. சொற் பொழிவுகள் ஆங்கிலத்தில் மட்டுமே நடை பெற்றன. மருந்துக்குக் கூட தமிழைக் கேட்க முடியவில்லை. சபையினரிடையே வெறுப்புணர்வு தலைகாட்டியது. என் பக்கத்தில்

உட்கார்ந்திருந்தவர் உடனே எழுந்து 'இங்கு நடைபெறுவது தமிழாராய்ச்சி மாநாடா? ஆங்கில ஆராய்ச்சி மாநாடா?' என்று உரத்த குரலில் கேட்டார். அப்போது தான் பெரியோர்களுக்கு ''ஞானம்'' பிறந்தது. உடனே மன்னிப்புக் கேட்டு தமிழில் பேச ஆரம்பித்தார்கள்.

பின்பு அமைச்சர் இராசதுரை அவர்கள் பேசத் தொடங்கினார்கள்.. அன்று அவர் சரமாரிபோல சொற்பொழிவு செய்தார். அந்தச் சொற்பொழிவைக் கேட்டு மலேசியாத் தமிழர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவர்கள் அமைச்சரின் திறமையைப் பற்றி என்னுடன் பேசிப் பெருமையடைந்தார்கள். நானும் பெருமைப்பட்டேன்.

ஆறாவது மாநாடு கோலாலம்பூரில் நடைபெற்ற போதும் அமைச்சர் இராசதுரையின் பேச்சுத்திறமை சிறப்பாகத் தெரிந்தது. வெளிநாட்டவர்கள் அவருடைய பேச்சுத் திறமையைப் பற்றி என்னோடு பேசினார்கள். அங்கே கருணாநிதி அவர்கள் அரசியல் பற்றிப் பேசினார். கூடியிருந்த பலர் திரு. கருணா நிதிக்கு அடுத்தபடியாக இன்றைய தமிழ் உலகில் பேசக்கூடிய ஆற்றலுடையவர் இலங்கைப் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் இராசதுரை என்று கூறியது என் செவியில் விழுந்தது.

எழுத்தாளராக வாழ்க்கையைத் தொடங்கிய அமைச்சர் இராசதுரை பேச்சாளராகச் சிறப்புப் பெற்றார். அவர் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியில் இருந்த போது ''சொல்லின் செல்வன்'' என்ற பட்டம் அவருக்குக் கிடைத்தது. அப்போது அமைச்சர் அவர்களை எனக்கு தெரிந்திராத போதிலும் அவர் கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நிகழ்த்திய சொற் பொழிவுகளை எல்லாம் ஒன்றுகூடத் தவறாமல் நான் கேட்டு மகிழ்ந்ததுண்டு. அவருடைய புன்சிரிப்பையும். இனிமையான பேச்சையும் கேட்பதற்குப் பலர் வருவார்கள்.

1979-ஆம் ஆண்டு அவர் அமைச்சராகப் பதவியேற்ற பின் அவருடைய சொற்பொழிவுகளைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க பல வாய்ப்புகள் அடியேனுக்குக் கிடைத்தன. எல்லா இடங்களிலும் கேட்பவர்கள் ஆனந்தமும் மகிழ்ச்சியும் அடையும்படி அவர் பேசு வார். சிங்கள பௌத்த மக்கள் மட்டுமின்றி பௌத்த குருமார்களும் அவருடைய பௌத்த சமய அறிவைப் பற்றி நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள். பௌத்தர்கள் பெருந்திரளாக. கூடியிருந்த பல கூட்டங்களில் பௌத்த சமயக் கொள்கைகளை சைவ சமயக் கொள்கைகளுடன் ஒப்பிட்டுப் பேசும் பொழுது அவற்றைக் கேட்டிருந்த சிங்கள பௌத்தர்களுடைய மகிழ்ச்சி அளவு கடந்திருந்தது. தென் மாகாணத்தில் பல பௌத்த கோவில்களில் அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்ட பலர், ''இவர் முற்பிறப்பில் சிங்கள பௌத்தர் ஒருவராகப் பிறந்திருக்க வேண்டும்'' என்று அன்போடு பலமுறை பாராட்டிப் பேசுவதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன்.

திரு.இராசதுரை அவர்கள் பௌத்தர்கள் மத்தியில் பேசும்போது பௌத்தர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை சிலப்பதிகாரம். மணிமேகலை போன்ற நூல்களினால் எடுத்துக்காட்டி விளக்குவார். அவர் எப்பொழுதும் நகைச்சுவையுடன் ஆழ்ந்த தத்துவங்களை எடுத்துரைத்து மக்களைக் கவரச் செய்வார். சமய சம்பந்தமான விழாக்களில் சிங்களவர் - தமிழர் கொண்டாடும் விழாக்களின் தொடர்புபற்றி விளக்குவார்.

எங்கள் அமைச்சர் எப்பொழுதாவது ஏனைய அரசியல் கட்சிகள் மீது வசை பாடவோ அல்லது பழிவாங்கவோ விரும்புவதில்லை. அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பணத்தைவிட தன்னுடைய ஊதியத்திலும் பொது விஷயங்களுக்குச் செலவு செய்வார்.

எப்பொழுதும் சிரித்த முகத்துடன் காணப்படும் அமைச்சர் இயன்ற அளவில்


பாரபட்சம் இல்லாமல் மற்றவர்களுக்கு உதவி செய்வார் என்பது அவர் அமைச்சராகக் கடமை செய்ய ஆரம்பித்த நாளிலிருந்து அமைச்சில் சேவை புரிந்த எனக்கு நன்றாகத் தெரியும்.


ஈஸ்வர வாதியாக மாறிய அவர் சமய வளர்ச்சிக்குச் செய்த தொண்டுகள் அளப்பரியது. இலங்கைச் சரித்திரத்தில் முதன் முறையாகச் செய்த "அசுவமேத யாகம்", அனைத்துலக இந்து மாநாடு, விபுலானந்த இசை நடனக் கல்லூரி, கதிர்காம இந்து சமய யாத்திரிகர்கள் விடுதி, யாழ்ப்பாண ஆறுமுக நாவலர் கலாசார மண்டபம் ஆகியவைகள் இவர் செய்த பாராட்டுக்குரிய அருமையான செயல்களில் சிலவாகும்.

இவரது அருமை பெருமைகள் அநேகம் அநேகம். தொடர்ந்தும் மக்கள் சேவையில் ஈடுபட்டு பெருமைகளைப் பெற்று ஆரோக்கியத்துடன் வாழ முருகப்பெருமான் அருள் பாலிப்பாராக.


**அறியாமையுடன் தன்னடக்கமில்லாமல் ஒருவன் நூறு ஆண்டுகள் வாழ்வதைவிட, அறிவுடன் தன்நினைவோடு ஒரேநாள் வாழும் வாழ்க்கையே மேலானது.**

– புத்தர்





# "தமிழ் நெஞ்சம்"



## அ.செ. முருகானந்தன்

மாண்புமிகு இந்து, தமிழ் அமைச்சர் செ.இராசதுரை அவர்களுக்கு தமிழ் இலக்கிய உலகு, அன்னார் ஆற்றிய அரும் பெரும் சேவைக் காக அவரைக் கௌரவித்தும், அன்னாரைப் பாராட்டியும் பணி வன்பான தமது நன்றி தெரிவித்தும் ஓர் இதய காணிக்கையுடனே விழா எடுக்கும் செய்தி அறிந்து மிக்க மிகழ்ச்சி. அது பற்றிய கடிதம் ஓரிரு தினங்கள் முன்னதாகத்தான் என் கைக்கு எட்டியது.

ஏழு கடல் வைப்பினும் தன் மனம் வீசி இசை கொண்டு வாழும் கன்னித்தமிழ் அனைய இயல்பினன் மட்டு நகர் தந்த செந்தமிழ் செல்வன், செஞ்ஞாயிற்றுச் சேயோன். மீன்பாடும் தேனாட்டின் இயற்கை வளமாக உதய மாநிலத்தின் கண் அங்கெல்லாம் செழித்தோங்கி வளர்ந்து மாந்தர் இன்று தன்னையே தந்து நிற்கும் செங்கரும்பின் தெவிட்டாத தீஞ்சுவை நிகர்த்த இயல்பினான் இனியன்.

விபுலானந்த அடிகளும் பண்டிதமணிசி.கணபதிபிள்ளையும் தவத்திரு தனிநாயக அடிகளும் எழுதிய தூயதமிழ் அனைய மாசற்ற நற்குணன். கள்ளமற்ற முனிவர் கூறும் கருணை வாசகமாக அமைந்தொரு வாழ்வு.

நண்பர் இராசுவின் தமிழ் நெஞ்சத்தே – அங்கு எந்நாளும் ஊற்றெடுத்த நன்னீர்ச் சுனைகளில், அருவிகளில் இலக்கிய சாதுக்களும் தமிழ் முனிவர்களும் எந்நாளும் புனலாடி கங்கையாடி காவிரி நீராடி புனிதமெய்துவர்.

நீடு புகழ் ஓச்சி நிலமிசை
நீடு வாழ்க அன்னவன் நாமம்
வாழிய செந்தமிழ் வாழ்க
நற்றமிழர்
வாழிய நம்மணித் திருநாடு.

# "வெற்றிப் பயணம்"

பித்தன் கே.எம். ஷா

மாண்புமிகு அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்களுக்குப் பாராட்டு விழா எடுக்கும் செய்தி மடல் என் கையில் இருக்கிறது.

நண்பர் இராசுவுக்குக் கொழும்பு மாநகரில் மாபெரும் பாராட்டு விழா; இந்தச் செய்தி என்னை நாற்பது வருடங்களுக்குப் பின்னால் உந்தித் தள்ளியது. காலக் குகையில் கடந்த கால நிகழ்ச்சிகளைப் பார்ப்பது போல் என் மனக்குகையில் பசுமை நிறைந்த அந்தப் பழைய நினைவுகள் நிழலாடின.

நாற்பது ஆண்டுகள் ஒரு நீண்ட பயணம்தான். ...ல மகன் நாற்பது வருடங்களைச் சீரணித்து தலை நிமிர்ந்து நிற்கிறான்.

உலகம் ஒரு சாலை!

வாழ்க்கை அதில் பயணம்!

இப்படியான வாழ்க்கையில் ஒரு நாள் 1947–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் என்று நினைக்கிறேன். மட்டக்களப்பு கோட்டமுனையில் இருக்கும் என் வீட்டில் இருந்து, அரசினர் வைத்திய சாலைக்கு நடையிலே பயணம் செய்கிறேன். அப்பொழுது நேரம் நான்கு மணி. நான் மத்திய வீதியில் போய்க் கொண்டிருக்கிறேன். எனக்கு முன்னால் ஒரு இளைஞன் போவதைக் கண்டேன். அசைவிலே எனக்குத் தெரிந்தவனாக இருந்தான். ஆனால் அவன் நடை, உடை, அவன்தானா இவன் என்ற ஒரு கேள்வியை எழுப்பியது. எட்டி நடந்து அவன் அருகில் சென்றேன். என்ன ஆச்சரியம் அவனேதான் இவன்: இரண்டு வருடங்களுக்கு முன் அவன் இருந்த நிலையைப் பற்றிச் சிந்தித்தேன்.

கண்டவுடன் கவர்ந்திழுக்கும் இனிமையும் இளமையும் அரசோச்சிய அழகு முகம். அழகுக்கு

அணி செய்யும் அந்தக் காலத்துச் சேலம் பட்டு வேட்டி, கழுத்தைச் சுற்றி முன்னும் பின்னும் தொங்கவிடப் பட்ட சேலம்பட்டுச் சால்வை, விலை உயர்ந்த சில்க் சேட் காலிலே கருப்பு பம்ஸ் சப்பாத்து, இடது கையிலே தங்கச் சங்கிலி இத்தியாதி அலங்காரங்களுடன் 'ரலி' பைசிக்களில் கவலை இன்றி வலம் வந்து கொண்டிருந்த அந்த இளைஞன் இவன்!

மத்திய கல்லூரியில் எஸ்.எஸ்.எல்.சி. படித்துக் கொண்டிருந்த பொழுது, பாடசாலைக் கலை வட்டம் அமைத்து சிறு சிறு நாடகங்கள் எழுதி அரங்கேற்றியதோடு, இலக்கிய சொற்பொழிவுகளும் நடத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தியதன் காரணமாக ஆசிரியர்களிடம் நன் மாணாக்கன் என்ற பெயர் எடுத்த அந்த மாணாக்கனா இவன்?

அமைச்சூர்நாடகக்குழுவைநிறுவிகண்ணகிநாடகத்தைநெறிப்படுத்தி, அதில்கண்ணகியாக நடித்துப் பாராட்டுப் பெற்றதோடல்லாமல், கல்முனை மக்களின் இடையறாத வேண்டு கோளுக்கிணங்க கல்முனையிலும் கண்ணகி நாடகத்தை அரங்கேற்றி வெற்றிவாகை சூடிப் பேரும் புகழும் பெற்ற அந்த நாடகக் கலைஞனா இவன்?

என்னால் நம்ப முடியவில்லையே?

எனது நடையை எட்டி வைத்து அவன் அருகில் சென்று அவன் தோள் மேல் கையை வைக்கிறேன். அவன் அதிர்ச்சியோடு நின்று நிமிர்ந்து என்னைப் பார்க்கிறான். "ஓ நீங்களா?" அதற்கு மேல் அவன் பேசவில்லை; பேச முடியவில்லை. அவனுடைய உள்ளக் குமுறலை நான் உணர்கிறேன். எதுவுமே பேசாமல் ஆதரவோடு அவனை அணைத்து, அழைத்துச் செல்கிறேன். அன்று முதல் அவன் எனக்கு சகாவாகவும் அவனுக்கு நான் சகாவாகவும் எங்கள் பயணம் தொடர்கிறது.

சிலர் பிறவியிலே அறிவும் ஆற்றலும் வரப் பெற்றவர்களாகப் பிறக்கிறார்கள், சிலர் முயற்சியினால் இவைகளை அடைகிறார்கள். ஆனால் 'இராசு' பிறவியிலேயே இந்தப் பேறுகளைப் பெற்றிருந்தார் என்பதை இளமையில் அவரோடு இணைந்து செயல்பட்ட காலத்தில் தெளிவாக என்னால் உணர முடிந்தது.

இந்தக் காலத்தைப் போலல்ல அந்தக் காலம். அன்று மஹாத்மா காந்தியின் அஹிம்சை அலையில் மக்கள் மனம் ஈடுபட்டிருந்த காலம்.

தமிழகத்தில் ஈ.வே.ரா. பெரியாரின் பிள்ளைகளாக அண்ணாத்துரை, இரா. சம்பத், நெடுஞ்செழியன், கண்ணதாசன், கருணாநிதி போன்றோர் காகிதத்தை ஆயுதமாகக் கொண்டு மொழிப் புரட்சி, இனப்புரட்சி,கலாசாரப் புரட்சி என்று களம் அமைத்துப் போராடிய காலம் அது. அந்தப் போராட்டத்தின் தாக்கம் இந்த ஈழத் திருநாட்டையும் ஈர்த்து நின்றது. அந்தத் தாக்கத் தாலும் புரட்சித் தாகத்தாலும் துடிதுடித்து நின்ற இளைஞர்களில் 'இராசு'வும் ஒருவர். தமிழினத்தைத் தட்டி எழுப்ப வேண்டும் என்று தணியாத தாகம் அவரை வாட்டிக் கொண்டிருந்தது. இந்த நிலையில், ஒருநாள் என்னிடம் சொன்னார்; 'நாம் ஒரு இயக்கம் ஆரம்பிக்க வேண்டும்; அந்த இயக்கத்தில் எல்லா மதத்தவர்களும், எல்லா தொழிலாளர்களும் இருக்க வேண்டும்' என்று சொன்ன தோடு நிற்கவில்லை. ஒரு வாரத்திற்குள் இயக்கத்தை ஆரம்பித்து விட்டார். அந்த இயக்கத்தில் ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்தவர்கள் இருந்தார்கள், பல் தொழில் செய்யும் தொழிலாளர்கள் இருந்தார்கள். இந்த அறிவு

இயக்கத்தை வைத்துக்கொண்டு அவர் ஆற்றிய சேவை, மட்டக்களப்புப் பிரதேசத்தையே மகத்தான மாறுதலுக்குள்ளாக்கியது. அந்த மாற்றம் பிற்காலத்தில் தமிழர்களின் அரசியல் உணர்வுகளுக்கு வலுவூட்டிய ஒரு மகத்தான சாதனையென்றே சொல்ல வேண்டும்.

அவருடைய சீர்திருத்தக் கருத்துக்களுக்கு வயதானவர்களிடம் இருந்து பலத்த எதிர்ப்பு வந்து கொண்டே இருந்தது. என்றாலும் அவர் இந்த எதிர்ப்புகளை இலட்சியம் செய்யவில்லை. காரணம், தாய்மார்களும், தம்பிமார்களும் அவர் பின்னால் அணிதிரண்டு நின்றனர். இந்த அணி அவருடைய அரசியல் வாழ்விலும் குன்றாமல் குறையாமல் பெருகிக்கொண்டே இருந்தது.

இதே ஆண்டில் மற்றுமொரு சாதனையை உருவாக்கினார் அவர். அதுதான் செ. இராசதுரையை ஆசிரியராகவும் பித்தனைத் துணை ஆசிரியராகவும் கொண்டு அவர் வெளியிட்ட "லங்கா முரசு" மாதச் சஞ்சிகை. இந்த சஞ்சிகை வெளியிடுவதில் அவருக்கு எத்தனையோ கஷ்டங்கள் குறுக்கிட்டன. மட்டக்களப்பில் வசதியான அச்சு சாதனம் இல்லாமை, போதிய எழுத்தாளர்கள் இல்லாமை, கொழும்பில் அச்சடிப்பதில் ஏற்பட்ட பிரயாணக் கஷ்டங்கள் – இத்தியாதி. ஆனால் இவைகள் எவற்றையும் அவர் பொருட்படுத்தவில்லை. சரியாக முப்பத்தி ஐந்து நாட்களில் 'லங்கா முரசு' வெளியிட்டார். குறிப்பிட்ட திகதியில் சஞ்சிகை வெளிவர வேண்டும் என்பதில் மிகவும் குறியாக இருப்பார். ஒவ்வொரு வெளியீட்டிலும் இருநூற்றி ஐம்பது பிரதிகள் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், நண்பர்கள் என்று தபாலில் அனுப்புவோம். பிரதிபலன் எதுவுமே கிடைத்ததில்லை. இந்தச் சஞ்சிகையை வெளியிடுவதில் ஏற்பட்ட உடல் உழைப்பும் பொருட் செலவும் ஏராளம். பல கஷ்டங்களுக்கு மத்தியில் ஆறு மாதம் ஆறு சஞ்சிகைகள் வெளியிட்டோம். யானைகட்டித் தீனி போட்ட கதை போல – "லங்கா முரசின் கதையும் முடிந்து போயிற்று." என்றாலும், இலட்சியப் பயணம் முடியவில்லை. அது தொடர்ந்தது.

1949–ஆம் ஆண்டு தமிழர்களின் அரசியலில் ஒரு புதிய மாற்றமும் தோற்றமும் உருவாகியது. தமிழர்களின் தனிக்கட்சியாக இருந்த தமிழ்க் காங்கிரஸ் கட்சி, இலங்கை இந்தியர் விடயத்தில் காட்டிய கொள்கைக் கோளாறு திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்றோரை வேதனைக்குள்ளாக்கியது. அடுத்து, திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் "தமிழரசுக் கட்சியை" நிறுவினார். தமிழரசுக் கட்சி தோன்றியதும், தமிழர் களின் அரசியலில் திட்டவட்டமான கொள்கைகள் தோன்றின. இந்தக் கொள்கைகள் காரணமாகத் தமிழர்கள் தங்கள் உரிமைக் குரல் கொடுக்கும் வாய்ப்பையும் பெற்றனர்.

இதே ஆண்டு பிற்பகுதியில் திரு. செல்வநாயகம் தலைமையில் திரு. வன்னிய சிங்கம், திரு. டாக்டர் நாகநாதன் ஆகியோர் மட்டக் களப்புக்கு வருகை தந்தனர். அவர்களை இங்கே வரவேற்பதற்கு அப்பொழுது யாரும் முன்வரவில்லை. மட்டக்களப்பு மக்களின் சார்பில் "இராசு" வுடன் மூன்று இளைஞர்கள் தான் அவர்களைச் சந்தித்தார்கள். அந்த இளைஞர்களுடன், நகரப் பிரமுகர்களைச் சந்தித்தார்கள். இந்தச் சந்திப்பில் எவ்வித பலனும் கிடைக்க வில்லை. பிறகு கல்முனை சென்றார்கள். அங்கேயும் அதே நிலை தான். எனவே கட்சிப் பணியை அந்த இளைஞர்களிடம் ஒப்படைத்து விட்டு, தலைவர்கள் சென்றார்கள். "இராசு" கட்சிப் பணியில் ஈடுபட்டார். எப்போதும் போல், இளைஞர்கள் அவரைச் சூழ்ந்தார்கள். வட்டாரம் வட்டாரமாக சிறு சிறு கூட்டங்களை நடத்தினார், துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார். கொள்கை பரப்பும் கட்டுரைகளை சுதந்திரனில் வெளியிட்டார். இதன் காரணமாக சுதந்திரனிலிருந்து துணை ஆசிரியர் பதவியை ஏற்கும்படி அழைப்பு வந்தது. இந்த

அழைப்பை ஏற்று, கொழும்புக்கும் போனார். என்றாலும் கட்சிப் பணி இங்கே தொடர்ந்து நடந்தது. ஏறக்குறைய ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு துணை ஆசிரியர் பதவியை விட்டுவிட்டு திரும்பவும் மட்டக்களப்பு வந்தார். வந்ததும் கட்சிப் பணியில் ஈடுபட்டார். இந்தக் காலங்களில் தான் அறப்போர் அரியநாயகம், ஆரையூர் அமரன், காசி ஆனந்தன், கலா மாணிக்கம் போன்றவர்களை மேடையேற்றி கொள்கை பரப்பும் பேச்சாளர் ஆக்கினார். தெற்கே தம்பிலுவில் தொடக்கம் வடக்கே வாகரை வரை கட்சி வளர்ந்தது. கிழக்கு மாகாணத்தில் இராசதுரை இல்லையென்றால் தமிழரசுக் கட்சி இல்லை. தமிழரசுக் கட்சி இல்லையென்றால் இராசதுரை இல்லை என்ற நிலைப்பாடு ஆயிற்று. கலை, இலக்கியம், அரசியல் இந்த மூன்றையும் சம நோக்கோடு வளர்ப்பதில் ஈடுபட்டார்.

1956–ஆம் ஆண்டு தேர்தலில் மட்டக்களப்பில் ஒரு அபேட்சகரை நியமிக்க வேண்டுமென்று தலைமையகம் தீர்மானித்தது. இந்த தீர்மானத்திற்கேற்ப இராசுவும், கட்சித் தொண்டர்களும், ஒன்று கூடி நகரப் பிரமுகர் ஒருவரை நியமிப்பதற்காக முயற்சி செய்தார்கள். அது பலனளிக்கவில்லை. எனவே தலைவர்கள் வரவழைக்கப்பட்டார்கள். தலைவர்கள் முயற்சியும் தோல்வியடைந்தது. கட்சி கொடியின் கீழ் போட்டியிட யாரும் முன்வரவில்லை. எனவே வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் வேலையை இராசுவிடமும் கட்சித் தொண்டர்களிடமும் ஒப்படைத்த திரு. வன்னியசிங்கம் "நீங்கள் விரும்பும் யாராவது ஒருவருடைய பெயரை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். மற்றவைகளை நாங்கள் கவனித்துக் கொள்வோம்" என்று சொன்னார். இந்த சமயத்தில், கட்சித் தொண்டர்களிலே ஒருவர் "அண்ணன் இராசதுரையை நியமித்தால் என்ன?" என்று குரல் கொடுத்தார். அவ்வளவுதான். கூட்டத்தில் கரகோஷம் எழுந்தது. "அண்ணன் வாழ்க; இராச துரை அண்ணன் வாழ்க" என்ற வாழ்த்தொலியும் கிளம்பியது. தலைவர்கள் முகம் மலர்ந்தது. "வெண்ணெய்யை கையில் வைத்துக் கொண்டு, நெய்க்கு அலைந்தோமே" என்றார் திரு. வன்னிய சிங்கம். பிறகு ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

1956–ஆம் ஆண்டு தேர்தல், அவர் எதிர்பார்க்காத அரிய வாய்ப்பு இந்தத் தேர்தலிலே தான் அவருடைய நாவன்மையைத் தமிழ் இலங்கை மக்கள் உணரக் கூடியதாக இருந்தது. வறண்ட பாலை வனமாகக் கிடந்த அரசியலை இழுத்து வந்து, பசுமை நிறைந்த இலக்கியமாக, பொருள் பொதிந்த தத்துவமாகப் பொது மக்கள் முன் வைத்தார். அவருடைய அந்தச் பேச்சைக் கேட்பதற்காகப் பொதுமக்கள் நள்ளிரவு வரை காத்துக் கிடந்தார்கள். சுருக்கமாகச் சொல்லப் போனால், அந்தத் தேர்தலை இன்று நினைத்தாலும் எனக்கு மூச்சுத் திணறுகிறது. அவர் வகுத்த தேர்தல் உத்தி களையெல்லாம் கட்சித் தொண்டர்கள் செயல்படுத்தினார்கள். முதலாவது தேர்தலிலேயே அவர் பெருவெற்றி ஈட்டினார். இந்த வெற்றி தலைவர்களுக்கும் தொண்டர்களுக்கும், மட்டுநகர் பொது மக்களுக்கும் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அன்று தொடங்கிய இந்த பாராளுமன்றப் பயணம் கடந்த முப்பத்திரண்டு வருடங் களாக, தோற்காத பிரதிநிதியாக, முதலாவது பிரதிநிதியாக முடிசூடா மன்னனாக – இன்றும் அந்த வெற்றிப் பயணம் தொடர்கிறது.



# “இலட்சியத்தில் ஒருவர்”

**நவம்**

## 1956

இரத்தினபுரியில் படிப்பித்துக் கொண்டிருந்த வேளை மட்டக்களப்பிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது.

பிரித்தேன்.

எழுத்தைக் கண்டதும் எனக்குள் ஒரு சிலிர்ப்பு. இனம் புரியாத பெருமிதம்.

நான் பெரிதாக மதிக்கும் ஒருவரிடமிருந்து அந்தக் கடிதம் வந்திருந்தது.

அதில் கண்ட வாசகம், இன்னும் என்னை எங்கேயோ கொண்டு சென்றது.

‘தமிழரசுக் கட்சி சார்பில் மட்டக்களப்புத் தொகுதியில் நான் போட்டியிடுகின்றேன். உங்கள் ஆதரவை எனக்கு வழங்குவதோடு, அதற்கான உங்கள் ஆலோசனைகளையும் தெரிவிக்கவும்.’

அந்தக் காலத்தில் நாடாளுமன்றத் தேர்வில் நிற்பதென்பது மிகப்பெரிய விஷயம்.

பணபலம், பட்டப்படிப்பு இவையெல்லாம் தேர்தலில் நிற்கும் ஒருவருக்கு இருக்க வேண்டிய கட்டாயத் தகைமைகள்!

இந்தக் கட்டாயத் தகைமைகள் அனைத்தையும் ஊதித் தள்ளி ஒருவர் தேர்தலில் குதிக்கின்றார் என்றால், அது ஓர் அதிசய தைரியம்.

என்ன அந்தத் தைரியம்?

இருக்கின்றது.

ஒன்றல்ல; பல!

இளமை, இனிமை, இதயம்.

என் ஆதரவு கேட்டு கடிதம் எழுதியவரிடம், இவை அனைத்தும் இருப்பதாக உணர்ந்தேன்

கடிதத்துக்கு மிக உற்சாகமாகப் பதில் எழுதினேன்.

'என் ஆதரவு மட்டுமல்ல; என் நண்பர்கள், என் சொந்தக்காரர்கள் அனைவரின் ஆதரவையும் பெற்றுத் தருவேன். அதற்காக நீங்கள் ஒன்று செய்ய வேண்டும்.

அந்த ஒன்று என்ன?

நம்மைப் போன்ற சாமானியர்கள் நாடாளுமன்றத்தைப் பிடிக்க வேண்டுமென்றால், இது காலவரை இருந்துவரும் சில பாரம்பரிய வழமைகளை முறியடிக்க வேண்டும். அதற்கு வேண்டிய ஒரே வழி முயற்சி. முயற்சி என்றால் சாதரண முயற்சி அல்ல. பைசாச முயற்சி! அப்படியென்றால்தான் வெற்றிக் கம்பத்தை நாம் தொட முடியும்!'

இப்படிப் பதில் எழுதினேன்.

பதில் கொஞ்சம் வேலை செய்திருக்க வேண்டும்.

அவரிடமிருந்து பதில் கடிதம் வந்தது.

'உங்கள் கடிதம் படித்தேன். நீங்கள் குறிப்பிட்ட அந்த பைசாச முயற்சி என்னை மிகவும் கவர்ந்தது. தைரியமூட்டியது. புது நம்பிக்கை தந்தது. நிச்சயம் அதன்படி செயல்படுவேன்.' பதில் கண்டதும் எனக்குள் ஒரு புளகாங்கிதம். ஓர் ஆனந்தம் ஒரு பெருமிதம். சர்வ வல்லமை படைத்த ஒருவரிடமிருந்து என் ஆலோசனைக்கு அங்கீகாரம் கிடைத்ததில் ஒரு சிலிர்ப்பு.

அதன்பின் தேர்தல் நடந்தது. என் அன்புக்குரிய மாண்பமை இராசதுரை அவர்கள் அமோக வெற்றியீட்டினார். அவர் மேற்கொண்ட அந்தப் 'பைசாச முயற்சி' அவரைப் புகழேணியில் ஏற்றியது. தொடர்ந்து வந்த பல தேர்தல்களிலும் அவர் வானைத் தொட்டார்! மேலே மேலே பறந்தார். இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு புதுக்கவிதை படைத்தார். அவர்அடைந்த வெற்றிகளை, நான் அடைந்த வெற்றியாகக் கருதிப் பூரித்தேன்.

இந்த சாதனை அரசியல் வரலாற்றில் ஒரு புது அத்தியாயம்.

இதன் ரகசியம்தான் என்ன?

அந்த பைசாச முயற்சிமட்டும்தான் காரணமா?

இல்லை. இல்லவேயில்லை.

அவருள் புதைந்திருந்த மனித நேயம்.

சாதாரணமாய் ஒருவர் எம். பி. ஆகிவிட்டால் அவரை நெருங்குவதும், அவருடன் பேசுவதும் எட்டாக்கனி.

பலநாள் தவம் கிடக்க வேண்டும்.

பல விதக் 'காக்கா' பிடிக்க வேண்டும்.

அவர் எம். பி. ஆனதும் இந்த நடைமுறைகள் அனைத்தும் செல்லாக் காசாகின.

மக்களோடு மக்களாய்க் கரைந்தார்.

'எம். பி. என்று என்னை அழைக்க வேண்டாம்; தம்பி என்று அழையுங்கள்' என்றார்.

அவரை ஆதரித்த மக்களை இந்த அன்புக் கட்டளை ஆகர்ஷித்தது. ஈர்த்தது. 32 ஆண்டுகளாக அரசியல் வானில் மின்னும் தாரகையானார். வரலாறு படைத்தார்.

இலக்கிய வாதியாய், கலைஞராய், நடிகராய் இருந்த அவர், சந்தர்ப்ப சூழ்நிலையாலும், காலத்தின் கட்டாயத்தாலும் ஓர் அரசியல் வாதியாகப் பரிமாணம் பெற்றார்.

அரசியல் வானில் அவர் எடுத்த 'விஸ்வரூபம்' பலரை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. அண்ணாந்து பார்க்க வைத்தது.

முழுநேர அரசியல் வாதியாக மாறினாலும், அவர் இரத்தத்தோடு கலந்த இலக்கிய நேயம், தொடர் கதையாயிற்று. பலரை அவர்பால் ஈர்த்தது. அந்தப் பலருள் நானும் ஒருவனானேன். யாராலும் ஈடுகொடுக்க முடியாத உழைப்பு. அப்படி ஓர் அசுரத்தன உழைப்பு. அவர் களைத்து நான் பார்த்ததில்லை.

நுண்ணிய ஆற்றல் கொண்ட அவரைப் பிரித்துப் பார்த்தால், பல பரிமாணங்கள் தெரியும்.

**ஒரோர் சமயம் அரசியல் விற்பன்னர்.**
**இன்னொரு சமயம் சொல்லேர் உழவர்.**
**பிறிதொரு சமயம் இசைமேதை.**
**மேலும் ஒரு சமயம் சொல்லின் செல்வர்.**
**இன்னும் ஒரு சமயம் நடிகர் திலகம்.**

ஆக,


**அவர் ஒரு டி.வி. அவதாரம்! பல 'சானல்கள்' கொண்ட டி.வி. அவதாரம்!**


பட்டனை அழுத்த வேண்டியது

அங்கே,

- *அரசியல் காணலாம்,*
- *நாடகம் பார்க்கலாம்,*
- *பட்டிமன்றத்தில் லயிக்கலாம்,*
- *இசை பருகலாம்,*
- *ஆத்மிகத்தில் கரையலாம்,*
- *நகைச் சுவையில் குலுங்கலாம்,*
- *இலக்கியத்தில் தோயலாம், அனைத்துக்கும் மேலாக,*
- *மனித நேயம் கண்டு சிலிர்க்கலாம்!*
- *லட்சத்தில் ஒருவர் அவர்!*

# "முதல்வனாய் நின்ற முத்தமிழன்" நீ





"முகில் அழகன்"

மருதமும் நெய்தலும் மருவி உயிரென வாழும் மட்டக்களப்பு நகரின் தமிழின் உரிமை முழக்கம் செய்த சொல்வேந்தன் மாண்புமிகு நம் அமைச்சர் இராசதுரையாவார். அவர் மத்திய கல்லூரியின் மாணவராவார். அவர் வின்சன்ட் மகளிர் கல்லூரியில் முதன்முதல் பேசிய பேச்சு "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்." இப்பேச்சை முதன்முதல் தமிழ் பண்ணைமூலம் அச்சிட்டு வெளியிட்டார்கள். அந்தப் பேச்சின் மூலம் மட்டக்களப்பு மாணவர் சமுதாயத்தை அண்ணன் இராசதுரை தன்பால் இழுத்துக் கொண்டார்.

தமிழின் உயிரெழுத்தான இகரத்தை முதலாகக் கொண்டு, தனது பெயரை இராசதுரை எனப் பெயர் கொண்ட உயிரான், பாலும் தேனும் முக்கனியும் முத்தமிழும் பெற்ற மட்டுநகரின் மத்தியில் பிறந்து வளர்ந்தான். கலைக் கூடத்தில் பெற்ற கல்வி அறிவும், கலைஞானத்தால் பெற்ற பல கலை அறிவும் அவரை அறிஞனாக்கியது, கலைஞனாக்கியது. நாற்பது வருடங்களுக்கு முன் அண்ணா இராசதுரை என்ற முறையில் உறவு கொண்டேன். அவர் தோற்றமும் அழகின் கோலமும் என்னைக் கவர்ந்ததைவிட அவருடைய சிரிப்பும் செந்தமிழும் என்னையடிமை கொண்டது. கிழக்கிலங்கையின் பெருமையை சிறுமையாக்கிக் கல்கி ஏடு வெளியிட்ட செய்தியைப் பார்த்து சிந்தை வெந்து அண்ணன் இராசதுரை அவர்கள் கல்கி ஆசிரியருக்கு ஒரு மடல் தீட்டினார். அதில் "மட்டக்களப்பை மறவாதீர்" என்ற தலைப்புடன் தமிழர் வங்கமெறி கோணமலை தொடக்கம் உகந்தமலை வரைக்கும் கிழக்குத் தமிழ் ஈழம் பரந்து விரிந்து கிடக்கிறதென்ற உண்மையை வரைபடம் மூலம் அனுப்பி வைத்தார். இசைக்கொடி கட்டி இலங்கைதனையாண்ட இராவணனின் யாழ்க் கொடியின் புகழ் காத்த அடிகள் விபுலானந்தர் வாழ்ந்த மட்டக்களப்பை மறந்ததேன் என்று அன்று தீட்டிய கட்டுரைக்கு "கல்கி" ஆசிரியர் கலங்கி விட்டார். அடுத்த அவரது இதழில் மன்னிப்பும் கேட்டார். இது 1953-ல் நடந்தது. மட்டக்களப்பு மண்ணின் வரலாறு பலரால் மறக்கப்பட்டிருந்த காலம்.

திருமலைக்கு வடக்கே தான் தமிழர் உண்டு என எண்ணும் அளவிற்குத்தான் அன்று இருந்தது. கலைஞர்களும், அறிஞர்களும் எடுத்துச் சொல்லியும் எழுதியும் கூட கிழக்கு தேய்ந்த நிலையில் இருந்தது. வடக்கு மட்டுந்தான் இருந்த நிலையில் உயர்ந்தது. காரணம் சொல்லக் கூடியவர்கள் சொல்லும் விதத்தில் சொல்லவில்லை.

"சொல்லுக சொல் அச்சொல்லை வெல்லும் சொல் இல்லாது" என்ற வள்ளுவர் சொல்லை ஏந்திய சொல்லின் செல்வர், மட்டுநகர் தந்த மாண்புமிகு முதல்வர், சொல்லும் முறையால் சொன்னதால் கிழக்கிலங்கை மக்களும் அவர்தம் பிரதேசமும் பெருமை பெற்றது.

கட்டுரையில், கல்யாண சுந்தரமாய், கதைகளுக்குக் கல்கியாய், வரலாற்று நவீனங்களுக்கு சாண்டில்யனாய், நாடகங்களுக்கு டீ.கே. சகோதரர்களாய் நின்று ஒலிப்பவர், அவர். 'அண்ணா' என முதல்முதல் கிழக்கில் ரத்த பாசத்தால் குரல் கொடுத்து அழைக்கப் பட்டவர். இன்றும் அப்படியே அழைக்கப் படுகிறார். அவர் "முழக்கம்," "உதயம்," "சாந்தி," "தமிழகம்," "உதயசூரியன்" போன்ற பத்திரிகைகளைக் கிழக்கின் செஞ்சுடரில் தோய்த்து எடுத்த தனது தூரிகையால் வடித்துக் கொடுத்தார். "சுதந்திரன்" ஆசிரியராக இருந்த காலை அவரது எழுத்து வன்மையை தமிழகம் இரு விழிகளால் எதிர்நோக்கி இரு கரத்தால் ஏந்தி எடுத்து வாயால் புகழ்ந்து பேசிற்று.

கங்கைக் கரையில் கல்லெடுத்துக் காவிரிக் கரையில் குளிப்பாட்டி கற்பின் செல்வியாம் கண்ணகிக்கு செங்குட்டுவன் கோயில் படைத்தான். அந்த மன்னனின் தம்பி இளங்கோவடிகள் இசைத்த சிலம்புச் செல்வத்தை நாடகமாக "கண்ணகி கதை"யை இயக்கி நடித்துக் காட்டியவர் நமது முதல்வர். அந்த நாடகத்தைக் கண்டு உண்டு மகிழ்ந்த மட்டக்களப்புத் தமிழினம் பல மாதங்களாக வருடங்களாக அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தது.

அடுத்து தமிழகத்தின் தன்மானத் தமிழன் வீரபாண்டியனின் வரலாற்றைத் தானே கதை வசனம் பாட்டு எல்லாம் எழுதி இயக்கி நாடகமாக நடித்தார். வீரபாண்டியனாகவே நடித் தார். நாடகத்தைப் பார்த்தவர்கள் பாஞ்சாலங் குறிச்சியின் புளிய மரத்தையும், கயத்தாற்றில் வீர மரணம் கண்ட வீரபாண்டி யனையும் கண்டார்கள். கண்டவர்கள் வீறு கொண்டெழுந்தனர். கேட்டவர்கள் கண்ணீர் விட்டனர். கண்ணகி கோயில்கள்மன்றங்கள் – விழாக்கள் – கல்விச் சாலைகள் பட்டி மன்றங்கள் கவிதை அரங்கேற்றங்கள் மீலாத் விழாக்கள் பொங்கல் திருநாள், தமிழர் பெருநாள், இப்படியான இடமெல்லாம் அவருடைய குரல் ஒலிக்கும் சொல்லின் செல்வனாக வாழ்ந்தவர். மட்டக்களப்பு மண்ணில் கவிஞர்களையும் பேச்சாளர்களையும் நாடக நடிகர்களையும் இசை வித்துவான்களையும் அரசியல் வாதிகளையும் சினிமா இயக்குனர்களையும் ஆக்கிவிட்ட பெருமை திரு இராசதுரை அவர்களையே சாரும். அண்ணன் ஆக்கிவிட்ட, அண்ணனால் ஆக்கப்பட்ட சில கலைஞர்கள் கவிஞர்கள் அரசியல் வாதிகள் பல சந்தர்ப்பங்களில் அன்னாரை எதிர்த்து மோதினர். அவர்களைக்கூட, தன் புன்சிரிப்பால் மன்னித்து மகிழ்வித்தவர் அவர். எதிரிகளைக் கூட ஏற்றிப் போற்றும் பொறுமையின் பிறப்பிடம். மலேசியாவில் நடந்த மணிவிழாவில் முதல்வர் பேசியதைக் கண்ட மறைந்த காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் இராசதுரையை அணைத்து இலங்கையின் அபிமானம் காத்தவனே என மகிழ்ச்சி தெரிவித்தார். அதைக் கண்ணுற்ற பலர் பெருமையால் நெஞ்சம் பூரித்தனர். அப்படியான திறமை

கொண்ட நமது முதல்வர், மட்டக்களப்பின் புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை, அருணாசல தேசிகர், ஆசிரியர் எஸ்.சோமநாதர் இன்னும் அறிஞர் கலைஞர் போன்றோருக்கு விழா எடுத்துப் பொன்னாடை போர்த்தித் தன் நன்றியைத் தெரிவித்துப் பெருமை கண்டார்.

மகான் காந்திக்கும் பாரதிக்கும் விபுலானந்தருக்கும் மட்டக்களப்பு வாவிக் கரைதனில் சிலையெடுத்து பெருமை தேடித் தந்தவரும் அவர்தான். அதற்குமுன் அப்படியாரும் யாருக்கும் சிலைவடித்து வைக்கவில்லை.அதையும் முதலில் செய்துவிட்டவர் நமது முதல்வர்தான்.

மாநகரசபையின் முதல்வனாகவும், அரசவையின் முதல்வனாகவும் தமிழ் மொழியின் முதல் அமைச்சனாகவும் முத்தமிழின் மூத்த புதல் வனாகவும் இருக்கும் அந்த முதல் இடத்தை அண்ணன் ஒருவர்தான் பெற்றிருக்கும் பெருமை வாய்ந்தவர். மட்டக் களப்புத் தொகுதி யில் ஒருவர் ஒருமுறைதான் பிரதிநிதியாக வருவது வழக்கம். அந்த வழக்கத்தை மாற்றித் திரு இராசதுரை அவர்கள் தான் ஒருவனே மட்டக்களப்பின் பிரநிதியாகவும் அதுவும் முதல் பிரதிநிதி என்று முப்பத்தியொரு வருடங்களை பாராளுமன்றத்திலும் அரசவை கடந்துள்ளார். அவர் தனது அறுபத்தொரு வருடங்களைக் கடந்துள்ளார். ஆனால் அவரது செஞ்செழிப்பான முகமும், அதன் சௌந்தர்ய சிரிப்பும், தோற்றப் பொலிவும் முப்பத்தியொரு வயதினரைப் போல காட்டுகின்றது. என்றும் இளமைத் தோற்றம் கொண்ட இனியவர். இன்று அமைச்சராக இருக்கிறார். மட்டக் களப்பு வரலாற்றில் முழு அமைச்சராகப் பதவி வகிப்பவரும் இந்து கலாசாரத்திற்கும் தமிழ் மொழிக்கும் தனியான அமைச்சைப் பெற்று அதிலும் முதல்வனாகவே அண்ணா இராசதுரை நிற்கிறார். எனவே தான் தொட்டுக் கொள்ளும் எத்துறையிலும் முதல்வனாகவும், மூத்தோனாகவும் தனது வரலாற்றை எழுதிக் கொள்ளும் வெற்றியை கொண்டவர். சிலருடைய வரலாறுகள் மறைந்த பின்பு எழுதப்படுபவை,அண்ணனுடைய வரலாறு இன்றும் என்றும் நின்று நிலைத்து நீடித்துக் கொண்டிருக்கின்றது.

சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நகரில் இந்து சமயம் பற்றிப் பேசி இந்தியாவுக்கும் உலகுக்கும் புகழ் தேடித் தந்தார். அப்படி ஒரு இந்து சமய ஆராய்ச்சி மகா நாடொன்றை இலங்கை நாட்டின் தலைப்பட்டணத்தில் தனது அமைச்சின் துணையோடு நடத்தி பொதுவாக உலகுக்கும், சிறப்பாக இலங்கைக்கும் மட்டகளப்பு மண்ணிற்கும், பெருமை தந்து அந்த வரலாற்றையும் எழுதிக் கொண்டவர் நமது முதல்வர் நாவலர் இராசதுரை அவர்கள்தான்.

அயோத்தி மைந்தன் இராமன் இந்தியாவில் அசுவமேதயாகம் செய்து கொண்டதாக கம்பன் காவியத்தில் படித்திருக்கிறோம். பார்க்கவில்லை. ஆனால் இலங்கையில் ஒரு அஸ்வமேதயாகத்தை இராசதுரை நடத்தித் தந்தார். அதைப் பார்த்தோம். இப்படியான செயல்களை இன்னுமொரு காலத்தில் இன்னொருவரால் செய்து வைக்கப்பட்டாலும்கூட முதல்வர் அதிலேயும் முதல் இடத்தை வகித்துக் கொண்டார்.

மட்டக்களப்பு இசைக்கல்லூரி இருக்கு மட்டும் இசை வாணர்களும் சக கலைஞர்களும் தனது இதயத்தின் உணர்வு அலைகளில் இராசதுரை அவர்களை நன்றியுணர்ச்சியோடு பாராட்டிக் கொண்டு பாடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அவர் தனது மேடைத் தமிழால் ஏராளமானவர்களை அறிமுகப் படுத்திக் கொண்டு அதில் பலரைச் சிறந்த பேச்சாளராகவும் உருவாக்கியவர். எழுத்தாளராக இருந்து கொண்டு பல

எழுத்தாளரையும் கவிஞரையும் நாடக ஆசானாய் இருந்து கொண்டு பல நாடக நடிகர்களையும் மட்டு நகரில் உருவாக்கியவர். அவரது எழுத்தும் பேச்சும் இரண்டும் ஒன்றாகவே இணைந்த இரட்டைக் குழந்தைகள். தென்றலின் சுகமும், தெம்மாங்கின் இனிமையும், காட்டாற்றின் வேகமும், காதலின் உணர்வும், வீரத்தின் செறிவும், அவரது எழுத்துக்களில் பிறந்து, தவழ்ந்து, நடந்து ஓடுவதைக் காண முடியும்.

"வில்லோர் உழவர் பகை கொளினும் கொள்றைச் சொல்லேர் உழவர் பகை"

என்ற குறளின் குரலால் குவலயத்தை வென்றவர். வில்லேந்தி வந்த பல எதிரிப் படைகள் அவர்தம் சொல்லேந்தி நண்பர்களான கதைகள் பல அவரது வாழ்வில் இடம் பெற்றன.

இத்தகைய மாண்புமிகு அமைச்சர் இராசதுரையைப் போல் இன்னுமொரு மகவை இன்னும் மட்டக்களப்பு மாதா கருத்தரிக்க வில்லை. தான் பிறந்த மண்ணுக்கும் தனை ஈன்ற தாய்க்கும் தன்னை அவையில் முந்தியிருக்க வைத்த தந்தைக்கும், தமிழனத்துக்கும், தமிழ் மொழிக்கும், தன்னாலான அளப்பறிய சேவையைச் செய்யும் அமைச்சர் சைவமும், தமிழும் வாழச் செய்யும் தொண்டு சாலச் சிறந்தது.


"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்
தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்"
என்ற குறளடிகள் அவரின் செயல்களுக்குச் சிகரமாய் விளங்குகின்றது.

முதல்வர், சொல்லோர் உழவர், கலைஞர், நாவலர், சொல்லின் செல்வர், மீன்பாடும் தேனாட்டின் முடிசூடா மன்னர் பல்லாண்டு வாழ்க! வாழ்ந்து, பைந்தமிழுக்கு பணி செய்ய இன்புடன் இறையருள் இன்னருள் சுரக்க வேண்டும் என வாழ்த்திப் பாராட்டுகிறேன்.



**அன்பு நெறியில் உலகம் உய்ய வழி கூறும் முறையே மதம் எனப்படும்.**

*- விவேகானந்தர்*



முதல் கவர்னர் ஜெனரல்
சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியர் அவர்களும்
சொல்லின் செல்வரும்



தமிழர் தலைவர் திரு.சி.பா.ஆதித்தனாரும்
சொல்லின் செல்வர் குடும்பத்தினரும்



ஒய்வுபெற்ற பிரதம நீதியரசர்
எச்.டவ்ள்யூ - தம்பியய்யா அவர்களும்
சொல்லின் செல்வரும்



சிலம்புச் செல்வர் திரு. ம.பொ. சிவஞானம் அவர்களுடன்



நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்களுடன்




இலங்கையின் முன்னாள் பிரதமர் திரு. பண்டார நாயகா அவர்கள்
திரு. செ. இராசதுரையின் தமிழ் எழுத்து பொறித்த காரிலிருந்து இறங்குகின்றார்

# "இலங்கையில் அவர் குரல் ஒலிக்காத இடமே இல்லை"

பொ.மாணிக்கவாசகன்
(காரைத்தீவு)

"சுதந்திரன்" பத்திரிகை தின ஏடாக வெளிவந்து கொண்டிருந்த காலம். இலங்கை பத்திரிகை உலகில் "சுதந்திரன்" பத்திரிகை ஒரு சரித்திரம் படைத்திருந்தது. வாரவெளியீட்டில் "குயுக்தி" என்றொரு பகுதியை லட்சக்கணக்கான வாசகர்கள் விரும்பிப் படிப்பார்கள். கேள்வி பதில் பகுதி அது. அதில் ஒரு கேள்வி பதில் . . .

கேள்வி : மட்டக்களப்பின் பெருமைகள் எவை ?

பதில் : பாடும் மீன்கள், பாடாத பெண்கள், பேசாத பிரதிநிதி.

இப்பதிலைப் பொய்பாக்கியவர் சொல்லின் செல்வர். 1956-ஆம் ஆண்டு அவர் பாராளுமன்றத்திற்கு சென்றபின் இக்கூற்று பொய்பாகிவிட்டது. பேச்சினால் மட்டக்களப்பு மண்ணுக்குப் பெருமை சேர்த்தார். பேச்சினால் முத்தமிழுக்கு மதிப்பு சேர்த்தார். பேச்சினால் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கையிலும் வெளியிலும் புகழும் பெருமையும் சேர்த்தார்.

இலக்கிய விழாக்களா! "சமய விழாக்களா! அரசியல் மாநாடுகளா! எங்கும் அவர் சிம்மக்குரல் ஒலித்தது. இந்து சமய விழாக்களா! கிறிஸ்தவ விழாக்களா! இஸ்லாமிய விழாக்களா! அங்கும் அவர் பேச்சைக் கேட்க மக்கள் ஆயிரக்கணக்கில் கூடுவார்கள். எந்தக் கூட்டமானாலும் இறுதிப் பேச்சாளர் சொல்லின் செல்வர்தான். அவர் பேச்சைக் கேட்க மக்கள் பொறுமையோடு காத்திருப்பார்கள். அவர் பேசியதும் மக்கள் கலைந்துவிடுவார்கள். அதனால் அவரைக் கூட்டத்தின் ஆரம்பத்திலோ மத்தியிலோ பேசவிட மாட்டார்கள். இலங்கையின் வரலாற்றில் பேச்சினால் ஒரு சகாப்தம் படைத்தவர். இராசதுரையைப் போல் பேசவேண்டும் - என்னும் ஆர்வம் இளைஞர்களிடம் உதிக்கச் செய்தவர். யாழ்ப்பாணத்தில் நடுநிசி பன்னிரண்டு மணிக்கு இராசதுரை பேச மேடைக்கு அழைக்கப்படுவார். அப்போது மக்கள் அவர் பேச்சைக் கேட்க காத்திருப்பர். இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதி எங்கும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர் குரல் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. தமிழ் பேசும் மக்கள் மன்றத்தின் எந்த விழாவிலும் இராசதுரை இருக்கவே செய்வார்.

"சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1956-ஆம் ஆண்டு அவர் உரை ஆரம்பித்து முடிக்கும்வரை பேரறிஞர் மு. வரதராசன் மேடையில் அமர்ந்திருந்தார்.

தமிழ்நாட்டில் பல விழாக்களில் கலந்துகொண்டு உரையாற்றி அறிஞர் பெருமக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளார். மலேஷியாவில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொண்டார். பல நகரங்களில் நடைபெற்ற இலக்கிய விழாக்களில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி., 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் ஆகியோருடன் சிறப்புரை ஆற்றிய பெருமை இவருக்குண்டு.

சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பேரறிஞர் தமிழக முதல்வர் அண்ணா தலைமையில் நடைபெற்றபோது கலந்துகொண்டார்.

மதுரையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றபோது அவர் ஆற்றிய உரைகேட்டுப் பாராட்டாதவர்களே இல்லையெனலாம்.

கோலாலம்பூரில் ஆறாவது உலகத்தமிழ் மாநாட்டில் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுடன் கலந்து கொண்டு அவர் ஆற்றிய உரை பலரைக் கவர்ந்தது. இலங்கை மண்ணுக்குப் பெருமை தேடித் தந்தது.

லண்டன் பி.பி.சியிலும், பாரிஸ் தமிழ் மன்றத்திலும் 1961-ஆம் ஆண்டு பேசிய பெருமை இவருக்குண்டு.

'பேசாத பிரதிநிதி மட்டக்களப்பு மண்ணுக்கு' எனும் சொல்லை மாற்றியமைத்த பெருமை சொல்லின் செல்வருக்கு உரித்தாயிற்று".

"பாடாத பெண்கள்" மற்றுமொரு கணிப்பு.

அமைச்சராகப் பொறுப்பேற்றதும், மட்டக்களப்பு பெண்களைப் பாடவைப்பதற்காக "சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியை" ஸ்தாபித்தார். கல்லூரிக்கான பாடத்திட்டங்கள் தமிழகக் கலைமாமணி திரு. ரி. எஸ். சிவானந்தம் பிள்ளை மூலம் தயாரித்தார். மக்கள் திலகம் தமிழக முதல்வரின் அனுமதியுடன் கலைமாமணி அவர்களைக் கல்லூரியின் முதல்வராக்கினார். மக்கள் திலகம் திரு. எம். ஜி. ஆர். இடமிருந்து இசைக் கருவிகளையும், இசை நூல்களையும் கல்லூரிக்கு நன்கொடையாகப் பெற்று அளித்தார். சீர்காழி கோவிந்தராஜன் கல்லூரியின் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து சிறப்பித்தார். ஐம்பதினாயிரம் மக்கள் கிழக்கு மாகாணம் முழுவதுமிருந்து விழாவில் கலந்துகொண்டனர். மட்டக்களப்புப் பெண்கள் இன்று யாருக்கும் இளைத்தவர் இல்லையென்னும் வண்ணம் இசை மழை பொழிகிறார்கள். இந்த வாய்ப்பை உருவாக்கியவர் சொல்லின் செல்வர் இராஜதுரை. சுவாமி விபுலானந்தர் திருநாமமும் இசைக்கல்லூரியும் உள்ளவரை சொல்லின் செல்வர் இராசதுரையின் பெயரும் நிலைத்து நிற்கும்.

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை*
*செய்நன்றி கொன்ற மகற்கு"*

*- குறள்*

# "போராட்டத்தில் வளர்ந்தவர் அண்ணன்"

எப்.ஜி.ஜெயசிங்கம்

சொல்லின் செல்வரின் வாழ்க்கை முழுவதும் போராட்டமயமானது. அநீதிக்கு எதிராக குரல் கொடுக்கவும், போராடவும் அவர் என்றும் பின்நின்றதில்லை. அவர் வாழ்க்கை ஒரு போராட்டமே. சமுதாயப் பணியானாலும் அரசியலாக இருந்தாலும் அது போராட்டமயமே. சமூகத்தில் படிந்து கிடந்த மூடக் கொள்கைகளை விரட்டியடிக்க அவர் எத்தனை போராட்டங்களை நடத்தியுள்ளார். கல்லூரிக் காலத்தில் தீண்டாமைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தார். ஆலயக் கதவுகளை எல்லோருக்கும் திறந்துவிடவேண்டுமென்று ஆலயப் பிரவேசக் கிளர்ச்சியை நடத்தினார். ஸ்ரீமாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் ஆலயப் பிரவேசப் போராட்டம் மிகப் பெரிய அளவில் நடைபெற்றது. இன்று மட்டக்களப்பின் ஆலயக் கதவுகள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டுள்ளது. சமபந்தி சாப்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்திய பிறகு ஆலயங்களில் ஆடு, கோழி, பலியிடுவதை நிறுத்த வேண்டுமென்று பெரும் போராட்டமே நடந்தது. கொத்துக்குளம், ஸ்ரீமாரியம்மன் ஆலயத்தில் நடத்திய போராட்டம் அடிதடியில் நடந்துமுடிந்தது.

1979 - இல் அமைச்சராகப் பதவி ஏற்றதும் ஆலயங்களில் மிருகப் பலியிடுதலை, சட்டமூலம் தடுத்து நிறுத்தினார். இலங்கையில் இப்போது ஆலயங்களில் 'பலி' நிறுத்தப்பட்டிருக்கின்றது. பகுத்தறிவு இயக்கத் தலைவராக இருந்து நடத்திய இயக்கங்கள் எத்தனை எத்தனை. பகுத்தறிவு இயக்கக் காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்டது. மட்டக்களப்பு மைதானத்தில் சகல சமூகத்தைச் சேர்ந்தவர்களையும், சலவைத் தொழிலாளி - சவரத் தொழிலாளி இசை வேளாளர்கள், சீவல் தொழிலாளி ஆகிய சமூகத்தை சேர்ந்தவர்களையும் மேடையில் அமர வைத்து நடத்திய கூட்டம் பெரும் போராட்டக் களமாக மாறியது.

அரசியல் போராட்டம் அதிபயங்கரமானது. தமிழக அரசுக் கட்சியை அவர் அறிமுகம் செய்தபோது அவர் சந்தித்த எதிர்ப்புகள் - அபாயங்களை நினைத்துப் பார்த்தால் "இந்த மனிதர்" இடம் இவ்வளவு துணிவு எப்படி வந்தது என்று எண்ணி வியந்தவர்கள் பலர். கூட்டங்களில் கல்லெறி தாராளம்; கூட்டம் முடிந்து பத்திரமாக வீடு செல்ல முடியாத அபாயம். அவர் பட்ட அடியின் தழும்புகளை இன்னும் அவர் வலது தோளில் காணலாம். களுதாவளையின் கூட்டத்தில் அவர் மீது வீசப்பட்ட கல் அவர் இடது கண்ணைப் பதம் பார்த்தது. அதன் தழும்புகள் இன்றும் இடது கண்ணில் காட்சி தருகின்றன. தேத்தாத் தீவில் அவர் கார் மறிக்கப்பட்டுத் தாக்கப்பட்டது.

வவுனியா மாநாட்டிற்கு அவர் சென்ற புகைவண்டி பொல நறுவாவில் இடைமறித்துத் தீக்கிரையாக்கப்பட்டது. நல்லவேளை வெலிகந்தை வாழ் தமிழ் மக்கள் அந்த அபாயத்தை அறிந்து மேற்கொண்டு பயணம் செய்யவிடாது அவரைத் தடுத்து நிறுத்திவிட்டார்கள். கொழும்பு சத்தியாகிரகத்தில் அவரைக் குறிவைத்துத் துரத்திய குண்டர்களின் காருக்கு டிமிக்கி கொடுத்து ஹல்ஸ்டோப் போலிஸ் நிலையத்தில் புகுந்து கல்லடித் தெருவைச் சேர்ந்த சார்ஜன்ட் பிரான்சிஸ் வீட்டில் தங்கியிருந்தார். 1952-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ம் தேதி யாழ்ப்பாணத்திலிருந்து மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திரு. பாயலுக்குச் சொந்தமான காரில் மட்டக்களப்பை நோக்கி வந்து கொண்டிருந்தோம். மறுநாள் மட்டக்களப்பில் நடைபெறவிருந்த சுதந்திர தின துக்க நாளில் கலந்துகொள்ள வந்து கொண்டிருந்தோம். நானும் வண்டியில் இருந்தேன். மதவாச்சியில் நாங்கள் வந்து கொண்டிருந்த வண்டியை நூற்றுக்கதிகமானவர்கள் பெரும் மரக்கட்டையைப் போட்டு மறித்தார்கள். வெகு சாதுர்யமாக அப்பெரும் அபாயத்திலிருந்து தப்பினோம். கார் தாராளமாக கல்லெறிகளை வாங்கிக் கொண்டது. மட்டக்களப்பு நகர சபை வரி உயர்த்தியபோது, வரியிறுப்பாளர் சங்கம் அமைத்து, செயலாளராக இருந்து நடத்திய கூட்டத்தில் பயங்கர கல்வீச்சுக்குள்ளானார். கோட்டை முனை போலீஸ் நிலையத்திலிருந்து அருகாமையில் இருந்த கள்ளுத் தவணையை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்குப் பெரும் போராட்டமே நடத்தினார். கைக்கூலிகளின் தாக்குதலுக்கு ஆளானார். துறைநீலாவணை கிராமத்தை ராணுவத்தினர் தாக்கிய மறுநாள் அங்கு சென்று அவர்களுக்கு ஆறுதல் வழங்கியதோடு மட்டுமல்லாமல் பாதுகாப்புகளும் செய்து கொடுத்தார். கல்லோயா பள்ளத்தாக்கில் இனக்கலவரம் மீண்டு, தமிழ்மக்கள் உயிரையும் உடமைகளையும் இழந்தபோது அங்கு சென்ற அவருடைய துணிவை எவ்வாறு பாராட்டுவது! தனிச்சிங்கள சட்டம் அறிமுகம் செய்யப்பட்டபோது மட்டக்களப்பு வாடி வீட்டுக்கு அருகில் ஒரு பெரிய யாகம் லபுணபுரி பாபர் தலைமையில் ஒரு சிலரோடு செய்த துணிவு.

தனது மோட்டார் வாகனத்தில் ஆங்கில எழுத்தை மாற்றி, தமிழ் எழுத்து பொறிக்கச் செய்தார். அதற்காக சிறைத் தண்டனை பெற்றுச் சிறை சென்றார். 1956ம் ஆண்டு மூன்று மாதங்கள் கொழும்பில் தடுப்புக்காவல் கைதியாக அடைக்கப்பட்டார். 1971ம் ஆண்டு இலங்கைத் தலைமை ராணுவ முகாமில் ஆறுமாத காலம் அடைக்கப்பட்டார். மட்டக்களப்பில் இலங்கை இராணுவத்தின் மேஜர் ஜெனரல் அவரைக் கைது செய்தார்.

மட்டக்களப்பில் ஆமன் கோணரில் இருந்த இளங்கோ அச்சகம் அரசாங்கத்தினால் பலதடவைகள் சீல்வைக்கப்பட்டது. 1983-ஆம் ஆண்டுக் கலவரத்தின்பின் காலி இராணுவ முகாமில் அடைக்கப்பட்டவர்களை அமைச்சராக இருந்தபோது சென்று பார்த்த துணிவை எப்படிப் பாராட்டுவது.

1986 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு தொகுதியில் மீண்டும் வெற்றிவாகை சூடுவதற்கு வாய்ப்பிருந்தும் இளைஞர்களின் எண்ணங்களுக்காக “நான் போட்டியிடவில்லை” என்று விலகிக்கொண்ட துணிவு யாருக்கு வரும். இன்றும் போட்டியிட்டாலும் வெற்றி அவருக்கே.

1956 முதல் 1989 வரை முப்பத்து மூன்று ஆண்டுகள் பாராளுமன்ற பிரதிநிதியாக இருந்த தொகுதியில் போட்டியிட மறுத்தாரே, இம்முடிவு எடுப்பதற்கு எவ்வளவு துணிவு வேண்டும்! இளைஞர்கள் மீது அவர் வைத்திருக்கும் பெரும் மதிப்பு காரணமாகவே, தோல்வியே காணாத தன் தொகுதியிலே போட்டியிலிருந்து ஒதுங்கி நின்றார். சொல்லின் செல்வர் திரு. இராஜதுரை ஒரு சாதனையாளர். சரித்திரம் படைத்தவர். அவருடைய வாழ்க்கை போராட்டமயமானது. மட்டக்களப்பு மண்ணின் வரலாற்றில் நன்றியுள்ளங்களினால் அவர் காலம் காலமாக நினைவுகூரப்படுவார். அவர் புகழ் அழியாது நிலைத்து நிற்கும்.

# "மட்டக்களப்பு மண்ணின் வரலாற்று நாயகன்"

கலைஜோதி, கலைமணி
இரா. பத்மநாபன்

சிலப்பதிகார கண்ணகிக்கும் யாழ்ப்பாண கடைசி மன்னன் சங்கிலியனுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்? ஆனால் தொடர்பு இருக்கத்தான் செய்கிறது. 1944–ஆம் ஆண்டு கண்ணகியாகக் காட்சி தந்த ஒருவர் 13 வருடங்களின் பின்னர், 1957–ஆம் ஆண்டில் சங்கிலிய மன்னனாகத் தோன்றினார்.

மட்டக்களப்பு மாநிலத்தின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த திரு. செல்லையா இராசதுரை அவர்கள்தான் இந்தப் புதிருக்கான விடை.

பி.யூ. சின்னப்பா – கண்ணாம்பா நடித்து, தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இலட்சோப இலட்சம் மக்களைக் கவர்ந்த ஜூபிட்டர் பிக்சர்ஸாரின் "கண்ணகி" திரைப்படத்தின் திரைக்கதை வசனத்தை எழுதியவர் இளங்கோவன். அடுக்கு மொழியில் அழகு தமிழில் அமைந்த அத்தனை வசனங் களையும் – ஒலிப்பதிவு சாதனங்கள் இல்லாத அந்தக் காலத்தில் – மனப்பாடம் செய்து ஒரு தப்புக்கூட இல்லாமல் மேடை நாடகமாக்கிய பெருமை திரு. இராசதுரை அவர்களையே சாரும். கொய்யாவளவு என்ற ஒரு பெரிய வளவினில் தனது 'மரத்தளபாடம் செய்யும்' நிலையத்தினை நிறுவியிருந்த திரு. ஸ்ரீபன் மற்றும் 'கொக்கோ' தம்பிராசா ஆகிய இருவரின் துணையுடன் நாடகம் எழுத்துருவம் பெற்றது. இதனை மேடை நாடகமாக்கத் துணிந்த இருவர் – திரு. ராசதுரை அவர் களின் மாமாவான திரு. அரியநாயகம் அவர்களும் 'கஷியர்' என்ற செல்லப் பெயருக்குரியவரான மருதமுனையைச் சேர்ந்த திரு. சகாபதனை அவர்களுமாவர்.

மதுரை ஒரிஜினல் போயிஸ் கம்பெனி எனும் நாடக குழுவுடன் வந்து மட்டக்களப்பிலேயே மணம் முடித்துத் தங்கிவிட்ட திரு. கோபால கிருஷ்ணர் அவர்களின் நெறியாழ்கையில் 'கண்ணகி' மேடை நாடகமாகத் தயாராகிக்கொண்டிருந்தது. இதில் கண்ணகி வேடம் தாங்கியவர் இராசதுரை அவர்களே!

நாடக ஒத்திகையைப் பார்ப்பதற்காகச் சென்ற என்னையே மாதவி பாத்திரமேற்க வைத்து விட்டனர். அப்போதுதான் முதன் முதலில் இராசதுரை அவர்களுடனான நெருக்கம் எனக்கும் ஏற்பட்டது. அன்று ஏற்பட்ட உறவு பின்னர் 'காதலாக'வே மாறி விட்டது என்றால் அது மிகையாகாது. கலையுலகத் தொடர்பு பின்னர் எழுத்துத்துறை, அரசியல் துறை என்று தொடரலாயிற்று.

'கண்ணகி' புளியந்தீவில் உருவாகி கோட்டை முனையிலுள்ள இம்பீரியல் படமாளிகை மேடையில் அரங்கேறியது. இந்நாடகத்தின் வெற்றி இளைஞர் வட்டாரத்தில் பெரும் சலசலப்பினை ஏற்படுத்தியது.

சைவ ஆசார விதி முறைகளில் நம்பிக்கை வைத்து ஆலயதரிசனம், விரத அனுஷ்டானங்களில் அதிக நாட்டம் கொண்டிருந்த எனக்கு இராசதுரை அவர்களே

அண்ணாவின் 'நல்ல தீர்ப்பு' என்ற சிறு நூலை முதன் முதலில் தந்து என்னுடைய பாதையில் பெரு மாற்றம் ஏற்படக் காரணமாயிருந்தார். பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பும் நோக்குடன் சித்ரா ஸ்டுடியோவில் பகுத்தறிவு இயக்கம் தொடங்கப்பட்டது.

மட்டக்களப்பு தொகுதியில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்ட திரு. ஆர்.பி. கதிராமர் அவர்களை ஆதரித்து மட்டக்களப்பு மைதானத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றே மட்டக்களப்பு மக்களுக்கு மட்டுமல்லாமல் தமிழ் கூறும் நல்லுலகுக்கும் திரு. இராசதுரை அவர்களை அறிமுகப்படுத்திற்று. அன்று அவர் ஆற்றிய உரையினைக் கேட்ட அனைவருமே "இதோ மட்டக்களப்பு மக்களை வழி நடத்த ஒரு இளந்தலைவன் உதயமாகி விட்டான்" என்று கூறத் தலைப்பட்டனர். இராசதுரை அவர்களின் எழுத்தாற்றல் எத்தகையது என்பதனையும் மக்கள் அறியத் தலைப்பட்டனர். 'லங்கா முரசு' என்ற மாத இதழ் ஒன்றினையும் அவர் வெளியிட்டார்.

தங்க மாலை, தங்க செயின், விரல்களில் மோதிரம் போன்ற நகைகளையும் அணிந்திருந்த திரு. இராசதுரை அவர்கள் தன்னுடைய பத்திரிகை நடத்தும் ஆர்வத்துக்கு எவ்வாறு மூலதனம் பெற்றார் என்பதனை அவருடைய தந்தையாரான திரு. செல்லையா அவர்கள் அறிந்து கொண்டமையினால் ஏற்பட்ட களேபரங்களை நான் நன்கு அறிவேன். தன்னிடமிருந்த நகைகளையே தன்னுடைய எழுத்தார்வத்துக்குத் தாரை வார்த்தார்.

தமிழரசுக் கட்சியின் ஸ்தாபித்தவர்களில் ஒருவரான திரு. இராசதுரை, கட்சியின் ஏடான சுதந்திரன் பத்திரிகையின் துணை ஆசிரியர் பதவியை ஏற்று கொழும்பு சென்றார். தினகரன் நாளேட்டின் துணை ஆசிரியராக இருந்த திரு. எஸ்.டி.எஸ். சுதந்திரன் ஆசிரியரானார். "வீரகேசரி" அமைப்பின் ஸ்தாபகர் திரு. பி.பி.ஆர். சுப்பிரமணியம் செட்டியார் அவர்களின் அந்தரங்கக் காரியதரிசியாக நியமனம் பெற்ற நான் அன்னாருடன் தூரகிழக்கு நாடுகளுக்குப் பயணமானேன். 1956 ஜனவரி முதல்வாரத்தில் சீனாவிலுள்ள கன்ரன் நகரிலிருந்து ஹொங்கொங் நகரை வந்தடைந்தபோது – ஏற்கனவே இருந்த ஏற்பாட்டின்படி எங்களுக்கான தபால்களும் வீரகேசரி இதழ்களும் – எம்மைக் காத்திருந்தன. வீரகேசரியில் நான் கண்ட ஒரு செய்தி என்னை உற்சாகக் கடலாக்கியது. "தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு தொகுதி வேட்பாளராக திரு. இராசதுரை நியமிக்கப்படலாம்" என்றிருந்தது. 'தேர்தல் தினத்தன்று வாக்களிப்பதற்காகாவது நான் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்து விடுவேன்' என்று அன்றைய தினமே திரு. இராசதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பிவைத்தேன்.

மட்டக்களப்பில் இராசதுரை அவர்களின் எழுச்சியையும் வளர்ச்சியையும் விமர்சிப்பதற்கென்றே தங்களை உயர்ந்த வர்க்கத்தினர் என்று கூறிக்கொள்ளும் பலர் இருந்தனர். அத்தகை யோரில் ஒருவராகக் கணிக்கப்பட்டவர்களுள் ஒருவரான திரு. பூபால ரெட்ணம் (வழக்கறிஞர்) தன்னுடைய சிங்கர் ரேசிங் மோட்டார்காருடன் காத்திருந்தார். அந்த வண்டியின் முன்புறம் மிகப் பெரிய – தமிழரசுக் கட்சியின் மஞ்சள் – சிவப்பு – பச்சை மூவர்ணக் கொடி பறந்துகொண்டிருந்தது. அதே வண்டியில் இல்லம் சென்று தாயாரை வணங்கியபின் வாக்குச்சாவடி சென்று இராசதுரை அவர்களுக்கு என் வாக்கினை அளித்தேன். வாக்களிக்கும் தகுதி பெற்ற நான் முதல் வாக்கினை அவருக்கு அளித்தேன்.

இராசதுரை பாராளுமன்ற உறுப்பினரானார். மட்டக்களப்பில் நாங்கள் விதைத்த விதைகள் நல்ல பலனைத் தரத் தொடங்கிவிட்டன. ஆகவே கொழும்பு சென்று 'வீரகேசரி' பதவியினை

ஏற்காமல் மட்டக்களப்பிலிருந்தே சேவை செய்வதென்ற முடிவினை எடுத்தேன். இராசதுரை அவர்களின் அலுவலகமாகவும் கட்சிப் பணிமனையாகவும் செயற்பட்ட அவருடைய இளங்கோ அச்சகம் எனது பணிக்கூடமாயிற்று. தமிழரசுக் கட்சியின் அமைப்பு – மற்றும் நிர்வாகச் செயலாளராகப் பணி தொடர்ந்தது.

இளங்கோ அச்சகத்தின் முன்புறமிருந்தது 'அஜந்தா போட்டோ' என்ற கலைக்கூடம். அன்று கலைஞராகவிருந்து இன்று பிரபல மருத்துவராக விளங்கும் டாக்டர் எம்.பி. குமார், தமிழ்நாட்டின் தலை சிறந்த திரைப்பட இயக்குநர் திரு. பாலு மகேந்திரா, கவிஞர் காசி ஆனந்தன், அண்மையில் சென்னையில் காலமான திரு. ஈழத்து இரத்தினம் போன்றோரெல்லாம் இராசதுரை அண்ணாவின் தம்பிமாராகப் புடம் போடப்பட்ட இடம் இந்த அஜந்தா ஸ்டுடியோவும் – இளங்கோ அச்சகமும்தான்.

திரு. இராசதுரையின் வளர்ச்சி பலதரப்பட்டவர்களின் பாராட்டினைப் பெற்றது. இருப்பினும் சிலருடைய பொறாமை வளரவும் காரணமாயிற்று.

யாழ்ப்பாண ராஜ்ஜியத்தின் கடைசி மன்னனான சங்கிலியனின் கதையை மேடை நாடகமாக எழுதினார் இராசதுரை. இதன் நெறியாழ்கையினை நான் ஏற்றிருந்தேன். மட்டக்களப்பு நகர மண்டபத்தில் இந்நாடகம் மேடையேறிய அன்றைய தினம் மிகப் பெரிய விபத்து ஒன்று நேர்வதற்கிருந்தது.

நாடகத்துக்கு வேண்டிய பொருட்கள் – தளபாடங்கள் எல்லாம் திரு. இராசதுரை அவர்களின் இல்லத்திலிருந்து முன்னதாகவே மேடைக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டன. நாடகத்தின் கடைசிக் காட்சியின் போது சங்கிலியன் வெள்ளையனால் சுட்டுக் கொல்லப்படுவது போன்ற காட்சி. ஆனால் அதற்காக எடுத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி வந்து சேரவில்லை. கால தாமதமாகியே வந்து சேர்ந்தது. வெள்ளைக்காரராக வேட மணிந்தவரின் கைக்கு துப்பாக்கி போய்ச் சேர்வதற்குள் நான் அதனை வாங்கி சர்வ சாதாரணமாக உடைத்துப் பார்த்தேன். என் இரத்தம் சில்லிட்டது. வீட்டில் வைக்கும்போது வெறும் துப்பாக்கியாக இருந்தது – மேடைக்கு வந்து சேரும்போது அதனுள் உயிருள்ள உயிர்குடிக்கும் என்.ஜி. தோட்டா. எப்படி வந்தது?

இந்தக் கைங்கரியத்தைச் செய்த சூத்ரதாரி யார் என்பது இன்னும் துலக்கப்படாத மர்மமாகவே இருந்துவருகிறது.

இந்தச் சம்பவத்தை பெரிது படுத்தாமல் அந்தரங்கமாகவே வைத்திருந்து நாடகம் முடிந்த பின்னரே வெளிப்படுத்தினேன். சங்கிலியன் நாடகத்தை பல்வேறு இடங்களிலும் (கொழும்பு யாழ்பாணம், மன்னார், திருகோணமலை, கண்டி போன்ற இடங்களிலெல்லாம்) கொண்டுவந்து மேடையேற்றும்படி பல கோரிக்கைகள் இருந்தபோதும் அவற்றுக்கெல்லாம் இடம் தர முடியாமல் செய்தது இத் தோட்டாதான்.

1958–ஆம் ஆண்டு மே மாதம் இனக்கலவரம் தோன்றுவதற்கும் இராசதுரை கொலை முயற்சியும் மற்றுமொரு காரணமாக இருந்தது. அதே ஆண்டு மே தினத்தைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தின் பல ஊர்களிலும் தமிழரசுக் கட்சிக் கூட்டங்களையும் 'சூடு சாம்பலாச்சு போடியாரே' என்ற நகைச்சுவை நாடகத்தையும் நடத்தும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தன. தொடர்ந்து இவை நடைபெற்று வந்தன.

மே முதல் நாளன்று மட்டக்களப்பு மைதானத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் நடைபெற்ற மே தின விழா முடிவில் அரங்கேறியதுதான் "சூடு சாம்பலாச்சு போடியாரே" ஓரங்க நாடகம் அன்றாட

அரசியல் கருத்துக்களை நகைச்சுவையுடன் அலசுவதாக அமைந்த இந் நாடகம் மக்களை வெகுவாகக் கவர்ந்தது.

சில நாட்களில் இரு கிராமங்களில் ஒரே நாளில் கூட்டங்களும் நாடகமும் நடைபெறும். இவை முடிந்ததும் இரு மோட்டார் கார்களில் திரு. இராசதுரையுடன் அறப் போரணித் தலைவர் ஆர்.டபிள்யூ.வி. அரியநாயகம் போன்றோருடன் செங்கலடியிலுள்ள – அந்நாள் கல்குடா பா. உறுப்பினர் திரு.பொ. மாணிக்கவாசகர் அவர்களுடைய இல்லம் செல்வோம். திரு. மாணிக்க வாசகரும் கூட்டங்களுக்கு வருவார். திருமதி. மாணிக்கவாசகரின் சுவையான சுக்கு காப்பியை எதிர்பார்த்து நாங்கள் முன் மண்டபத்தில் உரையாடிக்கொண்டிருப்போம். திரு. இராசதுரை உள் மண்டபத்தில் உள்ள சாய்வு நாற்காலியில் ஓய்வெடுப்பது வழக்கம்.

அன்றிரவு 11.00 மணியிருக்கும், வீட்டின் உட்புறத்தே மிகப் பயங்கரமான வெடிச் சப்தம் எழுந்தது. எங்கணும் புகை மண்டலம் சூழ்ந்தது. புகை அடங்கியதும் ஆராய்ந்ததில், திரு. இராசதுரை ஓய்வெடுக்கும் சாய்வு நாற்காலி இருக்கும் அதே இடத்திலுள்ள ஜன்னலின் அருகே – வெளிப்புறத்தில் – வீட்டுச் சுவருக்கும் வெளி மதிலுக்குமிடையே பெரும் பள்ளம் தோண்டப்பட்டிருந்தது. சுவரிலும் மதிலிலும் சிராய்ப்புகளும் காணப்பட்டன. மதிலுக்கு வெளியே தெருவோரத்தில் 'டைனமைற் திரிகள்' தீப்பெட்டி போன்றவை காணப்பட்டன.

செங்கலடி, ஏறாவூர் ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் மக்கள் திரளாக வந்து குவிந்தனர். இந்த வெடியினை வெடிக்க வைத்த மூவர், அரை மைல் தூரத்திலிலுள்ள ராஜா திரையரங்கினுள் புகுவதனையும் பார்க்க நேர்ந்தமையினால் அவர்கள் இனங்காணப்பட்டு ஏறாவூர் போலீசார் வசம் ஒப்படைக்கப்பட்டனர்.

இத்தனைக்கும் திரு. இராசதுரை அன்று மாலையே ரயிலேறி கொழும்பு சென்றுவிட்டார். இருப்பினும் ஒவ்வொரு நாளும் கூட்டங்கள் முடிந்து திரு. மாணிக்கவாசகரின் இல்லம் திரும்பு வதையும் குறிப்பிட்ட இடத்தில் இராசதுரை ஓய்வெடுப்பார் என்பதனையும் நன்கு வேவு பார்த்து, அன்னாரைத் தீர்த்துக்கட்டவே இந்த வெடி முயற்சி இடம் பெற்றுள்ளது என்பது தெளிவாகிறது.

"சிங்களம் மட்டும் சட்டம்" 1956–இல் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அம்பாறையிலும் புறத்தேயுள்ள குடியேற்றப் பிரதேசங்களிலும் இனக்கலவரம் மூண்டது போல் 1958–ஆம் ஆண்டு மே மாதம் திரு. இராசதுரை கொலை முயற்சியைத் தொடர்ந்தும் இனக்கலவரம் ஆரம்பமாயிற்று. இதனால் அதே மாதம் பிற்கூறில் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக்கட்சி மாநாட்டுக்கும் திரு. இராசதுரை செல்லமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

மட்டக்களப்பு மாநிலத்தை சகல துறைகளிலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்ற பேரவா கொண்டுழைத்தவர் திரு. இராசதுரை.

**மட்டக்களப்பு மண்ணிற்கு பெருமை சேர்த்தவர்கள் வரிசையில் எனது ராஜு முதலிடம் வகிக்கின்றார். இந்த மண்ணின் மைந்தன், வரலாற்று நாயகன் எனது ராஜு.**

# "அண்ணன் இராசதுரை"

அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம். மசூர் மவ்லானா

அன்று நான், மட்டக்களப்பிலுள்ள ஒரு உயர்தரக் கல்லூரியில் ஒரு மாணவன். தமிழ் மேடைப் பேச்சுக்கள், இலக்கிய விழாக்கள் எங்கு நடைபெற்றாலும் அங்கு முதல் வரிசையில் இருந்தவன் நான். அச் சந்தர்ப்பத்தில்தான் மட்டக்களப்புப் பிரதேசத்திலேயே மிகச் சிறந்த ஒரு பேச்சாளனாகக் கருதப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட - எல்லோரது உள்ளங்களையும் கவர்ந்த ஒரு பேச்சாளனாக எனது அண்ணன் செல்லையா இராசதுரையை நான் சந்தித்தேன். நான் அவரை நேசித்தேன். அவர் என்னை நேசித்தார். இருவரும் அண்ணன் தம்பி என்ற உயரிய நட்புடன் பழக ஆரம்பித்தோம்.

அண்ணன் ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்தவரல்ல - எனினும் அவரிடம் ஒரு பெரும் சொத்திருந்தது. அதுதான் பேச்சுவன்மை. அடுக்கு மொழியில் - அழகு தமிழில் அவர் பேசும்போது ஆயிரக்கணக்கான இளைஞர்கள் - வயோதிகர்கள் - ஆண்கள்- பெண்கள் சளைக்காது சலிக்காது - நின்றுகொண்டும் இருந்துகொண்டும் பல மணித்தியாலங்கள் - அப்பேச்சினைக் கேட்டு ரசித்துக்கொண்டிருப்பர்.

தமிழ் பேசும் மக்களது விடுதலை வேணவாவை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கட்சிதான் இலங்கைத் தமிழரசுக் கட்சி. அண்ணன் இராசதுரையின் ஆணித்தரமான - ஆழமான - அழகு தமிழிலான மேடைப் பேச்சுத்தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் இ. த. அரசுக் கட்சியை வளர்ப்பதற்கு முக்கிய ஆணிவேராக அமைந்தது.

1956 ஆம் ஆண்டு மட்டக்களப்பு தொகுதியில் போட்டி இடுவதற்கென இ. த. அ. கட்சி அண்ணன் இராசதுரையைத் தெரிவு செய்தது. பெரும் பெரும் சட்ட

வல்லுனர்கள், பணம் படைத்தவர்கள் கல்விமான்கள், கல்லூரி அதிபர்கள் பெரும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரின் பலத்த - பயங்கரமான எதிர்ப்புகளின் மத்தியில் அண்ணன் போட்டியிட வேண்டியிருந்தது.

இராசதுரை அமோக வெற்றியினைப் பெற்றதும் அவரது செல்வாக்கும் பெருமையும் அகில இலங்கையிலும் சிறப்பாக வடகிழக்கு மாகாணங்களிலும் கொழும்புப் பிரதேசத்திலும் கொடி கட்டிப் பறக்கத் தொடங்கிவிட்டது. பாராளுமன்றத்திலும் அவரது சிம்மக்குரல் ஒலிக்கத் தொடங்கியதும் இன்னும் அவரது புகழ் மேலோங்கத் தொடங்கியது. அரசியல் மேடைகளில் மட்டுமல்ல, இலக்கிய மேடைகளில் மட்டுமல்ல - மதசம்பந்தப்பட்ட விழாக்களிலும், வைபவங்களிலும் அண்ணனது பேச்சுக்கென ஒரு தனி இடத்தை வகுத்துக் கொண்டார். இலங்கைத் தமிழரசுக் கட்சியை வடகிழக்கு மாகாணங்களில் - சிறப்பாக கிழக்கு மாகாணங்களும் - முஸ்லிம் மக்கள் மத்தியிலும், வேரூன்றச் செய்வதற்கு அண்ணன் இராசதுரை ஆற்றிய சேவையினை அவரோடு சேர்ந்து அப் பணியில் ஈடுபட்ட என்னால் மறக்கமுடியாது. சில சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கும்போது நடு நிசியாகியும், ஏன் மறுநாள் காலை இரண்டு மணிவரை அண்ணனின் பேச்சினைக் கேட்பதற்கு மக்கள் வெள்ளம் சிறப்பாக பெண்கள் காத்துக் கொண்டிருந்த சந்தர்ப்பங்களை நேரடியாகக் கண்ட என்னால் என்றுமே மறக்க முடியாது.

அண்ணன் இராசதுரை ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றார். இந்து மதத்திற்கும் கலாச்சாரத்திற்கும், தமிழ் மொழிக்கும் தமிழ்க் கலாச்சாரத்திற்கும் தமிழ்ப் பிரதேச வர்ச்சிக்குமாக அண்ணன் பல அரும்பெரும் சேவையினை செய்துள்ளதை யாரும் இலகுவில் மறக்க முடியாது.

ஏற்கனவே கூறியது போன்று மிகவும் எளிமையான சூழலில் பிறந்து வளர்ந்து அரசியலில் குதித்த அண்ணன் ஒரு தமிழன் - அதுவும் மட்டக்களப்பில் பிறந்த ஒரு தமிழ் மகன் - இலகுவில் பெறமுடியாத அத்தனை பதவிகளையும் அண்ணன் இராசதுரை பெற்றார். பாராளுமன்ற உறுப்பினராக - மாநகரசபை முதல்வராக - அமைச்சராக - வெளிநாட்டுத் தூதுவராக - கடமை புரிந்துள்ளார். வேறெந்தத் தமிழராவது, இலங்கையின் எப் பிரதேசத்திலிருந்தாவது இத் தனித்துவமான சிறப்பு மிக்க பதவிகளை ஒன்றன்பின் ஒன்றாக வகித்த பெருமை பெற்றவராக இருந்திருக்க மாட்டார். அந்தப் பெருமை அண்ணன் இராசதுரைக்கு மட்டுமே உரியதாகும்.

# தமிழ் பேசும் மக்கள் நெஞ்சம் நிறைந்தவர்

அமைச்சர் செ. இராசதுரை அவர்கள் நாற்றிசையும் புகழ்பரவ வரலாறு படைத்த சிறப்பினர். வரலாற்றுத் தொன்மையும் இயற்கை வளமும் வெண்ணிலவில் ஏரியில் மீன்பாடும் உயர்சிறப்பும் உள்ள மட்டுநகரைப் பிறந்த அகமாக உள்ளவர்.

முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகள், புலவர்மணி பெரிய தம்பிப் பிள்ளை முதலாய தமிழ்ப் பேரறிஞர்களை உலகினுக்குத் தந்த மட்டுநகர்த் தமிழக இளைஞரான இராசதுரையைத் தமிழிலக்கிய அறிவும் தமிழ்ப்பற்றும் ஆர்வமும் உள்ளவராக ஆக்கிச் சமுதாயப் பணிகளில் ஈடுபடச் செய்தது.

நேர்மையான அரசியல் அறிஞர் – இலங்கைக் காந்தி என உலகின் உயர் மதிப்புப் பெற்ற மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் தமிழரசு இயக்கத்தில் சேர்ந்து அரசியற் சொற்பொழிவுகளொடு தமிழிலக்கியச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தித் தமிழ்ப்பேசும் மக்கள் தமிழ்ப்பற்றும் ஆர்வமும் உள்ளவராக ஆவதற்குப் பெரும் பணி செய்தார்.

தமிழ்ப்பேசும் மக்களின் நன்மதிப்புக்கு உரியவராய் இருந்த இளைஞர் இராசதுரை அவர்கள். பாராளுமன்ற உறுப்பினராகவும் பின்பு அமைச்சராகவும் ஆகும் வாய்ப்புகளைப் பெற்றார். இளைஞரான இராசதுரை அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரானமை நாட்டிற் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. பாராளுமன்றத் திலே நல்ல தமிழிலே உரை நிகழ்த்தித் தமிழிலக்கியத்தினதும் தமிழ் மொழியினதும் வளத்தினை வளர்த்தவர்களுள் அமைச்சர் செ. இராசதுரை குறிப்பிடத்தக்கவர். மிக நீண்ட காலம் பாராளுமன்றத்தின் உறுப்பினராகத் தொடர்ந்து பணிபுரியும் பெருமையையும் அமைச்சர் இராசதுரை பெற்றுள்ளார்.

கேட்டார்ப் பிணிக்குந்தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் ஆற்றல் உள்ளவர். சொல்ல வேண்டியவற்றை சொல்ல வேண்டிய இடத்தில் சொல்ல வேண்டிய வகையிற் சொல்லுந்திறன் உள்ளவர். பாராளுமன்றத்திலும் நாட்டிலும் மிக்க பயனும் சிறப்பும் உள்ளன. தூய நோக்கொடு கருத்துகளை வெளியிட்டார்.

அமைச்சர் இராசதுரை அவர்களின் சொற்பொழிவுகளில் திருவள்ளுவர், கம்பர், சங்கப் புலவர்கள், நாவலர், விபுலானந்தர், பாரதியார், பாரதிதாசன் பெரியார் ஈ.வெ.ரா., அறிஞர் அண்ணா, காந்தியடிகள் உலக அறிஞர்கள் ஆகியவர்களின் அறிவுரைகள் செறிந்திருக்கும். செயலாற்றலும் உள்ளவர்.

இவர் அமைச்சரான போது இவரது இலட்சிய உணர்வுகள் சில நிறைவாகும் வகையில் இவர் சார்ந்த தமிழ்மொழிக்கும் சமயத் திற்கும் பிரதேசத்திற்கும் பணிகள் செய்தற்கும் அமைச்சு இவருக்குக்

கிடைத்தது. தமக்குக் கிடைத்த அமைச்சுப் பொறுப்பைப் பயன்படுத்தி சிறந்த சில பணிகளை நிறைவேற்றி வருகிறார்.

அகில உலக இந்து மகாநாட்டையும் அசுவமேத யாகத்தையும் இலங்கையில் முதன்முதலாக நிறைவேற்றி வைத்தார். தமிழ் அறிஞர் களுக்கும் கலைஞர்களுக்கும் பொற்கிழியும் விருதும் வழங்கிச் சிறப் பித்தார். விபுலானந்தர் இசைக் கல்லூரியையும் நாவலர் மணி மண்டபத்தையும் நிறுவி வளர்த்து வருகிறார். சைவத் திருக் கோயில்கள் சிறப்பாக அமைவதற்கும் அவை சிறப்பாக விளங்கு வதற்கும் பெரிதும் உதவி வருகிறார். கதிர்காமப்பிள்ளைத் தமிழ், சைவத்திருத்தல வரலாறுகள், சேர். பொன் அருணாசலம் கட்டுரைகள், மதங்கசூளாமணி ஆகிய அரிய நூல்களை வெளியிட் டுள்ளார். புதிதாக வெளிவரும் நூல்களை விலையாகப் பெற்று நூல்கள் வெளிவருவதற்கு ஊக்கந்தருகிறார்.

பனம்பொருள்* அபிவிருத்திச் சபையையும் உற்பத்தி நிலையங் களையும் விற்பனை நிலையங்களையும் நிறுவிப் பனையினதும் பொருளாதாரத்தினதும் வளத்திற்கு வழிவகுத்துள்ளார்.

அமைச்சர் அவர்கள் கடல் கடந்த நாடுகளின் தமிழ்ப் பணிகளிலும் ஆர்வம் உள்ளவர். தமிழகத்திலும் மலேசியாவிலும் நிகழ்ந்த அகில உலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகளின் பங்கு பற்றி அந்நாடு களின் பாராட்டைப் பெற்றார். கடந்த ஆண்டு மலேசியாவில் நிகழ்ந்த உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு இந்நாட்டி லிருந்து அமைச்சர்களும் பாராளுமன்ற உருப்பினர்களும் அறிஞர் களும் கலைஞர்களும் பங்கு பற்றுதற்கு உதவினார்.

தமிழ்ப்புலவர்களையும் சமய ஆசாரியர்களையும் ஆன்மீக மகான் களையும் பெரிதும் மதித்துப் போற்றும் அமைச்சரின் பண்பு பெரிதும் பாராட்டற்பாலது. இதனால் ஏனையோரும் அவர் களைப் பெரிதும் மதித்துப் போற்ற வழிவகுத்துள்ளார். மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு என்பதற்கிணங்க அமைச்சர் விளங்கினார்.

பண்டைய தமிழ்ச்சங்கங்களின் மரபின் வழி அமைத்து தமிழ்ப்பணி ஆற்றும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தோடு அமைச்சர் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினரான காலம் முதல் முப்பது ஆண்டுகளுக்கு மேலான தொடர்பு உண்டு. இச்சங்க விழாக்களிலும் நிகழ்ச்சி களிலும் பங்குபற்றிச் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி சங்க வளர்ச்சிக்கு உதவினர். அமைச்சரானபின் இச்சங்கத்தின் பல்வகைப் பணிகளுக்கு பெரிதும் உதவி வருகிறார். இச்சங்கத்தின் பிரதான பணிகளுள் ஒன்றாக அச்சகம் நிறுவுவதற்கு ஒருலட்ச ரூபாய் வழங்கியுள்ளார். தமிழ்நாடு அரசு ஒருலட்ச ரூபாய் நூல் களை இச்சங்க நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்குவதற்கு உறுதுணையாக உதவினார்.

பண்டைய அரசர்களும் அமைச்சர்களும் தமிழையும் சமயத்தையும் கலைகளையும் வளர்த்துப் புலவர் பாடும் புகழுக்கு உரியவர் ஆனார். அவ்வகையாகப் பல்வகைப் பணிகளை ஆற்றிய அமைச்சர் அனைவரினதும் பாராட்டை பெறுதல் மிகப் பொருத்தமானதே.

அமைச்சர் அவர்கள் மேலும் ஆற்ற வேண்டிய பணிகள் உள்ளன. அனைத்துச் செல்வங்களும் அனைத்து வாய்ப்புகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்வதற்கு எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவானாக.

அமைச்சரின் பணிகள் வாழ்க! வளர்க! உயர்க!!!

*(க.இ.க. கந்தசுவாமி, பொதுச்செயலாளர் - கொழும்புத் தமிழ்ச்சங்கம்)*

# "அரசியல் அரங்கில் ஒளி தருபவர்"

டாக்டர். க. வேலாயுதபிள்ளை
தலைவர்- கொழும்பு விவேகானந்த சபை

பேனா முனை, ஈட்டி முனையிலும் பலம் மிக்கது என ஓர் ஆங்கில அறிஞன் பகன்றான். சரித்திரச் சான்றுகளும் இந்நிலைக்குச் சான்றான். உவோல்டேயர், தாந்தே ஆகியோரின் எழுத்துக்களே பிரான்சு தேச அரசியற் புரட்சிக்கு வித்திட்டு, மன்னராட்சி நீங்கி மக்களாட்சி மலர வழி அமைத்தன. கார்ல் மாக்சின் தத்து வார்த்த எழுத்துக்களே ஒரு சோவியத் சோசலிசக் குடியரசிற்கு மூலகாரணமானது என்றும் இம்மூலத்திலிருந்தே உலகனைத்தும் சோசலிசிம் என்ற கொள்கை பரவியதும் அறிந்ததே. சுப்பிர மணிய பாரதியாரின் கவிதா எழுத்துக்களும் கட்டுரைகளும் இந்தியத் தமிழகத்துக்கு மட்டுமின்றி அண்மை நாடுகளிலும் விடுதலை உணர்வையும் சமுதாய சீரமைப்பு உணர்வுகளையும் மக்கள் மத்தி யில் வளரச் செய்தன. கவிஞர் சுப்புரத்தினம் என்ற பாரதி தாசனின் தொண்டு இவ்வரிசையினுள் அடங்குகின்றது. அறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி ஆகியோரின் எழுத்துக்களும் பேச்சாற்றலும், தமிழகத்தில் பெரும்புயலாய் வீசிச் சமுகச் சீர்த் திருத்தத்தையும், அரசியல் அரங்கில் மாற்றத்தையும் உண்டாக்கின அக்காற்றின் தாக்கமே அயல் நாடாகிய எம் நாட்டில், ஒரு எழுத்தாளனைப், பேச்சாளனைக், கலைஞனைத், தமிழ் அறிஞனை, அரசியல்வாதியை, அமைச்சரைத் திரு. செ. இராசதுரைஅவர்களில் எம்மைக் காண வைத்தது என்பதை அவரை ஆரம்பத்திலிருந்து அவதானித்தோர் அறிவர்.

இந்து சமயம் தமிழ் மொழி ஆகியவற்றின் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்கும் இலங்கையும் அதன் பணியினைச் செய்யாவிடில் இந் நாட்டிலுள்ள தமிழர் தம் பங்கினைச் செய்ய முன்வரவில்லை என வையத்தோர் கூறக்கூடிய மாபழி அஞ்சினராய் இவர் ஆற்றிய பணி களை விபரிக்கின் பெருகும் இந்து மதத்தின் "பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிக் கிடக்குது சேரவாருஞ் செகத்தீரே" என்ற தோரணையில், அனைத்துலக இந்து மகாநாட்டை இலங்கையில் கூட்டிய பேரும், பெருமையும் அமைச்சரைச் சார்கின்றது.


எழுத்தாளன் ஒருவனை ஊக்கவும் போற்றிக் கௌரவிக்கவும் ஓர் எழுத்தாளனாலேயே பெரிதாக இயலும் என்பதன் முடிவு, அமைச்சர் எழுத்தாளரைக் கௌரவித்ததிலும், எழுத்தாளர் அமைச்சருக்கு விழா எடுக்குஞ் செயலிலும் இன்று நாம் காண்கிறோம். ஒரு சமுகத்தின், நாட்டின் பாரம்பரியம் அந்நாட்டின் எழுத்தோவியங்களில் பொதிந்து கிடக்கின்றன. அப்பண்டையப் பனுவல் பல இரவாது நிலவ வழி அமைப்போர் பரம உபகாரி யாவர். எம் நாட்டுப் படைப்பு நூல்கள் நிலவ அவை மறு பதிப்பீடு செய்யும் முயற்சியில் அமைச்சர் ஈடு கொள்வதாலும், பாரம் பரியத்தின் அறிவு வளர்க்கப்படல் வேண்டும் என்னும் நோக்குடன் எம் பண்பாட்டுக் கலைக்களஞ்சியம் உருவாக ஈட்டும் பெரு முயற்ச்சியாலும் இவர் எமது பரம உபகாரி என்ற பாராட்டைப் பெறுகின்றார்.

இன்று அரசியல் அரங்கில் ஒளிதரும் அமைச்சரிடம் மங்கிக்கிடக்கும் எழுத்துவன்மை மீண்டும் ஒளி தரவேண்டும் மிளிர வேண்டும் என்ற எழுத்தாளரின் ஆர்வம் உரிய பலனை ஈட்டுவதாகுக. அரசியல்வாதி என நோக்குவோருக்கு அவருட்பதிந்துள்ள ஏனைய ஆற்றல்கள் அறிமுகமாகா.

*"மரத்தை மறைத்தது மாமதயானை*
*மரத்துள் மறைந்தது மாமதயானை*
*பரத்தை மறைந்தது பார்முதல் பூதம்*
*பரத்துள் மறைந்தது பார்முதல் பூதம்"*
*இன்பமே சூழ்க என அவரை வாழ்த்துகின்றோம்.*

அடக்கமுடைமையே எல்லா நன்மைகளுக்கும் நற்பாதை வகுக்கின்றது.

– நபிகள் நாயகம் (ஸல்)



# "மட்டக்களப்பு மண்ணின் மைந்தன்"

எஸ். ஆரோக்கியம்

1957 ஆம், ஆண்டு பெப்ரவரி மாதம் 3ம் நாள், இரவு நடுநிசி 12மணி. இடம் மதவாச்சி சந்தி. இன்று நினைத்தாலும் உடம்பு ஒருகணம் நடுங்குகின்றது. யாழ்ப்பாணம் மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் சுதந்திரதின பகிஷ்கரிப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு மறுநாள் மட்டக்களப்பு மைதானத்தில் நடைபெறவிருந்த சுதந்திரதின பகிஷ்கரிப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ள, சொல்லின் செல்வர் இராசதுரை காரில் திரும்பிக்கொண்டிருந்தார். கார்களில் சிங்கள ஸ்ரீ பொறிக்கப்பட்ட காலம். புளியந்தீவு மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. றபாயல் அவர்களின் புதிய மொரிஸ் மைனர் காரில் யாழ்ப்பாணம் சென்றிருந்தோம். காரில் நானும், றபாயல், செல்வநாயகி, அண்ணன் தங்கராசா, சாரதி கணேஷ் சொல்லின் செல்வரோடு பயணம் பண்ணினோம். மதவாச்சி சந்தியில் ஒரு பெரிய கூட்டம் கூடிநிற்பது தெரிந்தது. சந்தியை நெருங்கியதும் பல 'டோர்ச் லயிற்' கள் காரை நோக்கி ஒளியைப் பாய்ச்சின. கண நேரத்தில் பாதையில் சில மரக்கட்டைகள் போடப்பட்டன. கல்லெறிகள் வேறு. காருக்குத் தடியடிகள் வேறு. தங்கராசா காரைச் சாமர்த்தியமாக அப்படியும்-இப்படியும் திருப்பி கூட்டத்திலிருந்து வேகமாகத் தப்பிவிட்டோம். காரில் றபாயல் அவர்களின் துப்பாக்கி இருந்தது. றபாயல் துப்பாக்கியில் தோட்டாக்களை மாட்டினார். இத்தனைக்கும்

சொல்லின் செல்வர் பதட்டமடைந்தாரில்லை. தைர்ய மூட்டிக் கொண்டிருந்தார். அவருடைய நெஞ்சுறுதியைக் கண்டு அக்காரில் நாங்கள் ஆச்சரியப்பட்டோம். தமிழ் ஸ்ரீ பொறிக்கப்பட்டிருந்தது. நாளை மட்டக்களப்பு மைதானத்தில் நடைபெறவிருக்கும் சுதந்திரதின பகிஷ்கரிப்புக் கூட்டத்தில் கலந்துகொள்வதைப் பற்றியே கவலைப் பட்டுக் கொண்டிருந்தார். நகரில் அதே போல கூட்டம். ஒரு கணம் துணுக்குற்றோம். அக்கூட்டம் சுதந்திரதினக் கொண்டாட்டத்திற்கு நகரை அலங்கரித்துக் கொண்டிருந்தது. நாங்கள் சுதந்திர பகிஷ்கரிப்புக் கூட்டத்திற்கு மட்டக்களப்பை நோக்கி விரைந்து கொண்டிருந்தோம். சொல்லின் செல்வர் மிகுந்த தைர்யசாலி என்று கேள்விபட்டிருந்தோம். ஆனால் அன்று நேரில் கண்டோம்.

பல வருடங்களுக்குமுன் நடைபெற்ற சம்பவம் ஒன்றைப் பின்பு றபாயல் அவர்களின் அண்ணா மத்தியூ சொன்னார். மட்டக்களப்பு மைதானத்தில் ஒரு பெரும் கூட்டத்தை சொல்லின் செல்வர் ஏற்பாடு செய்திருந்தார். அக்கூட்டத்தில் இந்தியாவிலிருந்து இலங்கை வந்திருந்த டார்பிடோ ஜனார்த்தனம், அருப்புக்கோட்டை இராமசாமி அவர்கள் பேசுவதாக இருந்தது. மட்டக்களப்பு சரித்திரத்தில் முதல் தடவையாக சாதி ஒழிப்புக்குச் சாவு மணி அடித்த கூட்டம் அது. செய்யும் தொழிலினால் தாழ்ந்தவர்கள் என்று ஒதுக்கப்பட்ட மக்கள் தலைவர்களை மேடைக்கு அழைத்து அறிமுகம் செய்து பேச்சாளர் களுக்கு மாலை அணிவிக்கச் செய்திருக்கின்றார் சொல்லின் செல்வர்.

ஆலயத்தின் கதவுகளைத் தாழ்த்தப்பட்டோருக்குத் திறந்து விடவேண்டுமென்று போராட்டம் நடத்திய அவர்மீது மேல்அதிகாரி ஆத்திரம் அடைந்திருந்த காலம். இக்காட்சியை அவர்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. கூட்டத்தில் சொல் மாரிக்கு மத்தியில் கல் மாரி. அம்பு போல மேடையில் பாய்ந்து ஏறிய சொல்லின் செல்வர் இந்தியப் பேச்சாளர்களை ஒரு காரில் ஏற்றி 'கிங்ஸ் ஹோட்டலில்' பத்திரமாகச் சேர்த்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்திருக் கின்றார்.

வவுனியாவில் நடைபெறவிருந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கு மட்டக்களப்பிலிருந்து தொண்டர்களுடன் புகை வண்டியில் சொல்லின் செல்வர் பயணமாகிக் கொண்டிருந்தார். பொலநறுவாவில் புகைவண்டியைத் தாக்க ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. இச்செய்தியை வெலிகந்தையின் சிகை அலங்கார நிலையங்கள் நடத்திய எம்மவர்கள் எப்படியோ அறிந்து கொண்டார்கள். வெலிகந்தையைப் புகையிரதம் சென்று அடைந்ததும் எங்களவர்கள் பாய்ந்து சென்று, புகைவண்டியில் ஏறி நிலைமையை அவருக்குச் சொன்னார்கள். அவர் கேட்பதாக இல்லை. புகையிரத நிலைய அதிகாரி ஒரு தமிழர். பொலநறுவ புகையிரத நிலையத்தில் பெரும் கூட்டம் திரண்டிருப்பதை தொலைபேசி வழி அறிந்து, பயணத்தை தொடரவேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டிருக்கின்றார். என்னால் என்னோடு பயணம் செய்யும் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் தாக்கப்படுவதை நான் விரும்பவில்லை என்று தொடர்ந்து பயணம் செய்யாமல் இறங்கிக்கொண்டார். அப்புகை வண்டி பொலநறுவையை அடைந்ததும் அடித்து நொறுக்கப் பட்டுத் தீக்கிரையானது.

வெலிக்கந்தையில் அலங்காரநிலையம் நடத்தியவர்கள், வீடுகள் தேடிவந்து, ஒவ்வொருவருக்கும் நன்றி கூறினார், சொல்லின் செல்வர். அவருடைய வாழ்க்கையில் நான் அறிந்ததும் மற்றவர்கள் சொல்ல அறிந்ததும் பல. போராட்டமே அவர் வாழ்வாக அமைந்தது. தீண்டாமையை ஒழிக்க போராடினார். ஆலயங்களில் மிருக வதைக்கு எதிராகப் போராடினார். சமத்துவ அமைப்பு காண போராடினார். அரசியலில் எண்ணற்ற எதிர்ப்புகளைச் சந்தித்துப் போராடினார். மயக்கும் புன்னகையால் அனைத்தையும் மறந்து செயல்படுவார். அனைவரையும் மயங்கவைப்பார். மட்டக்களப்பு நகரின் மத்தியில் என் சிகை அலங்கார நிலையம் இருந்தது. பாராளுமன்ற உறுப்பினரா வதற்கு முன் நிலையத்திற்கு வருவார். பாராளுமன்ற பிரதிநிதியான பின்னும் நிலையத்திற்கு வருவார். பலர் அவரிடம் சொல்லியிருக் கிறார்கள் 'நீங்கள்' இப்போது எம்.பி. சிகையலங்கார நிலையத்திற்குப்

போவதை நிறுத்துங்கள்" என்று, "நிலைகள் நிரந்தமானவையல்ல ; பதவிகள் வரும், போகும். அதற்காக நிலைகளை நாம் உயர்த்திக் கொள்ளக்கூடாது. ஒரே நிலையில் என்றும் இருந்தால் ஏற்றங்களும் இறக்கங்களும் இதயத்திற்குத் தொல்லை தராது. இருதய நோயும் வராது" என்று சொல்லுவார். அமித்கனி வீதியில் 1 வது மைல் கல்லில் இருந்த திரு. கணபதிப் பிள்ளை ஜோதிடர், கம்யூனிஸ்ட் கட்சி கிருஷ்ண குட்டி எல்லோருடனும் என் அலங்கார நிலையத்தில் மணிக்கணக்காகப் பேசுவார். சொல்லின் செல்வர் ; மட்டக் களப்பு மண்ணுக்கு ஒரு வரலாறு தந்தவர். மட்டக் களப்பு மண்ணுக்குப் பெருமை சேர்த்த மண்ணின் மைந்தர் சொல்லின் செல்வர்.

**உங்களுக்கு மன அமைதி வேண்டுமானால் பிறர் குற்றங்களைக் காணாதீர்கள்; மாறாக உங்களது குறைகளையே எண்ணிப் பாருங்கள்; உலகம் முழுவதையும் அன்பினால் உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். இவ்வுலகில் யாரும் உங்களுக்கு அந்நியரல்லர்; உலகம் உங்களுடையதே.**

– ஸ்ரீ சாரதா தேவியார்

# "நான் கண்ட சொல்லின் செல்வர்"

## மாஸ்டர் எஸ். சிவலிங்கம்

இன்றைக்கு, சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் (தற்போது இந்துக் கல்லூரி) படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் ஆசிரியர்களும், மாணவர்களும் ஒருவரின் பேச்சுவன்மையைப் பற்றி வியந்து பேசிக் கொண்டிருந்தது எனது காதில் விழுந்தது.

"தமிழ் நாட்டிலே அறிஞர் அண்ணாதுரை போல ஆற்றொழுக்காக அழகு தமிழில் அடுக்கு மொழியில் பேசக் கூடியவர் சொல்லின் செல்வர் செ. இராசதுரை தான்" என்று அடித்து கூறினார் ஆசிரியர் ஒருவர். அவரின் கூற்றை மற்றும் சில ஆசிரியர்களும், மாணவர்களும் ஆமோதித்தனர்.

அந்த 'சொல்லின் செல்வர்' இராசதுரையைச் சந்தித்து உரையாட வேண்டும். அவரின் அழகுத் தமிழ்ப் பேச்சினை கேட்டு மகிழ வேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டு, நாளும் பொழுதும் வளர்ந்தது.

அந்த கால கட்டத்தில் எங்கள் கிராமமான மஞ்சந்தொடுவாய் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தர உற்சவத்தில் திரு. இராசதுரை சொற்பொழிவாற்ற உள்ளார் என்ற செய்தி எனது காதிலே தேனாக பாய்ந்தது. அது தொடர்பான வெளியீடு ஒன்றும் எனது கைக்குக் கிடைத்தது.

அந்த நாளை - அவர் சொற்பொழிவு நடைபெறவுள்ள நாளை ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன். அந்த நாளும் வந்தது.

அவரின் பேச்சைக் கேட்பதற்குப் பெரும் திரளான மக்கள் அயல் கிராமங்களிலிருந்து திரண்டிருந்தனர். அருகில் இருந்து அவரின் பேச்சைக் கேட்க வேண்டும் என்ற ஆசையில் முண்டியடித்துக் கொண்டு மேடையின் பக்கத்தில் முன்வரிசையில் இடம் பிடித்துக் கொண்டேன்.

சொல்லின் செல்வர் சிரித்த முகத்துடன் மேடையில் கம்பீரமாக வீற்றிருந்தார். திரண்டிருந்த அனைத்து மக்களின் விழிகளும் அவரையே நோக்கிக் கொண்டிருந்தன.

“தேன் சிந்தும் சிலப்பதிகாரம்” என்ற தலைப்பில் சொல்லின் செல்வர் சொற்பொழிவாற்றுவார் என்று விழாத் தலைவர் அறிவித்தார்.

புன்முறுவல் பூத்தபடி, கரம் கூப்பி வணங்கியபடி, மைக்கின் முன் தோன்றினார் திரு. இராசதுரை. அப்போது மக்கள் ஏற்படுத்திய கர ஒலி அந்தப் பகுதியை அதிரவைத்தது. கணீர் என்ற குரலிலே அடுக்குத் தொடரில் அழகு தமிழில் - தேன் சிந்தும் தமிழில் சிலப்பதிகாரம் பற்றி சொல் மாரி பொழிந்தார். சுமார் ஒன்றரை மணிநேரம் அதாவது தொண்ணூறு நிமிடம் கடல் மடைதிறந்தாற்போல் சொற்பொழி வாற்றினார் சொல்லின் செல்வர்.

கண்ணனின் புல்லாங்குழல் இசையிலே மயங்கிய ஆநிரைப் போல, ஆலய வீதியில் நிறைந்திருந்த அனைவரும் அரிய பேருரையை மெய்மறந்து ரசித்துக் கொண்டிருந்தனர். அவர் வாயிலிருந்து தமிழ் வெளிவரும்போது அமுதைப்போல் சுவைத்தது. நிலவைப் போல் குளிர்ந்தது. தென்றலைப் போல் தழுவியது. தேனைப் போல் இனித்தது. வார்த்தைகள் ஒவ்வொன்றும் வைரமணிக் கற்களாகக் கொட்டியது. கண்ணகியின் அடக்கம். கள்ளன் என்று கணவன் குற்றம் சாட்டி கொலை செய்யப்பட்டதும் புயல் போல் கிளம்பி, கொற்றவன் அவை சென்று, நீதியை நிலை நாட்டியபோது

தோன்றிய, சிலிர்த் சிங்கம் போன்று நின்று காட்சியை அவர் படம் பிடித்துக் காட்டிய பாங்கு, இன்றும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. சொல்லுக்குத் தட்டுப்படுவதோ, தடுமாறுவதோ, தயங்குவதோ, அவர் பேச்சில் இல்லை. அவர், பேச்சை முடித்தபின் மக்கள் ஏற்படுத்திய மகிழ்ச்சி ஆரவாரம் அடங்க நீண்ட நேரம் சென்றது. நேரம் சென்றதே தெரியாது, மக்கள் அந்த மந்திர சக்திப் பேச்சில் மயங்கிக் கிடந்தனர். இன்னும் பேசமாட்டாரா என்று பேசிக் கொண்டனர்.

"மாணவன் மாஸ்டர் சிவலிங்கம் இப்போது நன்றியுரை கூறுவார், என்று திடீரென்று அறிவித்துவிட்டார், விழா தலைவர். முற்றிலும் எதிர்பாராதவிதத்தில் நன்றியுரைக்கு எனது பெயர் அறிவிக்கப்பட்டதும் ஒரு கணம் அதிர்ந்துவிட்டேன். மறுகணம் ஒருவாறு சமாளித்துக்கொண்டு மேடையில் பாய்ந்து ஏறினேன். எனது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

மனதில் ஆலயடி பிள்ளையாரைத் தியானித்துக்கொண்டு நகைச் சுவை ததும்ப நன்றியுரை கூறி முடித்தேன். சொல்லின் செல்வர் எனது நகைச்சுவைப் பேச்சை வெகுவாக ரசித்தது எனக்குப் பெருமையாக இருந்தது.

" தம்பி ! நன்றாக நகைச்சுவையோடு பேசினீர்கள்' என்று கூறியபடி முதுகிலே அன்பாகத் தட்டிப் பாராட்டிய சொல்லின் செல்வர், "தம்பி, ஒரு நாள் வீட்டுக்கு வாருங்கள்" என்று கூறிச் சென்றார்.

அடுத்த நாளே அவர் வீட்டுக்குச் சென்றேன். நீண்ட நேரம் அவருடன் உரையாடினேன். ஒரு இளைஞர் பட்டாளமே அங்கு நிறைந்திருந்தது. அதையடுத்து அடிக்கடி அவரைச் சந்திக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. அதை பெரும் பேறாகக் கருதி மகிழ்ந்தேன்.

எந்த விழாவிலும் எந்தக் கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டால் கடைசிப் பேச்சாளராகவே அவர் விளங்கினார். காரணம் இடையில் அவர் பேசி முடித்தால் கூட்டம் கலைந்து சென்றுவிடும் என்பதுதான்.

அவருடைய பேச்சைக் கேட்பதற்கென்றே திரண்டுவரும் மக்கள் கூட்டம் அவர் பேசி முடியும் வரை - நடுநிசி வரை பொறுமையோடு ஆவலோடு காத்திருக்கும் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, வவுனியா, மலைநாடு - இலங்கை எங்கும் இதே நிலைதான். எங்கள் அடுத்த ஊர் காத்தான்குடி. நூற்றுக்கு நூறு சதவீதம் முஸ்லீம் கிராமம். சொல்லின் செல்வர் அங்கு பேசுகிறார் என்றால் முஸ்லீம் பெண்கள் காதைத் தீட்டிக்கொண்டு அவர் பேச்சை ஆவலோடு கேட்பதை நான் பார்த்திருக்கிறேன்.

சொல்லின் செல்வரின் நாவன்மைக்கு எத்தனையோ உதாரணங்கள் கூறலாம். ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழரசுக் கட்சியின் பிரசாரப் பீரங்கியாக அவர் விளங்கிய காலத்திலே மட்டக்களப்பு 'கல்லடி' உப்போடையில் பிரசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேடையில் அவருக்குப் பக்கத்திலே பல பேச்சாளர்கள். அவர்களுள் நானும் ஒருவன்.

கூட்டத்திலே ஒருவர் பேசிக்கொண்டிருந்தார். சொல்லின் செல்வரின் பேச்சைக் கேட்பதற்கு ஆர்வத்தோடு பெருங்கூட்டம் கூடியிருந்தது.

எதிர்க் கட்சி ஒன்றைச் சேர்ந்த சில விஷமிகள் கூட்டத்தைக் குழப்ப முயன்றனர். எங்கிருந்தோ 'திடுதிடு' எனச் சில கற்கள் பறந்து வந்து மேடைக்கு முன் விழுந்தன. ஒரு கல் மேடையில் விழுந்தது. கிலிகொண்ட மக்கள் சிலர் எழுந்து அங்குமிங்கும் கலைந்து ஓட ஆரம்பித்தனர். கூட்டத்தில் ஒரே அல்லோல கல்லோலம்.

"பேசிக் கொண்டிருந்தவர் பேச்சை நிறுத்திவிட்டு நடுக்கத்தோடு சொல்லின் செல்வரைத் திரும்பிப் பார்த்தார். திடீரென்று சிங்கம் போலத் துள்ளி எழுந்த சொல்லின் செல்வர் திரு. இராசதுரை, ஒலிப் பெருக்கி முன் எழுந்து நின்றார்.

நான் இங்கு வந்தபோது மலர் மாலைகள் சூட்டி மகிழ்ந்தீர்கள் மலர் தூவி வரவேற்றீர்கள். இப்போதுதான் இக்கிராமத்தின்

*பெயருக்குப் பொருத்தமான வரவேற்பு கிடைத்தது. கிராமத்தின் பெயர் கல்லடி. கல்லால் அடி. ஆகவே "கல்லடி" இப்போதுதான் கிடைத்தது. நாங்கள் சொல்லடியும், கல்லடியும் பட்டு வளர்ந்தவர்கள், இக்கற்களைக் கண்டு கலங்கமாட்டோம். நாங்கள் பனங்காட்டு நரிகள். சலசலப்புக்கு அஞ்சமாட்டோம். மாற்றுக் கட்சித் தோழர்களே! உங்களுக்கு நெஞ்சில் துணிவும். நேர்மையும் இருந்தால் , எதிரே வந்து கல் எறியுங்கள் பார்க்கலாம். நாங்கள் காக்கைகள் கூட்டம் அல்ல கல் எறிந்ததும் கலைந்து செல்ல. தமிழ் உணர்வு கொண்ட கூட்டம். கல்லெறிகள் எங்களை கலைக்கமுடியாது" என்று கர்ச்சித்தார்.*

*கல்லெறி நின்றது. அல்லோல கல்லோலப்பட்டு அங்கும் இங்கும் ஓடிய மக்கள் திரும்பி வந்து அமர்ந்தனர். கூட்டம் தொடர்ந்து நடுநிசி பன்னிரண்டுவரை நடைபெற்றது. வானத்தில் நல்ல பால் போன்ற நிலவு.*

*"விரைந்து தொழில் கேட்டும் ஞாலம், நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்ற திருக்குறளுக்கு இலக்கணமாகத் திகழந்தவர் - திகழ்பவர், சொல்லின் செல்வர், என் அண்ணன்.*

**எல்லா வேதங்களின் சாரத்தையும் ஒருவன் மனப்பாடம் செய்ய முடிந்தாலும், மிகவும் போற்றத்தக்க வழியில் கவிதைகளைப் புனைய முடிந்தாலும், அந்த மனிதனுக்குப் புனிதமான மனம் இல்லையென்றால் அவன் ஒரு பயனற்ற மனிதனாவான்.**

*– ஸ்ரீ சத்திய சாயிபாபா*

# "மட்டு நகர் தந்த மறத்தமிழன்"

எழுத்து/ சிவானந்தன்

"தேன் சொட்ட மீன் பாடும் மட்டுநகர் தந்த மறத்தமிழன். சுவை சொட்டத் தமிழ்பேசும் செந்தமிழ்ச் செல்வன். அஞ்சி ஒடுங்கிய ஈழத் தமிழினத்தைத் தன் பேச்சால் விஞ்சி எழச் செய்த வீரன். கல்நெஞ்சையும் கனியவைக்கும் கன்னித்தமிழ் நடையால் கற்றறிந்தோர் கூட்டத்தைக் கௌவிய திறலாளன்; வடக்குக் கிழக்கென்ற பேதத்தை அறுத்தெறிந்து தமிழர் தம் நெஞ்சங்களைப் பிணைத்த பெருநாவேந்தன்; பார்புகழும் பைந்தமிழ்ப் பேச்சால் பாராளுமன்றம் வரை சென்ற செல்வன்;" ஆம்! ஈழம்வாழ் தமிழ்பேசும் மக்கள் திரு. இராசதுரை அவர்களைப் பற்றி இப்படியும் - இதிலும் மேலாகவும் பேசிக்கொள்கின்றனர்.

அவைக்கஞ்சா நெஞ்சினராய் நேரியநிலையோடும் கூரிய நோக்கோடும் மேடையில் நின்று அடுக்கு மொழிகளை அர்த்தத்தோடு அள்ளிவீசிச் சபையோரைக் கொள்ளைகொள்ளும் பாங்கு; நமக்கு அறிஞர் அண்ணாவை நினைவூட்டுவதோடு - "இவர் ஒரு பட்டதாரியாயுமிருந்தால்,.....! என்ற எண்ணத்தையும் எழச் செய்யும்.

இளங்கோவின் சிலம்புச் செல்வியைக் காவியத்திலிருந்து வெளியே அழைத்துவந்து, விழங்கு தமிழில் விரிவுரையாற்றும்போது சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் ஈழத்தில் பிறக்காததைப் பற்றி யாருமே கவலை கொள்ளமாட்டார்கள். கற்புக் கனலான கண்ணகி காற்சிலம்பு விற்கச் சென்ற கணவன் பொற்கொல்லனின் சூழ்ச்சியால் - பாண்டிய மன்னனின் கட்டளையால் அநீதியாய் கொல்லப்பட்டான் என்ற செய்தி கேட்டதும் வஞ்சினம் கொண்டு - வழக்குரைக்கப் பாண்டிய நகருககுள் செல்லும் காட்சியை உணர்வுத்துடிப்போடு எழுச்சி நடையோடு கூறும்பொழுது - கண்ணகி பாத்திரம் தாங்கிக் கச்சிதமாக - தத்ரூபமாக நடிக்கும் ஒரு பெண்மணியை கண்ணகி நாடகத்தில் பார்ப்பது போன்ற எண்ணமும், சிலம்புச்செல்வி பாண்டி மாநகரில் ருத்திரகோலத்தோடு இப்படித்தான் நின்றிருப்பாள் என்ற கருத்தும் எழும்.

"மாசறுபொன்னே! வலம்புரிமுத்தே! காசறுவிரையே! கரும்பே! தேனே! - அரும்பொற் பாவாய் ஆருயிர் மருந்தே! பெருங்குடி வணிகன் பெருமட மகளே" என்றெல்லாம் ஏற்றிப் போற்றி விதந்து பாராட்டியவன், நாடகக் கணிகையின் கண்வீச்சில் கருத்தைக் கரையவிட்டுத் தன்னை மறந்து சென்றானே என்றதை அறிந்து - தன் கருத்தைக் கலையவிடாது, சென்றவன் திரும்பி வரும் வரை எந்த அவச் சொல்லையும் உச்சரிக்காது உத்தம குணத்துடன் இருந்தாளே ஒரு தமிழ்ப் பெண், அவளை நம் நெஞ்சக் கோவிலில் கொலுவிருத்த வேண்டும். இன்றைய பெண்ணினமென்றால் என்ன செய்திருக்கும்?

நாடகக் கணிகையிடம் பொருள்களைக் கொடுத்துவிட்டு வெறுங்கையோடு வீடு திரும்பும் கோவலன்களை இன்றைய தங்கைகள் மலர் முகத்துடன் வாருங்கள் என்று வரவேற்பார்களா? உபசரிப்பார்களா? இருக்கும் நகைகளைக் கழற்றிக் கொடுத்து விற்றுப் பணத்துடன் வாருங்கள் என்று இன்முகங்காட்டிக் கூறுவார்களா? இல்லவேயில்லை. அந்தத் தமிழ்ப்பண்பு இவர்களுக்கு வரவும் மாட்டாது - வரவும் முடியாது.

சிலம்பு விற்கச் சென்றவன் சூழ்ச்சியால் இறந்தான் என்றதை அறிந்ததும் கண்ணகியின் கோலம் உருமாறியதையும், அந்த மாற்றத்தோடு அவள் உரைத்த உரையைப் பாண்டியன் கண்டளவே உயிர் விட்ட நிலையையும் அடிகள் அருமையாகச் சொல்லுகின்றார் :-

*"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்*
*கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையக்கோன்*
*கண்டளவே தோற்றான் அக்காரிகை தன்சொற்செ*
*வியில் உண்டளவே தோற்றான்உயிர்"*

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன் செயலெழுதித் தீர்த்தகாரிகை - பாண்டிமாநகரைத் தீர்த்துக்கட்டிய வரலாற்றை நாம் சிலம்பின் மூலமாகத் தெரிந்து கொள்கிறோம். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதை இலக்கிய வாயிலாக இளங்கோ காட்டியிருக்கும் திறன் அளப்பரியது."

மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினராய் இருக்குமிவர் தமிழரசுவாதியென்பதை நான் எழுதித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? வள்ளுவரும், பாரதியும், நாமக்கல் கவிஞரும் இவரது துடிப்பு நடையிலே துள்ளிவருவர். ஆரம்பத்தில் நடிகராயும் - எழுத்தாளராயும் இவர் பிரபலமானவர்.

'தமிழைத் தமிழாகப் பேசுகிறாரே' - பல தமிழ்ப் பண்டிதர்கள், பாரதிதாசனைப் பார்க்கப் பாரதம் செல்ல வேண்டியதில்லை - பாரதிதாசனின் விசிறிகள்.

எனக்கு இவரைப்போல் ஒரு மகன் பிறந்தால் - சில தாய்மார்கள். ஆ! நான் இவருக்குத் தம்பியாய் பிறந்தேனா - சில தம்பியர். இவரைப்போல் நான் இனிப் பேச்சாளனாகவேண்டும் - வருங்காலப் பேச்சாளர். இவர் ஒரு ஈழத்தமிழினத்தின் தம்பி - சில எம்பீக்கள். நமக்குக் கிடைத்ததொரு நல்ல சொற்செல்வர் - எல்லோரும்.

"ஈழத்தில் யான் கண்ட சொற்செல்வர்கள்" என்னும் பெயரில் "ஈழத்து சிவானந்தன், 9.3.1962 - புங்குடு தீவு "அடிகளார் பதிப்பகம்" சார்பில் வெளியிட்ட நூலிலிருந்து மறுபதிப்பு.

# "இன்பத் தமிழுக்கு ஓர் இலக்கியப் பெட்டகம்"



ஜோ. ஜீ. ஜெயசீலன்

இராசதுரை – இலங்கையில் இந்தப் பெயரைக் கேள்விப்படாதவர் இல்லையென்று சொல்லலாம். சுமார் முப்பது ஆண்டுக் காலமாக இலங்கை மக்கள் மத்தியிலே ஒலித்துக்கொண்டிருக்கும் பெயர் இது.

கடல் கடந்த நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர்கள் நன்கு அறிந்து, தெரிந்து, புரிந்து வைத்திருக்கும் பெயர் இது.

இன்றைய இளைஞர்களின் இன்பநாதம்; எழுத்தாளர்களின் இலட்சிய கீதம்; பேச்சாளர்களின் பேரின்பத் திலகம்; கலைஞர்களின் கலங்கரை விளக்கம்; அரசியல்வாதிகளின் அருந்ததி நட்சத்திரம்; கதியற்றவர்களின் காவலன், ஏழைகளை வாழவைக்கும் ஏந்தல்!

அழகுத் தமிழால், அலங்காரச் சொல்லடுக்குகளால் பல்லாயிரம் மக்களைத் தன்பால் ஈர்த்தெடுத்த சொல்லின் செல்வன்!

இலங்கையிலே பூசைகளோடு மட்டும் நின்ற திருக்கோயில்களில் தமிழின் இலக்கியச் சோலையை உருவாக்கி, வண்ண மலர்களின் சுந்தர

அழகினை எடுத்துக்காட்டி, மென் தென்றலின் குளுமையை அனுபவிக்கச் செய்த அற்புதப் பேச்சாளன்!

இலங்கையின் எப்பாகத்திலும் அவர் பேசுவதற்கு வருகிறார் என்றால் அவர் பேச்சைக் கேட்பதற்கு ஆண்களும், பெண்களும், இளைஞர்களும் வெள்ளம் போல் அலைமோதி வருவர்! ஒரு மேடையில் இருந்து மறு மேடைக்கு அவர் போகிறார் என்றால் மக்களும் அவரைப் பின்தொடர்வர்.

நட்ட நடுநிசியானாலும் அவர் பேச்சைக் கேட்பதற்கு மக்கள் காத்துக்கொண்டு நிற்பர்.

இலக்கியச் சொற்பொழிவுகளா? பட்டிமன்றங்களா? அரசியல் மேடைகளா? எதுவானாலும் கொடுத்த விஷயத்தில் இருந்து இம்மியும் பிறழாது வரம்போடு பேசி, மேடைப்பேச்சுக்கே வரைவிலக்கணம் வகுத்த பெருமையினைக் கொண்டவர்.

'பேசினால் இராசதுரையைப் போல் பேச வேண்டும்' என்று பல பேச்சாளர்கள் நினைக்கும் அளவுக்கு புதிய சரித்திரம் படைத்தவர்!

"திருகோணமலையின் தேர்தல் வெற்றி இராசதுரையின் தீந்தமிழ்ப் பேச்சுக்குக் கிடைத்த வெற்றி" என்று தமிழரசுத் தந்தை செல்வநாயகத்தால் பாராட்டப்பட்டவர்!

சட்ட மாமேதை திருச்செல்வத்தால் "நாவலர்" என்று புகழப் பெற்றவர்.

பேரறிஞர் அண்ணாவின் பேரன்புக்கு ஆளானவர்!

பச்சையப்பன் கல்லூரியில் பேசிய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த டாக்டர் மு. வரதராசனால் ஆரத் தழுவிப் பெருமைப் படுத்தப்பட்டவர்!

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனால் கட்டியணைத்துப் பாராட்டப் பெற்றவர்!

நடிகர் அவ்வை டி.கே. சண்முகம் அவர்களால் "அற்புதப் பேச்சாளன்" என்று புகழப்பட்டவர்!

தமிழக முதல்வர் மக்கள் திலகம் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்களால் "தம்பி" என்று அன்போடு அழைக்கப்பட்டு வாழ்த்தப்பட்டவர்.

நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் சிந்தையைக் கவர்ந்த சிறந்த நண்பர்.

தென்னிந்திய சினிமா உலகப் பட அதிபர்களுக்கும், கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், பிரமுகர்களுக்கும் மிகப் பழக்கமானவர்! பரிச்சயமானவர்! 'பண்புள்ளவர்' என்று பலராலும் பாராட்டப்படுபவர்.

1968இல் இலங்கை, இந்தியத் தயாரிப்புக்காக நான் முயற்சியெடுத்துக் கொண்டிருந்த வேளையில் அண்ணா இராசதுரை அவர்களை நடிக்க வைக்க முயன்றேன். ஆனால் அவர் அதற்கு மறுத்து விட்டார்! இல்லையென்றால், இலங்கை-இந்தியக் கூட்டுத் தயாரிப்பின் முதல் கதாநாயகனாக அவர் திகழ்ந்திருப்பார்.

இலங்கையில் அவர் எழுதாத பத்திரிகைகள் இல்லை.

கலை, இலக்கியம், அரசியல் ஆகியவற்றைப் பற்றி அவர் எழுதாத ஏடுகள் இல்லை.

இந்தியா, மலேயா, சிங்கப்பூர், இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளில் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றி, கடல் கடந்த தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்தவர்.

இலங்கை, இந்திய, லண்டன் வானொலி நிலையங்களில் டெலிவிஷன் நிலையங்களில் நெஞ்சினிக்கும் இலக்கியப் பேச்சுக்களை கொஞ்சு தமிழில் எதுகை மோனைகளுடன் பேசித் தமிழ் உள்ளங்களை மகிழ்வித்தவர்.

'எங்கள் வீட்டுப் பிள்ளை' என்று வயதுவந்தோராலும் -

'அன்புத் தம்பி' என்று வயது முதிர்ந்தோராலும் -

'எங்கள் அண்ணா' என்று இளைஞர்களாலும் -

'நல்ல நண்பன்' என்று அரசியல்வாதிகளாலும் -

'பிரமாதமான பேச்சாளன்' என்று பொதுமக்களாலும் அழைக்கப்பெற்று வருபவர்.

'அண்ணா இராசதுரை, அரசியல் வானிலே ஒரு துருவ நட்சத்திரமாக மட்டும் விளங்கவில்லை: சிறந்த கலைஞனாக, கவிஞனாக, நடிகனாக, பாடகனாக, எழுத்தாளனாக, பேச்சாளனாக, ஓவியனாக விளங்கி வருகிறார்.

மட்டக்களப்பிலே மாநகரசபை கண்ட முதல் மேயர் இராசதுரை.

அரசியலிலே வெள்ளிவிழாக் கண்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசதுரை!

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் காரணமாகச் சிறைசென்ற தியாக சீலர், இராசதுரை.

அமரர் கனக செந்தில்நாதன், இலங்கை இலக்கிய கர்த்தாக்களைப் பற்றி எழுதிய நூலில் இராசதுரையைப்பற்றி இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

"இராசதுரை அரசியலில் ஈடுபட்டதால் அரசியலுக்கு ஆதாயம், இலக்கியத்திற்கு நஷ்டம்!"

இக்கூற்று முற்றிலும் பொருந்தும்.

'இராஜதுரை' இன்பத் தமிழுக்கு ஓர் இலக்கியப் பெட்டகம்.

வளர்ந்துவரும் இளம் எழுத்தாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

# "யார் இந்த இராசதுரை?"

ஜெயர் குமார்

1949–ஆம் ஆண்டு மட்டக்களப்பில் ஒரு சிறிய புத்தக விற்பனை நிலையம் வெலிங்டன் புத்தகசாலை. அதில் நான் வியாபார உதவி யாளனாகப் பணி செய்தேன். புத்தக விற்பனை நிலையம் சிறிய தானாலும், , வியாபாரத்துக்கு குறைவிருக்கவில்லை. வாரத்துக்கு பல தடவைகள் இந்தியாவிலிருந்து புத்தகப் பார்சல்கள் வந்த வண்ணமிருக்கும் அக்காலத்தில் நேரடியாக எங்கிருந்து வேண்டு மானாலும் புத்தகங்களை வரவழைக்க வசதி இருந்தது.

இந்தியாவிலிருந்து வரும் புத்தகப் பொதிகளில் திராவிடக்கழக வெளியீடுகள் தான் கூடுதலாக இருக்கும். பார்சல்கள் உடைக்கப் பட்டதும் எங்கள் மனேஜர் கணிசமான அளவு புத்தகங்களை ஒதுக்கீடு செய்து வைப்பார். அவைகளில் இராசு என்ற மூன்றெழுத்துகள் தென்படும். அடிக்கடி நிகழும் இந்நிகழ்ச்சியை உன்னிப்பாகக் கவனித்து வந்த என் ஆவலை அடக்க முடியாமல் மனேஜரை ஒரு நாள் கேட்டே விட்டேன். "யார் இந்த இராசதுரை" என்று.

மனேஜர் ஒரு புன்னகையை உதிர்த்து, வெளிப்புறத்தை நோக்கி, அன்புடன் "வாருங்கள் ராஜு" என ஓர் இளைஞனை வரவேற்றார். அப்போதுதான் நானும் அந்த அபூர்வ இளைஞனைக் கண்டேன்.

நேர் கொண்ட பார்வையும், நிமிர்ந்த நடையும், துடிதுடிப்புமுள்ள அந்த இளைஞர் தமது சைக்கிளில் வந்து எங்கள் கடையின் முன் நிற்கிறார். 'இவர்தான் அந்த இராசதுரையா?' என வியந்து நின்ற என்னைப் பார்த்து, எனது வயதை ஒத்த அந்த இளைஞனும் ஒரு புன்னகை உதிர்த்து வரவேற்றான். அன்று தொடக்கம் ஏற்பட்ட எங்கள் பாசப்பிணைப்பு, இன்றுவரை இடையீடின்றித் தொடர் கிறது.

கட்டுக் கட்டாகப் புத்தகங்களை வாங்கி அலுமாரிகளை நிறைத்து ஒரு புத்தகக் காட்சி அறையாக தம் வீட்டை அழகுபடுத்துவதில் மட்டுமே பெருமை அடிக்கும் பெரிய மனிதர்களை நாம் பார்க்கிறோம். ஆனால் இந்த இராசதுரை அதற்கெல்லாம் எதிர்மாறானவர்.

எண்ணற்ற அறிஞர்களின் கருவூலங்களைத் தனது தலை என்ற கருவறையில் தேக்கிவைத்து, இன்றுவரை மக்களுக்கு வாரி வழங்கி வரும் வள்ளன்மையை தூய உளம் படைத்த எவரும் மறக்கவோ மறைக்கவோ முடியாது.

1955–ஆம் ஆண்டு மட்டக்களப்பு முத்தமிழ் மன்றம் நடத்திய தமிழ் விழாவில் கலந்து கொள்வதற்காக கவிஞர் கண்ணதாசன் இலங்கைக்கு வந்தார். அவரை யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தில் திரு. இராசதுரை வரவேற்று மட்டக்களப்பிற்கு அழைத்து வந்தார். கவிஞர் கண்ணதாசனை தமது வீட்டில் தங்கவைக்க வேண்டும் என்ற ஆசை இளைஞர் இராசதுரைக்கு இருந்தது. மட்டக் களப்பிற்கு வந்து சேரும்போது மாலை 5 மணியிருக்கும். கவிஞர் கண்ணதாசன் அவர்களைப் பற்றி கேள்வியுற்ற இலக்கிய நண்பர்கள் திரு. இராசதுரையின் வீட்டை முற்றுகையிட்டு விட்டார்கள். மண்டபத்தில் வந்து உட்கார்ந்த கவிஞர்களுக்கும் மற்றோருக்கும் சிற்றுண்டியும் தேநீரும் வழங்கப்பட்டது. கவிஞர் கண்ணதாசன் திரு. இராசதுரையிடம் தான் தங்குவதற்கு ஒரு ஹோட்டலை ஏற்பாடு செய்து தருமாறு கேட்டார். 'நல்ல வசதியான ஹோட்டல்கள் மட்டக்களப்பில் இல்லை. இன்று இரவு மட்டும் இங்கு தங்குங்கள்; நாளை ஒரு இடத்தை ஏற்பாடு செய்து தருகிறேன்' என்று திரு. இராசதுரை கூறினார். கண்ணதாசன் தங்குவதற்கென இராசதுரை வீட்டில் ஒதுக்கியிருந்த அறையில் நுழைந்ததும் அங்கிருந்த புத்தக அலுமாரிகளைக் கண்ட கண்ணதாசன் "நான் இங்கேயே தங்கி விடுகிறேன்" என்று சொல்லி விட்டாரென்றால் 1955–ஆம் ஆண்டில் எவ்வளவு புத்தகங்களை அவர் வீட்டில் சேகரித்து இருந்திருப்பார் என்பதை எண்ணிப் பாருங்கள். இந்தியா திரும்பியதும் கவிஞர் சொந்தமாக நடத்திய **"தென்றல்"** பத்திரிகையில் இச்சம்பவத்தைக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்.

## எழுத்தாளன் இராசதுரை

கல்லூரி வாழ்க்கையை தொடர்ந்து, பத்திரிகாசிரியராகி, "லங்காமுரசு" என்னும் சஞ்சிகையை வெளியிட்டு சிறப்புடன் நடத்தி வந்ததுடன் "சுதந்திரன்" விடுதலை இதழின் உதவி ஆசிரிய ராகப் பணியேற்று, அதைத் தொடர்ந்து, "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்" என்ற நூலை எழுதி வெளியிட்டு, புத்தகாசிரியராகவும் மாறிய இளைஞர் ராஜு, பல புத்தக வெளியீடுகளைச் செய்து அறிவுப்பசியாற்றினார். அவர்தான் எங்கள் "எழுத்தாளர்" இராசதுரை.

## சொல்லின் செல்வன்

"கணவனோ கள்வன்?" என காற்சிலம்பை உடைத்தாள் கண்ணகி. மாணிக்கப் பரல்கள் தெறித்தன. கண்ணகியின் கண்களில் கோபக் கனல் தெறித்தது. மதுரை மாநகரம் சாம்பலானது.

கண்ணகியின் கண்ணில் பறந்த கனல், இந்த இளைஞனின் சொல்லில் அல்லவா பட்டுத் தெறிக்கிறது. 'யார் இந்த இராசதுரை?' மக்கள் வெள்ளம் ஒரு காலத்தில் கேள்விக் கணைகளைத் தொடுத்தது. கோயில்கள் தோறும் ஒலித்தன குரல்கள். ஆம் இந்தக் கால கட்டத்தில் கண்ணகி ஆலயங்களில் இராசவின் சிலப்பதிகாரச் சிறப்புரை நிகழாது, திருக்குளிர்ச்சிபாடி கண்ணகியை குளிர வைக்க முடியாது என்ற நிலை உருவாகி விட்டது.

கண்ணகி வழிபாட்டில் தலை சிறந்து விளங்கும் மட்டக்களப்பு கண்ணகி ஆலயங்கள் இராசதுரைக்கு மேடை அமைத்துக் கொடுத்து பேச அழைப்பதில் பெருமைப்பட்டன. மேடையில் இராசதுரை தோன்றி விட்டால் போதும், மாயனின் வேய்ங் குழலில் மயங்கி மெய் மறந்த ஆவினம்போல்

ஆகிவிடும் மக்கள் கூட்டம். அத்தனை மந்திர சக்தி இருக்கும் அந்தப் பேச்சில். மாந்திரீகத்தில் சிறந்த மட்டக்களப்பு மாந்திரீக நிபுணர்கள் கூட இந்த மந்திரப் பேச்சில் மயங்கி சிலையாகி விடுவர். அத்தனை பேச்சு வன்மை, ஆற்றல் படைத்தவன்தான் இந்தச் "சொல்லின் செல்வர்' இராசதுரை.

## அரசியல்வாதி

மட்டக்களப்பு முற்ற வெளியின் மையப் பகுதியில், தந்தை செல்வாவைச் சுற்றி ஒரு சிறிய கூட்டம், சுமார் 25 பேர்வரை இருக்கும். அதில் ஓர் இளைஞன் வீராவேசமாகப் பேசினார். அந்தப் பேச்சுத்தான் மட்டக்களப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கால்கோள்விழாவின் துவக்கப் பேச்சாக அமைந்திருந்தது. அந்தப் பேச்சின் அலைகள் ஈழ நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் எதிரொலித்தன. அரசியல் உணர்வலைகள் வடகிழக்கு இளைஞர்களின் நரம்பை எல்லாம் முறுக்கேற வைத்தன. அரசியல் உணர்வு கொதித்தெழுந்தது.

1956–ம் வருடம் இலங்கையின் அரசியலில் முக்கியமான பல நிகழ்ச்சிகள் இக்காலக் கட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் அரசியல் என்றாலும் சரி பொருளாதாரம், கல்வி, சட்டத்துறை என்றாலும் சரி, எல்லாமே கறுப்புக் கோட் அணிந்த கூட்டத்தாரிடமே சிக்குண்டு சீரழிந்து கிடந்தது. தாங்களே அனைத்தும் என திமிர் கொண்டலைந்த இந்தக் கூட்டம் ஒரு நாள் அதிர்ந்து விட்டது. கிழக்கில் ஓர் அரசியல் விடிவெள்ளி உதயமானது. இது கண்டு வெகுண்டுவிட்ட கூட்டம் இளைய தலைமுறையின் உணர்வலைகளுக்கு தாக்குப்பிடிக்க முடியாது ஒதுக்கப்பட்டது. "அண்ணா" என்ற மூன்றெழுத்தின் ஒலித்தாக்கம் மட்டு மாவட்டம் முழுவதும், மூலை முடுக்குகள் தோறும் ஒலித்துச் சிதறியது.

இந்தியாவில் தமிழகமெங்கும் "அண்ணா" என்ற அண்ணாத்துரையின் குரல் கேட்டு விழித்தெழுந்தனர் தென்னக மக்கள். கிழக்கில் அண்ணன் இராசுவின் சுட்டுவிரல் அசைவுக்காக துடித்தெழுந்தது இளைஞர்படை.

***கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்***
***மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்.***

(இது புரட்சிக் கவிஞனின் கூற்று)

அதைவிட மயக்கம் தந்தது தம்பிகளுக்கு, அண்ணன் இராசுவின் கை அசைவுகளினால் பண முதலைகள் பாளிகளில் புகுந்து கொள்ள, சட்டத் தரணிகள் கொட்டம் ஒழிந்து கோட்டுக்கள் கழன்று விழ மட்டக் களப்பின் முதல் பாராளுமன்ற உறுப்பினராகி முடிசூடா மன்னன் ஆனார் செல்லையா இராசதுரை.

அன்று முடிசூடா மன்னனாகி, நாடாளுமன்ற ஆசனத்தை தனதாக்கிக் கொண்ட அரசியல் மேதை இராசதுரை, முப்பது வருடங்களுக்கு மேலாகியும், அசைக்க முடியாத மேருவாக இன்னும் சிறப்புமிக்க அரசியல்வாதியாக, அரசியல் மாமேதையாக ஒளிர்கிறார்.

## தூங்காத செயல் வீரன்

1957–ம் ஆண்டு ஓர் நாள் மட்டக்களப்பு அரசடி வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தின் தரை முழுவதும் தேனருவியும், பாலாறும் ஓடிக் கொண்டிருந்தது. மட்டக்களப்பு மாநாடு, தமிழரசுக்

கட்சியின் வருடாத்தமகாநாடு நடந்து கொண்டிருந்த சமயமது. நகரம் முழுவதும் மாபெரும் விழாக் கோலம். அலை அலையாக மக்கள் வெள்ளம். அத்தனை மக்களுக்கும் அரசடி வித்தியாலயம் தான் உணவகம். பாலும் தேனும் வழிந்தோடும் மட்டக்களப்பு என்ற சிறப்புமிக்க பழம் பெருமையை நடைமுறையில் நிரூபித்து காட்டிவிட்டவர், செயல்வீரர் இராசதுரை. இரவு பகல் தூங்காது செயலாற்றும் திறமை இவருக்கு மட்டும்தான் உரியதோ என வினா எழுப்ப வைத்தவர், அண்ணன் இராசதுரை.

சாதி சமூக மேடு பள்ளங்களை சீர்படுத்துவதிலாகட்டும், நன்னெறி தந்த பெரியார்களுக்கு கௌரவம் தருவதிலாகட்டும், முன்னின்று செயல்படும் சீர்திருத்தவாதி இராசதுரை. இவரது இத்தகு சேவைக்குச் சிகரம் வைத்தாற்போல் அமைந்துள்ளதுதான் "விபுலானந்த இசை நடனக்கல்லூரி." யாழ்நூல் யாத்த முத்தமிழ் வித்தகன் விபுலானந்தனுக்கு அளிக்கப்பட்ட நிலையான கலைக் கோயில்தான், மட்டு நகரின் கல்லடியில் அமைந்துள்ள அந்த இசை நடனக்கல்லூரி ஆகும்.

## தியாகச் செம்மல்

நாட்டில் கல்லாகி மறைந்து கிடந்து இராமன் கால் பட்டதும் சிறப்புமிக்க பெண்ணுருவானாள் அகலிகை. திறமை சாலிகள் எங்கு மறைந்து கிடந்தாலும் இராசுவின் கண்கள் தேடிப்பிடித்து விடும். இல்லையானால், எங்கோ மூலையில் மறைந்து கிடந்த என்போன்ற இளைஞர்களைக் கலைஞனாக்கி, கவிஞனாக்கி, எழுத்தாளனாக்கி பட்டதாரியாக்கி, உயர்வடைய செய்திருக்க முடியுமா? இச்சமயங்களில் வளர்த்து விட்ட கடாக்கள் நன்றி மறந்த செயலாக, மார்பிலே குத்திவிட்டதும் உண்டு. அரசியல் மட்டத்திலும் நயவஞ்சகர்கள் குறுக்கிடாமலில்லை. ஆனால், மக்கள் பேராதரவு என்ற சூறாவளி, அவர்களை எல்லாம் அடிச்சுவடு தெரியாமல் அடித்துச் சென்று விட்டது. நெஞ்சில் உரமும, நேர்மைத திறமும் கொண்ட தியாகச் செம்மல் இராசுவின் முன்னால் இவையெல்லாம் தூசுகள்.

## அகில உலக இந்துமா மேதை

அகில உலக இந்து மகாநாடு. கொழும்பு நகரம் விழாக் கோலத்தில் மூழ்கிக் கிடந்தது. அனைத்துலகும் போற்றும் இந்து சமய மகான்கள், மகரிஷிகள் இந்து சமயக் காவலர்கள், நாவலர்கள், அத்தனை மகான்களையும் ஒருமித்துக்காண கொடுத்துவைத்த பெருமையில் மக்கள் பூரித்துப் போனார்கள். கொழும்பு நகரம் கண் தூங்கமறுத்தது. இத்தனைக்கும் அச்சாணியாக ஓயாது அயராது விழித்திருந்து புயலெனச் செயற்பட்டார் மாமேதை இராசதுரை. ஆம், சரித்திரப் பெருமைமிக்க அனைத்துலக இந்து மாநாட்டை சிறப்பாக நடத்திக் காட்டியவர் அண்ணன் இராசுவே.

நாவலரைப், பாவலரை, கலைஞர்களை, எழுத்துலகச் சிற்பிகளை ஒருங்கே இணைத்து, தமது அமைச்சின் உதவியுடன் அழைத்து வாழ்வு உயர்க என வாழ்த்தி வாரி வழங்கிக் கௌரவித்த வித்தகன் வள்ளல் இராசதுரை. இவர் புகழ் வாழ்க–

சேவை வளர்க! வெல்க!

நினைப்போர் மனமெல்லாம் நிலைத்து நின்று நீடூழி வாழ்க!!

# "என்றும் வாழ்க இனிது"



இலக்கிய மாமணி
அல்ஹாஜ்-ஆ-மு-ஷரிபுதீன்

மாண்புமிகு மந்திரியே மாநிலத்தீ னோர்மணியே
காண்பவர்கள் ஈர்க்குங் கலையரசே – ஆண்ட
துரைத்தனத்தார் கௌரவிக்கும் தோன்றல் இராச
துரைமங் கலம்பெருக வே.

பெருகும் புகழாரம் பேணும் இராச
துரைபுங் கவர்பேர் துலங்கும் – அரிய
எழுத்தாளர் நாடகத்தின் இன்பத் தமிழின்
பழுத்த சைவமகன் பாங்கு.

பாங்கின் தமிழகத்தின் பல்லோர் புலம்மிக்கோர்
ஈங்கு வரவு மிதன்சிறப்பு – ஓங்கிடவே
இந்துமதம் வாழ்த்தும் இராசதுரை மாண்பு
அந்தமிலா தாக்கு மரசு.

அரச விசுவாசம் ஆளுஞ்சொற் செல்வன்
பெருகு தமிழ்வாணர் பேசும் – அருமை

இராச துரைமன்ன னிவ்வுலகில் நோவே
இராதென்றும் வாழ்க இனிது.


இனிதுமுப் பானிரண்டு ஏற்றமுறு மாண்டு
தனியொருவர் போற்பா ரவையில் – கனிவாய்
இருந்துவரும் சீர்மை இராசதுரை மன்னா
திருந்துபுகழ் சூழ்க சிறந்து.

சிறந்த படைப்பாளர் செந்தமிழ் வல்லோர்
விரிந்த புலமை மிகுந்தோர் – பெருமை
தகமைக் குரிய சான்றிளித் தன்னார்
தொகைகண்ட இராச துரை.

துரைத்தனத்தா லீட்டும் புகழ்வாழ்க தூய்மை
உரைத்திறனார் சேவைநலம் வாழ்க – அரியபதம்
சூழ்க திருவும் சுகவாழ்வும் மல்கிவர
வாழ்க இராசதுரை மாண்பு.

**மனமே எல்லாம். மனம் தூய்மையானால் அன்றி ஒரு நன்மையும் விளையாது.**

*– ஸ்ரீ சாரதா தேவியார்*



# "காப்பியத் தலைவா வாழ்க !"

## கவிஞர் மா. சோமலிங்கம்

கடல் கடந்த தேசம் எங்கும் சைவம் தன்னை
    கமழவைக்கத் துறைதோறும் முயற்சிகொண்ட
அடல் ஏறே அண்ணாவே சொல்லின் செல்வா
    அன்றாண்ட சோழருக்குப் பின்னே இங்கு
படை நடத்திச் செல்லாது தனியே நின்று
    பாரெங்கும் சிவ நெறியைத் துலக்கும் மேலோய்
அடையாறாய்க் கல்லடியை ஆக்கும் கர்த்தா
    அண்ணாவே பல்லாண்டு வாழ்க வாழ்க

சைவநெறி செழிப்புற்றால் தமிழே வாழும்
    தமிழ் வேறு சைவநெறி வேறு அல்ல
பொய்பேசி மக்கள் தமை ஏய்க்கும் கூட்டம்
    புதர்களினிலும் பொந்தினிலும் ஒழிந்து போக
தெய்வநெறி தனில் நின்று தமிழைக்காக்கும்
    சீரோனே சிதைவடையாச் சேவையாளா
மெய் அறிவைச் ஸ்ரீலங்கா மக்கள் காண
    மேன்மை கொள் சைவ வழி புதுக்கும் மேலோய்

அறத்தோடு அன்புதனைக் கலந்து என்றும்
அபிவிருத்தி காணுகின்ற அமைச்சே எங்கள்
இனத்தோடு இரண்டறக் கலந்து விட்ட
இசைக்குரியோய் மட்டுநகர் இளமையோடு
புறத்தினிலும் அகத்தினிலும் அழகைக் காண
புனரமைப்பு நடத்துகின்ற புரவலா எம்
இனத்துக்கும் மதத்துக்கும் மொழிக்கும் உன்போல்
எவரேனும் இதுவரையில் செய்ததுண்டோ?

மாரியது பொழிகின்ற வேளை தன்னில்
வாய்திறந்து தேரையினம் கூச்சல் போடும்
மாரியதற்கஞ்சியே மறுத்ததில்லை
மண்பதைகள் வாழ்வதற்குப் பொழிந்து தள்ளும்
காரியத்தில் கண்செலுத்திச் செயலில்க் காட்டும்
கர்ம வீரா உமது கருமங்கண்டு
ஏரிவாழ் தேரை என எதிரிக் கூட்டம்
இரைவதற்கு அஞ்சாத ஏறே வாழ்க!

பெரும்பணியை முடித்து விட்ட மாமல்லவா எங்கள்
பின்னவர்கள் போற்றுகின்ற பல்லலவன் நீ
அருங்கலையின் பிறப்பிடமே விபுலானந்த
அடிகளுக்குப் பின்மட்டு நாட்டின் மேன்மை
சுருங்காமற் பரப்புகின்ற தூயோனே நற்
தொண்டுக்கு உடல்படைத்த தலைவா நாளும்
நெருங்கியே ஏழைகளை உறவு கொள்ளும்
நேசனே! காப்பியத் தலைவா வாழ்க.



# "அழியாத காவியம்"

கவிச்சுடர் அன்பு முகையதீன்

மட்டு நகர் அன்னை மகத்துவத்தை இவ்வுலகின்
எட்டுத் திசைகளிலும் எடுத்தின்று பரப்ப அவள்
பெற்றெடுத்த பிள்ளை சிலர் பெருமுயற்சி செய்துள்ளார்
கற்புக்கு அன்று களங்கம் ஏற்படுத்த
முற்பட்டவர்கள் முகங்களிலே உமிந்துள்ளார்

மட்டுநகர் அன்னை பெற்ற மைந்தர்களுள் ஒரு சிலர்தான்
கட்டித் தங்கம் போல்
காட்சி தருகின்றார்
அந்த வரிசையிலே அவள் பெற்ற சேய்களுக்குள்
சிந்தையிலே வாழ்பவர்தான்
செ.இராசதுரை

சின்ன வயதிலேயே செந்தமிழைச் காதலித்தார்
அன்னை அழுத குரல் அவர் நெஞ்சைத் தாக்கியதால்
உன்னி எழுந்தார்

உழைப்பதற்கு முன் வந்தார்
தன்மானம் இழந்து தமிழ் இனம் வாழ்ந்ததனை
கண்முன்னே கண்டு
கவலையிலே அவர் ஆழ்ந்தார்
அன்னையினை மறந்து அன்னியர்கள் பின்னாலே
சென்றதனைக் கண்டும்
சிந்தை மிக நொந்தார்
என்ன படியும் இவர்களினை வென்றெடுக்க
அண்ணன் இராசதுரை
அயராது பாடுபட்டார்.

மட்டக்களப்பை மகத்தான தமிழகமாய்
கட்டி எழுப்ப கனவு பல கண்டு வந்தார்
“தமிழகம் எங்கள்
தங்கக் கோயில்”
இதுதான் அண்ணன் இலட்சிய கீதம்
இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் என்னுடைய “ஓட்டோ கிராபில்”
இப்படித்தான் இராசதுரை
எழுதித் தந்தார்.

எழுத்தாலும், பேச்சாலும் இளைஞர்களின் நெஞ்சுகளில்
அழியாத ஓர் இடத்தை
அண்ணன் பிடித்துள்ளார்
“தமிழகம்” இது அவர் தந்தவொரு பத்திரிகை
அந்த இதழில்
அவர் பொழிந்த கருத்துக்களில்
நெஞ்சைப் பறி கொடுத்தோம்
நிமிர்ந்து அவர் பின்னால்
அஞ்சாது நாங்கள் அணிதிரண்டு பின் தொடர்ந்தோம்

அண்ணன் மேடையிலே அமர்ந்திருந்தால் ஓர் அழகு
மன்னன் சோழன் மறுபிறவி எடுத்து வந்து

முன்னே அமர்ந்து முறுவலித்தல் போலிருக்கும்
கொட்டும் மழைக்குள்ளும் கொதிக்கின்ற வெயிலுக்குள் – கை
கட்டி உரைகேட்க காத்திருப்போம் நாங்களெல்லாம்
தேன் அருவி பாய்வது போல்
தீந்தமிழை அவர் சொரிவார்
ஆண்கள் மட்டுமல்ல அணங்குகளும் அதில் குளிப்பார்

காதல் பிடிக்காது
கூறிய வார்த்தைகளில்
காதல் மிகக் கொண்டு களிப்போடு பின் தொடர்வோம்
மக்கள் அவர் உரையில்
மயங்கிக் கிடந்தார்கள்
தக்கதொரு தலைவரின்றி தவித்தந்த வேளையிலே
அண்ணன் இராசதுரை அரசியலுள் அடிபதித்தார்.
உண்மையிலே மக்கள் புது
உலகத்தைக் கண்டார்கள்.
என்றும் அரசியலில் இருப்பதற்கு தங்களுக்கே
உண்டு உரிமையென உரத்து முழங்கியோரை
கண்டு இராசதுரை
கலங்கி ஓடவில்லை
நின்று அவரோடு நேரடிப் போட்டியிட்டு
வென்று புதிய
விடிவுக்கு வழியமைத்தார்.

செல்லையா பெற்றபிள்ளை சீமானாய் இருக்கவில்லை
வல்லமையால் அங்கேயொரு
வரலாற்றை எழுதுவித்தார்
அண்ணனாய் எல்லோரும் அழைத்து முடிசூடா
மன்னனாய் மட்டுநகர்,
மக்கள் மதிக்கின்றார்.

அண்ணன் உழைப்பிற்கு அழியாத சின்னங்கள்
எண்ண முடியாதளவு இருக்கிறது அதிலெல்லாம்

வித்தகராம் எங்கள் விபுலானந்தர் நினைவாக
உச்சியினைத் தொடுகின்ற
ஓ..... அந்தக் கலைக்கோயில்
நிச்சயமாய் அண்ணனுக்கோர் நினைவுச்சின்னம்.

எத்தனையோ சீமான்கள் எமக்குள்ளே வாழ்ந்தார்கள்
வித்தகர் விபுலாநந்தர் போல் விளங்கிய அறிஞர்களை
சத்தியமாய் நேசித்து
சரித்திரமாய் அதைப் படைத்த
உத்தமர்கள் அண்ணன்போல் உலகத்தில் பிறந்தாரா?

அண்ணன் இராசதுரை அமைச்சராய் ஆனது
வண்ணத் தமிழுக்கோர்
வரவேற்ப என நினைத்தோம்
கன்னித் தமிழ் அரசு கட்டிலிலே போய் அமர்ந்தால்
எண்ணி அதனை இறும்பூது அடையோமா?
சின்ன மனிதர்கள் சீக்கிரத்தில் உயர்ந்து விட்டால்
அன்னையைக் கூட
அவர்கள் மறந்திடுவார்
வானத்திலே போய் அமர்ந்து வாழ்வதையே விழைகின்றார்.
ஆனாலும் எங்கள்
அமைச்சர் இராசதுரை
இதற்கெல்லாம் விதிவிலக்காய் இருக்கின்றார் அவர் வாழ்க

எழுத்தாளர் என்றாலே இவருக்கோர் தனி அன்பு
எழுத்தாள ராயும் இருந்துள்ளார் என்பதற்காய்
எழுத்தாளர் பெருமையினை
அறிந்தவர் உதவுகிறார்.
இன்று இலங்கை யெல்லாம்
எழில் மிக்க கோயில்களைக்
கண்டுநாம் மகிழ்வதற்கு காரணமே அண்ணன்தான்

கோயில்களுக் கெல்லாம்
கொடுத்துக் களைத்துள்ளார்
அள்ளிக் கொடுப்பதிலும் அமைச்சர்களை முந்தி விட்டார்

சின்ன உருவத்துள் சிகரத்தை ஒத்த பெரும்
உள்ளத்தை வைத்திருக்கும் உயர்ந்த மனிதர் இவர்
வஞ்சகம், சூழ்ச்சி
வகுப்பு நெறி இவைகளினைக்
கொஞ்சமும் விரும்பாது குவலயத்தில் உள்ளவர்கள்
எல்லோரும் சமத்துவமாய் இருப்பதையே விரும்புகின்ற
வல்லமை பலவுள்ள
வரலாற்று நாயகன்
பஞ்சுபோல் உள்ளம் பழக இவர் தேன்போல,
நெஞ்செல்லாம் அன்புணர்வு நிறைந்துள்ள தனிப்பிறவி.

அமைச்சர் இராசதுரை அழகிய காவியம்
காவியத்தைத் தங்கள் கரங்களிலே ஏந்தி வைத்து
படிப்பவர்கள் உள்ளத்தை
பறிகொடுக்கத் தவறார்கள்.
மறுப்பவர்கள் இருந்தால் மண்டையிலே கோளாறு
இருப்பதுவாய் சொல்வேன் இதிலென்ன சந்தேகம்

நாளை இந்த நாயகனின் நயம் மிகுந்த காவியத்தை
வாழுங் கவிதை வரிகளிலே சிறைப்பிடிக்க
சத்தியத்தை ஒருபோதும்
சாகடிக்க விரும்பாத
புத்தியுள்ள புலவர் குலம் புறப்பட்டு வாருங்கள்.

# “நாம் பிறந்த பேறென்ன பேறோ”

ஈழத்துப் பூராடனார்

உலகமெலாம் ஓரிடத்தில் உறவாடும்போது
  உளறுமன்பே உலகன்பு உயர்வன்பாகும்
உலகமெலாம் ஈரிடத்தில் உறவாடிற்றாங்கு
  உள்நுழைத்து உறுநிகழ்ச்சி உய்ந்துபார்த்தேன்
திலகமென ஓர் தமிழன் திகழ்ந்து நின்றான்
  தீந்தமிழால் அவையோரைத் திகட்டவைத்தான்
திலகமவன் மட்டுநகர் பயந்தமைத்தன்
  தேன் தமிழின் சுவையாலே திருவாகிநின்றான்.
மதுரையிலே மதுரச்சுவை தமிழோடு சேர்த்து
  மாவைகை போலவே வளமாகவிட்டான்
இதுவே தமிழ்த் தேனென இருந்தவர்கள் சொன்னார்
  இத்தமிழே தமிழென்று இறுதியும் சொன்னார்
பதுமையெனச் சபைஇருந்த வாறென்னவாறே
  பார்த்திருந்த என்மனது குளிர்ந்தபெருஞ்சீரே
இதுமாவைப் பெரிதுதான் மட்டுநகர் தனக்கே
  இப்பெருமை எமக்கென்று எண்ணிநான் மகிழ்ந்தேன்.
தமிழ் வளத்தால் மதுரையிலே தகைகொண்ட செம்மல்
  தரணியிலே இந்துமத மென்றவழி கண்ட

அமிழ் சுவைக்கும் தமிழ்மொழியில் மதப்பணியைச் சேர்த்து
அமைதியுற உலகஇந்து மாநாடு கண்ட
தமிழ்மணக்க இலங்கையிலே தக்கமன்றமமைத்து
தகைஏறி ஆங்குநீ நின்றதிருக்கோலம்;
உமிழ்கின்றேன் கண்ணூறு உமைவிட்டு நீங்க
உயர்ந்திட்ட அப்புகழ் உமக்கல்ல எமக்கே.
இத்தகைய ஒருமகனைப் பெற்றமட்டு நகரின்
உயர் மண்ணில் நாம்பிறந்த பேறென்ன பேறோ
முத்தமிழன் விபுலானந்த முனிசெய்த தவமோ
முதுபுலவன் பெரியதம்பி முறைசெய்த பேறோ
தத்துவனார் அருணாசலம் தந்த பெருந் தனமோ
தமிழ் மணக்கும் பூபாலனார் தமிழ்செய்த வளனோ
இராசதுரை எனுந்திருவால் நாம் பெற்ற நலமே
நில்–ஐயா இராசதுரை நினைப்போல உயர
நெடும்பயணம் செயவிருக்கும் மட்டுநகர் உண்டு
செல் ஐயா அதைநடத்தி தெவ்வர்கள் குனிய
செகத்தினிலே மட்டுநகர் மண் தமிழ் என்றறிய
நல்லமண் தமிழ்வளர்க்கும் மணவளத்து மண்ணே
மானிலத்தின் எண்திசையும் தமிழ்முழக்கம் செய்து
நல்லையாப் பெருமகனின் நல்லபணி போல
நல்ல பலசெயல் செய்து நாடுயரவாழ்க.
செல்லையா இராசதுரை செய்வதெல்லாம் மாறே
செகத்தினிலே எமக்கெதிரி என்னுந் திருக்கூட்டம்
நல்லதையே உய்த்துணை முடியாதுபோன
நலங்கெட்ட நாகரீகம் நாடறியும் போலும்;
பொல்லாத பலசெய்து நீ நரகம் புகுந்தால்
செல்லையா இராசதுரை சொர்க்கத்தில் என்றால்
சேரார்கள் அவர் ஆங்கு சிறிது தயை புரிவாய்
எல்லையில்லாப் பெரும் புகழ் இப்புவியிற் பெற்று
கண்ணின் மணியாய் காலமெலாம் புகழோடு வாழ்க!

# "இன்சொல்லன்"

கவிஞர் சிவ.தங்கையாபிள்ளை

இலைசெறிந்து நாற்புறமும் அழகழகாய் முத்தமிடும்
தலைசிறந்த இலங்கையிலே தரணியெலாம் வியக்குமாறு
கலைசிறந்த உலக இந்து மாநாடு கவின்பெறவே
நிலைசிறந்து நடைபெறவே நின்மலனை வணங்குகின்றேன்.

அண்டின பேர்க்கருள் அறுபடை வீடமர்ந்து
கண்டியோடு கதிர்காமம் கவின்பெற அமர்ந்தகந்தன்
எண்டிசை புகழ்மணக்க எழில் இந்து மாநாடு
கண்டிங்கு அருள்சுரப்பான் களிப்புடன் வாழ்த்தினேனே

என்னினிய தமிழன்பர் எழில் ராஜ துரையென்னும்
பொன்னனைய குணம்படைத்தோன் பொறுப்பினிலே நடக்கின்ற
மன்னுபுகழ் இந்துமத மாஉலக மாநாட்டில்
தன்னிறைவு கொண்டுலகம் தழைத்திடவே வழிவகுப்பீர்

அன்றொருநாள் அமெரிக்காவில் அற்புதமாய் இந்துமதம்
நன்றெனவே நவின்றவீரன் நல்விவேகானந்தஞானி

இன்றுலகில் இனிய ராஜ துரையாக அவதரித்து
குன்றெனவே இந்து மதநாட்டைக் கூட்டினாரே.
இன்முகத்தன் இன்சொல்லன் இனிவாகப் பழகும் அன்பர்
புன்சிரிப்பால் கவருமன்பர் புகழ்ச்சிசொலப் பொறுக்கமாட்டார்
என் மனத்தில் குடிகொண்ட எழில் ராஜ துரையவரின்
தன் மனத்தால் நடக்கின்ற மாநாடு வாழியவே
வாழ்க!



வேகமாகப் போவது முக்கியமல்ல. சரியான பாதையில் போவதுதான் முக்கியம்; அப்போது தான் நாம் போய்ச் சேரவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருவோம். முக்தி அடைவதற்குரிய சாதனைக்கும் இது பொருந்தும்.

— ஸ்ரீ சத்திய சாயிபாபா

# "புகழ் வீசும் இராசதுரை"


**பண்டிதர் ஞானப்பிரகாசன்**

செங்கமலந் தன்னழகால் தேன்பால் நறுஞ்சுவையால்
பைங்கிளிகள் பாட்டால் பகர்ந்திடுமே – பொங்குபுகழ்
செல்லையன் பெற்றெடுத்த தெள்ளமுதம் ராஜுவெனும்
மல்லிகைப்பூ வீசும் மனம்.

**விருத்தம்**

சிறுபாலர் உளமுள்ள நிருவாள ரோடு
திருமாலுங் கலைவாணி வடிவேலுந் தங்கும்
அறிவாளர் உறவாட வருவார்கள் தாமாய்
அதிகாரம் பெருவாழ்வு மொழிவன்மை சேரும்
மறைவான கபடங்கள் படுதோல்வி காணும்
வருகின்ற கடிநாயும் மனம்மாறி மீளும்
துறைதோறும் மரியாதை – புகழ்வீசும் – ராஜ
துரையாக நிலமீது வள்மோங்கி வாழ்க
தடுமாறுந் தமிழ்நாடு தலைதூக்க வெண்ணி
தவம் பெற்ற தவம்போலுஞ் சபையொன்று தந்தார்
மிடிதீர்க்கும் பனையொன்று தெளிவாகக் கண்டார்
வியப்பான சிறப்புற்ற பொருள் நூறு கண்டார்

நடைகுன்றி வலிகண்டு கிடையாகும் போது
　　நலமான பரிகாரி நடராஜன் வந்து
தொடமுந்தி வலிமாறும் படிசெய்து – ராஜ
　　துரையோடு மனைமக்கள் நலமோங்கி வாழ்க
தகவுள்ள பிரதேச மணிமந்திர பீடம்
　　தமிழன்னை அமுதுண்ட – பொதுநன்மை பூக்கும்
மிகநல்ல ஒளியுள்ள எதிர்கால மொன்றை
　　விரிவாக்கும் ஜெயராமன் தனையொத்த – மாந்தர்
பகைதீர்த்து – பசிதீர்த்து – பிணியின்றி வாழ
　　பலிகொண்ட அநியாயம் – அழுக்காறு சாய
சுகவாழ்வின் ஒளிகண்டு களிகூரும் – ராஜ
　　துரை வாழ்க தமிழ் வாழ்க அரசாங்கம் வாழ்க
அறம் வாழ்க குறள் பேசும் அரசாட்சி வாழ்க
வணக்கம்.



பணிவுடன் பழகாதவனும், நாணத்தகும் செயல்களினின்று விலகிக் கொள்ளாதவனும் உண்மையான மனிதனாக மாட்டான்.

– நபிகள் நாயகம் (ஸல்)

# "செயலில் வெற்றி கொண்டார்"

## டாக்டர். சீர்காழி கோவிந்தராஜன்

இசையோடு இசைந்து விட்டால் ஏது குறை
இசையோடு இசைந்து விட்டால் ஏது குறை
இதை நன்றே உணர்ந்து கொண்டார் இராஜதுரை
இதை நன்றே உணர்ந்து கொண்டார் இராஜதுரை
அமைச்சர் இராஜதுரை
அன்புமிகு இராஜதுரை
அன்புமிகு செல்லையா இராஜதுரை.

(இசையோடு இசைந்து.....)

இசைக்கலை வளர்த்திடும் மட்டக்களப்பு
இசைக்கலை வளர்த்திடும் மட்டக்களப்பு
இதை மனதினில் எண்ண மட்டில்லாக் களிப்பு
இதை மனதினில் எண்ண மட்டில்லாக் களிப்பு

(இசையோடு இசைந்து......)

ஏழுசுரம் இசைத்திடிவே ஆனந்தம்
ஏழுசுரம் இசைத்திடவே ஆனந்தம்

இதை எழுத்தால் வகுத்தவர் விபுலானந்தர்

இதை எழுத்தால் வகுத்தவர் விபுலானந்தர்

(இசையோடு இசைந்து.....)

ஏழு தலைமுறையாய்..... ஆ..... ஆ.....

ஏழு தலைமுறையாய்..... ஆ..... ஆ.....

இசைப்பணி சிறக்கச் செய்து

வாழையடி வாழையென வந்த சிவானந்தம்

நம் சிவானந்தம்

என் அண்ணன் சிவானந்தம், முதல்வர் சிவானந்தம்

இசை, நடனக் கல்லூரி முதல்வர் சிவானந்தம்

இசை, நடனக் கல்லூரி முதல்வர் சிவானந்தம்.

இசையோடு இசைந்து விட்டால் ஏது குறை


இதை நன்றே உணர்ந்து கொண்டார் இராஜதுரை

இதை நன்றே உணர்ந்து கொண்டார் இராஜதுரை

செயலில் வெற்றி கொண்டார் இராஜதுரை

இராஜதுரை, இராஜதுரை, இராஜதுரை, இராஜதுரை.

> கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்திருப்பவற்றையெல்லாம் கண்ணாடியின் மூலமாகப் பார்க்க முடிவதுபோல் ஒருவனது கண்களின் வழியாகவே அவனது உள்ளத்தில் இருப்பதையெல்லாம் காணலாம்.
>
> – இராமகிருஷ்ண பரமஹம்சர்




''அனைத்துலக இந்துமா நாடு'' தன்னை
அழகீழத் திருநாட்டில் அமைப்பதற்கு
நினைத்துலகின் பலபாகம் நீந்திச் சென்று
நிகரற்ற ஞானிகளின் ஆசிபெற்று
இணைத்தரசை ஏற்கவைத்து இயையச் செய்து
ஈடற்ற மாநாட்டை இலங்கச் செய்த
திணைக்களத்தின் ''அமைச்சர்'' எனும் செயலின் வீரர்
திருவாளர் ''இராசதுரை'' சிங்கம் வாழ்க

கோடிகளாய்க் குவித்தாலும் காண்பதற்குக்
கொடுத்து வையாத் தபோதனரைக் கூட்டிவந்தீர்
மாடிமுதல் மண்குடிசை மன்னிவாழும்
மக்களுக்கும் தரிசனத்தை வாங்கித் தந்தீர்
கூடிவந்த அறிஞர்களின் இந்துதர்மக்
கொள்கைகளைக் கேட்பதற்கோர் குறியுமானீர்
ஆடிவந்த தமிழ்த் தாயை அலங்கரித்த
அருமைமிகு திருமகனே வாழ்க வாழ்க

செல்லையா , இராஜா , துரை , சிங்கம் என்று
தேன்தமிழில் உரையாற்றிச் சிரிக்க வைத்து
நில்லையா கடமையைச் செய் என்று கூறி
நிறுத்தி வைத்த ''சௌந்தரா'' அம்மையாரின்
செல்வமனப் பாங்குதனைக் கவியிற் கூறத்
தேடிடினும் எழுத்துக்கள் சேரவில்லை
வல்லவரும் - நல்லவரும் வாழ்த்துக்கூற
வழிவகுத்த தமிழ் மகனே வாழ்க வாழ்க


தனிமையிலே உலகமா நாடுதன்னைத்
தாரணியோர் போற்றிடவே நிறைவு செய்தாய்
இனிமையிலே பெரும் பேறாய் உலகம் போற்றும்
''இந்துமதக் காவலனாய்'' இலங்குகின்றாய்
அணிமையிலே கிடைத்துள்ள புகழுக்காக
அனைத்துலக மேதைகளும் ''ஆ'' என்கின்றார்
புனிதமுது நும் செயலை ஈழமக்கள்
போற்றுகிறார் புரிந்துணர்ந்து புகழ்கின்றாரே

பன்னாடை மனிதர்சிலர் ஏதோ ஒன்றைப்
பகர்ந்திட்ட தால்நமது பண்பு போமோ
பொன்னாடை போர்த்தாத புளுக்கத்தாலே
புரண்டடித்துச் சாகுவதால் புனிதம் போமோ
முன்னாடை நீக்கிவிட்ட மோரைப் போன்று
முழங்குகிறார் எதுவெதிலோமோதுகின்றார்
தன்னாடை திருத்தாத மனிதர் கூறும்
சர்ச்சைகளை எறிந்துவிட்டு தமிழைக் காப்பாய்

இந்துமதக் காவலனே இலங்கை நாட்டின்
இணையற்ற பெருமகனே இனிதே வாழ்க

உந்து அறிவாற்றல் ஒன்று சேர்ந்து
ஒப்பற்ற தலைமகனாய் உலகில் வாழ்க
சிந்துநதி நாகரிகம் செழித்து வாழச்
செய்துவிட்ட திருமகனே சிறந்து வாழ்க
கந்தனருள் பெற்றுயர்ந்து ''தமர்'' களோடு
காலமெல்லாம் களிசூழ வாழ்க வாழ்க

மாநாடு இலங்கையிலே மலர்வதற்கு
வாய்ப்பளித்த ''தார்மீக அரசு'' வாழ்க
தேனோடு சிறப்புறவே செயல்புரிந்த
சேய் - தாய்கள், உளத்தின்பம் சேர்ந்து வாழ்க
மாநாட்டில் கலந்து கொள்ள வருகை தந்த
மாமேதை - அறிஞர்களும் மகிழ்ந்து வாழ்க
பூ நாட்டைப் பொன்மலரால் அர்ச்சித்திட்ட
பொன்மனத்தான் ''இராசதுரை'' புகழும் வாழ்க



**உங்களை முதலில் கட்டுப்படுத்துங்கள்; பின்பு உலகமே உங்கள் வசமாகும்.**

– விவேகானந்தர்

# "தமிழின் பாவிசையாய்" வாழி!

*தமிழ்த் துறைவன்*

1. செந்நெலூடு வரால் பாய்ந்து
    செல்வம் கொழிக்கும் திருநாடாம்
பன்னு செல்வம் பல வளங்கள்
    பல்கும் மட்டு நகர்பெற்ற
நன்நித்திலே தமிழ் இனத்தின்
    நலமே இனிக்கும் சொற்செல்வ
இன்னும் பல்லாண்டு இறையருளால்
    இனிதே வாழி பல்லூழி

2. அன்னை தமிழின் தளைபோக்க
    அறப்போர்த் தானைத் தளபதியாய்
மன்னும் தந்தை செல்வாவின்
    வலக்கை யாக நின்றுதவி
கன்னித் தமிழின் சுவைதன்னை
    காதலிக்கும் சொற் சிறப்பால்
மின்னி முழங்கும் காரென்றே
    மிழற்றும் சொல்லின் செல்வன் நீ

3\. கன்னல் தேனோ கண்டறியா
கடவுள் அமுதோ கனிபிழிந்து
சொன்நல் நலத்தோர் தொடையாக்கித்
தொடுக்கும் கடவுட் பழம்பாட்டோ
என்னென் றுரைப்பேன் உன்தமிழை
இணையற்றவரும் இணை நெருங்கா
தொன்நூற் றமிழின் துறைபோய
தூயோய் நினது சொல்லருமை

4\. கன்னல் தமிழாம் உனதுரையைக்
காதால் பருக என்றன்றோ
சொன்நற் செல்வனாம் உனது
சுவைசேர் அமிழ்தாம் சொல்மழையில்
கன்னித் தமிழர் கலந்துண்டு
கனிவாய் உன்னைக் காதலித்து
இன்னும் வாழவேண்டு கின்றோம்
இனிதே உனது சொல்லாண்மை

5\. அழிவுற் றுள்ள கோவிலெல்லாம்
ஆய்ந்து ஆய்ந்து அவையெல்லாம்
வழுவில்லாமல் முன்னையைப் போல்
வகுத்துத் தந்தாய் நீயெமக்கு
தொழுது போற்றும் கோவிலெல்லாம்
தூயோய் உனது நற்பணியால்
செழுமை பெற்றே விளங்குறுமால்
சிறப்பே உனது செயலாண்மை

6\. கோவி லெல்லாம் யாகங்கள்
குலவும் புதிதாய்க் கோபுரங்கள்
வாயி லெல்லாம் தோரணங்கள்
வழுத்தும் தூப தீபங்கள்
பாவல் லோர்கள் போற்றநிதம்

தாவில் சிறப்பு இவையெல்லாம்
தகவோய் நினது தண்ணளியே

7. எண்ணம் தூய்தாய் எண்ணியதை
இயற்றி நிற்கும் இன்திறத்தால்
வண்ண வண்ண விழாவாக
வழுத்தும் பலர்க்கு விழாவெடுத்தாய்
கண்ணுக்கினிய மண்ட பங்கள்
கருத்துக் இனியவாய்க் கொண்டு
நண்ணும் விபுலா நந்தற்கும்
நாவலர்க்கும் என அமைத்தாய்

8. பொன்னிற் தவிர்க்கும் அணுவுண்டோ
போற்றா தொளிக்கும் பரிதியுண்டோ
நின்னில் நிறையாப் பண்புண்டோ
நிறைந்து நுணுகும் புலமையினோய்
கண்ணின் மணிபோல் ஊர்களிக்க
கடவுள் அருளால் இராசதுரை
எண்ணும் நலத்தால் இராசம்மை
எழிலால் வாழி பல்லூழி

9. தேனின் சுவையாய் நிலாநாளில்
தென்றல் ஊடு இசை பரப்பும்
தானே ரில்லா நீரரங்கில்
தவழும் பாடல் நீர்மகளிர்
பானோர் சுவையாய், யாழ்நாட்டின்
பரவும் தமிழின் பாவிசையாய்
ஏனோர் ஏத்த இசைபரப்பி
என்றும் வாழி நீடுழி.

# "சிந்தனைச் சிற்பி"

சிவா. பசுபதி

ஜனாதிபதி- சட்டத்தரணி

மாண்புமிகு அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை அவர்களைத் தமிழ் எழுத்தாளர்கள் பாராட்டுவதற்கு முன்வந்தமை குறித்துப் பெரு மகிழ்ச்சி கொள்கின்றேன். எழுத்தாளர் உலகில் இலைமறை காய் போல் விளங்கிய சிந்தனைச் சிற்பியாகிய அமைச்சரின் பாராட்டு விழாவின் போது வெளியிடப் படவிருக்கும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மேலும் பேருவகை கொள்கின்றேன்.

அமைச்சர் திரு.இராசதுரை அவர்கள் தமது வாழ்க்கையை ஓர் எழுத்தாளராக ஆரம்பித்தவர். தமது எழுத்தாற்றலினால், கருத்தாழம் மிக்க எழுத்தோவியங்களை வரைந்த அவர் இன்று புகழேணியின் உச்சியில் ஒரு அமைச்சராக விருப்பது தமிழ் எழுத்தாளர்களுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களாகிய எமக்கும் பெருமை தேடிக் கொடுப்பதாகும். தமிழ் பத்திரிகைகள் பலவற்றின் ஆசிரியராக இருந்ததோடு மட்டுமின்றி பல தமிழ் நூல்களையும் அமைச்சர்கள் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ் இலக்கியத்தில் அமைச்சரின் அறிவும் ஆழ்ந்த புலமையும் கடல் கடந்த நாடுகளிலும் குறிப்பாக இந்தியாவிலும் பல தமிழ் அறிஞர்களினால் பலமுறை பாராட்டப்பட்டது மட்டுமின்றி அவரின் நாவன்மையையும் பாராட்டி அவருக்கு "சொல்லின் செல்வன்" என்ற காரணப் பெயரும் வழங்கப்பட்டது. தமிழ் மொழியில் குறிப்பாகத் தமிழ் இலக்கியத்தில் அமைச்சருக்குள்ள ஆழ்ந்த அறிவும், புலமையும்

இன்னும்பல எழுத்தோவியங்களாக, புத்தகங்களாக வெளிவருமாயின் அவை தமிழ் இலக்கிய உலகில் பொக்கிஷங்களாக, களஞ்சியங்களாகப் போற்றப்படுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. எனவே, இதைக் கருத்திற் கொண்டு பாராட்டு விழாக் குழுவினர் அமைச்சரின் வெளிவராதிருக்கும் இலக்கியப் படைப்புக்களையும் ஏனையவற்றையும் நூலுருவில் வெளியிடுவதற்கான முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்பதே தமிழ் மக்களின் பேரவாவாகும்.

"நேற்றைய செயல் இன்றைய செய்தி; இன்றைய செய்தி நாளைய வரலாறு" என்பதற்கேற்ப அமைச்சரின் இன்றைய இலக்கியச் செய்திகள், அவரது சிந்தனைக் கருத்துக்கள் நாளைய தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு பாகமாக அமையுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

தமிழினத்தின் தவப் புதல்வன் மாண்புமிகு அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை அவர்களுக்கும் இறைவனால் அருளப்பட்ட அருட்கொடையாகிய எழுத்தாற்றல் மேன்மேலும் வளர வேண்டுமெனவும் இன்னும் பல எழுத்தோவியங்களை தமிழ் மொழியிலும் தமிழ் இலக்கியத்திலும் படைக்க அவருக்கு நீண்ட ஆயுளையும், ஆசீர்வாதங்களையும் அருள வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

மலரில் தேன் சேகரிக்கும் வண்டு, மலருக்குச் சேதமில்லாமலும், அதன் வண்ணத்துக்கோ, நறுமணத்துக்கோ, குறை நேராமலும், தேனை மட்டும் உறிஞ்சிப் பெற்றுச்செல்கிறது. அது போன்றவரே ஞானி.

– புத்தர்

# "தமிழ் கூறும் நல்லுலகில் இராசதுரை"

எஸ். சர்வானந்தா
மேல் மாகாண ஆளுநர்

சொல்லின் செல்வர் மாண்புமிகு அமைச்சர் செ.இராசதுரை அவர்களைப் பாராட்டி வெளியிடப்படும் மலருக்கு இச் செய்தியை அனுப்புவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சங்க காலம் தொடக்கம் தமிழ் அறிஞர்களுக்கு புகழ்மிக்க ஒரு தனியிடம் அளிக்கப்பட்டுள்ளமை தமிழின் தனிப்பெருமையாகும். இந்நிலை இன்றும் தொடருவதையிட்டு நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

இந்நாட்டில் மட்டுமின்றி தமிழ்கூறும் நல்லலுகின் பலபாகங்களிலும் திரு.இராசதுரை அவர்களின் படைப்புக்கள் யாவும் வரவேற்கப் படுகின்றமை பெருமைக்குரிய விடயமாகும். எனவே, இவருடைய எழுத்துப்பணி மேன்மேலும் தொடர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

# “பாராளுமன்றத்தில் இலக்கியம் படைக்கும் இராசதுரை”

அல்ஹாஜ் எம்.ஏ. பாகீர் மாகார்
தென் மாகாண ஆளுநர்

இந்நாட்டு அரசியலில் தம் முத்திரையை அழுத்தமாகப் பதித்த சிறப்புமிக்கதோர் வரிசையில் மாண்புமிகு செல்லையா இராசதுரை அவர்களும் முன்னணியில் வைத்துப் போற்றத்தக்க ஒருவராவார்.

எமது பாராளுமன்றத்தில் நீண்ட காலமாக தொடர்ந்து மக்களால் தேர்வு செய்யப்பட்டோர்களில் மதவாச்சித் தொகுதியின் பிரதிநிதி திரு.மைத்திரிபால சேனாநாயக்க அவர்களுக்கு அடுத்தபடியாக இடம் வகிப்பவர் அமைச்சர் இராசதுரையாகும். இவ்விருவரும் குறிப்பிட்ட தமது தொகுதிகளையே (மதவாச்சி, மட்டக்களப்பு) ஆரம்பம் முதல் இன்று வரை பிரதி நிதித்துவப் படுத்தி வருகின்றனர். எனது நண்பர் மைத்திரிபால முப்பத்து ஆறு வருடங்களும் அன்பர் இராசதுரை முப்பத்து இரண்டு வருடங்களும் தொடர்ச்சியாகப் பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளாக அமர்ந்து வருகின்றனர். சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் என்ற முறையில் அதிக நீண்ட நாட்கள் பாராளுமன்ற ஆசனத்தை அலங்கரித்து வரும் பெருமை இராசதுரை அவர்களையே சாரும் என்பது தமிழ் பேசும் அனைவரும் பேருவகையோடு நினைத்துப் பார்க்கக்கூடிய விடயமாகும்.

அமைச்சர் இராசதுரை ஒரு சாதனையாளர்; அரசியலில் வரலாறு படைத்தவர்; சாதுர்யம் மிக்கவர்; சாமர்த்தியசாலி; செந்தமிழ்ச் செல்வர்.

1960–ம் ஆண்டு மார்ச்சு மாதம் முதன் முதலாக பேருவலைத் தொகுதியிலிருந்து நான் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது எம். பி. இராசதுரையுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. அவரின் நற்பண்புகள் என்னைப் பெரிதும் ஆட்கொண்டன. அவரின் மொழிவளம், சொல் ஆற்றல், செயற்றிறன், கண்ணியமிக்க கட்டுப்பாடுடனான வாழ்க்கை முறை ஆகியவைகளை அணுகி இருந்து அவதரிக்கக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

நான் பாராளுமன்ற சபாநாயகராக வீற்றிருந்து அவைக் கூட்டங்களை நடத்தும் போதெல்லாம் கௌரவ உறுப்பினர் மட்டுநகர் முதல்வர் உரை நிகழ்த்துவதை இனிக்க இனிக்க செவிமடுப்பதில் எனக்கே ஒரு தனி மகிழ்ச்சி. சபை விவாதங்கள் புயலாக மாறும் போதெல்லாம் மென் தென்றலாகத் தோன்றித் தன் இன்முகத்தாலும் கனிவு மொழியாலும் சபையில் அமைதியை ஏற்படுத்தத் துணை புரிவதில் அவர் ஒரு வல்லவராகத் திகழ்கிறார்.

அவர் அரசியல் பேச்சில் தமிழ் அரசோச்சும்; தமிழ் காவியங்களிலிருந்து ஆற்றொழுக்காக உவமான உவமேயங்கள் பீறிட்டெழும்.

அவர் ஒரு தமிழ் அறிஞர். தமிழோடு, சீரிய இஸ்லாமியக் கருத்துக்களையும் அள்ளித் தெளிக்கும் வல்லமை படைத்தவர். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெருவிழாக்களில் பங்கெடுக்கும் போதெல்லாம் உமறுப் புலவரின் சீறாவின் ஓசை அவர் நாவில் நயம்பெற ஒலிக்கும் தன்மையே அலாதியானது , என்றும் எப்பொழுதும் முஸ்லிம்களின் இனிய நண்பராக இராச துரை விளங்குகிறார்.

தமிழ் – முஸ்லிம்களின் அரசியல் – இலக்கிய இணைப்பாளராக இலங்கையில் திரு.இராசதுரை விளங்குகிறார் என்பது மிகப் பொருத்தமான கூற்றாகும்.

இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகளில் அவர் ஆற்றிய அரிய சொற்பொழிவுகள் இன்னும் எம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றன.

தமிழ் மொழிக்கு இந்நாட்டில் சம அந்தஸ்து பெற்றுக் கொடுப்பதற்கென உதயமாகிய ஒரு கட்சி மூலம் அரசியல் அரங்கில் இறங்கிய இராசதுரை, தமிழை நிர்வாக மொழியாக நடைமுறைப்படுத்தக்கூடிய மகத்தான பணியை பொறுப்பேற்கும் வாய்ப்புக் கிட்டியமை ஒரு தனி மனிதனுக்குத் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட மிகவும் அருநிகழ்வான நிலைப்பாடாகும். அதிலும், தமிழ் உத்தியோகபூர்வ மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இச்சந்தர்ப்பம் அவர் அரசியல் வாழ்க்கையில் சிகரம் வைத்த சம்பவமென நாம் வர்ணிக்கலாம்.

உலகெல்லாம் தமிழ் மணக்க அருந்தொண்டு புரியும் தமிழ் அமுலாக்க அமைச்சர் இராசதுரை படைப்பாற்றல் மிக்கவர். சென்ற ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கு, அந்நாட்டின் தமிழ் அமைச்சர் திரு. சாமிவேலு அவர்களுக்கு உறுதுணையாக நின்றவர்களுள் நம் நாட்டு இராசதுரையும் ஒருவர் என்பதை நான் நேரடியாக அம்மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பொழுது கண்டு பூரிப்பு அடைந்தேன். மலேசியப் பிரதமர் டாக்டர் மஹீதீர் முஹம்மத், கலைஞர் மு. கருணாநிதி, முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதம் உட்பட நூற்றுக் கணக்கான தமிழ் அறிஞர்கள் முன்னிலையில் எமது செந்தமிழ்ச் செல்வர் இராசதுரை ஆற்றிய சொற்பொழிவு இன்னும் எனது காதில் ரீங்காரம் புரிகின்றது.

கிழக்கிலங்கை மீன்பாடும் நாட்டில் உதித்த இராசதுரை மேற்கிலங்கை மீன்வளத்துறை பேருவலையில் தோன்றித் தேன்மொழி சிந்தும் காட்சியைக் காண எனதூர் மக்கள் ஆயிரமாயிரமாகத் திரள்வது மிக உவகையோடு நினைவில் எழுகின்றது. கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்குக் கைவந்த மச்சான் மச்சாள் காவிய முறைகளை நம்மூர் சோனக மக்கள் மத்தியில் பாத்தும்மா பீவி – ஆதம்பாவா வர்ணனையோடு எடுத்துரைப்பதில் அவரைப் போன்ற ஒரு வல்லுநரை நான் கண்டிலேன்.

தேசிய ஒற்றுமையின் நிலைக்களனாகவும் விளங்கும் இராசதுரை அவர்கள் சம காலத்தில் நம் மத்தியில் உதித்த புகழ்பூத்த பெருமகனார்.

அவருடைய பண்பான அரசியல் – இலக்கியப் பணி பல்லாண்டு காலம் வாழ என் உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.


*அல்ஹாஜ் எம்.ஏ. பாகீர் மாகார்*
*தென் மாகாண ஆளுநர்.*
***GOVERNOR OF SOUTHERN STATE***

# "FINEST ORATOR IN TAMIL"

## Dr. Anandatissa de Alwis
### MINISTER OF STATE & INFORMATION

I am glad to hear that Tamil writers are felicitating the Hon. C. Raajadurai. Although most of us in Parliament do not know the Tamil language, or even the flow of language, which is so impressive, most of us have commented that after listening to Raajadurai, who perhaps not for nothing has earned the reputation of being the finest orator in Tamil in either Sri Lanka or South India.

It is heart warming to hear that his contribution as a Tamil writer is being recognized at this celebration.



# "Eminent Writer; Brilliant Experienced Politician"

It gives me great pleasure to congratulate the Hon. C. Rajadurai, Minister of Regional Development, Hindu Religious, Cultural and Tamil Affairs on the occasion of the Felicitation ceremony accorded to him by the Tamil Writers in recognition of his contributions to Tamil writing and the honour he has brought to the Tamil writers of Sri Lanka. He has distinguished himself as a writer, author and editor while devoting with equal vigour his attention to manifold religious, social and political activities. It is a rare privilege to be honoured by a group who feel that one's achievements have also brought honour to them. The acclamations he has received as a Tamil writer are only too well-known. His achievements in the furtherance of Hindu Religious and cultural activities are significant.

Mr. Rajadurai has the added distinction of having served as a member of the Parliament continuously for the past 32 years. We are proud to have in Parliament an eminent writer, brilliant and an experienced politician of his calibre.

I join the Tamil Community in offering Mr. Rajadurai my felicitations and wish Mr. Rajadurai will serve the Tamil people, the Hindu Religion and Culture with even greater success in the years to come.

**E.L. Senanayake.**

**Governor, Central Provincial Council**

# "SILVER TONGUED SPEAKER"

Hon. C. Raajadurai, Minister of Regional Development, has been known to me for many long years. Before he became a Minister, I had the pleasure of meeting him in his own town, Batticaloa, several times.He has to his credit many achievements which have earned for him immense popularity not only in the region from which he comes, but also in the country. He is well known in India particularly, in Tamil Nadu as a writer and as a silver tongued speaker. His services have so much endeared him to his people that he has been continuously elected to the Parliament of our country for as long as 32 years. His contribution to Tamil literature is of great value. He has to his credit several Tamil books and writings in the Tamil Newspapers. Though I cannot read Tamil, I have heared praises for him from many prominent Tamil Scholars and people.

In his political career, he has stood for the rights of the Tamil people including the Tamils of Indian Origin. His writings have been an inspiration to his readers and have contributed towards the advancement of Tamil Literature and culture in Sri Lanka as well as in Tamil Nadu.

After he became Minister of Regional Development & Hindu Affairs, he has helped in renovating many Hindu Temples in the Plantation Areas; for this service, plantation workers are greatful to him and on this occasion of felicitation to him, the plantation workers convey to him their gratitude for the assistance he has rendered in their religious activities.

To resolve the unfortunate ethnic problem in the country, he has helped in many ways to moderate and reduce ethnic tensions. He has done this at great risk to his own life.

On this occasion, I wish him long life and strength to continue his services to his people and to the country.

**A. AZIZ**

**PRESIDENT - DEMOCRATIC WORKERS' CONGRESS.**

# RICH IN WORDS, KIND IN HEART AND EFFECTIVE IN ACTION

**K.S. Sivakumaran**

Chelliah Rajadurai is irresistible. Even if knowingly one would like to be away from his spell, one has less a chance of success such is his charm and personality.

For more than 40 Years, I have been observing him with avid interest. And my view from afar has met with a greater confluence of agreement as I began to get myself associated with him closely during the last few months as a writer in Tamil.

There are reasons for the magnetic spell he has on me: Like me, he is from Batticaloa with Jaffna connection, like me he has more than a natural interest in his mother tongue, culture, religion and the like - but such interest is greater in proportion in him than in me; like me, he is a writer - but unlike me, he is also one of the finest speakers in the Tamil language in this country; like me, he has a journalistic and literary background.

Perhaps what draws me closer to him is the attributes of Tamil consciousness which is not at war with his concern for the humankind and his universalistic view plus his capability as a writer and speaker makes me identify with him I like him as such and not merely as an influential politician.

He is simply marvellous as a master of the words. He has no poverty in handling meticulously and mellifluently the power and sweetness of the Tamil words.

Hence he is popularly known as 'Sollin Selvar' - literally meaning 'a wealthy man with words'.

What is admirable in him from my point of view is the fact that he has over the years

outgrown himself from narrow parochialism to a larger understanding of the whole, without losing the identity of a Tamilian. After all, more than 20 centuries ago, the world view of the Tamilian had been, 'all country is my country and all are my relations'. Thus, this world view manifests itself on Sollin Selvar's words and deeds.

In the late 40s and early 50s, there was a wave of Dravidian consciousness pervading among the Tamil-speaking youth of the world, particularly in Tamil nadu and Sri Lanka drawn by the analytical and thought-provoking writing and speeches of the Late C.N. Annadurai and later by his comrades M. Karunanithi, the youth were researching their soul, as it were for a Dravidian and glories of the past.

Inevitably, the youth of the times were drawn to the ideals and rationale of the DMK. It was a kind of radical thinking, which was not strongly felt in earlier times. Despite narrowness of ideas and other shortcomings, the DMK movement had an influence among the youth of this country in the north, east and central regions.

Minister Rajadurai was the prime mover of this consciousness in the eastern region with his youthful profile, magnificent speech and kind-heartedness. He began to score little by little and emerged as a towering figure in Batticaloa. As a schoolboy, I used to wonder at him from afar, without understanding properly what he stood for and having moved to Colombo in the 50s, lost an opportinity to watch him at close quarters. However I used to hear and read about him in the columns of the lobby correspondents in the press.

Over the years, as expected, Minister Rajadurai had grown to be national figure transcending all narrow confines.

What was astonishing about him was his change over from atheism to religiosity, from parochialism to universalism, from antipathy to sympathy, from a journalist to a cabinet minister, from an alliterative orator to an analytical speaker, from a random user of words to a conscious and liberal user of appropriate words, from absorbing propagandist approach to greater understanding and comprehension of issues, and thus seeing the whole and not merely the particles.

One would call the Hon. Minister Chelliah Rajadurai's success story had withstood time because of his ingenuity. He is basically an understanding aesthete and a cultured soul within the outcover of shrewd politician. He wins over people with his heart and this is indeed a virtue in the context of present 'crisis of civilisation'.



**Features Editor,**
**'The Island'**

# Glimpses of Sollin Selvar

By

**V.A. Thirugnanasuntharam**

**Director, Tamil Service**

**Sri Lanka Broadcasting Corporation**

The Creation of a separate Ministry for Hindu Religion and Hindu Culture by His Excellency the President Mr. J.R. Jayawardena, under the portfolio of the Ministry of Regional Development, is a noble gesture of statesmanship constituting a landmark in the renaissance of Hinduism, and Hindu Culture in Sri Lanka for the first time in its chequered history. It is indeed on par with the gesture of the Hindu Kingdom of Nepal in according State recognition to Hinduism.


Analysing the initial role and activities of Hon. Chelliah Raajadurai as the First Member of Parliament for Batticaloa as far as in 1956 and contrasting it with his exalted status and responsible role as Minister of Regional Development, Hindu and Tamil Affairs, a balanced appraisal of his remarkable services to the Tamil community in particular, and in equal measure to the other communities automatically comes to the fore.

In his anterior role as a Member of Parliament, he was an outspoken exponent of the Tamil community's aspirations and claims for a just and fair deal. By his masterly and impassioned eloquence as a public speaker and orator in Tamil, he swayed the voters 'enmasse' to his ideologies and outlook. But he ultimately came to realise in his heart of hearts and to his credit that dabbling in politics was indeed a dirty game. This self-realisation proved to be the stepping stone to his 'recovery of faith', in his political and social life as a M.P. This self-inquiry in the background of his early political career had transformed him to the belief that politics bereft of spirituality can never solve human problems.

It is no wonder that the dawn of spiritual insight in him brought forth new opportunities and avenues to dedicate himself to the service of his fellow beings and their redemption from social inequality, destitution, squalor and poverty and upgrade them as God's own creation in this mundane world. His DEDICATION to the SOUVENIR of The WORLD HINDU CONFERENCE held in Colombo in 1982 under his guidance, bears ample testimony to the Hon. Minister's spiritual enlightenment and attainments. This unique Conference is the brain child of his Ministry's achievements by focussing the beneficial impact on Hindus in Sri Lanka in particular and the Hindus the world over in general. The cherised objectives of this mammoth World Hindu Conference are spelt out in the introduction of the Souvenir which serves to re-echo the sanity and wisdom of the age-old dictum of the Philosopher-statesman, the late Dr. Sri Sarvapalli Radha Krishnan that "politics is applied religion." This unique Conference symbolises the religion of action taken by the Minister to foster and re-invigourate Hindu Religion and Culture.

Great thinkers, writers and men of wisdom the world over are unanimous in their verdict that "Genius confides not in creating opportunities alone but in utilising them as well. This meaningful saying appears to have had the correct impacts on the mind of 'Sollin Selvar' because the planned activities of his Ministry reveal a ceaseless effort to utilise every opportunity expressly created for the attainment of the policies of the Ministry. This is particularly significant in the spheres of Literature, Fine Arts like Music, Dance, Sculpture, Painting, Building of Temple Gopurams etc. Visiting Professors, Scholars, Musicians of various calibre. Sculptors and Architects of International repute and Vedic Priests from India were afforded adequate facilities and opportunities to impart and share their knowledge and expertise to aspirants in Sri Lanka in their respective vocations, thus enabling them to enhance and brighten their future.

This indeed is a precis of the outstanding achievements of the Hon. Minister and his Ministry's team work in all spheres of activity which today is recorded history. May benign Providence bless and guide him in his sincere and singular aim to foster and promote Hindu Religion and Culture in Sri Lanka.



# "முன்மாதிரியான தலைவர்"

எஸ்.எம்.ஹனிபா - நியாய துரந்தரர்

அரசியல் வழியில் நேர்மையையே கடைப்பிடித்து ஒருவர் முன்னேற்றம் காணுதல் கடினமான செயல் என்பதைப் பொதுவாக எவரும் ஏற்றுக் கொள்வர். ஆனால் தன் பொது வாழ்க்கையில் ஐந்தில் நாலு பகுதியைப் பொது மக்களின் பணிக்கென்றே செல விட்டுள்ள சொல்லின் செல்வர் மாண்புமிகு அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்கள், கண்டதே காட்சி, 'கொண்டதே கோலம்' எனும் தீயவழியைத் தவிர்த்து இலட்சியத்திற்காக நேர்மையே கடைப்பிடித்துப் பணிபுரிந்து வந்துள்ளார். தொடர்ந்து 32 ஆண்டு காலம் ஒரே தொகுதியில் பிரதிநிதியாக இருந்து வருவதெனில் அது சாதாரண ஒரு நிகழ்ச்சியல்ல. சாமான்யமான ஒருவரால், ஒரே தொகுதியில் தொடர்ந்து அத்தனை காலம் நிலைத்திருக்க முடியாது.

அரசியலிலேயே அவர் மூழ்கி விட்டபடியால் அவரின் இலக்கியப் பணி பற்றிப் பலருக்குத் தெரியாது. 1948–ஆம் ஆண்டில் அவர் 'லங்கா முரசு' என்ற சஞ்சிகையை நடத்தினார். பாடசாலை மாணவனாயிருக்கும் காலத்தில் வகுப்பில் ஒவ்வொரு மாணவனிடத் திலும் வகுப்பாசிரியர் எதிர் காலத்தில் என்ன செய்யப் போகிறீர்? எனக் கேட்டபோது, மற்றவர்கள் நான் டாக்டராகப் போகிறேன், நான் எஞ்சினியராகப் போகிறேன், என்றெல்லாம் கூறுகையில் "நான் ஒரு எழுத்தாளனாகப் போகிறேன்" எனக் கூறிய ஒரேயொருவர், திரு. செ. இராச துரைதான். அவரின் எழுத்துலகத் தரிசனம் பற்றி முதன் முதலில் 1948–ஆம் ஆண்டு மத்தியில்தான் நான் அறிந்தேன். 1947–ஆம் ஆண்டு இறுதியில் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதிவிட்டு, பெறுபேறு வரும் வரை வீட்டிலிருந்த சமயம் ஆக்கப் பணியொன்றில் இறங்க நினைத்தேன். அதன் விளைவாக 1948–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 'சமுதாயம்' எனும் சஞ்சிகையின் முதற் பிரதி வெளிவந்தது. இது பற்றி இலங்கையின் பிரதான தமிழ்த் தினசரிகள் செய்தி வெளியிட்டு, விமர்சனம் பிரசுரித்தன. இலங்கை வானொலியிலும் விமர்சனம் ஒலி பரப்பானது. இதிலிருந்து 'சமுதாயம்' பற்றி அறிந்த 'லங்கா முரசு' ஆசிரியர், மாற்றுப் பிரதியாக ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அவருக்கு 'சமுதாயம்' பிரதியும் அனுப்பப் பட்டது. முதன் முதலில் நான் பார்த்த 'லங்கா முரசு' பிரதியிலிருந்து தான் செ. இராசதுரை என்னும் ஒருவர் எழுத்துத் துறையில் பிரவேசித் திருப்பது பற்றி அறிந்தேன்.

இலங்கையில், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் முதல் 1960–ஆம் ஆண்டுகளின் ஆரம்பம் வரையிலான காலப்பகுதி இலக்கிய முயற்சிகள் பற்றிய வரலாறு எழுதியுள்ள கனக செந்திநாதன் அவர்கள் 1964–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிரசுரமான 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' எனும் நூலின் 66–ம் பக்கத்தில் 'லங்கா முரசு' பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தற்போது பாராளுமன்றத்தில் மட்டக் களப்பின் முதலாவது உறுப்பினராக இருக்கும் செ. இராசதுரையும் ஜனாப். கே.எம்.ஷா ('பித்தன்') சேர்ந்து 'லங்கா முரசு' பத்திரிகையை நடத்தினார்கள். அதுவும் பொருள் வருவாயற்ற இளைஞரின் முயற்சியாக சில இதழ்களே வந்து இயற்கை எய்திற்று. அதன் பின்னர் திரு. செ. இராசதுரை அவர்கள் 'சுதந்திரன்' அலுவலகத்தில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றினார். 'சமுதாயம்' மூன்றாவது இதழ் 1984–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பில் அச்சான சமயம், கொழும்பு ஸாஹீறாக் கல்லூரியில் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பில் நான் படித்துக் கொண்டிருந்தேன். மூன்றாவது இதழ் பிரதியை 'சுதந்திரன்' ஆசிரியரிடம் வழங்குவதற்கு சுதந்திரன் அலுவலகம் சென்ற போது அங்கு உதவி ஆசிரியர் செ. இராசதுரையினை முதன்முதலில் நேரில் கண்டேன். அதன் பின் பல தடவைகள் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. 1956–ஆம் ஆண்டில் அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்வாகி, அரசியல்வாதியான பின்னர், எங்களுக்குச் சந்திக்கும் வாய்ப்புகள் குறைந்து விட்டன. திரு. கனக செந்திநாதன் எழுதிய "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" என்னும் நூலில் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"திரு. இராசதுரை அரசியலுக்கு ஆதாயம் இலக்கியத்திற்கு நஷ்டம்" இது உண்மையானாலும் இலக்கியத்தை வளர்ப்பதிலும் – எழுத்தாளரை ஊக்குவிப்பதிலும், அவர் முன்நிற்கின்றார். அரசியல்வாதிகளை விட இலக்கியவாதிகளிடமே அதிகம் நெருக்கமாக உள்ளார். எழுத்தாளர் அவரால் பெருமைபடுத்த படுகிறார்கள்.

### இலக்கிய முயற்சி

கனக செந்திநாதன் திரு. செ. இராசதுரையின் இலக்கிய முயற்சிகள் பற்றி மேலும் விரிவாகத் தனது நூலின் 172–ம் பக்கத்தில் குறிப் பிட்டுள்ளார். அவர் கூறியதாவது: "மட்டக்களப்புத் தொகுதியின் முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதியான செ. இராசதுரை அந்த காலத்தில் சிறுகதை எழுதுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். 'மிஸ் கனகம்' என்னும் சிறுகதைத் தொகுதி வெளி வந்துள்ளது. 'லங்கா முரசை'த் தொடர்ந்து சொந்த அச்சு வசதிகளுடன் 'தமிழகம்' என்னும் பத்திரிகையை வெளியிட்டார். முழு நேர அரசியல் ஊழிய ராகிவிட்ட அவரால் அந்த பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. நல்ல மேடைப் பேச்சாளர் "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்" என்னும் சிறுநூல் அவரது பேச்சு வன்மைக்குச் சான்று பகர்கின்றது. நல்ல நடிகருமான அவர் சங்கிலியன் நாடகத்தைத் தாமே எழுதித் தயாரித்து மேடை யேற்றியுள்ளார். இலக்கியத்தின் நாட்டம் அரசியல் ஆதாயமாக அமைந்துவிட்டது.

அரசியல் ஆதாயம் அடைந்துள்ள தெனினும் இலக்கியம் நட்டமடையவில்லை என்றே கனக செந்திநாதன் இன்றிருந்தால் எழுதியிருப்பார். ஏனெனில், அரசியல் வாதியாகவிருந்து, பொது மக்களுக்குப் பல்வேறு வகைகளில் ஆயிரமாயிரம் உதவிகளைச் செய்து வருகின்ற அவர், அதே சமயம் இலக்கிய ஆர்வங்களை ஊக்கப்படுத்துவதற்கான அரும்பணியும் புரிந்து வருகின்றார்.

### செயலில் காட்டுதல்

பாராளுமன்றப் பிரதிநிதியாக இருக்கும் காலத்தில் பல்வேறு இலக்கியப் பணிகளில் பங்குபற்றியுள்ளார். அமைச்சர் பதவி ஏற்றபின்னர் மாதமொன்றுக்குக் குறைந்த பட்சம் ஓர் இலக்கியக் கூட்டத்திலேனும் பங்குபற்றி வருகிறார். சில சமயங்களில் ஒரே நாளில் இரண்டு மூன்று நூல் வெளியீட்டு விழாக்களிலும் பங்கு பற்றுவதுண்டு. தனது பேச்சுக்களால் இலக்கியவாதிகளுக்கு

ஊக்கமளிப்பதுடன் நின்று விடாமல், அதைச் செயலிலும் காட்டியுள்ளார். குறைந்த பட்சம் நூறு பிரதிகளாவது வாங்கி நூலின் பிரதிகளை நாட்டிலுள்ள பல்வேறு நூல் நிலையங்களுக்கும் அனுப்புவதற்கு ஒழுங்கு செய்துள்ளார். இந்தளவுக்கு இலக்கிய ஆர்வலருக்கு வேறெந்த தனிமனிதனும் இக்காலகட்டத்தில் ஊக்கமளிப்பதில்லை, என்பது மிகையல்ல.

ஆக நீண்டகால சேவையில் தொடர்ந்து நிலைத்திருககும் ஒரே தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. செ. இராசதுரையை எவ்வளவு பாராட்டினாலும் போதாதென்றே தோன்றுகின்றது. மட்டக்களப்புத் தொகுதியின் உறுப்பினராகத் தொடர்ந்து முப்பத்திரெண்டு ஆண்டுகள், தோல்வியே காணாது நிலைத் திருக்கும் அவர் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர். அக் கட்சியைத் தோற்றுவித்த அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுடன் இணைந்து, பணியாற்றி கிழக்கு மாகாணத்தில் கட்சியின் செல்வாக்குப் பெருகுவதற்கு, திரு. இராசதுரை காரணமாயிருந்தார்.

முதன் முதலில் கட்சி கோப்பாய், திருகோணமலைத் தொகுதிகளில் வெற்றி பெற்றது. அப்பொழுது அமரர் எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் அவர்கள் திரு. இராசதுரையின் பங்கைப் பாராட்டினார். 'எனது கொள்கைகளைத் தேர்தல் மேடைகளில் மிகச் சிறந்த தமிழில் விளக்கினீர்கள். உங்களின் பேச்சுத் திறமைதான் எங்கள் வெற்றிக்கு வழி கோலியது,' என்று அப்பொழுது தலைவர் பாராட்டியதிலிருந்து சொல்லின் செல்வர் எனும் சிறப்புப் பட்டம் எத்தனை பொருத்தம் எனக்கூறத் தேவையில்லை.

மட்டக்களப்பு கச்சேரியில் 1969–ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர், மர்ஹூம் ஏ.எச். மாக்கான் மரிக்கார் அவர்கள் திரு. இராசதுரையை 'மட்டக்களப்பின் முடிசூடா மன்னன்' எனப் பாராட்டியது எத்தனை பொருத்தம். எத்தனை பொருத்தம்! ஒரு பழுத்த அரசியல்வாதியும் முதிர்ந்த அனுபவசாலியுமான ஜனாப் ஹுசைன் மாக்கான் மரிக்காரின் வாக்கு பலிதமாகியது. திரு. இராசதுரை அன்றிலிருந்து இன்று வரை மட்டக்களப்பின் முடிசூடா மன்னனாயிருக்கிறார் என்று கூறுதல் தவறில்லை.

## செல்வாக்கும் ஆதரவும

தமிழரசுக்கட்சியின் பேராளர் மாநாடு கல்முனையில் நடைபெற்ற சமயம் காலம் சென்ற பிரதம மந்திரி திரு. டட்லி சேனா நாயக்கா, பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அப்பொழுது திரு. இராசதுரையைப் பற்றிக் குறிப்பிட்ட திரு. சேனாநாயக்கா, 'பொது மக்கள் மத்தியில் இராசதுரைக்கு நல்ல செல்வாக்கும் ஆதரவும் உள்ளது. அவரைப் பொது மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். அவர் மக்களின் தலைவர்களில் ஒருவர்; ஓர் உண்மையான பிரதிநிதி' எனக்கூறினார்.


1966–ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாநகரசபை உருவானது. அப்பொழுது உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திரு. இராசதுரை, மட்டக்களப்பு முதல் மேயராகத் தேர்வானார். கூட்டங்களில் கடைசியாகப் பேசுவதற்கு அழைக்கப்படும் ஒருவராக திரு. இராசதுரை திகழ்ந்தார். அவர் கடைசியில் பேச இருந்தால் மக்கள், கடைசி வரை கலையாமல் இருப்பார்கள் என்பதால், யாழ்ப்பாணத்திலும் கூட சில சமயங்களில் நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குக் கூட, அவரே கடைசியாகப் பேச அழைக்கப்படுவார். இதிலிருந்து அவர் பேச்சில் இனிமையைக் கணிக்கலாம். இலக்கியக் கூட்டங்களில் அவர் பேசும் பொழுது, காதுக்குத் தேனாகவே அவரின் சொற்கள் அமையும். இன்னும் பேசமாட்டாரா? இன்னும் பேசமாட்டாரா? என்றே கேட்போர் மனம் ஏங்கிக் கொண்டு இருக்கும்.

சென்னை, மதுரை, கோலாலம்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளில் அவர் பங்கு பெற்றுள்ளார். இவரின் பேச்சுவன்மை இந்தச் சர்வதேச மட்ட மகா

நாட்டிலும் பாராட்டப்பட்டதென்றால், வேறு கூற வேண்டியதில்லை. தமிழ் நாடு, சிங்கப்பூர். மலேசியா தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் திரு. இராசதுரைக்கு நல்ல செல்வாக்குள்ளது. கோலாலம்பூரில் சென்ற ஆண்டுக் கடைசியில் நடைபெற்ற ஆறாவது சர்வதேச தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது, அவர் அந்நாட்டு அமைச்சர்கள் அறிஞர் பெருமக்களுடன் பழகிய விதத்திலிருந்து அவரின் சிநேகப் பான்மையை புரிந்து கொள்ள முடிந்தது. எத்தனையோ ஆண்டு காலமாக நெருங்கிப் பழகியவர் போல் தான் அத்தனை பெரியோர்களுடனும் அவர் நடந்து கொண்டார். அதேபோல், அவர்களும் அவரை நடத்தினர்.

ஒன்பதாண்டு காலம் அமைச்சராயிருந்த, அவர் இந்நாட்டிலும், தமிழ் வாழும் ஏனைய நாடுகளிலும் தமிழ்மொழி, கலாசார வளர்ச்சிக்காக அரும்பணி புரிந்துள்ளார். மேலும் பன்னெடுங் காலம் வாழ்ந்து அரிய பெரிய பணிகளைப் புரிய இறைவன் அவருக்கு நல்லருள் பாலிக்கப் பிரார்த்திப்போம்.

(சட்டத்தரணி எஸ்.எம். ஹனிபா எழுதிய இக்கட்டுரை, 1988–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி 'தினகரன்' வாரமஞ்சரியில் பிரசுரமானது)



இவ்வாழ்வு உங்களுக்கு ஏன் கொடுக்கப் பட்டுள்ளது என்று நீங்கள் அறிவீர்களா? வாழ்நாள் முழுவதும் உணவு தேடி வாழ்வை நடத்துவதற்கு மட்டுமல்ல; கடவுளைத் தேடுவதற்கு உங்களுக்கு உதவி செய்யவே வாழ்க்கை அமைந்துள்ளது.

– ஸ்ரீ சத்திய சாயிபாபா

# "அண்ணன்" வரலாற்று நாயகன்.

## செழியன் பேரின்ப நாயகம்

## மட்டக்களப்பு மாநகரசபை மேயர்

சொல்லின் செல்வர் அண்ணன் இராசதுரை அவர்களைப் பற்றி ஒரு புஸ்தகமே எழுதலாம். அவர் வரலாறே இளைஞர்களுக்கு ஒரு பாடப்புஸ்தகம். இராசதுரை என்னும் பெயரில் ஒரு மந்திர சக்தி இருந்தது. இளைஞர்கள் அவர் பெயரை அன்போடு ஆசையோடு ஏன் காதலோடு அழைப்பார்கள். பெரியவர்கள் பெற்ற பிள்ளையின் பாசத்தோடு அழைப்பார்கள். அவர் பேச்சைக்கேட்க மக்கள் மணிக்கணக்காக காத்து இருப்பார்கள்.

கல்லூரிகளா, இலக்கிய மாநாடுகளா, அரசியல் மேடைகளா அக்குரலின் ஒலிகேட்க மக்கள் ஒன்று திரளுவார்கள். இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களில் - ஏன் உலகில் தமிழ் பேசும் மக்கள் வாழுமிடங்களில் அண்ணன் பெயர் விளங்கும். அவர் ஒரு சரித்திர நாயகர். மட்டக்களப்பு மண்ணின் புதிய சகாப்தம் படைத்தவர்.

மட்டக்களப்பு நகரசபையை மாநகர சபையாக உயர்த்தியவர். மட்டக்களப்பு மாநகர சபையின் முதல் மேயராக பதவி வகித்தவர்.

அவர் முதலில் உட்கார்ந்த மேயர் கதிரையில் அவர் தம்பிகளில் ஒருவனாகிய நான் மேயராக இருப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

1956ஆம் ஆண்டு அவர் மட்டக்களப்பு பாராளுமன்ற பிரதிநிதியாக தெரிவு செய்யப்படும் போது - மட்டக்களப்பு புகையிரத நிலையத்திற்கு அருகில் பெருங்காடு காட்சியளித்தது. சுடலைகள் வேறு. கள்ளியங்காடு என்று அப்பகுதிக்குப் பெயர். பகல் நேரத்திலும் அப்பகுதிக்குள் மக்கள் செல்வதற்குப் பயப்படுவார்கள். அக்காடுகளை வெட்டிக் குடியேறுமாறு மக்களை ஊக்குவித்தார். அரசாங்க காணிகளில் அத்துமீறி குடியேற வேண்டாம் என்று அரசாங்கம் தடை விதித்தது. அத்தடையையும் மீறி காடுவெட்டும் நேரத்தில் அங்கு உட்கார்ந்து மக்களின் பயத்தைப் போக்கினார். அப்போது காணி அமைச்சராகயிருந்த திரு. சி.பி.டி. சில்வா அவர்களோடு இடித்துரைத்து காடு வெட்டியவர்கள் மீது தொடர்ந்திருந்த வழக்குகளை வாபஸ் வாங்குவதற்கு வைத்தார். இன்று ஆயிரக்கணக்கான மக்கள் மாமாங்கபுரம், இராசதுரைபுரம், ஜெயந்து புரம் என்று மக்கள் வாழும் இடங்கள் அண்ணன் எம்.பி.யாக வருமுன் பயங்கர காடுகள். பாடசாலைகள், விளையாட்டு நிலையங்கள் உபதபால் நிலையங்கள் - தார் வீதிகள் மின்சார வசதிகள் இப்படி அப்பகுதி முன்னேறியது.

நாவலடி முதல் மஞ்சன்தொடுவாய் வரை உள்ள பகுதிகள் கல்லடி கிராம சபையாக விளங்கியது. மட்டக்களப்பு நகரசபைக்கு அருகில் இருந்தும் அப்பகுதி முன்னேற்றம் காணாமல் பின் தங்கிய நிலையில் இருந்தது. அப்பகுதியை மட்டக்கலப்பு மாநகர சபையோடு இணைத்து புதிய மாநகர சபையை உருவாக்கியவர் அண்ணன்.

சாதாரண மக்களின் சரித்திரத்தை அண்ணன் மாற்றினார். மட்டக்களப்பு இளைஞர்களின் அகநானூறு ஆகவும், புறநானூறு ஆகவும் விளங்குபவர் அண்ணன்.

தம்பி என்று இளைஞர்களை அழைக்கும்போது நாங்கள் மகிழ்ச்சியினால் நெகிழ்ந்து போவோம். அவர் தொடங்கிவைத்த பாதையில் நாங்கள் தொடர்கின்றோம் மட்டக்களப்பு நன்றியுள்ள மக்கள் நெஞ்சங்களில் அவர் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

